## வெண்ணிலா சந்திராவின்

# அறியாத வயசு.. புரியாத மனசு...



# அறியாத வயசு...
# புரியாத மனசு...

வெண்ணிலா சந்திரா

அருண் பதிப்பகம்

எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Email : arun_pathippagam@yahoo.in

## நூற் குறிப்பு


- நூல் தலைப்பு — அறியாத வயசு... புரியாத மனசு...
- ஆசிரியர் — வெண்ணிலா சந்திரா
- மொழி — தமிழ்
- முதற் பதிப்பு — மே, 2015
- உரிமை — ஆசிரியருக்கு
- தாளின் தன்மை — 11.6 K.g. வெள்ளைத் தாள்
- நூலின் அளவு — 1 × 8 கிரவுன்
- அச்சு எழுத்து — 11 புள்ளிகள்
- மொத்தப் பக்கங்கள் — 396
- பைண்டிங் — சாதா அட்டை

**விலை: ரூ. 180.00**

வெளியிடுவோர் **அருண் பதிப்பகம்**
எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
செல் : 9043558732

அச்சிட்டோர்: Padmavathi Offset, Chennai - 2 ☎ 2845 0105




# அறியாத வயசு...
# புரியாத மனசு...

## முன்னுரை

எனதன்பு வாசகர்களே....!

நீங்கள் அளித்த தொடர் ஆதரவாலும், அருண் பதிப்பகத்தாரின் வழிநடத்தலாலும், எனது ஐந்தாவது கதையுடன் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி கொள் கிறேன்.

மனித வாழ்வில் எத்தனை துன்பங்கள் வந்தாலும், அதை அன்பாலும் காதலாலும் களைந்துவிடலாம் என்ற கருவைக் கொண்டதே 'அறியாத வயசு.. புரியாத மனசு...' கதையின் களம்.

கதையைப் பற்றிய உங்களின் மேலான கருத்துக் களையும், விமர்சனங்களையும் vennila.chandra@ yahoo.in என்ற மின்னஞ்சல் முகவரியில் என்னுடன் பகிர்ந்து கொள்ளத் தயங்காதீர்கள்.

அன்புடன்,
**வெண்ணிலா சந்திரா**



# அறியாத வயசு... புரியாத மனசு...

## 1

போ சம்போ சிவ சம்போ ஸ்வயம்போ..
கனகதாரா சங்கரா கருணாகர
மாமவ பவ சாகரா தாரகா
போ சம்போ சிவ சம்போ ஸ்வயம்போ...

நிற்குணா பரப்ரம்மா ஸ்வரூபா...
கம கம பூதா பிரபஞ்சன ரஹீதா...
நிஜ குஹா நிஹித நிதாந்தா ஆனந்தா...
ஆனந்த அதிசயா ஆகாஷலிங்கா...
போ சம்போ சிவ சம்போ ஸ்வயம்போ...

சிணுங்கிக் கொண்டிருந்த கைபேசியின் ரிங் டோன், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவனின் மனதை எப்போதும் போல் இன்றும் பரவசப்படுத்த...

சிவ புராணத்தை மனதினுள் உச்சரித்தவாறு மெல்லிய முறுவலுடன் கண்ணைத் திறக்காமலேயே, கையால் பக்கத்தில் இருந்த மேசையின் மீது செல் போனைத் தேடிக் கொண்டிருந்தான் கவியரசன்.

அதற்குள் மெதுவாய்த் துவங்கிய கைபேசியின் ஒலி மெல்ல மெல்ல முன்னேறித் தன் இருப்பைப் பறைசாற்ற...

அப்போதுதான், தன் மார்பின் மீது தலை சாய்த்து உறங்கிக் கொண்டிருக்கும் மனையாளின் தூக்கம் கலைய இன்னும் சில நொடிகளே இருக்கின்றது என்ற அறிவிப்பு அவளின் மெல்லிய சிணுங்கலில் தெரிய, வேக வேகமாக விழிகளைத் திறந்து மேசையின் மீது உலாவ விட்டான்.

ஆனால் அதற்குள் மஞ்சத்திலிருந்த பைங்கிளி, அந்தச் சத்தத்தில் எரிச்சலுற்றவளாய், "ஹே மேன்... அந்தச் செல்போனைத் தூக்கித் தூர வீசு, மேன்..." என்றாள் தூக்கம் கலையாத குரலில்...

"சாரி சாரி ஆதி.... போனை எங்கே வைச்சேன்னு தெரியலைடா. நம்ம பெட்-க்கு அடியிலிருந்துதான் சத்தம் வருது. கொஞ்சம் தள்ளிக்கோம்மா... தேடிப் பார்க் கிறேன்..." என்றவனின் தூக்கம் நூறடி தூரம் பறந் திருந்தது.



ஆனால் இன்னமும் தூக்கத்தின் முழு ஆதிக்கத்தில் இருந்த ஆதி என்ற ஆதிரா, "ச்சே... தினமும் காலையில உன்னோட இதே வேலையாப் போச்சு. கொஞ்சம் கூட நிம்மதியாத் தூங்க விடாதே. போ, மேன்..." என்றவள், கவியரசனிடமிருந்து வேகமாக விலகிக் கட்டிலின் மறு பக்கத்தில் வந்து படுத்துக் கொண்டாள்.

அந்த நிலையிலும் அவளின் அந்த 'மேன்' என்ற அழைப்பு கவியரசனைக் கோபப்படுத்தி, "ஆதி... எத்தனை முறை சொல்லியிருக்கேன். என்னை மேன்-னு கூப் பிடாதேன்னு. இது என்ன பழக்கம்... நான் உன் புருஷன். நீ என்னை வாங்க, போங்கன்னு கூப்பிடலைன் னாலும் பரவாயில்ல. என்னை என் பேர் சொல்லியாவது கூப்பிடு..." என்றான், அதட்டலுடன் சேர்ந்த கெஞ்சல் குரலில்.

பின்னே... புத்தம் புது மனைவியிடம் அதிகாலை யிலே கோபித்துக் கொண்டால், அதன் பின்வரும் விளைவுகள் மிகவும் அபாயகரமானவை என்று அறிந்த அப்புது மணமகன் தன் அதட்டலைக் கெஞ்சலாகவே வெளியிட்டான்.

ஆனால் அவளோ, "நானும் இந்த டென் டேஸா உனக்குத் தௌஸண்ட் டைம் சொல்லி யிருக்கேன். டோன்ட் கால் மீ ஆதி... கால் மீ ஆரான்னு... நீ என் பேச்சைக் கேட்டியா?" என்றாள், தலையைக் கவிழ்த்துப் படுத்தவாறு.

ஆனால், அவளிடம் மேலும் சண்டை வளர்க்க இஷ்டமில்லாமல், அதற்கு வழியுமில்லாமல், அவனின் செல்போன் ஒலி, மேலும் தன் குரலை எழுப்பத் தான் படுத்திருந்த இடத்திற்கு அடியில் கிடந்த கைபேசியை எடுத்துக் கொண்டு பால்கனிக்குச் சென்றான் கவியரசன்.

அழைப்பு அவன் வேலை செய்யும் மென்பொருள் நிறுவனத்திலிருந்துதான் வந்திருந்தது.

கவியரசன், திருமணத்திற்காக எடுத்திருந்த பதினைந்து நாட்களுக்கான விடுமுறை முடிய இன்னும் இரண்டு தினங்கள் இருக்கும் நிலையில்... அவனின் டீம் மெம்பரில் ஒருவனான வாசு அழைத்திருக்கிறான்.

அதுவும், அதிகாலை எட்டு மணிக்கே அழைக்கிறான் என்றால்... ஏதேனும் முக்கியமான விஷயமாகத் தான் இருக்கும் என்ற யோசனையுடன் அழைப்பை ஏற்று, "குட் மார்னிங் வாசு..."சொல்லு!" எனப் பேச்சை ஆரம்பித்தான்.

"குட் மார்னிங் அரஸ்... ரொம்பப் பிசியா இருந்தீங்களா... சாரி ஃபார் டிஸ்டர்பன்ஸ்..."

அழைப்பை அவன் ஏற்க எடுத்துக் கொண்ட நேரத்தைக் கணக்கில் கொண்டு புது மணமகனைக் கேலியாகக் கேட்டான் வாசு.

முகத்தில் அசடு வழிந்தாலும், அதைக் குரலில் காட்டாமல், "அப்படி எல்லாம் எதுவுமில்லை. சரி, சொல்லு. எனிதிங் இம்பார்டன்ட்...?" என்றான், நேரடியாக விஷயத்திற்குத் தாவி...



"அதானே... உங்ககிட்ட இருந்து விஷயத்தை வாங்க முடியுமா... இம்பார்டன்ட்தான். வீ நீட் யுவர் சர்வீஸ், அரஸ்..."

அவர்கள் டீமில் ப்ராஜெக்ட்டை முடிக்க, கவியரசனின் தேவை உடனடியாகத் தேவை என்ற விவரத்தை வெளியிட்டான்.

"அப்படியா... என்னாச்சு... என்ன விஷயம்? நான் ரிலீவ் ஆகும்போதே மேஜர் வொர்க் எல்லாமே முடிச்சுக் கொடுத்துட்டுத்தானே வந்தேன்..." என்றான், குரலில் அவசரத்தைக் காட்டி.

பின்னே அவசரமில்லாமல் இருக்குமா...? வாசு குறிப்பிடும் ப்ராஜெக்ட்டிற்கான கடைசி நாள், நாளை மறுநாள் என்ற நிலையில் வாசு இப்போது, தன் உதவியைக் கேட்கிறான் என்றால் விஷயம் பெரிது என்பதை அவனின் அனுபவம் தெரிவித்தது.

"அது வந்து... நம்ம இந்து, சின்ன மைனர் மிஸ்டேக் செய்துட்டா...ங்க. தப்பு சின்னதுதான். ஆனால் அதைச் சரி செய்யத்தான்... உன் உதவி தேவை..." என முழுதாக விஷயத்தைச் சொல்ல...

"இந்து... ஹ்ம்ம்... வைஃப்க்கு நீ சிபாரிசா...?" எனக் கவியரசன் சிரிக்க,

"ஹி...ஹி...." வாசு போனிலே வழிவது கவியரசனுக்குத் தெரிந்தது.

"ஓ.கே. ஓ.கே. போதும். ரொம்ப அசடு வழியுது... நான் உடனே கிளம்பி வர்றேன்..." என வாக்களித்து, அலுவலகத்திற்குக் கிளம்பச் சென்றான்.

இந்து வாசுவின் மனைவி. இருவருக்கும் திருமணமாகி ஒரு மாதம்தான் முடிந்திருந்தது.

இந்து படித்த கல்லூரியில் அவளுக்கு இவர்கள் வேலை செய்யும் மென்பொருள் நிறுவனத்தில் கேம்பஸ் கிடைத்துவிட, இப்போது கணவனும் மனைவியும் ஒரே நிறுவனத்தில் ஒரே டீமில் பணிபுரிகின்றனர்.

இந்துவின் ட்ரெய்னிங் முடிந்த நிலையில் இப்போது புதிதாக ப்ராஜெக்ட்டில் அமர்த்தப்பட்டிருக்கிறாள்.

அதனால் வாசு சொன்ன விஷயம் சின்னதாக இருக்க வாய்ப்பில்லை என்பதை அவனின் அனுபவ மூளை அறிவுறுத்தியது.

அலுவலகம் சென்று பார்த்தால் மட்டுமே நிலைமை புரியும் என்ற யோசனையுடன், அவன் அறைக்குள் நுழைய, அவன் கண்ட காட்சி 'கணவன்' என்ற வேலையைச் செய்யத் தூண்டியது.

புது மனைவியை இந்த நிலையில் விட்டுவிட்டுச் செல்ல அவனின் மனது ஒத்துழைக்கவில்லை என்றாலும், மூளை கடமையைப் பறைசாற்றியது.

'முதலில் கணவனின் வேலையைச் செய்!' என்று மனது கட்டளையிட...

அதன்படியே படுக்கையை நெருங்கி, தலை கவிழ்ந்து கால்களைத் தாறுமாறாக விரித்துப் படுத்திருந்த மனைவியின் அருகில் படுத்து, அவளின் முதுகில் கன்னத்தைத் தேய்த்து, "ஆதி..." என்றான்.



ம்ஹூம்... பதில் இல்லை.

மீண்டும் ஒரு அழைப்பு.

அதற்கும் அசைவில்லை.

அவனுக்குத் தெரியும், அவள் இன்னமும் அரை விழிப்பில்தான் இருக்கிறாள் என்று.

அதனால் மேலும் அவளின் முதுகை வருடி, "குட்டிம்மா..." எனவும்,

"ம்ம்..." என்ற மெல்லிய ஒலி பதிலாகக் கிடைத்தது.

"திருடி... இத்தனை நேரம் நான் கூப்பிட்டதுக்குப் பதில் சொல்லாம விளையாடிட்டு இருந்தியா?" எனச் செல்லமாக அவளின் கன்னத்தைக் கடிக்க...

"இனிமேல் நீ ஆதின்னு கூப்பிட்டா... உனக்கு என்கிட்ட இருந்து பதில் கிடைக்காது..." என்றவள், புரண்டு படுக்க... இப்போது கவியின் நெஞ்சத்தில் இவள் தலை சாய்த்திருந்தாள்.

"எனக்கு இந்த ஆரா பிடிக்கவே யில்லடா... இது என்ன ஆரா, பூரான்னுட்டு...! ஆதி... எவ்வளவு அழகான பேரு. என்னோட ஆதிம்மா மாதிரியே உனக்கும் அழகான பேரு. இன்னமும் சொல்லணும்னா உன் அப்பா, அம்மா உன்னோட ஃபோட்டோ காட்டும் முன்னாடியே எனக்கு உன்னோட பேர்தான் ரொம்பப் பிடிச்சுப் போச்சு... தெரியுமா!" என்று அவனின் அழைப்புக்கு இந்தப் பத்து நாட்களில் சொல்லும் அதே விளக்கத்தை இப்போதும் சொன்னான்.

அவளும் வழக்கம் போல, "சரி... எப்படியோ கூப்பிட்டுத் தொலை..." என அலட்சியத்துடன் சொன்னவள்... மீண்டும் அவனை அணைத்துக் கொண்டு உறங்க முயன்றாள்.

எப்போதும் போல் இப்போதும் அவளின் அலட்சியப் பேச்சு, அவனுக்குள் சுருக்கென்று கோபத்தைக் கிளறினாலும், அடுத்ததாக வந்த அவளின் அணைப்பு... அவனின் கோபத்தைச் சற்று மட்டுப்படுத்தியது.

கவியரசனுக்கு அவளின் இந்த எடுத்தெறிந்து பேசும் பழக்கம் பிடிக்கவில்லை என்றாலும், அவளை உடனடியாக மாற்றுவது என்பது இயலாத காரியம் என்பது புரிந்தமையால் முடிந்தவரையில் அவளை அனுசரித்து நடந்து கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தான்.

மயங்கிய அவன் மனதை அவளின் அலட்சியம் மீட்டெடுக்க... படுத்திருந்தவளை மெல்ல விலக்கி விட்டுக் குளியலறைக்குள் சென்று குளித்து முடித்துப் பின் சமையலறைக்குள் சென்றான்.

கிச்சனுக்குள் நுழைந்தவன், அதன் அலங்கோலத்தைப் பார்த்து... இப்போதைய சமையலறைக்கும், திருமணத்திற்கு முன் அவனின் சமையலறைக்கும் இருந்த அறுநூறு வித்தியாசங்களை அவன் மனது கணக்கிடத் துவங்கியது.

திருமணத்திற்கு முன் இவன் ஒற்றை ஆண் மகனாகச் சமையலறையைக் கண்ணாடி போன்று



பளபளப்பாக வைத்திருந்தவன் இப்போது பெண்ணென்று ஒருத்தி வந்த பிறகும்கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக இறைந்து கிடந்த பொருட்களைக் கண்டவன்... அதைச் சுத்தம் செய்யக் கைகள் பரபரத்தாலும், அதற்கு இப்போது தன்னிடம் நேரமில்லை என்பதை உணர்ந்து விரைவாகச் செய்யக் கூடிய உணவான உப்புமாவைக் கிளறித் தனக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டு, உணவு மேசையில் அமர்ந்து உண்டு முடித்தான்.

மீதியை ஹாட் பாக்கைத் தேடி அதில் போட்டு மூடித் தன் மனையாளுக்குப் பாலைக் கலந்து எடுத்துக் கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்தான்.

பாலைக் கட்டிலில் சைடு டேபிளில் வைத்து விட்டுப் படுத்திருந்தவளின் முடி கோதி, "குட்டிம்மா... ஒன்பது மணியாச்சு... எழுந்துக்கோடா..." எனக் கொஞ்ச...

அவள் சிணுங்கியவாறு அவனின் மடி தேடி அதில் முகம் புதைக்க... அவளின் கன்னத்தை ஈரப்படுத்தி, "டேய் குட்டி... எழுந்துக்கோம்மா. உனக்குப் பால் எடுத்துட்டு வந்திருக்கேன். போய் ஃப்ரெஷ் ஆகிட்டு வா. எனக்கு ஆபீஸ்ல இருந்து முக்கியமான கால். நான் உடனே போயாகணும்..." என, முதலில் அவன் சொன்னதை விட்டேற்றியாகக் கேட்டுக் கொண்டு படுத்திருந்தவள்...

அடுத்து அவன் சொன்ன வார்த்தையில் வெகுண்டவளாய், "ஓஹோ... நீயும் போறியா! போ... போ... ச்சே...!" என எழுந்து அவனை முதுகில் இரண்டடி அடித்து விட்டுக் குளியலறைக்குள் சென்று மறைந்தாள்.

அவளின் இந்தத் திடீர்த் தாக்குதலில் சற்றுத் திகைத்தவன், பின்னே... "ச்சே... பத்து நாளா அவளோடயே இருந்துட்டு இன்னிக்கு நான் ஆபீஸ் போறேன்னதும் மேடமுக்குக் கோபம் போல.. ஹ்ம்ம்... சாயந்திரம் சமாளிச்சுக்கலாம்..." எனத் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டு உடை மாற்றச் சென்றான்.

அவன் உடை மாற்றி முடிக்கவும்... அவள் குளியலறைக்குள் இருந்து வரவும் சரியாக இருந்தது.

முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு வந்தவளைப் பார்த்துச் சிரித்தவனாக... மேசை மீதிருந்த பாலை எடுத்துக் கொண்டு அவளையும் தள்ளிக் கொண்டு பால்கனிக்குச் சென்றவன்... அவளைப் பின்னாலிருந்து அணைத்து, அவளுக்குப் பாலைப் புகட்டியவாறு சென்னையின் அழகை மனைவிக்கு எடுத்துரைத்துக் கொண்டிருந்தான்.

இதைச் செய்த பின்னும் மனையாளின் கோபம் நீடித்திருக்குமா என்ன...!

அவர்களின் இந்தப் பத்து நாட்களின் திருமண வாழ்வில் ஆதிராவும், கவியரசனும் மிகவும் ரசிக்கும் தருணங்களில் இதுவும் ஒன்று.

பாலை முழுதாகக் குடித்து முடித்தவள்... கணவனின் தோள் சாய்ந்து அணைக்க முயல, "ஹே... ஹே... ஆபீஸ் போகணும் குட்டி... டிரஸ் கசங்கிடும்..." எனத் தடுக்க,

ஆதிராவின் சின்னக் கண்கள் சீறிய நாகமாக விரிய, "யூ இடியட்! என்னை விட உனக்கு உன் டிரஸ் தான் முக்கியமா... செல்ஃபிஷ்... யூ ஆல் மென் ஆர் தி சேம்..." என அவனைத் தள்ளிவிட்டு ஹாலிற்குச் சென் றமர்ந்தாள்.



இப்போதும் இவளின் இந்தக் கோபம் கவியைக் கோபப்படுத்த... இதற்கு மேல் தன்னால் இவளைச் சமாளிக்க முடியாது. அதற்கு நேரமும் இல்லை என்பதை உணர்ந்து, தனது லேப்டாப் பேக்கை எடுத்துக் கொண்டு, "ஆதிரா... சாப்பாட்டுக்கு உப்புமா கிண்டி வைச்சிருக்கேன். இப்போ பிரேக்ஃபாஸ்ட்டுக்கு அதைச் சாப்பிடு. லஞ்ச்சுக்கு ஏதாவது சாண்ட்விச் செஞ்சு சாப்பிட்டுக்கோ. நான் ஈவினிங் தான் வருவேன்... டோர் லாக் பண்ணிக்கோ..." என்றவாறு, அவன் ஷூவைப் போட்டுக் கொண்டிருக்க,

கோபமாக இருக்கும் தன்னைச் சமாதானப் படுத்தாமல் கிளம்பும் கணவனைக் கண்டு, கோபம் கனன்றாலும்... இத்தனை நாட்கள் கவியரசனின் அன்பில் நெகிழ்ந்த அவளின் ஆழ்மனம் அவனின் அருகாமையை நாட, அதன் தாக்கத்தில் மெல்ல எழுந்தவளின் கால்கள் அவளை அறியாமலேயே கணவனிடம் சென்றன.

ஷூவைப் போட்டு விட்டு நிமிர்ந்த கவியைக் கழுத்தோடு சேர்த்தணைத்து, "கவி... ப்ளீஸ் டோன்ட் லீவ் மீ அலோன். எனக்குத் தனியா இருக்க ரொம்பப் பயமா இருக்கு. ப்ளீஸ்... என்னையும் கூட்டிட்டுப் போ. ஐ டோன்ட் வான்ட் டு பி அலோன்..." என உடைந்த குரலில் கேட்டவளைத் தன் முன்னால் இழுத்து, அழத் துடித்துக்

கொண்டிருந்த அவள் இதழோடு இதழ் சேர்த்து முத்தம் வைத்தான்.

பல நிமிடங்கள் கழித்து அவளை விடுவித்தவன், "குட்டிம்மா... ரொம்ப இம்பார்டன்ட் வொர்க்டா. இல்லைன்னா... என்னோட செல்லத்தை விட்டுட்டு நான் போவேனா... புரிஞ்சுக்கோமா. நான் போயிட்டு ஈவினிங் சீக்கிரமே வரப் பார்க்கிறேன். சரியா?"

கலைந்திருந்த அவளின் கூந்தலை ஒதுக்கிச் சமாதானம் செய்ய...

அதில் அரை மனதாகச் சமாதானமாகியவள்... "சரி..." எனத் தலையாட்டி அவனுக்கு அனுமதி அளித்தாள்.

"என் செல்லக் குட்டிம்மா..." என அவளின் முன் நெற்றியில் இதழொற்றி, "கதவை லாக் பண்ணிக்கோ..." என வெளியேற...

"இரு. நானும் கார் பார்க்கிங் வரை வர்றேன்..." எனக் காலணியை அணிய...

அதில் அலறியவன், "என்னது... நீ வர்றியா? அதுவும் இப்படியே..." என அவளை மேலிருந்து கீழ்வரை பார்க்க... "குட்டிம்மா... இது உங்க ஊர் மாதிரி இல்லடா... இது சென்னை. இங்க நீ வீட்டுக்குள்ள மட்டும்தான் இந்த மாதிரிப் போட அனுமதி. வெளியே போட்டா அப்புறம் விஷயம் விபரீதமாகிடும்..." என உண்மையைக் கேலிக் குரலில் சொல்ல...



"ஏன்... இதுக்கென்ன! உனக்கு இது பிடிச்சிருக்குன்னு நீதானே மேரேஜ் நைட் சொன்ன... இப்போ மட்டும் என்னவாம்?" என்றவள், "நான் வந்து உன்னை சென்ட் ஆஃப் பண்ணணும்..." என ஒரே பிடியாக நிற்க...

"ஆதிரா, சொன்னாக் கேளு... என் முன்னாடி நீ இந்த மாதிரி டிரஸ் போடறது வேற. ஆனால் என் பார்வையும், அடுத்தவன் பார்வையும் ஒண்ணு கிடையாது. சொல்றதைப் புரிஞ்சுக்கோ. நீ வீட்டுலயே இரு. நான் போய்க்கிறேன்..." என்றவன், அதற்கு மேல் ஒரு நொடி அங்கு நிற்கவில்லை.

கீழே வந்த கவியரசன் தனது ஹுண்டாய் ஐ-ட்வென்ட்டியை எடுத்துக் கொண்டு, தன் அலுவலகம் நோக்கிப் பயணித்தான்.

சென்னையின் நெரிசலைக் கடந்து நகரத்திலிருந்து சற்றுத் தொலைவில் இருக்கும் அவனின் மென்பொருள் நிறுவனக் கட்டட வளாகத்தில் காரைப் பார்க் செய்து விட்டு, அவனின் தளத்திற்கு விரைந்தான்.

ஆபீஸ் ரிசப்ஷனில் துவங்கி, அவனின் கேபின் வரும்வரையில் அவனின் அலுவலக நண்பர்களின் வாழ்த்தைப் புன்னகையுடன் பெற்றவன்... நேராகக் கேபினுக்குள் சென்று வாசுவிற்கும், அவர்கள் டீமில் புதிதாக இணைந்திருக்கும் வாசுவின் மனைவி இந்துவிற்கும் அழைப்பு விடுத்தான்.

அவர்களை விசாரித்ததில்... தவறு வாசு சொன்னது போல் சின்னதுதான் என்றாலும், அதை நிவர்த்தி செய்வது

அவ்வளவு சுலபமில்லை என்பதை அறிந்தவன், "இது எப்போ நடந்தது வாசு?" என்று கேட்டான்.

"நேத்து ஈவினிங் அரஸ்..."

"நேத்து நடந்திருக்கு. ஏன் என்கிட்ட அப்போவே அப்டேட் பண்ணல..." - குரலில் சற்றுக் கோபத்தைக் காட்டிக் கேட்க...

"சாரி அரஸ்.. நீங்க நியூலி மேரிட். அதான்..." என இழுக்க,

"என்ன இது... இவ்வளவு சில்லியா பதில் சொல்றீங்க வாசு... அஸ் அ ஹெட் ஆஃப் திஸ் ப்ராஜெக்ட்... இதை நீங்க எனக்கு அப்போவே தெரியப்படுத்தணும்னு உங்களுக்குத் தோணலையா!

"ஒரு நாள் தேவை இல்லாமல் நமக்கு வீணாப் போச்சு..." எனக் குரல் உயர்த்தாமல் அழுத்தமாகக் கேட்டவன்...

"சரி. மத்தவங்களைக் கூப்பிடுங்க. இருக்கிற டைமுக்குள்ள செஞ்ச தப்பைச் சரி பண்ணணும்..." எனத் தன்மையாகத்தான் பேசினான்.

ஆனால் அதற்குள் எதிரில் அமர்ந்திருந்த இந்துவின் முகம் அந்த ஏ.சி. குளிரிலும் வியர்க்கவும்...

அவளிடம், "இந்து, ஜஸ்ட் ரிலாக்ஸ். ஏன் இவ்வளவு டென்ஷன்?" என மெல்லிய குரலில் கேட்க...

அந்தக் குரலிலும் பீதியடைந்த இந்து, "ச... ச... சாரி. தெரியாம... நான் தெரிஞ்சே செய்யலை. நான் செஞ்ச



தப்புக்கு வாசுவைத் திட்டாதீங்க..." என அவளின் வார்த்தை தந்தியடித்தாலும், கணவனுக்காகப் பரிந்து வந்தாள்.

அவளின் பேச்சில் சிரிப்பை உதிர்த்த கவியரசன், "ஹ்ம்ம்... நல்ல புருஷன்... நல்ல பொண்டாட்டி..." என்க,

அவள் மீண்டும், "சாரி..." எனத் துவங்கவும்...

"இட்ஸ் ஓ.கே. நீங்க தெரியாமத்தான் இந்தத் தப்பைச் செஞ்சிருக்கீங்கன்னு தெரியுது. சரி பண்ணிடலாம். அதுக்கு முன்னாடி நீங்க ரிலாக்ஸ் பண்ணுங்க..." என்றவன், அவளுக்குத் தண்ணீரைக் குடிக்கக் கொடுத்து விட்டு, வாசுவுடன் பேச்சைத் துவக்கினான்.

அதன் பின் அவர்கள் டீமின் மற்ற நபர்களுடன் ஆலோசித்து, அவரவர் செய்ய வேண்டிய வேலைகளைப் பகிர்ந்து கொடுத்தவன், தானும் வேலையில் மூழ்கிப் போக... அவன் வீட்டிலிருக்கும் மனைவியைப் பற்றிய சிந்தனை பின்னால் சென்றது.

## 2

**கா**லையில் தன் வேலையில் மூழ்கிய கவியரசன், மதிய உணவைக் கூட உண்ண மறந்திருந்தவனை வாசு தான் உணவுக்கு அழைத்துச் சென்றான்.

பத்து நிமிடங்களில் உணவை முடித்துக் கொண்டு, தன் மேஜைக்கு வந்தவன்... சரி செய்ய வேண்டிய வேலையைச் செய்து முடிக்க, அவனுக்கு இரவு ஏழரை மணியானது.

வேலையை முடித்துவிட்டுத் தன் மேலாளருக்குத் தகவலை அனுப்பி விட்டு அவன் சேரில் கண் மூடிச் சாய்ந்து அமர்ந்து, கழுத்தைத் தேய்த்துக் கொண்டிருந் தவன் முகத்தில் தெரிந்த உழைப்பின் களைப்பைக் கண்ட இந்து, அவனருகில் வந்து, "அரஸ்..." என மெல்ல அழைக்க...

அவள் குரலில் கண்ணைத் திறந்து பார்த்தவன், "சொல்லுங்க, இந்து..." என மெல்லிய புன்னகையுடனே கேட்க,

அதில் குற்றவுணர்வு பெற்றவளாய், "ஐ அம் வெரி சாரி அரஸ்... நான் ஏதோ தெரியாம..." என ஆரம்பிக்க...

"ஹே... இன்னும் எத்தனை தடவைதான் சாரி கேட்பீங்க... நீங்க தெரியாமல்தான் செஞ்சிருப்பீங்கன்னு எனக்கு நல்லாவே தெரியும். இதோ பாருங்க, இந்து... நீங்க இப்போதான் முதல் முறையா வொர்க்கிங் அட்மாஸ்பியருக்கு வந்திருக்கீங்க. தப்பு செய்யுறது சகஜம்... இந்த மாதிரிச் சின்னச் சின்னத் தப்புதான் உங்களுக்குச் சரியானதைக் கற்றுக் கொடுக்கும்.

"அதுக்காகத் தைரியமா தப்பு செய்யச் சொல்லலை. தப்பு செஞ்சா... பதட்டப்படாமல் அதை எப்படிச் சரி செய்யணும்னு பொறுமையா யோசியுங்க. அப்போ அந்தத் தப்புக்கான தீர்வும் கிடைக்கும். சரியா?" எனப் புன்னகையுடனே பதிலளித்தான்.

இதுதான் கவியரசன்.



அவன் வளர்ந்த சூழ்நிலை அவனுக்கு நிறையப் பொறுமையைக் கற்றுக் கொடுத்திருந்தது.

எல்லா விஷயங்களையும் மிகவும் பொறுமையுடனே கையாள்வான். ஒரு சம்பவம் நடந்ததென்றால்... அந்தச் சம்பவத்தின் நுனிவரை சென்று அது நடந்ததற்கான காரணம் என்ன... அதனால் ஏற்பட்ட விளைவுகளின் தீர்வு, இனிமேல் அது நடக்கக் கூடாது என்பதற்கான தெளிவு அனைத்தையும் அதன் வேர்வரை சென்று ஆராயும் திறமை கொண்டவன்...

அவனின் தெளிவான பேச்சில் குற்ற வுணர் விலிருந்து தெளிவு பெற்ற இந்து, "தேங்க் யூ அரஸ்... ஐ அம் வெரி லக்கி டு ஹேவ் எ பாஸ் லைக் யூ..." என நெகிழ்ந்த குரலில் சொல்ல....

"அடிப் பாவி. உனக்காக அரஸ்கிட்ட சிபாரிசு கேட்டது நானு... ஆனால் நீ நன்றி எனக்குச் சொல்லாம... உன்னோட பாஸுக்குச் சொல்றியா...?" என்ற கேள்வி யுடன் ஆஜரானான் வாசு.

"ஆமா... நல்லாக் கேட்டீங்க. நீங்க கேட்ட லட்சணம் எனக்குத் தெரியாது..." என இந்து பேச...

"ஓ இந்து... உங்களுக்கு இந்த அளவுக்கு சவுண்டா பேச வருமா... நான் உங்களை அமைதியின் சிகரம்னுல்ல நினைச்சேன். வாசு... உனக்கேத்த ஆளாத்தான்டா உன் அம்மா பார்த்திருக்காங்க. உன்னோட சேட்டை எல்லாம் இனிமேல் நடக்காது. உன் வாலை எல்லாம் சுருட்டி வைச்சுக்கோ..." எனச் சிரித்தவனை...

"ஆமா கவி... நானும் முதல் தடவை இவளைப் பார்த்தப்போ ஏதோ பொண்ணு ரொம்பச் சாந்தம்... இவள் தலையில ஈசியா மிளகாய் அரைச்சுட்டு வீக் என்ட் பார்ட்டிக்கு எல்லாம் போகலாம்னு மனக்கோட்டை கட்டி வைச்சிருந்தேன். ஆனா என் கோட்டை எல்லாம் இடிஞ்சு தரை மட்டமாகிடுச்சு..." என வராத கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, அவன் சொன்ன அழகிற்குப் பரிசாக அவன் தலையில் ஒரு குட்டுக் கிடைத்தது.

இந்து கொடுத்த குட்டில், "ஆஆஆ..." என வாசு வாயைத் திறந்து கத்த....

"டேய்... டேய்... உன் திருவாயைக் கொஞ்சம் லாக் பண்ணுடா. இது ஆபீஸ்..." எனக் கவி அவனுக்கு மேல் அலற...

"ஐயோ..." என இந்து அலறிய வாசுவின் வாயை அடைக்க... அவன் முதுகில் இரண்டு போட...

கவியரசன் இருவரின் சண்டையில் உரக்கச் சிரித்தான்.

இந்துவிடமிருந்து அடி வாங்கிய வாசு, சிரித்துக் கொண்டிருந்த கவியரசனிடம் திரும்பி, "சிரிடா நல்லா சிரி... உனக்கு இப்போதானே கல்யாணமாகி யிருக்கு. நீயும் இதே போல அனுபவிக்கல... என்னோட பேரு வாசு இல்லடா!" எனச் சவால் விட...

அவன் சொன்ன விஷயத்தில் அலறிய கவியரசன், "ஓ மை காட்!" எனத் தலையில் கை வைக்க...



"என்ன மச்சி..." எனக் கேட்ட வாசுவை,

"ஆதிடா... ஆதி... ச்சே... அவளை எப்படி மறந்தே போனேன். காலையி லிருந்து ஒரு போன் கூடப் பண்ணலை. என்ன பண்றாளோ... அவளுக்கு வேற இந்த ஊரே புதுசு..." எனப் பேசியவாறே, அவன் லேப் டாப்பை பேகில் போட்டுக் கொண்டு கிளம்ப ஆயத்தமாக...

"சாரி மச்சி... எங்களாலதான் உனக்குத் தொந்தரவு..." என வாசு விளையாட்டைக் கைவிட்டு மன்னிப்புக் கேட்க...

"நோ வாசு. இட்ஸ் மை ஜாப். சரி, நாளைக்குப் பார்க்கலாம். ஓ.கே. பை... பை, இந்து..." என வேக வேகமாக அனைவரிடமும் விடைபெற்றுத் தன் காரை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு விரைந்தான்.

வீட்டை அடைந்தவன் கதவு மூடப்பட்டிருக்கவும்... அழைப்பு மணியை அடித்துக் கதவு திறக்கப்படுவதற்காகக் காத்திருக்க...

அவன் அடித்த மணியின் ஓசைக்கு எந்தப் பதிலும் இல்லாமல் போக... மீண்டும் இருமுறை அழைத்தும் பதில் இல்லாமல் போக... தன்னிடமிருந்த சாவியைக் கொண்டு கதவைத் திறந்து உள்ளே சென்றான்.

உள்ளே சென்றவன்... சென்ற நிலையிலேயே திகைத்து நின்றான்.

காலையில் அவன் விட்டுச் சென்ற அதே நிலையிலேயே வீடிருக்க.... ஒரே ஒரு மாற்றமாக வீட்டுச்

சோபாவில் காலையில் அணிந்த உடையுடனே ஆதிரா படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் பதறி அவள் அருகில் வந்தமர்ந்தான்.

"ஆதி... ஆதிம்மா... டேய்..." எனப் படுத்திருந் தவளுக்கு என்னமோ ஏதோவென நினைத்து, அவளைத் தூக்கி மடியில் சாய்த்துக் கொண்டு வினவ...

அவளோ... அவள் தலை கோதிய கவியரசனின் கையைத் தட்டி விட்டுக் கண் விழித்து எழுந்து அவர்கள் பிளாட்டின் ஒற்றைப் படுக்கையறையில் சென்று மறைந் தாள்.

அவள் கோபமுணர்ந்து அவள் பின்னாலே சென் றவன்... "குட்டிம்மா, ஐ அம் சாரிடா. கொஞ்சம் முக்கிய மான வேலை. அதான் அந்த டென்ஷன்ல என்னால உனக்குக் கான்டாக்ட் பண்ண முடியலை. ஐ அம் சாரிடா குட்டி..." எனப் பால்கனியில் சாய்ந்து நின்றவளை அணைத்து, அவள் தோளில் முத்தம் வைக்க...

அதில் சற்று நெகிழ்ந்தாலும், அவள் மௌன மாகவே நின்றிருக்க... அவள் மௌனத்தை வேறு விதமாக எடுத்துக் கொண்ட கவியரசனின் கைகள் அவளின் இடுப்பில் விளையாடி முன்னேற...

அதில் முற்றிலும் உடைந்த ஆதிரா பின்னால் நின்றிருந்த கணவனின் மார்பில் சாய, அதன் பின் கவியரசனுக்கு என்ன வேண்டும்...?

சாய்ந்த மனைவியைக் கையிலேந்திக் கொண்டு படுக்கையறைக்குச் செல்ல... அதன் பின் இருவரும் பிரிய ஒரு மணி நேரம் தேவைப்பட்டது.



அலுவலகத்தில் அதிகப்படியாக உபயோகித்த மூளையும், படுக்கையில் அதிகப்படியாக வேலை செய்த உடலும் வெகுவாகச் சோர்ந்திருக்க... கவியின் வயிறு அதன் இருப்பை அறைகூவிப் பறைசாற்றியது.

தன்னருகில் கோழிக் குஞ்சைப் போன்று கை கால்களைக் குறுக்கிக் கொண்டு படுத்திருந்த மனைவியின் நெற்றியில் முத்தம் வைத்து, அவளிடமிருந்து நகர முற்பட, "எங்கே போற?" எனச் சிணுங்கியவளை...

"பசிக்குதும்மா. சாப்பிட ஏதாவது செய்து தர்றேன். சாப்பிட்டுட்டு அப்புறமா... சரியா...?" எனச் சிரித்து விட்டுத் திரும்பி ஒரு அடி எடுத்து வைத்தவன்... பின் மீண்டும் திரும்பி, "குட்டிம்மா... எழுந்து குளிச்சிடுறியா... நீ ரொம்பக் களைப்பாத் தெரியுற!" எனக் கொஞ்சலாகச் சொல்ல...

"ம்ம்... போ."

"ப்ளீஸ்டா குட்டி..." எனத் தன் கெஞ்சலைக் கைவிடாமல் கொஞ்ச...

ஒரு வழியாக அவளைச் சரிக்கட்டிக் குளியலறைக் குள் தள்ளி விட்டுக் கிச்சனுக்குள் வந்தவனுக்கு... ஒரு நொடி கோபம் உச்சாணிக் கொம்புக்குச் சென்றது.

பின்னே வராமல்... காலையில் அவன் கிச்சனை எந்த நிலையில் விட்டு விட்டுச் சென்றானோ... அதே நிலையிலே இப்போதும் இருந்தது.

அவன் அவளுக்காகச் செய்து வைத்த உப்புமா, கேட்பாரின்றிக் கிடப்பதைப் பார்த்ததும்... பொறுமை

சாலியான கவியரசனுக்கே புது மனைவியின் மீது கட்டுக் கடங்காமல் கோபம் பெருகியது.

கவியரசனுக்குக் கோபம் வருவதே அரிது. ஆனால் இப்போது மனைவியின் சில செய்கைகள் அவனை அடிக்கடி கோபப்படுத்தவும், அதைக் கட்டுப்படுத்த அவன் எப்போதும் செய்வது போல எண்களை நூறிலிருந்து ஒன்று வரை தலைகீழாகச் சொல்லித் தன் மனதைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்று, அதில் வெற்றியும் பெற்றான்.

மனதைத் தெளிவுபடுத்திக் கொண்டவன், அதன்பின் மனைவியிடம் சிலவற்றைப் பேசிப் புரியவைக்க வேண்டும் என்ற முடிவையும் எடுத்தான்.

அதன்பின் ஃபிரிட்ஜைத் திறந்து, மாவை எடுத்து வெளியில் வைத்தவன்... மாவை இட்லித் தட்டில் ஊற்றிப் பாத்திரத்தை அடுப்பில் வைத்தான்.

தக்காளி, வெங்காயத்தை மடமடவென வெட்ட ஆரம்பித்தவன், தக்காளிச் சட்னியைச் செய்து வைத்து விட்டு, பின் சிங்கில் கிடந்த பாத்திரங்களைத் துலக்கி, கிச்சன் மேடையைச் சுத்தப்படுத்தி விட்டு வீட்டைப் பெருக்கி எடுத்தான்.

அவன் வேலையை முடித்து நிமிரவும், படுக்கை யறை வாயிலிலிருந்து ஈரத் தலையைத் துவட்டியவாறு அவன் மனைவி வரவும் சரியாக இருந்தது.

இத்தனை நாட்கள் புதிதாகக் கல்யாணமானவர் களுக்கே உண்டான பூரிப்பில் இருந்தவன், இன்று



மனைவியிடம் சராசரி வாழ்க்கையைப் பற்றிச் சில முடிவுகளையும், அவளுடைய பழக்கவழக்கங்களைப் பற்றியும் பேச வேண்டுமென்று தீர்மானித்தான்.

கையில் டவலுடன் வந்தவளை அருகில் சென்று அழைத்து வந்து, சோபாவில் அமர வைத்தவன், "இப்போ எதுக்குடா தலைக்குக் குளிச்ச... தலைவலி வந்திடப் போகுது..." என்றவாறு, அவள் தலையைத் துவட்டி, அருகில் அமர்ந்து, "சாப்பிடலாமா?" எனச் சிரிப்புடனே கேட்க...

"ம்ம்..." என அவள் டி.வி.யைப் போட்டுக் காலை மடக்கி அமர்ந்து கொண்டாள்.

அவளின் செய்கையில் ஒரு பெருமூச்சுடன் எழுந்து சென்றவன், அவளுக்கும் தனக்கும் தட்டை எடுத்துக் கொண்டு மீண்டும் சோபாவில் வந்தமர்ந்தான்.

அவள் கையில் தட்டைக் கொடுத்து விட்டு, "சாப்பிடுடா..." என்றதுடன், அவன் டி.வி.யில் ஆழ்ந்து, தன் தட்டைக் காலி செய்யும் வேலையில் இறங்கினான்.

அவன் இருந்த பசியில் தட்டிலிருந்த ஐந்து இட்லி, ஐந்து நிமிடத்தில் காலியாகிவிட, மீண்டும் இரண்டு இட்லிகளை எடுத்து வரலாம் என நினைத்து எழுந்தவன்... மனைவியின் தட்டு இன்னமும் தொடப்படாமல் இருப் பதைப் பார்த்ததும், "என்ன ஆதி... இன்னமும் சாப்பிடாம இருக்க? காலையிலிருந்து எதுவுமே சாப்பிடலை. ஏன் இப்படிப் பண்ற? நீ என்ன சின்னக் குழந்தையா?" எனக் குரலில் சற்றுக் கடுமையைக் காட்டிப் பேச....

அதைவிடக் கடுமையுடன், "ஐ அம் நாட் எ கிட். எனக்குச் சாப்பிடத் தெரியும். சும்மா எதுக்கெடுத்தாலும் நீ டீச் பண்ண வேண்டிய அவசியமில்லை. அண்ட் அன்டர்ஸ்டாண்டிங் ஒன் திங். எனக்கு என்ன வேணும்னு எனக்குத் தெரியும். நீ எல்லாத்துக்கும் சொல்லித் தர ணும்னு எந்த அவசியமும் இல்லை..." என எடுத்தெறிந்து பேசியவளை...

"ஆதிரா..." என்ற அவனின் அழுத்தமான அழைப் பில் இருந்த ஏதோவொன்று, ஆதிராவின் பேச்சுக்குத் தடை விதிக்க...

அடுத்த அவனின், "சாப்பிடு..." என்ற வார்த்தைக்குக் கட்டுப்படவும் வைத்தது.

தட்டில் இருந்த மூன்று இட்லிகளில் இரண்டு இட்லிகளை மிகவும் சிரமப்பட்டு உள்ளே தள்ளியவள்.. அதன் பிறகு இருந்த ஒரு இட்லி அவளின் தொண டைக்குள் போவேனா என்றது.

பரிதாபமாகப் பார்த்த ஆதிராவின் முகத்தில் எதையோ கண்டவன், "பிடிக்கலையா ஆதி... சாண்ட்விச் செஞ்சு தரட்டுமா?" என மெதுவான குரலில் கேட்ட கவியின் கோபம், அவள் இட்லியைப் பிட்டு வாயில் வைத்த போதே பறந்து போனது.

அந்தக் குரலில் உடைந்த ஆதிரா தட்டைக் கீழே வைத்து விட்டு, அவனின் மடி மீதேறி அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, "ஐ அம் சாரி கவி. ஐ அம் வெரி சாரி. நான் தப்புப் பண்ணிட்டேன். ஐ அம் சாரி..." என உரத்த



குரலில் அழுதவளைக் கவியால் என்ன சொல்லியும் சமாதானம் செய்ய முடியவில்லை.

அதுவும் அவளின் இந்த அழுகைக்கான காரணமும் அவனுக்கு விளங்கவில்லை.

திருமணமான இந்தப் பத்து நாட்களில் ஆதிராவும், கவியரசனும் இருந்த தனிமையான நேரங்களை மிகவும் ரசித்துக் கழித்தனர். அதுவும் இருவரின் இன்பத்தின் அளவு படுக்கையில் கூடிக் கொண்டே போகும்.

ஆனால், இதையும் மீறி ஆதியின் நடவடிக்கையில் இருந்த மாற்றம்தான் அவனை வெகுவாகக் குழப்பியது.

ஆனால், மனதின் குழப்பத்தை ஒரு ஓரமாக ஒதுக்கி வைத்தவன்... அழுது கொண்டிருந்த மனைவியைச் சமாதானப்படுத்தும் வேலையில் இறங்கினான்.

"குட்டிம்மா... எதுக்குடா அழற? நான் இனிமேல் ஆதியைத் திட்ட மாட்டேன்டா... ப்ளீஸ்ம்மா... அழாதீங்க..." என முதுகைத் தடவி ஆறுதல் படுத்தவும், அவன் தடவிய இதத்தில் அடுத்த ஐந்து நிமிடத்தில் ஆதிரா உறங்கிப் போனாள்.

மடியில் அமர்ந்து, தன் நெஞ்சில் சாய்ந்திருந் தவளிடமிருந்து எந்த அசைவும் இல்லாமல் போக, குனிந்து பார்த்தவன், மெல்லிய புன்முறுவலுடன், "எப்படித்தான் இவளுக்குத் தூக்கம் வருதோ... இவளை விட்டா இருபத்து நாலு மணி நேரமும் தூங்குவா போல...!" எனத் தனக்குள்ளே பேசியவாறு அவளைக் கையில்

ஏந்திக் கொண்டு, படுக்கையில் விட்டு விட்டுப் பாத்திரங் களை ஒழுங்குபடுத்தி விட்டு, அவனும் அறைக்கு வர, அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

தன் அலமாரியிலிருந்து ஒரு ஆங்கில நாவலை எடுத்துக் கொண்டு பால்கனி மூங்கில் சேரில் அமர்ந்து கொண்டவனுக்கு அந்த நாவலில் இரண்டு பக்கங்களைக் கூட முழுதாகப் படிக்க முடியவில்லை.

அவனுக்கு மனைவியின் செயல்பாடுகளில் தெரிந்த மாற்றம்தான் கண் முன்னே நிழலாடியது.

இந்தப் பத்து நாட்களில் அவளின் குணாதிசயங்கள் இதுதான் என அவனால் ஒரு முடிவுக்கு வர முடிய வில்லை.

ஒரு சமயம் நன்றாகச் சிரித்துப் பேசிக் கொண்டி ருப்பவள், அதன்பின் அமைதியாய் டி.வி. முன் அமர்ந்து கொள்கிறாள்.

சில சமயம் எடுத்தெறிந்து அலட்சியமாகப் பேசு பவள், அதன் பின் அவளே வந்து மன்னிப்புக் கேட்டுக் கட்டியணைக்கிறாள்.

சரி. அவளுக்குத் தன்னைப் பிடிக்கவில்லையோ என அவன் குழம்பித் தவித்தால்... அவன் தவிப்புக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல், தானாக வந்து அவன் கன்னங்களை ஈரப்படுத்தி விட்டுச் செல்கிறாள்.

சரி. அவளிடமே பேசி அவளைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம் என நினைத்தால்... அவளோ அவளுக்குப்



பிடித்தது, பிடிக்காததைக் கூடச் சொல்ல மறுக்கிறாள் என்பதை விட, “எனக்கே எனக்கு என்ன பிடிக்கும்னு தெரியாதே, கவி...” என உதட்டைப் பிதுக்கிச் சொல்ல... அவனுக்கு உருகிப் போகும்.

மனைவியைப் பற்றியே யோசித்தவனுக்கு ஒன்று மட்டும் நன்றாகத் தெரிந்தது.

இருவருக்குமுண்டான ஒன்பது வயது வித்தியாசமே, இருவருக்கும் இருக்கும் இப்போதைய புரிதலின்மைக்குக் காரணம் என்ற முடிவுக்கு வர வைத்தது.

மேலும், தங்களுக்குத் திருமணமாகிப் பத்து நாட்கள் மட்டுமே கடந்திருக்கும் நிலையில், ஆதிராவைப் பற்றிய எந்தவொரு முடிவுக்கும் வர வேண்டாம் என்பதையும் உணர்ந்தான்.

ஆதிராவைப் பற்றிய இந்தக் குழப்பங்கள் ஒரு பக்கம் இருந்தாலும், கவியரசனுக்கு அவளின் மீது அளவு கடந்த காதல் பெருகியிருந்தது.

அவனின் யாருமற்ற சூழ்நிலையைக் கழிக்க... அவனுக்குக் கடவுள் அனுப்பிய பொக்கிஷமாக ஆதியைக் கருதினான்.

அந்தப் பொக்கிஷத்தைத் தன் கண்ணுக்குள் வைத்துப் பாதுகாக்க... தன்னால் முடிந்தவரை முயல வேண்டுமென்ற முடிவை, ஆதிராவின் கழுத்தில் திருமாங் கல்யத்தை அணிவிக்கும்போதே ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டான்.

அன்றைய நாளின் இன்பம் இன்னமும் அவன் கண் முன்னே விரிந்தாடியது.

அவனுக்கென்று இருக்கும் ஒரே சொந்தம், பந்தம் அனைத்தும் காக்கும் கரங்களின் மேலாளர் 'ஆதி லட்சுமி'தான்.

தன் அறியா வயதில் அனாதையாகக் காக்கும் கரங்களை அடைக்கலமாகப் பற்றிய கவியரசனுக்கு, அதன் பின் அவனின் பள்ளி, கல்லூரி வாழ்க்கை அனைத்துமே அங்கேதான்.

தன்னைப் போல், தாய், தந்தையற்ற பல குழந்தைகளுக்குத் தாய், தந்தையாக உருமாறிப் போனவர் ஆதிலட்சுமி.

தன் எஞ்சினீயரிங் கல்லூரிப் படிப்பை முடித்த வுடன் கேம்பஸ் இன்டர்வியூவில் கிடைத்த வேலையில் அவனுக்கு மேற்கொண்டு படிக்கும் வாய்ப்பையும் கொடுக்க... ஒரு பக்கம் வேலை, படிப்பு மற்றும் இன் னொரு பக்கம் காக்கும் கரங்களில் குழந்தைகளுடன் நேரம் செலவழிப்பது என முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருந்த கவியரசனுக்கு அதன் பின் கிடைத்தது அனைத்துமே வெற்றிதான்.

அவனின் உழைப்புக்குக் கிடைத்த பரிசாக நல்ல வேலை, நல்ல சம்பளம், சொந்தமான வீடு, கார் என ஏழு வருடங்களில் அவன் அடைந்த வளர்ச்சி, அவன் சின்ன வயதில் பட்ட கஷ்டங்களுக்கு விடையானது.



வாழ்க்கை இப்படியே போய்க் கொண்டிருக்க... ஒரு நாள் ஆதிலட்சுமியின் மூலம்தான் ஆதிராவைப் பற்றித் தெரிய வந்தது.

ஆதி சொன்ன ஒரே காரணத்திற்காக... ஆதிராவின் முகத்தைக் கூடப் பார்க்காமல் அவர்கள் பெற்றோர்க்குச் சம்மதம் சொன்னான்.

ஆதிராவின் பெற்றோர் டெல்லியில் அவர்கள் வேலை பார்க்கும் நிறுவனத்தில் தங்களுக்கு அதிக நாள் லீவ் கிடைக்காது என்றும், அதனால் சீக்கிரமே திருமணத்தை முடித்துக் கொடுக்கும்படியும் ஆதிலட்சுமி யிடம் கேட்டதாகச் சொல்ல... அவனும் சரியெனச் சம்மதித்தான்.

கவியரசன் அவன் வாழ்க்கையில் பல அடிகள் வாங்கியிருந்தாலும், அதைக் காரணம் காட்டி, அவன் எப்போதுமே திருமணத்தை மறுத்ததில்லை.

அதற்குக் காரணம் அவன் பட்ட துன்பங்களை ஈடு செய்ய, அவன் குடும்பம், குழந்தை சகிதமாக சந்தோஷமான வாழ்க்கை வாழ வேண்டுமென்ற முடிவுடன்தான் திருமணத்திற்குச் சம்மதம் சொன்னான்.

அவன் எதிர்பார்த்த திருமணமும் நல்லபடியாக இறைவன் சந்நிதியில் மிகவும் எளிமையாக நடந்தேறியது.

அன்றைய நாளில், அவன் இதுவரை பார்த்துப் பேசியிராத ஒரு பெண் இன்னும் சில நொடிகளில் தன் வாழ்க்கையில் இன்றியமையாதவளாகப் போகிறாள் என்ற இன்பப் பரபரப்பு அவன் நெஞ்சுக்குள் குறுகுறுத்தது.

அந்தக் குறுகுறுப்பு அன்ன நடையிட்டுத் தலை குனிந்து வந்த ஆதிராவின் அழகில் இன்பப் படபடப்பாக மாற, தான் நிழலில் வேண்டும் சிவனின் ஆசியோடும், நிஜத்தில் வேண்டும் ஆதிலட்சுமியின் ஆசியோடும் ஆதிராவைத் தன் மனைவியாக்கிக் கொண்டான்.

திருமணத்தை முடித்த கையோடு ஆதிராவை இவனிடம் விட்டுவிட்டுச் சென்ற ஆதிராவின் பெற்றோர்... தினமும் ஒருமுறை அவனின் செல்போனுக்கு அழைத்து விசாரித்து விட்டு, மகளிடம் ஓரிரு வார்த்தை பேசிவிட்டு வைத்து விடுவர்.

ஆதிராவும், இதுவரை அவள் பெற்றோர் பற்றிப் பெரிதாக அவனிடம் பேசியதில்லை. இவனும் அது பற்றிக் கேட்டதில்லை. அதற்கான வாய்ப்பும் அமைய வில்லை.

ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்திப் பார்த்தாலும், அவனுக்கு மனைவியைப் பற்றிய எந்தக் கணிப்பும் கிடைக்கவில்லை.

தன் திருமணத்தைப் பற்றிய முடிவை ஆதிலட்சுமி யின் பொறுப்பில் விட்ட கவியரசன், தங்கள் வாழ்வு சிறக்க வேண்டுமென்றால் அதற்குண்டான வேலை களைத் தான்தான் செய்ய வேண்டுமென்ற முடிவெடுத் தான்.

தீர்மானத்தின் முடிவில் கவியரசனின் கண்கள் தூக்கத்திற்குக் கெஞ்ச... எழுந்து உள்ளறைக்குச் சென்று, மனைவியின் அருகில் படுத்துக் கொள்ள... அடுத்த



ஐந்தாவது நிமிடம் ஆதிரா, அவன் நெஞ்சில் அடைக்கலம் புகுந்தாள்.

மனைவியின் அணைப்பில் மனதின் சஞ்சலங்கள் ஒரு பக்கம் போக... அவனும் உறங்கிப் போனான்.

## 3

**“ஆதிம்மா...”** என்ற அழைப்புடன் உள்ளே வந்த கணவனை ஓடி வந்து தாவிக் கட்டியணைத்துக் கொண்டாள் ஆதிரா.

“ஹே குட்டி...” என அணைத்த மனைவியைத் தூக்கியவாறு, ஹால் சோபாவில் அமர்ந்து கொண்டவன்...

“என்ன மேடம்... இன்னிக்குச் சரியான மூட்ல இருக்கீங்க போல... இல்லேன்னா நான் எப்போதும் வரும்போது மூஞ்சியை அழுது வடிஞ்சுட்டு வைச்சிருப் பீங்க... இன்னிக்கு என்ன ஸ்பெஷல்... ம்ம்...” என மூக்கோடு மூக்கை உரசியவாறு கேட்ட கணவனை மேலும் அணைத்துக் கொண்டவள்...

“தெரியலையே கவி... தோணுச்சு...” என்றதோடு, கவியைக் கட்டியணைத்து ஒன்றும் பேசாமல் அமர்ந்து கொண்டாள்.

எப்போதும் போல் இன்றும் அவளின் செய்கைக்கு விடை தெரியாமல் ஒரு பெருமூச்சை வெளியிட்டவன், “சரி, கிளம்புடா... வெளியே போகலாம்...” என்றவனை...

“எங்கே கவி?”

"எங்கேன்னு சொன்னாதான் வருவியா...? கிளம்பு."

"ம்ச்... நான் எங்கேயும் வரலையே... ப்ளீஸ்!" என மறுக்க...

கவியரசனுக்கு மெல்லிதான கோபம் உருவெடுத்தது.

"ஆதி, உனக்கு என்னதான் பிரச்சனை... நீ ஏன் இப்படி இருக்க? எல்லாப் பொண்ணுங்களும் புருஷன் கூட ஒண்ணா ஊர் சுத்தணும்னு தினமும் டார்ச்சர் பண்ணுவாங்க. ஆனா... நீ... நானே கூப்பிட்டாலும் வெளியே எங்கேயுமே வர மாட்டேங்கிற... உனக்கு என்னதான்டா வேணும்? நீ ஏன் இப்படி இருக்க? நீ ஏதாவது சொன்னாத்தான் எனக்குத் தெரியும். ப்ளீஸ் ஸ்பீக் அவுட்..." - கவியின் இந்த ஒரு மாதக் கவலையை வெளியிட்டான்.

அன்றைய நாளுக்குப் பின் அடுத்து வந்த நாட்கள்தான் வேகமாக ஓடியதே தவிர, ஆதிராவிடம் எந்த மாற்றமும் நிகழவில்லை.

அவள், அவள் போக்கிலேதான் இருந்தாள்.

ஆனால், ஒரு சில மாற்றமாக முன் போல் எப்போதும் மந்தமாக இல்லாமல், கவியுடனே எழுந்து கொள்பவள், அவளுக்குப் பெரிதாகச் சமைக்கத் தெரியாது என்றாலும், கணவனுடன் சேர்ந்து சமையலறையில் நிற்பது அவளுக்குப் பிடித்தமான ஒன்று என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

இந்த ஒரு மாதத்தில் கவியரசன் ஆதிராவைப் பற்றித் தெரிந்து கொண்ட ஒருசிலவற்றில் முதலாவதாக, அவள்



வெளிப்படையாக எதையும் தனக்கு வேண்டுமென்று இதுவரை கேட்டதில்லை.

இவனாகத்தான் உனக்கு இது வேண்டுமா, அது வேண்டுமா என ஒரு சிலவற்றை வரிசைப்படுத்துவான். அதிலிருந்துதான் அவள் எதையாவது கேட்பாள்.

அதே போல் அவளே அவனை எடுத்தெறிந்து பேசுபவள்... அதன் பின் அவளாகவே தானாக வந்து அவனிடம் மன்னிப்பும் கேட்டு விடுவாள்.

வீட்டில் இருக்கும் சமயம் அவனை விட்டு ஒரு நொடிகூட அங்கே இங்கே பிரிவதில்லை. எப்போதும் அவன் கையைப் பிடித்துக் கொண்டே நிற்பவளை, "டேய் ஆதி... ஏன்டா இப்படிக் குட்டி போட்ட பூனை மாதிரி என்னை உரசிட்டே நிக்கிற...?" எனக் கிண்டலாகக் கேட்டதற்கு...

"ஏன் கவி... உனக்கும் என்னைப் பிடிக்கலையா?" என வெற்றுக் குரலில் கேட்ட மனையாளின் முகத்தை அவனால் காணப் பொறுக்காது.

அந்த நாளுக்குப் பின் அவளே அவனை விட்டு நகர்ந்து நின்றாலும் இவன் அவளை விடுவதில்லை.

இப்படி மட்டுமே மனைவியைப் பற்றி யிருந்த வனுக்கு இன்னமும் மனையாளின் முழு விருப்பு, வெறுப்புகளை அறிந்து கொள்ள முடியவில்லை.

வீட்டிலிருக்கும் சமயத்தில் பெரும் பகுதி கவியரசனின் குரல் மட்டுமே சூழ்ந்திருக்கும்.

அதிகம் பேசாத கவியரசன் வீட்டில் இருக்கும் இருவருமே அதிகம் பேசிக் கொள்ளாமல் இருந்தால்... வீட்டின் அமைதி அவனை என்னவோ செய்ய... இவன் மட்டுமே எதையாவது பேசிக் கொண்டிருப்பான்.

இவன் கேட்டதற்குப் பதில் சொல்லும் ஆதிரா, அதன்பின் அவளிடமிருந்து எந்தச் சலனமும் இருக்காது.

இந்தத் திருமண வாழ்வில் ஆதிரா மாறினாளோ இல்லையோ... கவியரசன் அவன் இயல்பிலிருந்து வெகுவாக மாறியிருந்தான்.

இப்படியாக, வீட்டிலே கழித்த நாட்கள் சலிப்படையும் சமயம்... கவியரசன் எங்காவது வெளியே அழைத்தால் அதற்கு அவளின் பதில் வேண்டாம் என்பதே.

இவனும் ஓரிரு முறை அழைத்துப் பார்த்து விட்டு விட்டு விடுவான்.

ஆனால் இன்று வாசுவும் இந்துவும், புது மண மக்களை அவர்கள் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்திருந்தனர்.

ஆனால் இவன் வெளியே அழைத்ததற்கான காரணத்தை வெளியிடும் முன்னே... அவள் மறுப்புச் சொல்லவும், கவியரசனுக்கு இப்போது வீம்பு வந்தது.

அவளை இம்முறை எப்படியாவது வெளியே அழைத்துச் செல்ல வேண்டுமென்ற வேகம் வர, "நோ ஆதி... நீ வந்து தானாகணும்... போ. போய்க் கிளம்பு..." என்றதுடன் அவளை நகர்த்தி விட்டுக் குளியலறைக்குள் செல்ல எத்தனிக்க...



"கவி... என்னை உன்னோட வார்த்தையில கட்டுப்படுத்தணும்னு நினைக்காதே. நான் என்னோட இஷ்டப்படிதான் இருப்பேன். நீ சொல்றதை எல்லாம் கேட்டுட்டு என்னால ஆட முடியாது. எனக்கு இப்போ வெளியே வர இஷ்டமில்லை. டோன்ட் ட்ரை டு கம்பெல் மீ...." எனத் தலையைச் சிலுப்பிக் கொண்டு எழுந்து கொள்ள...

ஆதிராவின் வார்த்தையில் வெகுண்ட கவியரசன், "ஆதிரா... நீ வர. வந்துதான் ஆகணும்..." என அழுத்தமாகச் சொல்லிவிட்டு, அவன் குளியலறைக்குள் சென்று வந்த பின்னும், அவள் கிளம்பாமல் இருப்பதைக் கண்டவன், "ஆதிரா..." என்ற அழுத்தமான அழைப்புடன் அவள் தோள் பற்றித் தன் பக்கம் திருப்ப...

அவன் கையைத் தட்டிவிட்ட ஆதிரா கையைக் கட்டிக் கொண்டு தலை குனிந்து நிற்க, அவள் தாடையைப் பற்றி அவள் கண்ணை நோக்கி, "குட்டிம்மா... நீ நிஜமாவே நம்ம உறவை மதிக்கிறேன்னா நீ என்னோட வருவேடா..." என்றதுடன் நகர்ந்து கொண்டான்.

ஆதிராவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

அவன் தன்னோடு வந்துதான் ஆகவேண்டுமென வார்த்தையால் சண்டையிட்டிருந்தால் அவள் நிச்சயம் எதிர்த்திருப்பாள்.

ஆனால் அவன் இவ்வாறு கேட்ட விதத்தில் அவளால் அவனின் வார்த்தைகளை மறுக்க முடிய

வில்லை. இதுவே வேறொருவராக இருந்திருந்தால், "நீ யார் எனக்கு ஆர்டர் போட?" எனச் சட்டையைப் பிடித்துச் சண்டை யிட்டிருப்பாள்.

ஆனால், கேட்டது அவள் கணவனன்றோ... எப்படி அவளால் இந்த வார்த்தைகளை மறுக்க முடியும்?

கவியரசன் அறையை விட்டுச் சென்றதும், கதவை மூடியவள்... அடுத்த ஐந்து நிமிடத்தில் கிளம்பித் தயாராக வெளியே வந்தாள்.

அவள் கதவை அடைத்தபோது... கோபத்தில் செய்கிறாள், இன்றும் நம் முயற்சி வீண்தான் என நினைத்த கவியரசன், அவள் தயாராகி வெளியே வந்ததில் உள்ளுக்குள் சந்தோஷமடைந்தவன்... அவளின் உடை யில் மிகவும் வருத்தமடைந்தான்.

அவள் அணிந்திருந்த அந்தக் கருநீல ஜெக்கிங்க்ஸ் அவளின் ஜீரோ சைஸ் உடலுக்குப் பொருத்தமாக அமைந்திருந்தாலும், அவள் மேலே அணிந்திருந்த உடைதான் அவனின் கண்ணையே உறுத்தியது.

அவள் எப்படிக் கையை உயர்த்தினாலும், அவளின் சிற்றிடை பார்ப்பவர்களின் கண்களை நிச்சயம் உறுத்தும் என்பதில் அவனுக்கு எந்த ஐயமுமில்லை.

அவள் கழுத்துக்குக் கீழே... அவள் குனிந்தாலும், நிமிர்ந்தாலும், ஏன் ஒன்றும் செய்யாமல் நின்றாலும் கூட, அவள் அணிந்திருந்த ஆடை அவளின் அழகை மற்றவர்களுக்கு விருந்தாக்கும்.



அதைக் கணவனாக உணர்ந்து கொண்ட கவி, அவளருகில் வந்தவன், "ஆதி... என்னடா டிரஸ் இது? நாம வெளியே போறோம்... போய் வேற போட்டுட்டு வா..." எனக் கூற,

"கவி... திஸ் இஸ் எனஃப். வெளியே போகணும்னு சொன்ன... நான் கிளம்பி வந்துட்டேன். இதுக்கு மேல அது சரியில்ல... இது சரியில்லன்னு சொன்ன... நான் எங்கேயும் வரல..." என மீண்டும் அறைக்குள் செல்ல எத்தனித்தவளை...

"ஆதி..." என ஏதோ சொல்ல வந்தவன்... அவள் முகம் பிடிவாதத்தைக் காட்டவும், "அட்லீஸ்ட் மேலே ஏதாவது போட்டுக்கோடா. உன்னோட நல்லதுக்குத்தான் சொல்றேன். புரிஞ்சுக்கோம்மா..." எனக் குரலைக் கட்டுப்படுத்தி மிகுந்த பொறுமையுடன் சொல்ல...

அவளோ அவன் சொன்னதைக் காதிலே வாங் காமல் காலணிகளை அணிய ஆரம்பித்தாள்.

கவியரசனுக்கு அவளை வெளியே அழைத்துச் செல்ல மிகுந்த ஆர்வமிருந்தாலும், அவளை இந்தக் கோலத்தில் அழைத்துச் செல்லத் துளியும் விருப்பமில்லை.

இனி, போக வேண்டாம் எனத் தடுத்தால் அதற்கும் ஏதாவது பிரச்சனை செய்வாளோ எனத் தயங்கியவன்... அறைக்குள் சென்று அவளின் ஆடைகள் வைக்கும் கபோர்டைக் குடைந்து ஒரு ஸ்டோலை எடுக்கக் கை தவறி ஒரு ஃபைல் கீழே விழுந்தது.

போகும் அவசரத்தில் அதைச் சரியாகப் பார்க்காமல், மீண்டும் அதன் இடத்தில் வைத்து விட்டு ஸ்டோலையும் எடுத்துக் கொண்டு கதவைப் பூட்டி விட்டு, கார் பார்க்கிங் சென்றான்.

அவனுக்கு முன்னே வந்து காத்திருந்த ஆதிரா விற்குக் கதவைத் திறந்து விட்டுத் தானும் ஏறிக் காரை எடுத்தான்.

போகும் வழியில் இருவருக்கும் எந்தப் பேச்சு வார்த்தையும் நடக்காமல், அந்த அமைதியான சூழ்நிலையைக் காரில் ஒலித்த மெல்லிய இசைதான் அலங்கரித்தது.

சீரான வேகத்தில் சென்று கொண்டிருந்த கார் சாலையின் ஓரம் ஒதுங்கவும், ஆதிரா கணவனைக் கேள்வியாகத் திரும்பிப் பார்க்க... "ஃபர்ஸ்ட் டைம் வாசு வீட்டுக்குப் போறோம். ஏதாவது கிஃப்ட் வாங்கிட்டுப் போகலாம்..." என்றவன், கதவைத் திறந்து கொண்டு, வெளியே செல்ல எத்தனிக்க... ஆதிராவும் வெளியே இறங்கினாள்.

"நீ எங்க வர்றே? இங்கேயே இரு. நான் ஒரு டென் மினிட்ஸ்ல வந்துடுவேன்..." எனக் கிட்டத்தட்ட அலறினான் கணவன்.

"ம்ச்... டென் மினிட்ஸ் என்னால இங்க சும்மா இருக்க முடியாது, கவி... நீ ஏன் இப்படி ஓவர் ரியாக்ட் பண்ற?" என்றதுடன், கதவை அடைத்துக் கொண்டு, அவன் புறம் வந்து நின்று, அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.



அவள் காரை விட்டு இறங்கி வரும்போதே பல கண்கள் அவளை மொய்க்க... அதை உணர்ந்து கொண்டவனாய்க் காரிலிருந்த அவளின் ஸ்டோலை எடுத்து, அவள் தோளைச் சுற்றிப் போட்டுத் தன்னோடே சேர்த்துப் பிடித்து நடந்தான்.

அவன் தன் மீது ஸ்டோலைப் போட்டது ஆதிராவுக்கு மிகுந்த கோபத்தை உண்டு பண்ணினாலும், பொது இடத்தில் தேவை யில்லாத பிரச்சனையை உரு வாக்க வேண்டாமென்று அவனுடனேயே நடந்தாள்.

அந்த ஷாப்பிங் மாலில் இருந்த ஒரு நகைக் கடையில் வெள்ளியில் சின்ன விளக்கை வாங்கிய கவியரசன், அடுத்ததாக ஒரு ஸ்வீட் கடையில் சிலவற்றை வாங்கிக் கொண்டு, அந்த மாலின் காரிடாரில் மனைவி யுடன் நடந்து செல்லும்வரையில் எந்தப் பிரச்சனையும் நடக்கவில்லை.

ஒரு கையில் மனைவியும், மறு கையில் பொருட்கள் நிறைந்த பேகையும் பிடித்துக் கொண்டு நடந்த கவியரசனின் செல்போன் அலற... மனைவியைப் பிடித்திருந்த கையை விட்டுவிட்டு செல்போனை எடுத்து உயிர்ப்பித்துப் பின்னால் வரும் மனைவியை ஒரு கண்ணால் பார்த்தவாறு, சற்றுத் தள்ளி நின்று பேசிக் கொண்டிருந்தான்.

சென்னைக்குப் புதிதான ஆதிரா, அந்த மாலின் கடைகளை வேடிக்கை பார்த்தவாறு நடந்து வந்தவள்... ஒரு கடையில் டிஸ்ப்ளே செய்திருந்த உடையை நின்று

கவனித்துக் கொண்டிருக்க... அங்கே வந்த ஒரு சில கல்லூரி ஆண்களின் கூட்டம் வேண்டுமென்றே ஆதிராவை இடிக்க... அதில் நிலை தடுமாறிக் கீழே விழச் சென்றவள்... உடனே சுதாரித்து நிற்க, அவள் கழுத்தைச் சுற்றியிருந்த ஸ்டோல் விலகியதில்... அந்த ஆண்களின் கண்ணில் அவளின் அழகு படும் முன்னர், அங்கு வந்த கவியரசன் மனைவியைத் தன்னுடன் அணைத்தவாறு பிடித்து நிறுத்தி, அந்தக் கூட்டத்தைச் சளைக்காமல் முறைத்தான்.

தனியாக ஒரு பெண் நிற்கிறாள் என வம்பு செய்யப் பார்த்த அக்கூட்டம், வாட்டசாட்டமான ஒரு ஆண் அவளை உரிமையோடு அணைக்கவும், அவர்கள் வந்த வழியிலே அமைதியாக நடந்தனர்.

ஒரு பெரிய களேபரம் நடக்கும் முன்னர் நிலைமை சரியானதும், மனைவியை ஒரு தீப்பார்வை பார்த்த கவியரசன், "வா... போகலாம்..." என் ஆதிராவைப் பிடித்து இழுத்து வராத குறையாக அழைத்து வந்தவன்... அவளைக் காரில் தள்ளித் தானும் மறுபக்கம் ஏறிக் காரை வீட்டுக்குத் திருப்ப... அதற்குள் அவனின் செல்போன் விடாமல் அலறியது.

அவனுக்கு இருந்த கோபத்தை, அலறிய செல் போனின் மீது காட்ட மனமின்றி, அதை வெறுப்பாக உயிர்ப்பித்து, "ஹலோ..." எனக் கிட்டத்தட்ட கத்தினான்.

ஆனால் இவனின் கோபத்தை அறியாத அந்தப் பக்கமிருந்த வாசு, "மச்சி... எங்கே வந்திருக்கீங்க? இங்க உன்னோட சிஷ்யை நீங்க எப்போ வருவீங்க... எப்போ வருவீங்கன்னு என்னைப் போட்டுக் காய்ச்சி எடுத்துட்டு இருக்கா. சீக்கிரம் வந்து சேருங்க..." என உற்சாகமாகப் பேசிக் கொண்டிருக்கும்போதே,



"ம்ச்... போனைக் கொடுங்க..." என இந்து பக்கத்திலிருந்து பிடுங்கும் சத்தமும், அதைத் தொடர்ந்து, "பாஸ்... இன்னும் வர எவ்வளவு நேரமாகும்? நான் உங்க ளோட வைஃபை பார்க்க ரொம்ப நேரமா வெயிட்டிங்..." என்ற குரலும் கவியரசனின் கோபத்தைச் சற்று மட்டுப் படுத்தியது.

முதலில் வீட்டுக்குத் திரும்பச் செல்ல நினைத் தவன்... வாசு - இந்துவின் உற்சாகக் குரலில் மனதை மாற்றி, "இந்து... இன்னும் பத்து நிமிஷத்தில வந்துடு வோம்..." என அழைப்பைத் துண்டித்து, மனைவியை ஒரு பார்வை பார்த்தவாறு, மீண்டும் காரை வாசுவின் வீட்டுக்குத் திருப்பியவன் சொன்னது போல் பத்து நிமிடத்தில் வந்து சேர்ந்தான்.

வாசு இருக்கும் பிளாட்டின் கார் பார்க்கிங்கில் வண்டியை நிறுத்தி விட்டு, அவர்களுக்காக வாங்கிய வற்றை எடுத்துக் கொண்டு இறங்கிய கவியரசன், தன்னை நோக்கி நெருங்கி வந்த மனைவியைச் சற்றும் கண்டு கொள்ளவில்லை.

அவளாக வந்து அவன் கையைப் பற்றியபோதும், எந்தச் சலனமும் காட்டாமல் லிஃப்ட்டில் ஏறி, நான்காவது மாடியில் இருந்த வாசுவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

வந்தவர்களுக்கு உற்சாக வரவேற்புக் கொடுத்த வாசுவும், இந்துவைத் தொடர்ந்து இன்னொரு நபரும் அவர்கள் வீட்டில் இருக்கவும், கவியரசன் கேள்வியாகப் பார்க்க...

அதைப் புரிந்து கொண்ட இந்து, "பாஸ்... இவர் என்னோட பிரதர். பெரியம்மா பையன். பேரு சூர்யா. பெங்களூர்ல வொர்க் பண்றார். இங்க சென்னையில ஒரு சின்ன வேலைன்னு டூ டேஸ் வந்திருக்கார்..." என அறிமுகப்படுத்த...

"ஹலோ.." எனக் கை நீட்டிய சூர்யாவிற்கு,

"ஹலோ சூர்யா... ஐ அம் கவியரசன்! இவங்க என்னோட வைஃப் ஆதிரா..." எனக் கவிரயரசன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள, சூர்யாவின் கண்கள் ஒரு நொடி கவியரசனை நோக்கியதென்றால், இரண்டு நொடி ஆதிராவைத் தொட்டு மீண்டன.

அதை உணர்ந்து கொண்ட கவியரசனின் பி.பி. ஏகத்திற்கு எகிற... இன்னும் எத்தனை நேரம் இந்தப் பார்வைகளை எல்லாம் சமாளிக்க வேண்டுமோ... என அவனின் மனது அடித்துக் கொண்டது.

வீட்டுக்கு வந்தவர்களுடன் சற்று நேரம் பேசிவிட்டு, அதன் பின்னர் விருந்துண்ணச் செல்லலாம் என நினைத்த வாசு தம்பதியினர் வீட்டு வரவேற்பறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

இந்து, ஆதிராவிடம் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் கவியே பதில் சொல்லவும்,



"டேய் மச்சி... நீ என்ன உன் வைஃப்க்கு மவுத் பீஸா... அவங்களைத்தான் பேச விடேன். கேட்கிற எல்லாக் கேள்விகளுக்கும் நீ பதில் சொல்ற..." என வாசு கிண்டலடிக்கத் தொடங்கவும்,

"ம்க்கும்... நீ கேட்டு இவள் பதில் சொல்லிட்டாலும்..." என அவனின் முணுமுணுப்பு ஆதிராவின் செவியைத் தீண்டினாலும், அவள் மௌனமாகவே அமர்ந்திருந்தாள்.

"ஹலோ ஆதி... வாங்க. உங்களுக்கு எங்க ஃப்ளாட்டைச் சுத்திக் காட்டறேன்..." என இந்து அழைக்கவும்,

"ஆமா. இது பெரிய மைசூர் மகாராஜா அரண்மனை சுத்திக் காட்ட... இருக்கிறதே ரெண்டு பெட் ரூம். ஒரு கிச்சன்..." என வாசு அவன் திருவாயைத் திறக்கவும்...

"ஏன்... உங்களால முடிஞ்சா ஒரு அரண்மனை வாங்குறது... நானா வேண்டாம்னு சொன்னேன்..." என்ற இந்து,

"பொண்ணுகளுக்குள்ள பேச ஆயிரம் இருக்கும். அதை எல்லாம் உங்க முன்னாடி பேச முடியாது. நீங்க வாங்க ஆதிரா..." என இந்து ஆதிராவைத் தன்னுடன் அழைத்துச் செல்லவும்...

"மச்சி... போச்சு போச்சு... இன்னிக்கு உனக்கு ஹாலில்தான் படுக்கை..." என வாசு அலற...

"ச்சே... ஏன்டா அடிக்கடி இப்படிக் கத்தி ஊரைக் கூட்டற... எதையும் மெதுவாப் பேச மாட்டியா?" - கவியரசன் சிரிப்புடனே வினவ...

"போ மச்சி... உனக்கு நல்லது சொன்னேன் பாரு... என்னைச் சொல்லணும். உனக்கு இன்னும் பொண்ணுங்களைப் பற்றி ஒண்ணுமே தெரியலை. நீ இன்னமும் சூது வாது தெரியாத பச்சை க்ரீன் சேண்டாவே இருக்க மச்சி..." என்றவன் பெண்களைப் பற்றிய பிஹெச்.டியில் இறங்கினான்.

"மச்சி.... ரெண்டு பொண்ணுகளை மட்டும் தனியாப் பேச விடவே கூடாதுடா. உன்னைப் பற்றி என்ன வெல்லாம் போட்டுக் கொடுக்கப் போறாளோ... அனுப வஸ்தன் சொல்றேன். கேட்டுக்கோ..." என வாசு ஏற்ற இறக்கத்துடன் சொல்லவும்,

அவனை நெருங்கி அவன் மண்டையில் குட்டிய இந்து...

"அடிங்க... நீங்க அனுபவிச்சதை நிச்சயம் என் பாஸ் அனுபவிக்க மாட்டாரு. அவர் என்ன உங்களைப் போல கோல்மால் பார்ட்டியா... அவர் ஒரு ஜென்டில் மேன். போங்க... போய் டேபிளில் எல்லாத்தையும் எடுத்து வையுங்க..." என்ற கட்டளையுடன் ஆதிராவை அழைத்துக் கொண்டு சென்றாள்.

ஆதிராவைத் தங்கள் வீட்டுப் பால்கனிக்கு அழைத்துச் சென்று பேசிக் கொண்டிருந்த இந்து, முதலில் அவளின் படிப்பைப் பற்றி விசாரிக்க...

அதற்குப் பதிலாக அவள் சொன்ன, "பி.எஸ்சி. டிஸ்கன்டினியூ..." இந்துவிற்கு மிகுந்த ஆச்சரியமாகிப் போனது.



பார்ப்பதற்கு அல்ட்ரா மாடர்னாகத் தெரியும் ஆதிரா... ஏன் படிப்பைப் பாதியில் விட வேண்டுமென்ற கேள்வி, அவள் மனதைக் குடைந்தாலும் அதன் காரணத்தைக் கேட்பது அநாகரிகமாகத் தோன்றவும், அதைத் தவிர்த்து அவள் கேட்ட பெற்றோர், டெல்லி வாழ்க்கை பற்றிய கேள்விகள் அனைத்திற்கும் ஆதிராவின் பதில் ஒன்றிரண்டு வார்த்தை, அல்லது ஓரிரு வரியில் முடிந்து போனது.

ஆனால் இந்து சளைக்காமல் அவளிடம் பேச்சுக் கொடுத்தவள், அடுத்து அவள் பேசியது அனைத்தும் கவியரசனைப் பற்றியதாக இருந்தது.

ஆபீசில் இந்து பார்த்தவரையில் அவளுக்குத் தெரிந்த கவியரசனின் நற்குணங்களை அள்ளி வீசிக் கொண்டிருந்தாள்.

கவியரசனின் பொறுமை, பிரச்சினைகளைச் சமாளிக்கும் குணம், அவன் பெண்களிடத்தில் வைத் திருக்கும் நற்குணம், வாசுவிடம் மட்டும் அவன் காட்டும் தோழமை, அவர்களுக்குள் நடக்கும் குறும்புப் பேச்சு என இந்து பேசிக் கொண்டே போனாள்.

அதற்குக் காரணம் தன்னைப் பற்றிக் கேட்டபோது, ஆதிராவின் முகத்தில் தெரியாத ஆர்வம், கணவனைப் பற்றிப் பேசியதும் அவள் கவனமுடன் கேட்டுக் கொள்வது இந்துவிற்குப் பேச வாய்ப்பளிக்க... அதைப் பயன்படுத்திக் கொண்டாள்.

அரை மணி நேரம் சென்ற அவர்கள் பேச்சு வார்த்தையைக் கலைக்க வாசு வந்தான்.

"ஏன் இந்து... உனக்கே இது நியாயமா? தினமும் உனக்கு மொக்கை போடத்தான் என்னைப் பெர்மனென்ட்டா அப்பாயிண்ட் செஞ்சிருக்கல்ல... அதை விட்டுட்டு ஏன் இவங்க காதுலேயும் ரத்தம் வர வைக்கிற..." என்ற வாசுவின் முதுகில் இரண்டு போட்டுத் துரத்தி விட்டவள்,

பின் ஆதிராவை அழைத்துக் கொண்டு டைனிங் ஹால் வரும் வழியில், "யூ ஆர் வெரி லக்கி டு ஹேவ் அ ஹஸ்பெண்ட் லைக் அரஸ்... ரெண்டு பேரும் ரொம்ப வருசம் சந்தோஷமா இருக்கணும்..." என்ற உண்மையான குரலில் சொல்ல... அதை உள்வாங்கிக் கொண்ட ஆதிராவின் இதயம் ஏதோ ஆயிரம் டன் எடையைத் தாங்கியது போன்று கனத்துப் போனதைப் போல் உணர்ந்தாள்.

அதன் பிறகு உணவு மேஜையில் கணவனுடன் சேர்ந்து உணவுண்ட போது எதிரில் இருந்த சூர்யாவின் துளைக்கும் பார்வையில் கூசிப் போன ஆதிரா, தன் உடம்பைச் சுற்றியிருந்த ஸ்டோலை நன்றாக இழுத்து விட்டுக் கொண்டாள்.

அப்போதும் சூர்யாவின் பார்வை மாறாமல் இருக்க...

அங்கே அமர்ந்திருப்பதே பாரமாகத் தோன்றியது ஆதிராவுக்கு.

இதைப் பார்த்தும் பார்க்காதது போல் அமர்ந்திருந்த கவியரசனின் மனது, ஏதோ சொல்ல முடியாத உணர்வில் ஆழ்ந்திருந்தது.



## 4

**வா**சுவின் வீட்டில் விருந்தை முடித்து வந்த தம்பதியினர் இடையில் வரும் வழியில் எந்தவிதப் பேச்சு வார்த்தையுமின்றித் தங்கள் அபார்ட்மென்ட்டை வந்தடைந்தனர்.

வீட்டின் கதவைத் திறந்துவிட்ட கவியரசனைத் தாண்டிச் சென்ற ஆதிரா, நேராகத் தங்கள் அறைக்குள் புகுந்து கதவை அடைத்தாள்.

அவள் போவதை ஓர விழிகளில் பார்த்தவாறு, ஃபிரிட்ஜைத் திறந்து தண்ணீர் பாட்டிலை எடுத்துப் பருகியவாறு, சோபாவில் சாய்ந்தமர்ந்து, டி.வி.யை ஓட விட்டு, சேனலை மாற்றிக் கொண்டிருந்தான்.

சில நிமிடங்களில் கதவைத் திறந்து வெளியே வந்த ஆதிரா, அவள் வழக்கம் போல் அணியும் ஷாட்ஸைத் தவிர்த்து முக்கால் பேன்ட்டும், முழுக்கைச் சட்டையும் அணிந்து வந்தவள்... அமைதியாகக் கணவனை நெருங்கி அமர்ந்து, அவன் தோள் சாயவும்...

அதைக் கண்ட கவியின் இதழ்கள் மிகவும் மெல்லிதான புன்னகையில் விரிந்தன.

வெகு நேரம் கணவனின் தோளில் அடைக்கலமாகச் சாய்ந்திருந்தளின் கூந்தலைக் கவியரசன் மெல்ல வருடவும்... அதில் முற்றிலும் உடைந்தவளாய், "சாரி கவி... ஐ அம் ரியல்லி வெரி சாரி..." என அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, தேம்பித் தேம்பி அழ ஆரம்பிக்கவும்...

கவியரசனுக்குத் திகைப்பாகிப் போனது.

ஷாப்பிங் மாலில் கணவனின் கோபத்தைக் கண்டு கொண்ட ஆதிரா, அப்போதே தன் தவறை உணர்ந்து கொண்டாலும், அதன்பின் சூர்யாவின் பார்வை அவளைக் கூச வைத்தது.

அதன் விளைவாக, அவள் தவறை உணர்ந்து, கணவனிடம் மன்னிப்பை வேண்ட... அவள் மன்னிப் போடு வந்த அவளின் கண்ணீர், கணவனான கவியர சனைத் துடிக்க வைத்தது.

ஆதிரா... தான் அவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேட்காமல், அடுத்தவரின் பார்வைக்கு விருந்தாகிப் போனவளின் மீது அவனுக்குக் கட்டுக்கடங்காத கோபம் சிலிர்த்தெழ... அதை அவன் வீட்டுக்கு வந்து கொட்டிவிடும் முடிவோடுதான் வந்திருந்தான்.

ஆனால், வந்ததும் அவள் வேறு உடை மாற்றி வரவும்... மனைவியின் மீதிருந்த கோபம் பாதியாகக் குறைய, அடுத்து வந்த அவளின் மன்னிப்பு அவனின் கோபத்தை இருந்த இடம் தெரியாமல் விரட்டியடித்தது.

ஆனால் அவளின் அழுகை, நேசம் கொண்ட மன்னவனின் மனதை நனைக்க... அவளைத் தோளோடு அணைத்து, "ஆதி... ப்ளீஸ் ஆதி.. அழாதே. ப்ளீஸ்ம்மா..." என்ற இவன் பல விதமாகக் கெஞ்ச... அவனின் கெஞ்ச லுக்குப் பலனில்லாமல் போக... இதற்கு மேலும் இவளிடம் செல்லம் கொஞ்சினால் வேலையாகாது என்று உணர்ந் தவன்... தன் கழுத்தை இறுக்கப் பற்றியிருந்தவளைத் தன்னை விட்டுப் பிரித்தெடுத்து,



"ஆதிரா... முதல்ல அழுகையை நிறுத்து. எதுக்குச் சும்மா சும்மா அழுதுகிட்டு இருக்க... ஜஸ்ட் ஸ்டாப் க்ரையிங் ஆதிரா..." என்று ஓங்கி ஒரு அதட்டல் போடவும்... ஆதிராவின் அழுகை நின்று அவளின் வலது கை தானாக உயர்ந்து கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத் தெடுத்தது.

அவளின் சிறுபிள்ளைத்தனமான இச்செயலைக் கண்ட கவியரசனின் இதழ்கள் புன்னகைக்க முயல... ஆனால் இப்போது இவளின் முன்னே சிரித்தால், மீண்டும் சலுகை எடுத்துக் கொண்டு கண்ணீர் மடையைத் திறந்து விடுவாள் என்று புரிய, வந்த சிரிப்பை மிகவும் சிரமப்பட்டு அடக்கினான்.

"இதோ பாரு ஆதிரா... நான் ஒண்ணும் டிக்டேட்டர் இல்லை. நான் எப்பவும் உன்னை எனக்கு அடிமைப் படுத்தணும்னு நினைச்சதுமில்லை. நமக்குக் கல்யாண மாகி ஒரு மாசத்துக்கு மேலாகுது. இதுவரைக்கும் நான் உன்னை அந்த மாதிரி எப்போதாவது நடத்தியிருக்கேனா... நீயே சொல்லு..."

கவியரசன் பொறுமையாக இப்போதைய நிலையை அவளுக்கு உணர்த்த நினைத்தான்.

அவனின் கேள்விக்கு அவளிடம் மறுப்பாகத் தலையசைவும்... மேலும் தன் பேச்சைத் தொடர்ந்தான்.

"உனக்கு அது புரிஞ்சால்... இப்போ நான் சொல்லப் போறதும் உனக்கு நல்லாப் புரியும். நீ இந்த மாதிரி டிரஸ் போடறது உன்னோட விருப்பம். அதில் எந்தத்

தவறுமில்லை. ஆனால் நீ போடுற டிரஸ் அடுத்தவங்க கண்ணை உறுத்தாதவரை அது உனக்கு நல்லது. இன்னிக்கே நீ பார்த்திருப்ப... எத்தனை பேரோட பார்வை உன்னைத் தொட்டு மீண்டுச்சுன்னு உனக்கு நல்லாவே புரிஞ்சிருக்கும்.

"இன்னிக்கு அந்தச் சூர்யா, நான் பக்கத்துல இருக்கும்போதே அவனுடைய பார்வை உன்னை மேய்ந்தபோது எனக்கு அவனைக் கொலையே பண்ணணும் போல வெறி வந்துச்சு. ஆனால் அதில் அவனோட தப்பைவிட உன்னோட தப்புதான் அதிகம் இருக்கு. தப்பை நம்ம பேர்ல வச்சுட்டு அடுத்தவனைக் குத்தம் சொல்ல முடியாது.

"அதுக்காக நான் எந்த மாதிரி வேணாலும் டிரஸ் போடுவேன். இது என்னோட சுதந்திரம். அவன் அவன் கண்ணை மூடிட்டுப் போகணும்னு ஃபெமினிசம் பேச முடியாது. நம்ம நாடு அமெரிக்கா மாதிரி இல்லை. அமெரிக்காவில் வாழும் மக்களின் பார்வையும், நினைப்பும் வேறு. அங்க பொண்ணுங்களுக்குப் பாதுகாப்பு இருக்கு. இங்கே நம்ம நாட்டைப் பொறுத்த வரையில் மூணு வயசுக் குழந்தைகளையே விட்டு வைக்க மாட்டாங்கன்னும்போது... வயசுப் பொண்ணுங்களோட நிலை?

"நம்ம ஊர்ல குழந்தைக்குப் பால் கொடுக்க அம்மாவோட சேலை முந்தானை லேசா விலகினாலே அதை வெறிச்சுப் பார்க்கிற கூட்டம் இங்க நிறையா இருக்கு. அதனால நம்ம பாதுகாப்பை நம்மதான்



பார்த்துக்கணும்..." என இன்றைய நிகழ்வுக்கு அவன் நீண்ட விளக்கம் கொடுக்க...

"இதை நான் உனக்கு அட்வைஸா சொல்லலை ஆதி... பட், என்னோட வைஃப் அடுத்தவங்க கண்ணுக்கு விருந்தாகிறதில் எனக்குத் துளியும் விருப்பமில்லை. நீ எனக்கு மட்டும்தான் ஆதி. அடுத்தவன் பார்வை கூட உன்னைத் தொடக் கூடாது..." என உறுதியான குரலில் சொல்ல... அவன் குரல் வந்த தினுசில்... ஆதிராவின் உடல் ஒரு நிமிடம் நடுங்கி அடங்கியது.

அவன் தன் பதிலுக்காகக் காத்திருப்பது புரிந்ததும், கண்ணில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்ட ஆதிரா, "ஐ அம்... ஐ அம் வெரி சாரி கவி... நா... நான் தெரியாமச் செஞ்சுட்டேன். அங்கே... டெல்லியில இந்த மாதிரிப் போட்டுப் பழக்கம். எ... எனக்கு உன்னை மாதிரி யாரும் சின்ன வயசிலிருந்து..." எனத் திக்கித் திணறி ஏதோ சொல்ல வந்தவள்... பின் அதை நிறுத்தி, மௌனமாகச் சில நொடிகளைக் கடத்தினாள்.

பின் கவியின் கண்களை நேராகச் சந்தித்து, "கவி... நான் ஏன் உனக்கு மகளாப் பிறக்கலை?" என யாசகமாகக் கேட்டு வெடித்து அழுதாள்.

ஆதிராவின் இந்தக் கேள்வியில் கவியின் உணர்வுகளை வார்த்தையால் வடிக்க முடியவில்லை.

கண்ணோடு கண் சேர்த்து, குரலில் உயிரைத் தேக்கிக் கைகளை ஏந்தி யாசகமாக ஆதிரா கேட்ட கேள்வியில் மென்மையான நெஞ்சம் கொண்ட கவியின்

உயிர் நாளங்கள் துடிக்க... அவனின் கரங்கள் மனைவியைத் தன்னோடு இறுக்கமாக அணைத்துக் கொண்டன.

"என்ன கேள்வி ஆதிம்மா இது... இப்போவும் நீ எனக்கு மகள்தான்டா. மனைவி என்ற மகள்... உன்னை எப்போதுமே என் கண்ணுக்குள்ள வைச்சுப் பார்த்துப்பேன் ஆதிம்மா..." என அவளை நெஞ்சோடு அணைத்து,

"குட்டிம்மா... உனக்குத் தெரியுமா... நான் பிறந்தது முதல் எனக்கு உறவுன்னு யாருமே இல்லைடா. எனக்கு உறவும் உலகமும் எல்லாமே காக்கும் கரங்களும், ஆதிம்மாவும்தான். ஆனா, ஆதிம்மா எல்லாருக்கும் அம்மாவா இருந்தாங்க. ஆனா, எனக்கு... எனக்கே எனக்குன்னு ஒரு உறவு வேணும். எனக்குன்னு ஒரு குடும்பம் வேணும்னு எவ்வளவு ஆசைப் பட்டிருக்கேன் தெரியுமா?

"அதனாலதான்... ஆதிம்மா எனக்குக் கல்யாணம்னு சொன்னதும், உன்னோட ஃபோட்டோ கூடப் பார்க்காம கல்யாணத்துக்கு ஓ.கே. சொல்லிட்டேன். ஹா ஹா... ஆதிம்மா நான் ரொம்ப அலையறேன்னு நினைச்சிருப் பாங்க..." எனச் சிரித்தவன், மேலும் பேச்சைத் தொடர்ந்தான்.

"எனக்கு என்னோட வைஃப் அழகா இருக்கணும்னு அவசியமில்லை. என்னோட மனசைப் புரிஞ்சுகிட்டு, எனக்குத் துன்பத்திலே தோள் கொடுத்து, இன்பத்தில் தலை கோதி என்னோட கடைசி காலம்வரை என்னைப் புரிஞ்சுக்கிட்டு, நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து ஒரு உயிரை உருவாக்கி... அந்தக் குழந்தைக்கு எனக்குக் கிடைக்காத அத்தனையும் கொடுத்துச் சந்தோஷமான குடும்பமா வாழணும்னு ஆசைப்பட்டேன். நீ ஆசையை நிறைவேற்ற வந்த தேவதைடா குட்டிம்மா..." என உளமாரச் சொன் னவன்...



பின் சற்று இடைவெளி விட்டு, "ஆதி... உன்கிட்ட ஒண்ணு சொல்லவா?" கவியரசன் கேட்க...

"சொல்லு கவி..." - கவியரசன் இத்தனை நேரம் சொன்னதை உள்வாங்கிய ஆதிராவின் நெஞ்சத்தை யாரோ கூர் வேலால் கிளறுவது போல் வலி எடுக்க... அதனூடே கணவனுக்குப் பதிலளித்தாள்.

கவியரசன், "நமக்கு ஒண்ணு இல்லை... பத்துக் குழந்தைங்க பிறந்தாலும் எனக்கு எப்பவுமே நீதான்டா முதல் குழந்தை..." எனச் சற்று இடைவெளி விட,

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஆதிராவின் உடல் ஒரு நிமிடம் இறுகித் தளர்ந்ததைக் குழந்தையைப் பற்றிய பேச்சிலிருந்த கவியரசன் கவனிக்க மறந்தான்.

"ஏன்னு சொல்லு பார்ப்போம்?" - அவளிடமே கேள்வியைக் கேட்க....

"தெ... தெரியலை கவி... ஏன்?" என்ன முயன்றும் அவளின் குரலில் இருந்த நடுக்கத்தை அவளால் கட்டுப் படுத்த முடியவில்லை.

"ஏன்னா... நீதான்டா எனக்கு முதல் உறவு. உனக்குப் பிறகு நமக்கு எந்த உறவு வந்தாலும், அது

எனக்கு ரெண்டாம் பட்சம்தான். அதுக்காக நான் நம்ம பாப்பாவைப் பார்த்துக்க மாட்டேன்னு சொல்லலை. ஆனால் நம்ம பாப்பாவும், நீயும் ஒரே டைம்ல அழு தீங்கன்னா நான் உன்னைத்தான் முதல்ல மடியில் வச்சு சமாதானப்படுத்துவேன்..." என ஆசையாகத் தன் வாழ்வில் ஆதிராவின் முக்கியத்துவத்தைச் சொல்லிய கவியரசனின் கண்கள் கனவில் மிதந்தன.

அதே கனவுடன், "ஆதிம்மா... நான் ஒண்ணு கேட்கவா?"

"கேளு கவி..." - வெகு சிரமப்பட்டுக் குரலைச் சீர்ப்படுத்திக் கொண்டு அவள் கேட்க...

"நீ இந்தக் காலத்துப் பொண்ணுதானே... அதுவும் உனக்கு இன்னும் இருபது கூடத் தொடங்கல..." என்றவனைக் குழப்பப் பார்வையில் பார்க்க...

அவளின் பார்வைக்குப் பதில் போல், "ஆதி... உனக்கு இப்போ இருக்கிற மெஜாரிட்டி பொண்ணுங்க மாதிரி பேபியைத் தள்ளிப் போடணும்னு ஏதாவது நினைப்பு இருக்கா...?" எனவும் ஆதிராவின் கைகள் சில்லிட்டுப் போயின.

அவன் இன்னமும் தன் பதிலுக்குக் காத்திருப்பது புரிய, "அ... அப்படியெல்லாம் எதுவுமில்லை கவி..." என்று மூன்று வார்த்தைகளைச் சொல்லுமுன்... அவள் இதயம் இடறித் தரையில் விழுவதைப் போல் உணர்ந்தாள்.

"அப்போ... நம்ம சீக்கிரம் பாப்பா பெத்துக்க லாமாடா?" அதே ஆசையுடன் கவியரசன் கேட்க...



அவன் பேசப் பேசத் தன் முக மாறுதலை வெகு சிரமப்பட்டுக் கட்டுப்படுத்தியவள்... அவனின் சட்டையை இறுகப் பற்றிக் கொண்டவள்... "ஸ்... சரி கவி...." எனவும்... இருவருக்குமிடையில் பல நொடிகள் வார்த்தைகளின்றிக் கழிந்தன.

சில நொடி மௌனத்திற்குப் பின்னர் தான் மனைவியின் முகத்தைப் பார்த்தவன்... "ஏன்டா ஒரு மாதிரி இருக்க?" என வினவ,

"ஒண்ணுமில்ல கவி... எனக்குத் தூக்கம் வருது. தூங்கணும்..." என்றவாறு அவனை விட்டு எழுந்து செல்ல...

போகும் அவளையே ஆசைப் பார்வை பார்த் தவன்... "குட்டிம்மா..." என்றழைத்தவன்...

"ம்ம்... சொல்லு கவி!"

அவன் அழைப்புக்கு நின்றவளிடம்... "ஐ லவ் யூ டா ஆதிம்மா..." எனத் தலையை ஒரு பக்கம் சரித்து, கண்களில் கனிவோடு, உதட்டில் புன்னகையோடு, அவன் சொன்ன விதத்தில் ஆதிராவின் மனது இடறிப் பாய்ந்து அவன் மீது விழ...

இடறிச் சென்ற மனதை அவனிடமே விட்டு விட்டு வெறும் உடலைக் கட்டிலில் சரித்தாள்.

சற்று நேரத்தில் கவியரசனும் மனைவியை அணைத்தவாறு உறங்கிவிட... கணவனுக்காகக் கண்ணை மூடி உறங்குவது போல் நடித்த ஆதிரா, அவன் உறங்கிய பின்னும் அவளின் நடிப்பைத் தொடர முடியவில்லை.

நடுநிசியில் அணைத்திருந்த கணவனின் கையை விலக்கி விட்டு எழுந்து, பால்கனிக்கு வந்தவளின் கண்களில் என்ன முயன்றும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"ஹய்யோ... நான் தப்புப் பண்ணிட்டேனே... கவி! நான் தப்புப் பண்ணிட்டேன். உனக்கு நான் வேண்டாம். நான் பாவி கவி... ஏமாற்றுக்காரி. உன்னை ஏமாத்திட்டு இருக்கேன், கவி!" என மனதின் புலம்பலோடு, தன் தலையில் அடித்துக் கொண்டவளின் தொண்டை வறண்டு போகும் வரையில் அழுது கரைந்தாள்.

கவியின் அன்பில் நெகிழ முடியாமல், அவனின் அன்புக்குத் தான் எந்த வகையில் தகுதியானவள் என்ற நினைப்பே அவளைக் கொல்ல... பால்கனி இரும்பு கிரில்லைப் பிடித்து அழுத்தியவள், அதிலிருந்த இரும்புத் துகள்கள் அவள் கையைக் கீற, இரத்தம் வழிவதைக் கூட உணர முடியாமல் குற்ற வுணர்வில் வெந்து புழுங்கினாள்.

"நீ எல்லாம் ஏன் இன்னமும் உயிரோடு இருக்கிறாய்? உன்னையே முழுதாக நம்பும் ஒருவனை ஒவ்வொரு நிமிடமும் ஏமாற்றிக் கொண்டு, நீயெல்லாம் இருந்து என்ன செய்யப் போகிறாய்?" என்று அவளுள்ளே இருந்து எழுந்த கேள்வி அவளைப் பதிலளிக்கச் சொல்லி அதட்ட...

மனதின் அதட்டலுக்குப் பயந்து தான் பிடித்திருந்த பால்கனி கிரில்லும், கீழே தெரிந்த சிமெண்ட் தரையும் அவளைத் தூண்ட, 'கீழே குதி... கீழே குதி... இன்னமும் நீ உயிரோடு இருந்து கவியை ஏமாற்றுவதை விடச் சீக்கிரம் குதித்துச் செத்து விடு... நீ உண்மை யில்லை எனிலும், கவியின் காதல் உண்மையானது. அந்தக் காதல் அவனை உயிர்ப்புடன் வைக்கும். சீக்கிரம் குதித்து விடு... ம்ம்... குதி...' என உள்ளுக்குள் ஒலித்த குரலுக்குச் செவி சாய்க்க... அவள் கால்கள் உயரவும்...



"ஆதிம்மா..." என்ற குரல் அவளின் செயலைத் தடுத்தது.

வேகமாகக் கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டவள், தன் தொண்டையைச் சரி செய்து கொண்டு திரும்பவும், அதற்குள் அவளை நெருங்கிய கவியரசன் ஒரு சில நொடிகள் அவளின் கண்களை அழுத்தமாகச் சந்தித்து, பின் அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான்.

"இந்த நேரத்துல இங்க என்ன பண்ற? ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கு... அழுதியா என்ன?" - பதட்டமாகக் கேட்க...

தன் முகத்தை வைத்தே தன்னைக் கண்டு கொண்ட கணவனிடம் நெகிழ்ந்த மனதை, "வேண்டாம்... வேண்டாம்... கவி நல்லவன்..." என உள்ளுக்குள் ஒலித்த குரல் அவளைத் தடுக்க...

"இல்லை கவி... நான் அழலை. எ... எனக்குத் தூக்கம் வரலை. அதான் கொஞ்ச நேரம்..." என எதையோ சொல்ல...

அவள் குரலில் தெரிந்த தடுமாற்றமும், முகத்தில் தெரிந்த அவள் வாட்டமும், கவியை யோசிக்க வைக்க, "ஆதி..." எனக் கனிவுடன் அழைக்க...

"சொ... சொல்லு கவி!" - தட்டுத் தடுமாறி அவளிடமிருந்து பதில் வந்தது.

"ஆதிம்மா... உனக்கு ஏதாவது பிரச்சனையா? நீ ஏதாவது என்கிட்ட சொல்ல நினைக்கிறியா?" எனவும்,

அவன் கேள்வியில் திகைத்த ஆதிரா, "எ... என்ன... என்ன கவி... இல்லையே! அப்படி ஏதுமில்லையே! ஏன்...?" - அவளின் உடனடிப் பதிலே அவள் சொல்வது பொய் எனச் சொல்லாமல் சொல்ல...

அவளை ஒரு தீர்க்கமான பார்வையுடன், "ஆதி... நீயும் நானும் சேர்ந்திருந்த நாள் கம்மின்னாலும் என்னால உன்னைப் புரிஞ்சுக்க முடியுது. நீ ஏதோ மனக் குழப்பத்தில இருக்கன்னு புரியுதுடா. உன்னை எதுவோ வாட்டுது. உனக்காத் தோணும்போது என்கிட்ட கண்டிப்பா சொல்லு. ஆனா, அதுக்கு முன்னாடி உனக்கு எப்பவும் நான் துணையா இருப்பேன்னு நீ நம்பணும். அதே போல எனக்கும் உன்னை விட்டா வேற யாருமில்லை என்கிறதையும் நீ புரிஞ்சுக்கணும். இப்போதைய என்னோட ஒரே உறவு நீதான்... உன்னைப் பாதிக்கிற எல்லா விஷயமும் என்னையும் பாதிக்கும்னு நீ தெரிஞ்சுக்கணும், குட்டிம்மா..." என அவளின் வலது கையைப் பிடிக்க...

"ஸ்...ஆ..." என அவன் பிடித்த கையை உருவிய வளிடமிருந்து... கையைப் பிடித்துப் பார்த்தவன், அதில் வழிந்த இரத்தத்தைப் பார்த்ததும் பதறிய கவி,



"என்னடி இது..." என அவளின் இரத்தத்தைத் தன் கையால் தொட்டுப் பார்க்க... அதற்கே அவனின் கைகள் நடுங்க ஆரம்பித்தன.

"அது... கிரில் கம்பி கிழிச்சிடுச்சு..." - அவனிட மிருந்து கையை உருவ முயன்றவளின் கையை அழுத்தமாகப் பற்றி, அவளை உள்ளே அழைத்துச் சென்று மருந்திட்டுக் கட்டிடவும், கவியின் கண்கள் ஒரு துளிக் கண்ணீரை உற்பத்தி செய்து, அவளின் அடிபட்ட காயத்திற்கு மருந்தாகிப் போனது.

அவன் கண்ணீரைப் பார்த்தவள், "கவி..." என்ற அழைப்புடன், அவனைத் தன் வயிற்றோடு சேர்த் தணைக்க... அவனும் மௌனமாக அவள் அணைப்பில் அடைக்கலமாகினான்.

"ஏன் ஆதி இப்படி... உனக்கு என்ன பிரச்சனை? என்கிட்ட சொல்லேன் ஆதி.... என்னால முடிஞ்சா நிச்சயம் சரி பண்றேன். என்னை நம்பு ஆதி..." என ஒவ்வொரு வார்த்தையிலும் நீ எனக்கு முக்கியம் என்பதைக் கவி யரசன் சிறுபிள்ளையின் குரலில் உணர்த்த...

அவனின் கண்ணீரும், அவன் கண்ணீருக்குப் பின்னால் தெரிந்த காதலும், இத்தனை நாட்கள் ஆதிரா உணர்ந்தே யிராத தாய்மை உணர்வை முதல் முறை யாகக் கவியரசன் அவளுக்கு உணர்த்தினான்.

ஆம்... தாய்மை உணர்வுதான்.

தன் ஊனாலும், உயிராலும் உருவாக்கி... பத்து மாதம் ஒரு கருவைச் சுமந்து... நூறு எலும்புகள் ஒன்றாக உடைந்து விடும் அளவிற்கு வலியைப் பொறுத்துப் பெற்றெடுத்தால் கூட வந்துவிடாத தாய்மை உணர்வை முதல் முறையாகக் கணவனின் ஒரு துளிக் கண்ணீரில் உணர்ந்தாள்.

அந்தக் கண்ணீருக்குத் தான் தகுதியில்லாததை நினைத்து மனம் வெதும்பியவளின் நினைப்பு பொய் என்பது போலக் கணவனின் இறுகிய அணைப்பு அவளை மீட்டெடுத்தது.

பதின் வயது இறுதியில் இருந்த ஆதிராவின் உணர்வுகள் முதல் முறையாக நல்ல சிந்தனையில் பயணிக்கத் துவங்கின.

## 5

**நா**ட்கள் அதன் போக்கில் வேகமாக உருண்டோட... ஆதிரா கவியரசனின் வாழ்க்கையும், பூமிப் பந்தின் சுழற்சிக்கு ஏற்ப அதிகச் சந்தோஷங்களுடனும், சில பல ஊடல்களுடனும் சென்று கொண்டிருந்தது.

அந்த இரவுக்குப் பின்... நினைப்பில் கூடக் கவியரசனை விட்டுப் பிரிய முடியாத் தவிப்புடன் தற்கொலை முயற்சியைக் கைவிட்டுத் தன்னால் முடிந்தவரை அவனுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்க நினைத்தாள்.

நினைத்தவள்... நினைத்தபடியே தன் இயல்பையும், குணத்தையும் அவளை அறியாமலே மாற்றிக் கொண்டாள். முழுவதுமாக இல்லை யெனினும், முடிந்தவரை அவனுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்வதில் நிறைய முயற்சிகளை மேற்கொண்டாள்.



திருமணமான புதிதில் கணவன் என்றவன் காமத்திற்காகப் பெண்ணை அவன் ஆளுமையில் அடிமைப் படுத்தும் வில்லனாக நினைத்தவளின் நினைப்பு முற்றிலும் பொய்யெனக் கவியரசனின் ஒவ்வொரு செயலும் ஆதிராவிற்கு உணர்த்தியது.

"தன்னை இந்த அளவிற்கு ராணியாக உணர வைக்க முடியுமா?" என்ற ஆச்சரியம் கூட எழுந்தது.

ஆனால், அந்த ஆச்சரியத்துடன் அவளின் குற்றவுணர்வும் பெருகியது. இந்தக் காதலுக்கும், அன்புக்கும் தான் எந்த வகையில் தகுதியானவள்... என்ற குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கும் போதெல்லாம் கணவனை அறியாமல் கண்ணீரால் தன் பாவத்தைக் கழுவ நினைப்பாள்.

சில சமயங்களில் இத்தனை அன்பு காட்டும் கணவனுக்குத் தன்னைப் பற்றிய உண்மை தெரிந்தால், அதன்பின் அவனைப் பிரிந்து தன்னால் ஒரு நிமிடம் உயிருடன் இருக்க முடியுமா... என்ற ஐயம் எழுந்தபோது, அக் கேள்விக்கு விடை தெரியாமல், நெஞ்சில் எழுந்த கேள்வியினை விரட்டி அடித்து, அவனை இறுக அணைத்துத் தன் பயத்தைப் போக்க முயற்சிப்பாள்.

ஒரு சில சமயங்களில் தானாகவே அவனிடம் உண்மையைச் சொல்லி, அவன் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டு விடலாமா என்ற எண்ணம்

எழும்போது... அதன் பின் அவன் வெறுப்பைச் சுமக்கத் தன்னால் எந்த வகையிலும் இயலாது என்ற நினைப்பும், அவளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்றது.

எதுவுமே முடியாமல் இரவில், கணவனின் அணைப் பிலும், தலையணை மறைவிலும் தன் துக்கத்தைப் போக்கிக் கொண்டு, முடிந்தவரையிலும் அவனுடன் ஒன்றி வாழ்ந்து உயிரைப் பிரிந்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடனும் கணவனின் மீது கொண்ட அதீதக் காதலுடனும் அவளின் நாட்களை நெட்டித் தள்ளிக் கொண்டிருந்தாள்.

அந்த நினைப்பிற்கும் இன்னும் சில நாட்களில் கல் விழப் போகிறது என்ற உண்மை தெரியாமல்...

"குட்டிம்மா..." என்று எப்போதும் அழைக்கும் சந்தோஷக் குரலுடன் வீட்டிற்குள் நுழைந்த கவியரசனை, சமையலறையிலிருந்து வெளி வந்த ஆதிரா அணைத்து வரவேற்றாள்.

ஆதிரா சமையலறையிலா...!

ஆம். கணவனின் அன்பு அவளைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கவியரசனுக்கு ஏற்ற மனைவியாக மாற்றியது.

ஆதிரா, தன் குற்ற வுணர்வில் மூழ்கிக் கணவனின் கண்ணீரில் தெளிந்து ஒரு நல்ல மனைவியாக வாழ வேண்டுமென்ற நினைப்புடன், அடுத்த நாள் விடியலில் புது மனுஷியாக மாறியிருந்தாள்.



கவியரசனுடன் சேர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக வீட்டு வேலைகளையும், சமையலையும் கற்றுக் கொண்டவள், முழுதாக ஒரு குடும்பத் தலைவியாக மாறிக் குடும்பப் பொறுப்பைத் தனியாளாகச் சமாளிக்கும் அளவிற்கு முன்னேறி யிருந்தாள்.

முதல் நாள் காலை தங்களுக்குக் காலைத் தேநீரைத் தயாரித்துக் கொண்டிருந்த கவியிடம் சென்று, "கவி... எனக்குக் காபி எப்படிப் போடணும்னு சொல்லிக் கொடு..." எனக் கேட்டவளைப் பார்த்துக் கவியரசன் விழுந்து விழுந்து சிரித்தான்.

அவனின் கேலிச் சிரிப்பு ஆதிராவின் கண்களை ஈரப்படுத்த...

"ஏன் கவி சிரிக்கிற?" - கலங்கிய குரலில் கேட்டவளின் வருத்தம்... கவியரசனைத் தீண்ட...

"அச்சோ... குட்டிம்மா, ஐ அம் வெரி சாரிடா..." எனத் தோளோடு அணைத்தவன், "இல்லம்மா... இதுவரைக்கும் உனக்குச் சாப்பாடு எடுத்துக்கக் கூட கிச்சன் பக்கம் வராத நீ... இன்னிக்குக் காபி போடச் சொல்லித் தான்னு சொன் னது எனக்குச் சிரிப்பை வரவழைச்சுடுச்சு. சர்க்கரைக்கும் உப்புக்கும் கூட உனக்கு வித்தியாசம் தெரியாதேடா...

"அதனால எதுக்கு இந்த ரிஸ்க்? நீ போய் அப்படிக்கா ஓரமாக உட்கார்ந்துக்கோ. நான் உனக்குப் பால் கலந்து எடுத்துட்டு வர்றேன்..." எனக் கேலி போல் சமாதானம் செய்ய...

ஆனால், அதிலிருந்த கேலியை ஒதுக்கியவள், “ஆமா, கவி... என்னை அந்த மாதிரி வளர்த்துட்டாங்க. நான் என்ன செய்யட்டும்?” என மெல்லிய குரலில் சொன்னவளின் கண்களில் வலி இருந்ததோ!

அதன்பின் மேலும் எதையாவது பேசி, அவளைக் கவலைக்குள்ளாக்காமல் முதலில் எளிமையான சமையல் வகைகளைக் கற்றுக் கொடுத்தவன், கணவனுக்காகக் கற்றுக் கொள்வதில் ஆர்வமாக இறங்கியவள்... அதில் நன்கு தேர்ச்சி பெற்றுப் பொறுப்புள்ள குடும்பத் தலைவி என்ற கோர்ஸில் முதல் மாணவியானாள்.

இன்றும் வேலையை முடித்து வீட்டுக்கு வந்த கவியரசன், மனைவியின் மதி முகத்தைத் தேடி அவளைக் கண்டு கொண்டவுடன் அவளின் அணைப்பில் மூழ்கி விடை பெற்றான்.

“ஆதிம்மா.. இன்னிக்கு எங்க சீனியர் சேனாவோட பேபியைப் பார்க்க ஹாஸ்பிடல் போயிருந்தோம். கேர்ள் பேபிடா. அப்படியே பிங்க் கலர்ல, சுருட்டை முடியோட, கண்ணைக் கூடத் திறக்காம... வாயைத் திறந்துட்டு அழகாத் தூங்கிட்டு இருந்தா...

“பாப்பாவோட கை செம சாஃப்ட்... கையில வைச்சிருந்த குழந்தையைக் கீழே வைக்கவே மனசில்ல. வாசு தான் தலையில தட்டி, உனக்கு அவ்வளவு ஆசைன்னா சீக்கிரம் பெத்துக்க வேண்டியது தானேன்னு சிரிக்கிறான்...” - குழந்தையின் பேச்சில் குழந்தையாகிப் போன கவியரசன் கண்களில் ஆசையும், மின்னலும் ஒருங்கே கூத்தாடியது.



கணவன் ரசித்துச் சொன்ன விதத்தில் அதைக் கேட்ட ஆதிராவின் வயிற்றில் சில்லென்ற உணர்வு எழ... முடிந்தவரையில் கணவனின் முகம் பார்க்கத் தயங்கி, அவன் சொல்வதைக் காதில் வாங்கி, மனதில் நிறைத்தாள்.

பின் கவியரசன் முகம் கழுவி, உடை மாற்றி வந்தவன் முன்பு காபியை நீட்டிய ஆதிரா, அவனுடன் சேர்ந்து பருகலானாள்.

அப்போதும் குழந்தையைப் பற்றிய பேச்சுக்கு அவன் முற்றுப்புள்ளி வைப்பதாக இல்லை.

அவனின் ஆசைக்கு அளவே இல்லை என்பது போல் இப்போதே குழந்தையைப் பெற்று, அதற்குப் பெயர் வைத்துக் கல்யாணம் முடிப்பது போல், வரிசையாக அவன் சொல்லச் சொல்ல...

அவனின் பேச்சுக்கு, “ம்ம்...” கொட்டுவதைத் தவிர ஆதிராவால் வேறு ஏதும் பேச முடியவில்லை.

அதற்குண்டான தகுதியைத் தான் இழந்து விட்டதாக அவளின் நியாய மனம் வலியுறுத்தத் தன் உணர்வுகளை இறுக்கிப் பிடித்து, அமர்ந்திருந்தாள்.

தான் பேசுவதற்கு அவளிடமிருந்து எந்தப் பதிலும் இல்லாமல் போக, தன் பேச்சை நிறுத்திய கவியரசன், அவள் கைகளைப் பிடித்து, “குட்டி... என்னடா இவன் அடிக்கடி குழந்தையைப் பற்றிப் பேசுறான்னு நினைக்கிறியா?”

அவனே கேள்வி கேட்டு, அதற்கு அவள் பதில் சொல்லும் முன்னே அவனே விடையும் கொடுத்தான்.

"யாருமில்லாமயே வளர்ந்துட்டேன், இல்லடா குட்டிம்மா... அதான் என்னோட இரத்தத்தில் உருவான உறவைக் கையில் ஏந்தணும்னு ரொம்ப ஆசையா இருக்கு..." என்றவன் குரலிலிருந்தது ஆசையோ ஏக்கமோ... ஆதிராவைத் தீண்டவும், அவன் கைகளைக் கன்னத்தில் எடுத்து வைத்தவளின் மௌனம் அவனுக்குச் சம்மதமாகப் பட்டதோ என்னவோ...

"சீக்கிரம் பாப்பா பெத்துக்கலாமாடா...?" - கவியரசன் கேட்கவும்,

அவள் தலை அவளை அறியாமலே ஆமோதிப் பாக ஆடியது.

சற்று நேரம் குழந்தையைப் பற்றிய மயக்கத்தில் இருந்தவன், பின் ஞாபகம் வந்தவனாக, "ஆதி... மாமா கால் பண்ணியிருந்தாருடா... உனக்கும் போன் செஞ் சாரா?"

"இல்லையே... ஏன் கவி?"

"இல்லை. அத்தையும் மாமாவும் லண்டன் போறாங் களாம். மாமா அவர் வேலை பார்க்கிற ஆபீஸிலேயே லண்டன் பிராஞ்ச்ல ஆஃபர் கிடைச்சுதாம். இன்னும் ரெண்டு நாளில் கிளம்பறாங்களாம்.. உன்கிட்ட இதைச் சொல்லலையா?"

"ஓஹோ... அப்படியா! போகட்டும்..." என்றவள், அவன் குடித்த கப்பை எடுத்து சிங்க்கில் போட்டு விட்டு, மீண்டும் அருகில் அமர்ந்து கொண்டவளைப் பார்த்து...



"என்ன... இப்படிப் பேசுற... அவங்க உன்னைப் பெத்தவங்கதானே?"

"ஆமா. அப்படின்னுதான் நினைக்கிறேன்..." - ஆதிரா சொல்லவும், கவியரசன் திகைத்துப் போனான்.

இத்தனை நாட்களும் ஆதிராவின் பெற்றோருக்கும், இவளுக்கும் இருக்கும் தூரத்தைப் பார்த்தவனுக்கு ஏதோ புரிவது போல் இருந்தது. ஆனால் இப்போதைய அவளின் பேச்சு அவனை ஆச்சரியப்படுத்தியது.

"என்ன ஆதி... இப்படிச் சொல்ற? உனக்கும், உன்னோட பேரண்ட்ஸுக்கும் ஏதோ சரியில்லைன்னு தெரியும். அதுக்காக இப்படி யெல்லாம் பேசுறது தப்பு ஆதிம்மா..." - சற்றுக் கண்டிப்புடனே கவியரசன் சொல்ல...

அவனின் கண்டிப்பான பேச்சு ஆதிராவை ஏதோ வொரு வகையில் உந்த... "ஹ்ம்ம்... எங்க அப்பா என்னைப் பெத்தது அவரோட ஆண்மையை நிரூபிக்க... என்னோட அம்மா என்னைச் சுமந்தது அவங்க மலடின்னு யாரும் சொல்லிடக் கூடாது என்பதற்காக..." என்ற ஏளன வார்த்தைகளை வீசி விட்டு, அவள் வேலையைக் கவனிக்கலானாள்.

ஆனால் கவியரசனுக்குத் தான் அவள் சொன்ன வார்த்தை மூளையைத் தீண்ட வெகு நேரம் எடுத்தது.

தீண்டிய வேகத்தில் அவள் சொன்னதன் அர்த்தம் புரியாமல், "ஆதி... என்ன சொல்ற நீ?" - திகைப்பு விலகாமல் அவன் கேட்க...

"ஹ்ம்ம்... என்ன சொல்ல கவி... எனக்கு வேலை இருக்கு. நைட்டுக்கு என்ன டிபன் செய்யட்டும்?" எனச் சமையலறைக்குள் புகுந்து கொள்ள...

அவள் பின்னாலே சென்றவன் அவள் கையில் இருந்த கேரட்டைப் பிடுங்கிச் சமையல் மேடையில் வைத்து விட்டு, "நீ முதல்ல எனக்குப் பதில் சொல்லு. என்ன பேசுற நீ... உனக்கும் உன்னோட பேரண்ட்ஸுக்கும் என்ன பிரச்சனை? எதுவோ சரியில்லை ஆதி... என்ன விஷயம்னு என்கிட்ட சொல்லு..." என வற்புறுத்த...

"ம்ச் கவி... எனக்கு வேலையிருக்கு. நான் மேல போய்த் துவைச்ச துணியை எடுத்துட்டு வர்றேன்..." என நொடியில் அவனைப் பிரிந்து மேலே ஓட,

கவியரசன், உன்னை நான் விடமாட்டேன் என்பது போல அவளைப் பின்தொடர்ந்து சென்றான்.

மொட்டை மாடியில் துணிகளை அள்ளித் தோளில் போட்டுக் கொண்டிருந்தவளின் கையைப் பிடித்திழுத்துத் தன் புறம் திருப்பி இழுக்க... ஆதிராவின் கையில் இருந்த துணிகள் அனைத்தும் சிதறி விழ... "ம்ச்... என்ன கவி இது? ஏன் இப்படிப் பண்ற... ச்சே!" என்றவளின் கோபம் உச்சிக்குச் செல்ல இன்னும் சில நொடிகளே இருக்கிறது என்பதைக் கவியரசன் உணரவில்லை.

அவனுக்கு அவள் ஏன் அவள் பெற்றோரை வெறுக்கிறாள் என்ற காரணம் அறிந்தே தீர வேண்டு மென்ற வேகம் இருந்தது.



அவர்களும், இவளைத் தனக்குத் திருமணம் முடித்துக் கொடுத்த இந்த மூன்று மாதத்தில் அவளுடன் பெரியதாக எந்த உறவையும் வைத்துக் கொள்ளவில்லை.

முதலில் சில நாள், இவனுக்குப் போன் செய்து சம்பிரதாயமாகப் பேசுவார்களே தவிர, அவர்கள் குரலில் உரிமையோ, உறவோ இதுவரை வெளிப்பட்டதில்லை என்பதை அவன் ஓரளவிற்கு உணர்ந்திருந்தான்.

அவனைப் பொறுத்தவரையில் அவனுக்கு ஆதிரா விடம் கேட்க... ஆயிரம் கேள்விகள் தொடுத்து நின்றன.

திருமணமான முதல் நாள் இரவு, புது மணமக னுக்கே உரிய எதிர்பார்ப்பில் அறைக்குள் சென்ற வனுக்குப் பெருத்த ஏமாற்றமே!

புது மணப் பெண்ணுக்குரிய நாணத்துடனும், அந்த இரவுக்குண்டான அலங்காரத்துடனும் மனைவியை எதிர்பார்த்தவனுக்கு ஆதிராவின் தோற்றத்தில் சற்று ஏமாற்றமே...!

தனிமையில் அவனுக்கு எப்படி அந்த இரவைத் துவக்குவது என்று தெரியாமல், "உனக்கு இந்த டிரஸ் நல்லாயிருக்கு..." என அவள் அணிந்திருந்த ஷார்ட்ஸைச் சுட்டிக் காட்டவும்,

"இதுவா... ஓ... தேங்க்ஸ்!" எனக் கட்டிலில் ஏறிச் சம்மணமிட்டு அமர்ந்து கொண்டாள் மனையாள்.

அதன் பின் முதலில் அவளைப் பற்றி அறிந்து கொள்வோம் என அவன் கேட்ட முதல் கேள்வியான, "நீ ஏன் படிப்பைப் பாதியில நிறுத்தின?" என்றதற்கு,

"ஏன்... சீரியல்ல வர்ற மாதிரி டிகிரி வாங்கினாத்தான் என்னைத் தொடுவேன்னு ஏதாவது சபதம் வைச்சிருக் கியா?" என எள்ளலாகக் கேட்கவும், கவியரசன் அதற்கு மேல் அவளிடம் அதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை.

மேலும் அவளின் கிண்டல் பேச்சு அவனுக்குப் புதிதாகத் தெரிந்தது. இது போல் பேச்சுக்களை அவன் கல்லூரி நாட்ளில் தான் கேட்டிருக்கிறான்.

அடுத்து என்ன பேசுவது என யோசனையில் அமர்ந்திருந்தவனை, "ம்ம்... ஏதாவது செய்வியா...? இல்லை, நான் தூங்கட்டுமா?" என அவனைச் சீண்டவும், அதற்கு மேல் கவியரசனால் பேசிக் கொண்டிருப்பது வேலையாகாது என இரவு விளக்கோடு, அவளையும் சேர்த்தணைத்தான்.

அந்த நாளுக்குப் பின், அவன் அவளைப் பற்றி என்ன கேட்டாலும், அதற்குத் துடுக்கான பதில் வந்தது. அதன் பின் அழுகை, அடுத்து மௌனம்... இப்போது அவள் எடுத்துக் கொள்ளப் போகும் ஆயுதம் கோபம்...

ஆக மொத்தத்தில், இந்த மூன்று மாதத்தில், ஆதிராவைப் பற்றி அவன் அறிந்த விஷயங்கள், ஒன்றிரண்டே...

அதுவும், அவனாக முயன்று இப்படி யிருக்குமோ என்ற யூகம் மட்டுமே... இன்று எப்படியாவது அவளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென உத்வேகத்தில் அவள் கோபத்தில் இருப்பதை அவன் கண்டுகொள்ளவே இல்லை.



"ஆதிரா... எனக்குத் தெரிஞ்சே ஆகணும்... உனக்கும் உன்னோட பேரண்ட்ஸுக்கும் என்னதான் பிரச்சனை? சொல்லு... நீ இப்போ சொல்லலைன்னா விடமாட்டேன். எனக்குப் பதில் வேணும். சொல்லு...!" என மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்க...

அதில் உச்சியிலிருந்த கோபத்தில், "கவி... ஜஸ்ட் ஸ்டாப் இட்!" எனக் கத்தியவளின் குரலில், அங்கே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் அலறி ஓடினார்கள்.

கேட்ட கேள்விக்குப் பதில் வராமல் அவள் கத்தவும், கவியரசனுக்கும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"ஷிட்... எப்படியோ போய்த் தொலை..." எனக் கீழே கிடந்த துணிகளைக் காலில் உதைத்து விட்டு, அதே கோபத்துடன் வீட்டிற்கு வந்து தனது அறையில் சென்று கதவை அடைத்தான்.

அவன் சென்ற பின் மொட்டை மாடியின் மதில் சுவரில் சாய்ந்தமர்ந்தவள், "ஹய்யோ... கவி... என்னை மன்னிச்சிடு கவி... மன்னிச்சிடு. என்னைப் புரிஞ்சுக்கோ கவி... என்னால தாங்க முடியலை. நெஞ்சு வலிக்குது கவி..." என நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அழத் துவங்க.. தன் வாழ்வு இப்படிக் கேள்விக்குறியாக இருப்பதற்குக் காரணமானவர்களை நினைத்து வெந்து புழுங்கினாள்.

தான் மட்டும் ஒரு நல்ல பெற்றோருக்குக் குழந்தையாகப் பிறந்திருந்தால் இன்று கவியரசனுடனான வாழ்வை, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் ரசித்து வாழ்ந்திருக்கலாமே...

ஆனால்... ஆனால்... தனக்குக் கவியுடன் வாழ எந்தத் தகுதியும் இல்லை.

தான் ஒரு அழுக்கு... சேறு... அசிங்கம்... எனத் தன் கை, கால்களை அங்கிருந்த துணியால் துடைத்துத் துடைத்து எடுக்க முயன்றவள்... என்ன தேய்த்தும் அவள் உடம்பில் பட்ட அழுக்கு போவேனா என்றது.

அவள் அழுத்தி அழுத்தித் துடைத்ததில் அவளின் சிவப்பு மேனி, மேலும் சிவப்பானதே தவிர, அவள் மேலிருந்த அழுக்குப் போகவே யில்லை.

அவளின் வேதனையைப் போக்கவென்றே வருண பகவான் வானிலிருந்து மழையைப் பொழிய, அந்த நீரைப் புனித நீராகக் கருதினாளோ என்னவோ...

மழையிலே வெகு நேரம் அமர்ந்திருந்தாள்.

நொடிகள் கடந்து, நிமிடங்கள் ஓடிப் பல மணி நேரங்கள் அங்கேயே அமர்ந்திருந்தவள் தன் நினைவை இழந்திருந்தாள்.

அடுத்ததாக, அவள் கண் விழித்தபோது, அவள் கணவன் அவள் தலையைத் தன் மடியில் ஏந்தி யிருந்தான்.

"ஆதிம்மா..." என்ற கதறலுடன் கவியரசன் அவளைத் தன்னோடு அணைத்துக் கொள்ள, அவளும் அவன்தான் இப்போதைய அவளின் ஒரே பலம் என்பது போல, அவனை இறுகப் பற்றியிருந்தாள்.



# 6

கணவனின் கைகளில் துவண்டிருந்த ஆதிராவின் இதயமும், மூளையும் மரத்துப் போயிருந்தது.

அவளது மூளையின் சிந்தனை செல்கள் அனைத்தும் செயலிழந்தது போல் செத்துக் கிடக்க... கணவனின் மஞ்சமே தனது இப்போதைய ஒரே ஆதாரம் என்பது போல் அவனை இறுகக் கட்டிக் கொண்டி ருந்தாள்.

இவளின் இந்த நிலையைக் கண்டு கவியரசனுக்கு என்ன தோன்றியதோ...

அவளிடம் மீண்டும் எதையாவது பேசி... இருக்கும் நிலையை மோசம் செய்ய விரும்பாமல் அமைதியாக இருந்தான்.

அன்று மட்டுமல்ல, அதன் பிறகு வந்த நாளிலும் அவளைத் தொந்தரவு செய்யவில்லை. ஆனால் ஆதிரா வின் நிலைதான் இன்னமும் மோசமாகிப் போனது.

கணவன் தன்னிடம் மீண்டும் தன் பழைய நிகழ்வுகளைக் கேட்டு விடுவானோ என்ற பயத்திலே நாட்களை நெட்டித் தள்ளினாள்.

அவன் தன்னை நெருங்கி வந்தாலே, அவனை விட்டு விலகுவதில் குறியாக இருந்தாள்.

இருக்கும் மூன்று அறையில் எத்தனை நேரம்தான் கணவனை விட்டுப் பிரிந்திருக்க முடியும்... இல்லை, கவியரசன்தான் அவளின் ஒதுக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாத முட்டாளா என்ன...!

ஒரு நாள்...

இரண்டு நாள்...

மூன்று நாள்... எனத் தொடர்ந்து ஆதிரா மௌனத்தைக் கையில் எடுத்துக் கொண்டு உலா வரவும், அதைச் சகித்துக் கொள்ள முடியாதவனாக அவனே அவளிடம் சென்றான்.

"ஆதி..."

அவனின் குரலில் ஆதிராவின் உடம்பு ஒரு முறை சிலிர்த்து அடங்கியது.

தனது அழைப்புக்கு அவளின் மௌனமே பதிலாகக் கிடைக்க... அவனே தொடர்ந்தான்.

"ஆதிரா... நீ எதுக்கு இப்படி இருக்கேனு என்னால புரிஞ்சுக்க முடியுது. கவலைப் படாதே. இனிமேலும் உன்னோட அப்பா, அம்மாவைப் பற்றித் தெரிஞ்சுக்க ஒண்ணுமில்ல..."

"பெத்தவங்க இல்லாத எனக்குத்தான் அவங்களோட அருமை தெரியும். ஆனால் உன்னோட விஷயத்தில் அவங்க இருந்தும் இல்லாதது மாதிரிதான்னு என்னால யூகிக்க முடியுது...

"அவங்க லண்டன் போறேன்னு என்கிட்ட அறிவிப்பா சொன்னபோதே அவங்களுக்கு உன் மேல் இருக்கிற அக்கறையின் அளவு தெரியுது. இனிமேலும் நான் அவங்களைப் பற்றிக் கேட்டு உன்னைக் காயப்



படுத்த விரும்பலை. நீ சந்தோஷமா இருக்கணும். அதை விடப் பெரிய விஷயம் எனக்கு எதுவுமே இல்லை.

"ஆனா, ஒண்ணு மட்டும் நீ நம்பணும் ஆதிம்மா... ஏதோவொரு வகையில உன்னோட பழைய நிகழ்வுகள் உன்னைப் பாதிச்சிருக்கு. நீ அதை என்கிட்ட சொல்லத் தவிர்க்கிறதும் எனக்குப் புரியுது. அந்த விஷயம் என்னவா இருந்தாலும் நான் உன்னை விட்டுப் பிரிய மாட்டேன்னு என் மேல நம்பிக்கை வைடா..."

அவன் சொன்ன வார்த்தைகள் அவளை அப்போதைக்கு நிம்மதியில் ஆழ்த்தத் திரும்பி நின்று கணவனை நோக்கி ஒரு புன்னகையை வீசினாள்.

அவன் அவளை, "வா..." எனக் கண்களால் அழைக்க, அவளும் அவனிடம் தஞ்சம் புகுந்தாள்.

கவியரசன் அவளுக்காக அவளிடம் இப்படிச் சொல்லிச் சமாளித்தானே தவிர, மனைவியைப் பற்றிய நிறையக் கேள்விகள் அவன் மனதைக் குடைந்து கொண்டுதான் இருந்தன.

அவன் ஆதிராவைத் திருமணத்திற்கு முன்னே ஒரே ஒரு முறை அதுவும் போட்டோவில் ஆதிலட்சுமி பார்க்கச் சொன்ன காரணத்தால்தான் பார்த்தான்.

அவனின் ஒரே எண்ணம்... அப்போதும், இப் போதும், எப்போதும், 'தனக்கு யார் மனைவியாக வந்தா லும், அவளைத் தன்னால் இயன்றவரை சந்தோஷத்திலும் காதலிலும் குளிப்பாட்ட வேண்டுமென்றது மட்டுமே...'

அதையே அவன் இப்போதும் செய்து கொண்டிருந்தான். மற்றப்படி திருமணத்தைப் பற்றிய முடிவு அனைத்தும் ஆதிலட்சுமியால் எடுக்கப்பட்டது. அவர் முடிவு எப்போதும் தப்பாது என்ற நம்பிக்கை அவனுக்கு இப்போதும் உண்டு.

ஆனாலும் ஆதிராவைப் பற்றி அவரிடம் பேச வேண்டுமென்ற முடிவுடன் அடுத்து வந்த நாட்களைச் செலவிட்டான்.

**அ**ந்த நாள் காலை வழக்கம் போல் தன் அலுவல் முறையில் வேலையைத் துவங்கக் காத்திருந்த கவியரசனின் செல்போன் அலறியது.

ஸ்கிரீனில் களையாகச் சிரித்த வாசுவின் முகத்தைப் பார்த்து, 'இவன் என்ன இந்த நேரத்துல கால் பண்றான்? இன்னிக்கு ஆபீஸுக்கு மட்டம் போட்டுட்டான் போலயே...' - யோசித்தவாறு போனை எடுத்தவன், "என்னடா... இன்னிக்கு ஆபீஸ் லீவா?" - எடுத்தவுடன் கவி கேட்கவும்...

"நண்பேன்டா... எப்படி மச்சி கண்டுபிடிச்ச?" - வாசு ஆச்சரியமாகக் கேட்கவும்...

"ஆமா. இது பெரிய சிதம்பர ரகசியம். காலங்கார்த்தால அதுவும் ஒன்பது மணிக்குக் கரெக்டா ஆபீஸ் தொடங்கும் போது உன்னோட போன் கால் வருதுன்னா லீவ் கேட்டு என்னோட திட்டுல இருந்து தப்பிக்கத்தான்னு தெரியாத முட்டாளாடா நான்..." - நண்பனைச் சரியாகப் புரிந்து கொண்டு பேச...



வாசு, "ஹிஹிஹி..." என முப்பத்திரண்டு பல்லைக் காட்டிச் சிரிப்பது செல்போனிலிருந்த கவியரசனால் யூகிக்க முடிந்தது.

"டேய்... பல்லைக் காட்டாதே. ஏன்டா... இந்துவும் உன்னோடதானே வேலை பார்க்கிறா. அவ மட்டும் கரெக்டா ஆபீஸ் வர்றா... உனக்கு என்னடா... நல்லா காலையில ஒன்பது மணிவரைக்கும் குறட்டை விட்டுத் தூங்கினா இப்படித்தான்..." - கவியரசன் பல்லைக் கடிக்க...

"டேய்... ஆறு வருசம் உன்னோட நேர்மையான, புனிதமான, உன்னதமான, ஒரே ஒரு உற்ற நண்பன்... நான் பெருசில்ல... வெறும் ஆறு மாசம் உனக்குக் கீழ் வேலை பார்க்கிற இந்து பெருசாப் போயிட்டாளா... போ மச்சி போ. உனக்கு நட்பு பெருசில்ல... தங்கச்சி பாசம்தான் பெருசாப் போச்சு. போடா. நான் கோவிச்சுக்கிட்ட...." என "ஆஆஆஆ...." என வாயைப் பிளந்து அவன் அழவும்,

"சீ... வாயை மூடு. எப்போ பாரு, ஸ்பீக்கரை ஆன் பண்ணிக்கிட்டு... இன்னிக்கு எதுக்குடா உனக்கு லீவ்... அஸ் யூ ஆர் சஃபரிங் ஃப்ரம் ஃபீவர்...தானே..." - கிண்டலாகக் கேட்டான்.

"அதேதான் மச்சி... ஆனா லீவ் லெட்டர் எனக்கில்லை. உன்னோட தங்கத் தங்கை இந்துமதிக்கு..."

"இந்துவுக்கா...! இந்துக்கு என்னாச்சு? நேத்து ஆபீஸ் கிளம்பும்போது நல்லாத்தானே இருந்தா..." - பதட்டத்துடன் கேட்க...

"அது மச்சி... எல்லாம் என்னாலதான்..." - அவன் சொல்லி முடிப்பதற்குள்,

"எனக்குத் தெரியும்டா... நீதான் அவளை ஏதாவது பண்ணியிருப்ப... பாவம்டா... அதுவே பச்சப் புள்ள... அது கிட்ட உன்னோட வாலுத் தனத்தைக் காட்டியிருப்ப. என்னடா செஞ்ச அவளை... இரு. நீ எதுவும் சொல்ல வேண்டாம். நானே வர்றேன். நானே வந்து பார்த்துட்டு உன்னை நாலு மிதி மிதிக்கிறேன்..." - கவியரசன் படபட பட்டாசாகப் பொரிய...

"ஷ்... டே டே டே... கொஞ்சம் அடங்குடா. நீ இந்துவை என்ன வேணா சொல்லு மச்சி... ஆனா, பச்சப் புள்ளைன்னு மட்டும் சொல்லி என்னோட ஹார்ட்டை ஹர்ட் பண்ணாதே. தினமும் என்னைப் பூரிக் கட்டை யிலேயும், பருப்பு மத்துலேயும் மொத்தறது எனக்குத்தான் தெரியும். சரி விடு... கம்பெனி ரகசியத்தை எல்லாம் வெளியே சொல்ல வைச்சுக்கிட்டு...

"அப்புறம், இன்னும் நான் விஷயத்தைச் சொல்லியே முடிக்கலை. அதுக்குள்ள ஏன்டா பொங்குற... சோப்பா... உன்னோட தங்கச்சிப் பாசத்துக்கு ஒரு அளவே இல்லாமப் போய்க்கிட்டு இருக்கு. உன்னோட பாச மூட்டையைக் கொஞ்சம் ஓரம் கட்டி வை..." என வாசு அலுத்துக் கொள்ள...

"நீ முதல்ல இந்துவுக்கு என்னாச்சுன்னு மட்டும் சொல்லு. மத்ததை அப்புறம் பேசு. உன்னோட மொக் கையைக் கேட்க என்னால முடியாது..." - கவியரசன் கட் அண்ட் ரைட்டாகக் கேட்க...



"ம்க்கும்... போ மச்சி! இதை எப்படி நான் சொல்ல... எனக்கு ஒரே வெட்கம் வெட்கமா வருது..."

கவியின் தவிப்புத் தெரியாமல், வாசு நேரம் காலம் தெரியாமல் வெட்கப்பட...

"டேய்ய்..." - கவி பல்லை நறுநறுவெனக் கடிப்பதைக் கேட்ட பின்தான் வாசு கொஞ்சம் அடங் கினான்.

"சரி சரி. டென்ஷன் ஆகாதே. நான் இந்த விஷயத் தைச் சொன்னதுக்குப் பிறகு பல்லைக் கடிச்ச அந்த வாய் எனக்கு முத்தம் கொடுக்கும், பாரேன்.." - வாசு பெருமை யாகச் சொல்ல...

"நீ மட்டும் இப்போ விஷயத்தைச் சொல்லலை... அதே வாயால உன்னைக் கடிச்சுக் குதறிடுவேன்..." - கவி மீண்டும் பல்லைக் கடிக்க...

"ச்சே... இத்தனை நாளா ஒரு டிராகுலா கூடவா நான் நட்புப் பாராட்டிக்கிட்டு இருந்தேன். நல்லவேளை, தப்பிச்சேன்..." - வாசு மீண்டும் அவன் மொக்கையைத் துவங்கவும்,

"டேய்..." என்ற கவிக்கு...

"சரி, சரி. கூல் டவுன். கூல் டவுன்..." என வடிவேலு போன்று சொன்னவன், "இந்துவுக்கு நாள் தள்ளிப் போயிருக்குடா. காலையில வேற மயங்கி விழுந்துட்டா. அதான் டாக்டர் கிட்ட கேட்டு கன்ஃபர்ம் பண்ணப் போகலாம்னு... இன்னிக்குப் பதினொரு மணிக்குத்தான்

அப்பாயிண்ட்மென்ட் கிடைச்சிருக்கு மச்சி... ஹெச்.ஆர். கிட்ட சொல்லிட்டேன். ஹாஸ்பிடல் வேலை மதியத் துக்குள்ள முடிஞ்சுதுன்னா நான் மட்டும் வரேன் அரஸ்... இந்து கொஞ்சம் டயர்டா தெரியுறா..." - ஒரு வழியாக விளையாட்டைக் கைவிட்டு விஷயத்தைச் சொல்ல... கவியரசனின் சந்தோஷத்திற்கு அளவே யில்லாமல் இருந்தது.

வாசு, தன் பதிலுக்காகக் காத்திருப்பது புரிய, "வாசு... அப்போ நீ அப்பாவாகப் போறியா... கங்க்ராட்ஸ்டா. கேட்கவே ரொம்ப ரொம்பச் சந்தோஷமா இருக்கு. உன்னை அப்பான்னு கூப்பிடப் பாப்பா வரப் போகுதா மச்சி... டேய், குட்டி எப்படி இருக்கும்டா... உன்னை மாதிரியா... இல்லை, இந்து மாதிரியா!

"எப்போடா பாப்பாவை நான் தூக்கிக் கொஞ்சு வேன்... ஹய்யோ... அதுக்கு இன்னும் பத்து மாசம் வெயிட் பண்ணணுமா மச்சி..." என்ற கவியரசனின் சந்தோஷத்தை வாசுவால் உணர முடிந்தது.

அவனின் குழந்தையைப் பற்றிய ஏக்கமும், உறவு களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவமும் நன்கு புரிந்த நண்பனாக, "மச்சி... சாரிடா. இது உன்னோட பர்சனல். இருந்தாலும் கேட்கிறேன்... தப்பா எடுத்துக்காதே..." என்ற வாசுவிற்கு,

"ச்சே... ச்சே... அப்படி எல்லாம் எதுவுமில்லைடா... உனக்கில்லாத உரிமையா?" கவி அவனைக் கேட்க உந்த...



"ஏன் மச்சி... உனக்குத்தான் குழந்தைங்கன்னா ரொம்பப் பிடிக்குமே.. ஒருவேளை ஆதிரா இப்போ வேண்டாம்னு..." - வாசு கேட்க வருவதைப் புரிந்து கொண்டவன்...

"ச்சே... ச்சே... அப்படியெல்லாம் எதுவுமில்ல வாசு! அவளுக்கும் இஷ்டம்தான். ஆனா எங்களுக்குக் கல்யாணமாகி இன்னும் நாலு மாசம் கூட முழுசா முடியலையே... அதுவும் ஆதி ரொம்பச் சின்னப் பொண்ணுடா. இன்னும் கொஞ்ச நாள் பார்க்கலாம்..." என்றவன், தொடர்ந்து சில நொடி அமைதிக்குப் பின்...

"சரிடா வாசு. ஹாஸ்பிடல் போயிட்டு எனக்குக் கால் பண்ணு. நிச்சயம் பாப்பாவாதான்டா இருக்கும். நீ மதியம் கூட வர வேண்டாம். நீ இந்துவோடயே இரு. வேணும்னா இன்னும் ஒரு வாரம் கூட லீவ் போட்டு அவளை நல்லாக் கவனிச்சுக்கோ... இங்கே வேலை எல்லாம் நான் பார்த்துக்கிறேன்..." என வாழ்த்துச் சொல்லிப் போனை அணைத்த கவியரசனின் நினைவுகள் அனைத்தும் குழந்தையைப் பற்றியே சுற்றித் திரிந்தன.

கூடவே வாசு சொன்ன, 'நாள் தள்ளிப் போயிருக்கு,' என்ற வார்த்தைகளும் அவன் செவிகளில் ரீங்காரமிட்டன.

ஆதிரா இதுவரை அவனிடம், அவளின் மாதவிடாய் பற்றிப் பேசியதேயில்லை. அவனும் அது பற்றிக் கேட்டுக் கொண்டதுமில்லை.

ஒரு வேளை அவளுக்கு அதைப் பற்றிப் பேசக் கூச்சமிருந்தாலும் கூட, அந்த மாதிரி நாட்களில் பெண்

களின் உடல் நிலை படுத்துமென அவன் கேள்விப் பட்டிருக்கிறான். அவன் கல்லூரி, பள்ளி வாழ்க்கையில் நிறையப் பெண்களுடன் நட்புப் பாராட்டியிருக்கிறான். அந்த நாட்களில் அவர்கள் ஒருவித அசௌகரியமாக இருப்பார்கள் என்பதும் அவனுக்குத் தெரிந்த விஷயம்.

அப்படி எதையும் இதுவரை அவன் ஆதிராவிடம் உணர்ந்ததில்லை. ஒரு வேளை அவளுக்குத் திருமணத் திற்குப் பின் எதுவுமாகவில்லையா?

அப்படியானால் அவளுக்கு... ம்ம்... எங்களுக்கு...

'ஹுர்ரே...' எனத் துள்ளிக் குதித்த மனதை அடக்கி, முதலில் ஆதிராவிற்குப் போன் அடித்தான்.

அவள் எடுப்பதற்காகக் காத்திருந்த ஒவ்வொரு நிமிடமும் அவனின் மனம் சந்தோஷம், தவிப்பு என இரண்டு விதத்தில் துடித்துக் கொண்டிருந்தது.

ஒரு வழியாக முதல் மணியின் கடைசி ரிங்கில் போனை எடுத்த ஆதிரா, "சொல்லு கவி... வேலையா இருக்கேன்," என எடுத்தவுடன் சொல்லவும்...

அவள் சொன்னதைக் கிடப்பில் போட்டு விட்டு, "ஆதிம்மா... நீ எப்போடா தலை குளிச்சே...?" எனப் பழங்காலத்தில் அன்னைமார் கேட்கும் கேள்வியை இவன் கேட்டு வைக்க,

ஆதிரா புத்திசாலியோ, "ஏன் கவி... டெய்லியும் தானே தலை குளிக்கிறேன். இன்னிக்கு மார்னிங் கூடக் குளிச்சேனே..." எனத் தெளிவாகப் பதில் சொல்ல,



"ப்ச்... அதில்ல... ம்ம்... ஹ்ம்... நீ எப்போ வீட்டுக்குத் தூரமானே...?" எனத் தயங்கித் தயங்கிக் கேட்க,

அவளோ, "நான் எங்கேயும் தூரமாப் போகல கவி... வீட்லதானிருக்கேன். என்னன்னு விஷயத்தைச் சீக்கிரம் சொல்லு... மெஷின்ல துணி போட்டிருக்கிறேன்." அவள் வேலையை முன்னிறுத்திச் சொல்ல,

மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்ட கவியரசன், "நீ சரியான லூசு ஆதிம்மா..." என வாய் விட்டே திட்டியவன்,

"அடியே பொண்டாட்டி... உனக்கு எப்போ கடைசியாப் பீரியடாச்சு...?" என ஒரு வழியாகக் கேட்டு விடவும்,

"ஓஹோ... அதுவா...? இப்படிக் கேட்டாப் புரியும். ம்ம்... அது எனக்கு எப்பவாவதுதான் ஆகும். ஐ திங்க் நம்ம மேரேஜுக்கு ஒரு டென் டேஸ் முன்னாடின்னு நினைக்கிறேன். சரியாக ஞாபகமில்லை கவி... ஐயோ, மெஷின் அலாரம் அடிக்குது. நான் அப்புறம் பேசுறேன்... பை," எனப் போனை வைத்து விட்டு, அவள் வேலை யைக் கவனிக்கச் செல்ல,

அவள் பதிலில் இனிய திகைப்பிலிருந்த கவியர சனின் உடல் மட்டும் ஆபீஸ் அறையிலிருக்க, உயிர் அந்தரத்தில் பறந்து, கனவுலகில் மிதந்து கொண்டிருந்தது.

இப்போதே அவன் கைகளில் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சிக் கொண்டிருப்பதைப் போல் அவன்

உணர, கால்கள் இரண்டும் மனைவியைத் தேடி ஓடத் தயாராக இருந்தன.

ஆனால், அவன் கனவு பலிக்குமா?

## 7

**ஆ**திராவிடம் போனில் பேசியதிலிருந்து கவியரசனின் சந்தோஷத்தை வார்த்தைகளால் வடிக்க முடியவில்லை.

செய்யும் வேலையில் கவனமில்லாமல், கம்ப்யூட்டர் கீபோர்டைத் தப்புத் தப்பாகத் தட்டி, கம்ப்யூட்டர் அவன் தலையில் கொட்டி, என நேரத்தை நெட்டித் தள்ளிக் கொண்டிருந்தான்.

எப்போதும், நேரத்தைப் பார்த்து வேலை செய்யாதவன், இன்று மணி எப்போதடா ஐந்தடிக்கும் வீட்டுக்குச் செல்லலாம் என அவன் கைகளும், கால்களும் பரபரத்தன.

வாசுவும், இந்துவும் வேறு இல்லாதது அவனுக்கு அதிக வேலையைக் கொடுக்க, தப்பித் தவறியாவது வேலையைக் கடனே எனச் செய்து கொண்டிருந்தான்.

அவனின் சந்தோஷத்தை மேலும் கூட்டும் வண்ணம், வாசு அழைத்துத் தங்களுக்குக் குழந்தை தானென்று மருத்துவர் உறுதி செய்துவிட்டதாகச் சொல்லவும், அவனிடமும் தன் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ளத் துடித்த இதழ்களை இறுக்க மூட அவன் மிகவும் சிரமப்பட்டான்.



முதலில் மனைவியைப் பார்த்துத் தட்டாமாலை சுற்ற வேண்டும், அவளைத் தன் முத்த மழையால் குளிப்பாட்ட வேண்டும், தனது புது உறவின் வருகையை, அதன் சந்தோஷத்தை முதலில் நான் முழுதாக அனுபவித்த பிறகுதான் மற்றவர்களை அனுபவிக்க விடுவேன் என அவன் மனம் உற்சாகச் சுயநலம் கொள்ள, நொடிக்கொரு முறை கைக்கடிகாரத்தைப் பார்த்தவனின் தவிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வண்ணம், மணி ஐந்தடித்த வேகத்தில் மின்னலைப் போன்று வீடு விரைந்தான்.

வீடு வரும் வழியில் வாசு பார்த்த மருத்துவரிடமே ஆதிராவிற்கு ஒரு அப்பாயின்ட்மெண்ட் வாங்க நினைத்தவன், பின் தானே சென்னையின் பிரபல மகப்பேறு மருத்துவ மனைக்கு அழைத்து விசாரிக்க, அவனின் அதிர்ஷ்டமோ... துரதிர்ஷ்டமோ... அந்த நாள் இரவு ஏழு மணிக்கே கிடைத்தது.

விட்டு வாசலில் அழைப்பு மணியை அடித்து விட்டுக் காத்திருந்த அந்தப் பத்து நொடிகளில், அவனுக்குப் பத்து 'ச்சே...!' வந்து விட்டது.

"வரேன் வரேன்... வரேன்... ஏன் கவி இப்படிப் பெல்லை... ஹே... ஹே... விடு, விடு... டோர் ஓப்பன்ல இருக்கு கவி... விடு என்னை..." அவன் விடாமல் அடித்த அழைப்பு மணிக்கு விரைந்து வந்தவள், கதவைத் திறந்த அடுத்த நொடி, வாசலில் நின்றே அவள் முகத்தைத் தன் முகத்தால் ஈரப்படுத்திய கவியரசன், சுற்றுப்புறம் மறந்தான்.

ஆனால், வாசலில் வைத்து லைவ் ஷோ காட்டிக் கொண்டிருந்த கவியரசனையும், ஆதிராவையும், பக்கத்துப் பிளாட்வாசிகளும், அங்கிருக்கும் குழந்தைகளும் வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருக்க, அதை உணர்ந்த ஆதிரா, கவியரசனின் காலரைப் பற்றி வீட்டுக்குள் இழுத்து வந்தவள், வீட்டின் கதவையும் அடைத்து, அவனிடம் ஒன்றினாள்.

வெகு நேரம் தொடர்ந்த முத்தப் போராட்டத்தில், இளைப்பாறச் சொல்லி மூச்சுக் குழாய் கெஞ்ச, போனால் போகிறதென்று கவியரசன் மனைவியின் உதட்டை விடுவித்தான்.

ஆனால், அவளைத் தன்னை விட்டு ஒரு அடி கூடப் பிரிய விடவில்லை.

கணவன் தன் முகத்தை விடுவித்ததும், "ஹப்பா... என்ன கவி இது... இப்படி வலிக்குது..." என உதட்டைத் தொட்டுக் காட்ட,

"இப்போ நான் இருந்த சந்தோஷத்தில், உன் உதட்டைக் கடிச்சுத் துப்பணும் போலிருக்கு. அதை விட உன்னைக் கையில் தூக்கிச் சுத்தணும் போலிருக்கு. ஆனால், இப்போ நீ இருக்கிற நிலைமையில் அப்படிச் செஞ்சா..." எனப் பேசிக் கொண்டிருந்தவன், முழுதாக முடிக்க விடாமல் மனைவியின் ஈர இதழ்கள் மீண்டும் வசீகரிக்க, மீண்டும் அவளைத் தன் வசப்படுத்தினான்.

ஒரு வழியாக அவனிடமிருந்து விடுதலை பெற்ற ஆதிரா, "ஹய்யோ... விஷயத்தைச் சொல்லிட்டு என்ன



வேணும்னாலும் செய்யேன் கவி... உனக்கு ஏதாவது பிரமோஷனா?" என்று கேட்க,

"ஹே... நடிக்காதேடி..." கோபமாகச் சொல்ல,

"யாரு... நானா நடிக்கிறேன்? நீதான் இப்போ ரொமாண்டிக் ஹீரோவா மாறி, என்னைப் படுத்தி எடுக்கிறே. என்னன்னு சொல்லுடா." அவளும் அதட்டல் போட,

"அடிங்க... 'டா'வா? நீ இந்த விஷயத்தை என் கிட்டே இத்தனை நாள் சொல்லாததுக்கே உன்னை நாலு போடணும். பட், உன்னை இந்த மாதிரி நேரத்துல ஒண்ணும் செய்யக் கூடாதுன்னு கண்ட்ரோலா இருக்கேன். இப்போ இந்த 'டா'விற்கும் சேர்த்து மொத்தமாக் கணக்கு வெச்சிக்கிறேன்..." மீண்டும் மீண்டும் அவன் ஆதிராவுக்குப் புரியாததைப் பேச,

"இப்போ நீ எனக்குப் புரியற மாதிரிப் பேசல... அப்புறம் உனக்கு சில்லி காபிதான் தருவேன்." ஆதிரா கொந்தளிக்கவும்,

"சரி. நான் உன் வாயில் இருந்து வாங்கலாம்னு நினைச்சா, நீ எங்கிட்டேயிருந்து வாங்கப் பார்க்கிறியா... சரி, பொழைச்சுப் போ..." என்றவன், தன் தோளோடு நின்றவளைத் தன் எதிரில் கொண்டு வந்து நிறுத்தினான்.

அவள் முன்னே மண்டியிட்டு, அவள் இடுப்பைத் தன் முகத்திற்கு நேராக வைத்து, "டேய் குட்டி... உங்க அம்மாவுக்கு ரொம்ப லொள்ளு பாரேன். என் கிட்டேயே

நீ வந்ததைச் சொல்லலை... அவளுக்கு என்ன பனிஷ் மெண்ட் கொடுக்கலாம்...? ம்ம்... நூறு முத்தம் கொடுக்க லாமா? அதுவும் இங்கே... இங்கேதானே உன்னைச் சுமந்துட்டிருக்கா... இங்கேதானே என்னோட சந்தோ ஷத்தை ஒளிச்சு வெச்சிருக்கா. அதனாலே அவளுக்குத் தண்டனையை இங்கிருந்துதான் ஆரம்பிக்கணும்..." என்றவன்,

முதல் முத்தத்தைப் பதித்து விட்டுப் பார்வையை உயர்த்தி ஆதிராவைப் பார்க்க, கீழே குனிந்து நின்று அவன் சொல்வதைக் கேட்க ஆரம்பித்தவள், அவன் பேசுவதின் சாராம்சத்தை உணர்ந்து கண்கள் கண்ணீரை முத்துப் போல் சிந்த, அம்முத்து கவியரசனின் கண்களில் பட்டுச் சிதறியது.

அவள் கண்ணீரில் பதறியவன், எழுந்த நின்று, "குட்டிம்மா... எதுக்குடா அழற... இப்போ என்னாச்சு? இது சந்தோஷமான விஷயம்தானே...!" என அவள் முகத்தைத் தாங்கிக் கேட்க,

அழுகைக்கு இடையில், "கவி... கவி... நா... நான் ப்ரெக்னென்ட்டுன்னு யாரு சொன்னா...?" எனத் திக்கித் திணறிக் கேட்க,

"ஏன்டா... நீதானே..." என இழுக்க,

"எப்போ கவி...?"

"அப்பவே... நான்... காலையில... ம்ம்... நான் போன் பண்ணிக் கேட்டேனே..."



"நீ என்னோட பீரியட்ஸ் பத்தித்தானே கேட்டே..."

"ஆமா... ஆனா.. உனக்கு நாலு மாசமா..."

"ஆமா... எனக்கு அது ரெகுலரா வராது. த்ரீ மந்த்ஸ் ஒன்ஸ்... அந்த மாதிரிதான் வரும்."

"ஓஹோ..." என்றவன், தரையைப் பார்க்க,

ஆதிராவிற்குக் கவியின் விழுந்த முகத்தைப் பார்க்கவே மிகவும் சிரமமாக இருந்தது.

வரும்போது அவன் முகத்தில் இருந்த சந்தோஷமும், உற்சாக ஆர்ப்பரிப்பும் நொடியில் காணாமல் போய், முகம் கருத்துப் போயிருந்தது.

ஆனால், அவளால் என்ன செய்ய முடியும்? முதலில், அவளுக்குத் தாய்மையடையும் தகுதியிருக்கிறதா என்ற பயமே இப்போதைய அவளின் முதல் கவலையாக இருக்கையில் கணவனை அவளால் எப்படிச் சமாதானம் செய்ய முடியும்?

வெகுநேரம் தொடர்ந்த அமைதியைக் கலைத்து, "ஓ.கே. ஆதிம்மா... கிளம்பு... வெளியே போகணும்..." என்றவன், குளியலறைக்குள் சென்று மறைய,

அவள், "எங்கே...? எதற்கு...?" என்று எந்தக் கேள்வியும் வைக்காமல். அவன் சொன்னதைப் போலவே கிளம்பச் செல்ல, கப்போர்டில் உடையைப் பார்த்தவளின் நினைவுகள், முதல் முறை இவர்கள் வெளியே சென்றதில் நிலைக்க, கவனமாக ஒரு ஜீன்சும், குர்தியும் மாற்றிக் கொண்டு தயாரானவள், அவனுக்குக் காபி தயாரித்து

ரெடியாக வைக்கவும் அவன் உடை மாற்றி வரவும் சரியாக இருந்தது.

அவள் கொடுத்த காபியை அமைதியாகக் குடித்து முடித்தவன், அவள் உடையைப் பார்த்து மெல்லிய புன்னகையை வீச, அவள் தலை குனிந்தவாறு அவனருகில் அமர்ந்து கொண்டாள்.

அவள் வருத்தப்படுவது புரியவும், "அதை மறந்துடும்மா..." என்றவாறு அவளை அழைத்துக் கொண்டு வெளியே செல்ல, பின் ஞாபகம் வந்தவனாக, "குட்டிம்மா... நீ கீழே போடா... நான் இதோ வரேன்," என்று அவளை அனுப்பி விட்டுத் தங்களறைக்குள் வந்து, அவன் கப்போர்டை ஆராய்ந்தான்.

திருமணமான புதிதில் அன்றொரு நாள் இவன் வீட்டைச் சுத்தப்படுத்தும் போது, அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்த ஆதிராவின் உடைகளையும், அவளின் பொருட்களையும் அவன் கப்போர்டில் சுத்தப்படுத்தி அடுக்கியவன், அவள் பெட்டியின் அடியிலிருந்த ஒரு மருத்துவ மனையின் ரிப்போர்ட்டையும், அதில் ஆதிராவின் பெயர் குறிப்பிட்டிருப்பதையும் பார்த்தவன், அதில் என்னவோ மருத்துவக் குறிப்புகள் இருக்கவும், பிறகு படிப்போமென எடுத்துப் பத்திரப்படுத்தினான்.

அன்று அவன் வீட்டைச் சுத்தப்படுத்தும் வேலையில் இருந்தமையால், அந்த ரிப்போர்ட்டைப் பிரித்துக் கூடப் பார்க்காதவனுக்கு, அதன் பிறகு அது பற்றி மறந்தே போனது.



அதன் பின்னரும் அன்று ஆதிராவுக்கு ஸ்டோல் எடுத்த போது, தவறி விழுந்த ரிப்போர்ட்டின் ஞாபகம் இப்போது வரவே, எதற்கும் இருக்கட்டும் என அதை எடுத்து ஒரு கவரில் போட்டுக் கொண்டு, கதவை அடைத்து விட்டுக் கீழே விரைந்தான்.

காருக்கு அருகில் நின்று கொண்டிருந்த ஆதிராவைப் பார்த்தவன், "போகலாம்டா..." என இருவரும் தங்களின் பயணத்தைத் துவக்கினர்.

வரும் வழியில் வாசு - இந்துவின் விஷயத்தைப் பகிர்ந்து கொண்டவன், மற்றதைப் பற்றியும் பேசிக் கொண்டு வர, தாங்கள் இப்போது போகும் இடத்தைப் பற்றி எதுவும் பேசவில்லை. ஆதிராவும் எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை.

ஒரு சில நிமிடப் பயணத்தின் பின் அவர்கள் கார், ஒரு மருத்துவ மனையின் முன்னே நிற்கவும், ஒரு நிமிடம் திகைத்த ஆதிராவின் எண்ணங்கள் பின்னோக்கிப் போக, பின் கேள்வியாகக் கணவனை நோக்கவும், "காலையில உன்னோடு பேசினதும், நமக்குப் பாப்பாவாக இருக்குமோன்னு அப்பாயின்ட்மெண்ட் வாங்கினேன்... இப்போ உனக்கு உடம்பு சரியில்லேன்னு சொன்னேல்ல... அதான் என்ன பிரச்சினைன்னு விசாரிக்கலாம்... ஏதாவது ப்ராப்ளம்னா இப்போவே சரி பண்ணிடலாம்டா..." என்றவன்,

பின் யோசனையாக, "குட்டிம்மா... இதைக் குழந்தைக்காகத்தான் பண்றேன்னு தப்பா நினைச்சுக்

காதே. எனக்கு முதல்ல நீதான் முக்கியம்... அப்புறம்தான் எல்லாமே. சரியா...?" என அவன் சொல்ல வருவது புரிந்ததும்,

"ச்சே... ச்சே... அப்படி எல்லாம் எதுவுமில்லை கவி..." எனச் சிரித்தவள், "வா , போகலாம்..." என மனதின் ஒரு ஓரத்தில் பயப் பந்து உருண்டாலும், அவளுக்குமே தனக்குக் குழந்தை பிறக்குமா, பிறக்காதா என்ற கேள்விக்கு விடை காண வேண்டுமென ஆசையிருந்தது.

அந்த ஆசை அவள் தப்புக்குப் பரிகாரமா? இல்லை... கணவனின் ஆசையை நிறைவேற்றவா? - என்ற கேள்விக்கு அவளுக்கே விடை தெரியவில்லை.

ரிசப்ஷனில் தங்கள் பெயரைச் சொல்லிக் காத்திருந் தவர்கள், பின் அவர்கள் முறை வரவும், மனைவியை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

உள்ளே வந்தவர்களை வரவேற்று, "எஸ்... சொல்லுங்க..." என்ற அம் மருத்துவரின் தோற்றத்தில், அவரின் வயதும், அனுபவமும் தெரிய, அதில் திருப்தியுற்ற கவியரசனைப் பார்த்து, "ஹ்ம்... நம்பிக்கை வந்துடுச்சா...?" என்று சிரிப்புடன் கேட்ட மருத்துவர் சுலேகாவிடம், ஒரு அசட்டுப் புன்னகையைச் சிந்தினான்.

பின் அவனே, "டாக்டர்... ஷி இஸ் மை வொய்ப்... இவங்களுக்கு இர்ரெகுலர் பீரியட்ஸ் ப்ராப்ளம்..." என்றதும், சுலேகா, ஆதிராவிடம் திரும்பினார்.

"உங்க பேரு...?"



கணவனைப் பார்த்தவாறு, "ஆதிரா..." என்றாள்.

"ஆதிரா... நைஸ் நேம்... பார்த்தாச் சின்னப் பொண்ணு மாதிரித் தெரியறீங்க... வயசு எத்தனை?"

"ட்வென்ட்டி..." என்ற ஆதிராவைத் தொடர்ந்து, "ட்வென்ட்டியாக இன்னும் மூணு மாசமிருக்கு..." கவியரசன் சொல்லவும், சுலேகா அவனைப் பார்த்துப் புன்னகைத் தார்.

"எத்தனை நாளா உங்களுக்கு இந்த ப்ராப்ளம் இருக்கு ஆதிரா?"

"ஒரு டூ த்ரீ இயர்ஸ்..." அவள் முடிக்கக் கூட இல்லை... "என்னது... டூ, த்ரீயா... ஏன் ஆதி என் கிட்டே முன்னமே சொல்லலை...?" எனவும், ஆதிரா, "ச்சு... சும்மா இரு கவி..." என அவன் தொடையைத் தட்ட, சுலேகா மீண்டும் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

மீண்டும் ஒரு சில கேள்விகளை ஆதிராவிடம் கேட்க, ஆதிராவும் பதட்டத்துடனேயே பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவள் பதட்டத்தைப் பெண்களுக்கே உண்டான கூச்சம் என நினைத்த மருத்துவர், "ரிலாக்ஸ் ஆதிரா... இது ஒண்ணும் பெரிய விஷயமில்லை. இப்போ இருக்கிற நிறையப் பொண்ணுங்களுக்கு இருக்கிற ப்ராப்ளம்தான். இப்போதைய ஜெனரேஷன் பிள்ளைகளுக்கு ஹெல்த்தி யான உணவை விட, ஸ்டைலிஷான உணவு மேல் தான் மோகம். அதனால கூட இந்த ப்ராப்ளம் வரலாம். ஒரு சின்ன ஸ்கேன் இருக்கு... அதைச் செஞ்சுட்டு ரிப்போர்ட்

வாங்கிட்டு வாங்க. அதுக்குத் தகுந்த மாதிரிதான் என்னால ட்ரீட் பண்ண முடியும். இப்போ பண்றீங்களா... இல்லை..." எனக் கேள்வியாகக் கேட்க,

"நோ... நோ... எதுவாக இருந்தாலும் இப்போவே பண்ணிடுங்க..." கவி சொல்லவும், ஒரு நர்சுடன் ஆதிராவை அனுப்பி வைத்தவர், மீண்டும் கவியரசனைப் பார்க்க,

பின் ஞாபகம் வந்தவனாகத் தன் கையிலிருந்த ரிப்போர்ட்டை எடுத்து டாக்டரிடம் கொடுத்தான்.

"என்னது...?" என்பது போலச் சுலேகா பார்க்க,

"இது ஆதியுடையது... அவள் முதல்ல டெல்லியில் தான் இருந்தா... அப்போ எடுத்த ரிப்போர்ட்னு நினைக்கிறேன். உங்க ட்ரீட்மெண்ட்டுக்கு யூஸ் ஆகுமில்ல..." என்றவனைப் பார்த்து, "ஹப்பா... ஆதி ஆதி ஆதி... உங்க வொய்ப் ரொம்ப லக்கிதான்..." கேலியாகச் சொன்னவர், மீண்டும் ஒரு அமைதியான புன்னகையுடன் அந்த ரிப்போர்ட்டைப் படிக்க ஆரம்பித்தார்.

அவர் படிக்க ஆரம்பித்தபோது இருந்த புன்னகை உறைந்து போய், அதைப் படித்து முடித்த போது, அவர் முகம் இறுகிப் போனது.

அவர் முகத்தின் மாறுதல்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த கவியரசன், அவர் முகம் இறுகவும், பதட்டமடைந்தவன், "என்னாச்சு டாக்டர், ஆதிக்கு...? ஆதிக்கு ஏதாவது பெரிய ப்ராப்ளமா?" தவிப்பாகக் கேட்கவும்,



"ஹ்ம்ம்..." என்று பெருமூச்சை வெளியிட்டவர், 'ஆம்,' என்றும் சொல்லவில்லை, 'இல்லை' என்றும் உரைக்கவில்லை.

ஒரு சில நிமிடங்களே என்றாலும், வந்தது முதல் மனைவியின் மேல் கவி காட்டிய அக்கறையில், மனைவி மீது அவன் வைத்திருக்கும் அன்பு புரிந்திருந்தது.

மனைவியின் மேல் உயிரையே வைத்திருக்கும் இவன், எப்படி இந்தச் செய்தியைத் தாங்கிக் கொள்வான் என்ற ஐயம் எழ, சற்று நேரம் அமைதி காத்தார்.

பின் ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, "உங்களுக்கு எப்போ மேரேஜ் ஆச்சு?" என்று கேட்டார்.

"நாலு மாசம் முன்னாடி... ஐ மீன் லாஸ்ட் ஜூன்ல..."

"ஓஹோ..." என இழுத்தவரை,

"என்னாச்சு டாக்டர்...? எதுவானாலும் சொல்லுங்க... என்ன பிரச்சினைன்னாலும், எவ்வளவு செலவானாலும் பார்த்துக்கலாம்..." என்றவனைப் பாவமாகப் பார்த்து விட்டு அமைதி காக்கவும்,

அவரின் அமைதி கவியரசனைக் கொல்ல, "ப்ளீஸ் டாக்டர்... ஆதிக்கு என்ன...? இஸ் ஷி ஆல்ரைட்?" என்று கெஞ்சல் குரலில் கேட்க,

"ஹ்ம்ம்... இதை எப்படிச் சொல்றதுன்னு தெரியலை... பட்... ஐ ஹாவ் டூ... ம்ம்... உங்க ஆதி... ம்ம்... ஷி வாஸ் எ ட்ரக் அடிக்ட்... அன்ட்... அவங்களுக்கு ஏற்கெனவே ஒரு முறை அபார்ஷன் ஆகியிருக்கு..." எனத் திக்கித் திணறி அவர் சொல்லி முடிக்கவும்,

"வாட்...?" என்ற கவியரசனின் இரத்தம் உறையவும்... ஆதிரா மருத்துவரின் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வரவும் சரியாக இருக்க, அவர் கையிலிருந்த கோப்பில் அவளது உயிர் நாளங்களும் உறைந்து நின்றன.

## 8

டாக்டர் சொன்னதை நம்ப மறுத்த கவியரசனின் காதுகள், கண்கள் நிலைக்க அவரையே திகைப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவர் என்ன சொல்கிறார்...?

'ஒரு வேளை நமக்குப் புரியாத வேறு ஏதாவது பாஷையில் பேசுகிறாரா? நமக்குத்தான் அவர் பேசுவது புரியவில்லை போலும்...' என்று நினைத்த மனது, மீண்டும் சுலேகா சொன்னதை யோசித்துப் பார்த்தபோது, அவனுக்குக் கோபம் கூட வந்தது.

'அவர் எப்படித் தன் ஆதியைப் பற்றி அப்படிச் சொல்லலாம்...' என நினைத்தவனுக்கு, மனைவி மேல் வர வேண்டிய கோபமும், ஆத்திரமும் சுலேகா மேல் திரும்பியது.

'டாக்டர் என்றால் என்ன வேணும்னாலும் சொல்லலாமா?' என நெஞ்சில் முண்டிய கோபத்தை அடக்கி,

உறைந்திருந்த உடம்பில் உயிரைத் தேக்கி, வறண்ட தொண்டையை அங்கிருந்த தண்ணீரால் ஈரப்படுத்தி விட்டு,



வெளியே எழ மறுத்த குரலைச் சரி செய்து கொண்டு, "டாக்டர்..." முடிந்தவரை தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஏதோ பேச வர,

அவனின் உணர்வுகளைப் படிக்க முடிந்த சுலேகா, அவனுக்குப் பதில் சொல்லுமுன், அறை வாயிலில் சிலையென நின்றிருந்த ஆதிராவையும் பார்த்து விட்டு அமைதி காக்க, ஆதிராவின் பின்னால் வந்த நர்ஸ், "உள்ளே போங்க மேடம்... உங்க ரிப்போர்ட்ஸ் வந்துடுச்சு..." என அவளை உள்ளே அழைத்து வந்தவர், மருத்துவரிடம் அவளது ரிப்போர்ட் அடங்கிய கோப்பைக் கொடுத்து விட்டுச் சென்றார்.

அவள் கால்கள் நடந்தாலும், கண்கள் சுலேகா கையிலிருந்த கோப்பின் மீது நிலைத்திருந்தன. உடல் நடுங்க, மனம் இறுக நடந்தவளுக்கு, காதுகள் அடைத்து, கண்கள் இருட்டிக் கொண்டதைப் போல் உணர்ந்தாள்.

"உட்காருங்க ஆதிரா..." மருத்துவர் சொன்னது கூட அவள் காதில் சரியாக விழவில்லை.

"உட்காருடா..." எனக் கவியரசன், அவள் கையைப் பிடித்து இழுக்கவும்தான் உயிர் பெற்றவள் போல் அவனருகில் அமர்ந்து கொள்ள, அவள் கையில் நடுக்கத்துடன், ஈரத்தை உணர்ந்தவன், "டாக்டர்... ஏ.சி.யைக் கொஞ்சம் குறைச்சு வைக்கிறீங்களா...? ஆதிக்குக் குளிருது..." என்றதும், சுலேகா அவன் சொன்னதைச் செய்தார்.

கவியரசனால் இன்னமும் டாக்டர் சொன்னதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால், மனைவி

முன்னால் ஏதாவது பேசி, அவளது மனதைச் சங்கடப் படுத்த வேண்டாமென நினைத்தவன், இயல்பாக இருப்பது போல் காட்டிக் கொண்டான்.

தம்பதியரை ஒரு முறை அவரின் அக்மார்க் புன்னகையுடன் பார்த்த சுலேகா, நர்ஸ் கொடுத்துச் சென்ற ரிப்போர்ட்டைப் படிக்க ஆரம்பித்தார்.

ஒரு சில நொடிகள் அதைக் கூர்ந்து கவனித்தவர் முகம் புன்னகையில் விரிய, "கங்கிராட்ஸ் கவியரசன்... ஆதிரா முப்பத்தைந்து நாள் கருவைச் சுமந்திட்டு இருக்காங்க..." எனவும்,

"ஹோ... ரியல்லி..."

கவியரசனுக்கு அதற்கு மேல் அவனின் உணர்வை வெளிப்படுத்தத் தெரியவில்லை.

இந்த இரு வார்த்தைகள் கூட, டாக்டர் சொன்னதற்கு ஏதேனும் பதில் சொல்ல வேண்டுமே என்ற காரணத் திற்காக மட்டுமே.

காலையிலிருந்து, டாக்டர் சொல்லப் போகும் ஒரு வார்த்தையை வெவ்வேறு விதமாக யோசித்துப் பார்த் தவன், அதற்குத் தான் எப்படித் தன் சந்தோஷத்தைப் பிரதிபலிக்க வேண்டுமெனப் பல கனவுகளைக் கொண்டு வந்தவன், இப்போது நடந்த சம்பவத்தில், இந்த இரண்டு வார்த்தைகளைத் தவிர அவனால் எதையும் சொல்ல முடியவில்லை.

காலையில் அவன் கண்ட கனவு மறந்து...



அவன் சந்தோஷம் மறைந்து...

அவன் சிந்தனை மறந்து அமர்ந்திருந்தான்.

கவியரசனின் மனக் குழப்பம் சுலேகாவிற்குப் புரிந்ததோ என்னவோ, வெளியிலிருந்த நர்சை அழைத் தவர், அவரிடம் இன்னொரு சீட்டை எழுதிக் கொடுத்து, "ஆதிரா... இவங்களோட போய் இன்னொரு டெஸ்ட் மட்டும் பண்ணிட்டு வாங்க..." அவளிடம் சொல்லி, மீண்டும் வெளியே அனுப்பி வைத்தார்.

ஆதிரா, அவர் சொல்வது அனைத்தையும் பொம்மை போல் செய்து கொண்டிருந்தாள்.

அவள் உணர்வுகள் செத்துப் பல நிமிடங்கள் கடந்த நிலையில், இவர்களின் பேச்சு எதையும் உணராத ஜடம் போல் நடந்து சென்றாள்.

அவள் வெளியேறவும், எதிரிலிருந்த கவியரசனை ஒரு சில நொடிகள் கண் எடுக்காமல் பார்த்தவர், பின் தொடர்ந்தார்.

"மிஸ்டர் கவியரசன்... இந்த ரிப்போர்ட்ஸ் நீங்க கொண்டு வந்தது. நீங்கதான் என் கையில் கொடுத்துப் படிக்கச் சொன்னீங்க..." அவன் கொடுத்த கோப்பை உயர்த்திக் காட்டி, அவன் எதிரில் வைத்து, "இங்கே பார்த்தீங்களா... ஆதிரா மகாதேவன்... இதுதானே உங்க வொய்ப் நேம்...?" அவனை நோக்கிக் காட்ட, அவன் மௌனமாக அமர்ந்திருந்தான்.

"இதுல இருக்கிற மெடிக்கல் டெர்ம்ஸ் உங்களுக்குப் புரியலைன்னாலும், அதிலிருக்கிற விஷயம் உங்களுக்குப்

புரியும்னு நினைக்கிறேன்..." என அவன் கையில் கொடுத்துப் படிக்கச் சொன்னார்.

அதைக் கையில் வாங்கியபோதே கவியரசனின் கண்கள் நிறைந்து, அவன் முன்னாலிருந்த கோப்பு மங்கலாகத் தெரிவதை உணர்ந்தவன் கண்களைத் தேய்க்க, அவன் கைகளில் ஈரத்தை உணர்ந்தான்.

அவனின் உணர்வுகளைப் புரிந்தவர் போல், "ரிலாக்ஸ் கவியரசன்..." என்று தண்ணீரைக் கொடுக்க, அதை மறுக்காமல் வாங்கிப் பருகினான்.

"உங்க மனசைக் கொஞ்சம் திடப்படுத்திக்கிட்டு, நான் சொல்றதைக் கேட்கிறீங்களா?" சுலேகா கேள்வியாக நிறுத்தவும், அவன் தலை தானாக ஆடியது.

"இப்போதைய நிலைமைக்கு, இது தேவையில்லாத விஷயம் என்றாலும், இதை நீங்க தெரிஞ்சுதான் ஆகணும்," என்ற சுலேகா,

"இங்கே நீங்க இருந்த இந்த அரை மணி நேரத்தில், நீங்க உங்க மனைவி மேல் வெச்சிருக்கிற அன்பை என்னால புரிஞ்சுக்க முடியுது. இதே அன்பும், காதலும் இனிமேலும் இருக்கணும்னு எனக்கு நீங்க ப்ராமிஸ் பண்ணித் தருவீங்களா?" எனவும், கவியரசன் நிமிர்ந்து பார்க்க,

"ஹ்ம்... நான் மூன்றாவது ஆள்தான்... பட், எனக்கும் ஆதிரா வயசுல ஒரு பொண்ணு இருக்கா... அவளைப் பார்க்கும்போது என்னவோ, எனக்கு நெருக்க



மானது போல் எனக்குள்ள ஒரு ஃபிலிங்..." என்றவர், மேலும் தொடர்ந்தார்.

"அந்த ரிப்போர்ட்ஸ் எல்லாம் சுமார் ஒன்றரை வருஷம் முன்னாடி எடுக்கப்பட்டதுன்னு நினைக்கிறேன். அப்படின்னா, இப்போ அவங்க அந்த அடிக்ஷனிலிருந்து வெளியே வந்திருக்கணும். ப்ளஸ், அவங்களோட அந்த அடிக்ஷன் கூட இப்போ அவங்களோட இர்ரெகுலர் பீரியட்ஸுக்குக் காரணமா இருக்கலாம். அவங்களைப் பார்த்தாலே தெரியுது... அவங்க ரொம்பப் பலவீனமாக இருக்காங்க.

"வளர்ற வயசுல எதுவுமே அவங்களுக்குச் சரியாகக் கிடைக்கலை போல... அளவுக்கு அதிகமாக மன அழுத்தம், சரியில்லாத உணவுப் பழக்கம்... இப்படி நிறையக் காரணங்கள் இருக்கலாம். பட், எதுவாக இருந்தாலும் நீங்க உங்க காதலை மட்டும் விட்டுக் கொடுத்திடாதீங்க. நிச்சயம் உங்களுக்கு நான் சொன்னது அதிர்ச்சின்னு எனக்கு நல்லாவே புரியுது.

"நீங்க அவங்க கிட்டே கொஞ்சம் மனசு விட்டுப் பேசுங்க. அவங்க இந்த அளவுக்குப் போகணும்னா, கண்டிப்பாக அதற்குக் காரணமில்லாமல் இருக்காது. சில சமயம் மருந்து மாத்திரைகளால் குணப்படுத்த முடியாத பல நோய்களைத் தூய்மையான அன்பால் குணப்படுத்த முடியும்..." என நீண்ட விளக்கம் தந்தவரால், அவனின் முகத்தில் எந்த மாற்றத்தையும் பார்க்க முடியவில்லை.

அவனது ஒரு காது சுலேகா சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாலும், மறு காதில் இன்னமும் அவர்

முன்னே சொன்ன வார்த்தைகள்தான் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன.

'தன் மனைவியா? தான் உயிராகக் காதலித்தவள், இந்த நிலையில் இருந்திருந்தாளா? எப்படி அவளால் இதைச் செய்ய முடிந்தது? அதை வேறு இத்தனை நாள் தன்னிடமிருந்து மறைத்து வைத்திருக்கிறாளே...' என்ற ஆற்றாமையில் மனது அரற்றிக் கொண்டிருந்தது.

அவன் நிலையை உணர்ந்தாரோ என்னவோ, "கவியரசன்... நான் என்ன சொல்றேன்னு உங்களுக்குப் புரியுதா? நான் இதை எல்லாம் சொல்லணும்னு அவசியமில்லை. அண்ட்... இதுவரைக்கும் நான் யாரையும் இவ்வளவு நேரம் உட்கார வெச்சுக் கவுன்சிலிங் கொடுத்ததுமில்லை. ஆனால், நீங்க உங்க மனைவி மேல் வெச்சிருக்கிற காதலை நான் மதிக்கிறேன். அதனால் தான் இவ்வளவு விளக்கம்..." என்றவர், அவனுக்குச் சில நொடிகள் யோசிக்க அவகாசம் கொடுத்தார்.

யோசனையில் ஆழ்ந்திருந்த கவியரசன், பிறகு என்ன நினைத்தானோ... தன்னை நிலைப்படுத்திக் கொண்டு, "டாக்டர்... எனக்குச் சில சந்தேகம்... கேட்கலாமா?" என ஒரு வழியாகத் தன் கவலையிலிருந்து மீண்டு கேட்க,

"சொல்லுங்க கவியரசன்..."

"அவ... ஹ்க்கும்... ஆதிராவிற்கு ரெண்டு மூணு வருஷமாவே இந்த ப்ராப்ளம் இருக்குன்னு சொன்



னாளே... அப்புறம் எப்படி...?" அவன் கேட்க வருவதைப் புரிந்து கொண்டு, சுலேகா தொடர்ந்தார்.

"கவியரசன்... நான் முன்னே சொன்னதைப் போலத்தான்... இப்போ இருக்கிற நிறையப் பொண்ணு களுக்கு வர்ற இந்தப் பிரச்சினைக்கு நிறையக் காரணங்கள் இருக்கு... ஹார்மோன் ப்ராப்ளம், அதிக மன அழுத்தம், உணவுப் பழக்கம், அப்புறம்... ம்ம்... ட்ரிங்க்ஸ், ஸ்மோக்கிங்..." என இழுத்தவர், கவியரசனின் தலை குனியவே, அவர் அதை ஒதுக்கி விட்டுத் தொடர்ந்தார்.

"எனக்கு ஒண்ணு சொல்றீங்களா... ஆதிராவோட பெத்தவங்க எப்படி...? அவங்க ஆதி மேலே ரொம்ப அன்பு காட்டுவாங்களா?" எனக் கேட்க,

அவன் தலை இல்லை என ஆடியது. "எங்க மேரேஜ் முடிந்ததிலிருந்து அவ கிட்டே ஒரு சில தடவை தான் போனில் பேசியிருக்காங்க..." என்றதும்,

"நினைச்சேன்... எனக்கு இந்த டவுட் வந்தது கவியரசன்... இந்த மாதிரிப் பொறுப்பில்லாத பேரண்ட் ஸாலதான் ஆதி மாதிரி நிறையக் குழந்தைகள் இந்த நிலைமைக்கு வரக் காரணம். இந்த மாதிரிப் பெத்த வங்களால ஒதுக்கப்பட்டவங்களின் மன நிலையை விளக்கிச் சொல்ல முடியாது. இவங்க ரொம்பவே டிப்ரஸ்ட்டா இருப்பாங்க.

"இந்த மாதிரிப் பாதிக்கப் பட்டவங்க பார்க்க ரொம்பவும் ஒடிசலா இருப்பாங்க. பசிக்கும்... ஆனால்

சாப்பிடத் தோணாது. எப்பவும் தனிமையில் இருப்பவங்க, திடீரென அவங்களுக்குப் பேச்சுத் துணைக்கு ஆள் கிடைச்சா, அவங்களிடம் ரொம்பவும் அரகன்ட்டா நடந்துப்பாங்க. அவங்களுக்கு எப்படியாவது அவங் களோட மன அழுத்தத்தை யாரிடமாவது கொட்டிடணும்னு தோணும்.

"நான் நிறைய மெடிக்கல் டெர்ம்ஸ் சொல்லி உங்களைக் குழப்ப விரும்பலை. பட், இதனால கூட ஆதிராவோட உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டு, அவங்களோட மாதவிடாய் தள்ளிப் போயிருக்கலாம். ஆனால், அதற்கும் இப்போ ஆதி கருத்தரிப்பதற்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. கர்ப்பம் அடைவது அவங்க அவங்க உடல் நிலையைப் பொறுத்தது," எனத் தெளிவு படுத்தினார்.

அவன் முகம் இன்னமும் சமாதானமாகவில்லை என்பதை உணர்ந்தாரோ என்னவோ, மேலும் தொடர்ந்தார்.

"கவியரசன்... அஸ் எ டாக்டர்... இப்போதைய நிலைமைக்கு ஆதிராவுக்கு மெடிக்கல் ட்ரீட்மெண்ட்டைத் தவிர உங்க அன்புதான் ரொம்ப முக்கியம். அவங்களை முடிஞ்சவரை கம்பர்டபிளா வெச்சுக்கோங்க. இப்போ ரிப்போர்ட்ஸ் வந்ததும், அவங்களுக்குச் சில வைட்டமின் மாத்திரைகள், அப்புறம் என்னென்ன டயட் ஃபாலோ பண்ணனும்னு சொல்றேன். ப்ளீஸ்... அவங்களை நல்ல படியாக் கவனிச்சுக்கோங்க..." என்றார்.



சுலேகாவிற்கு ஏதோ கவியரசனையும், ஆதிராவை யும் ஜோடியாகப் பார்க்க மிகவும் பிடித்திருந்தது போலும்... அவர் மனதில் இந்த அற்புதமான ஜோடி எக்காரணம் கொண்டும் பிரியக் கூடாதென்ற உந்துதலில், அவருக்கு 'இது தேவையில்லை' என ஒதுக்க மனமில்லாமல் விளக்கிக் கொண்டிருந்தார்.

"மிஸ்டர் கவியரசன்... இந்த ரிப்போர்ட்ஸ்ல இருக்கிற ஆதிரா மகாதேவனை மறந்துட்டு, நீங்க உங்க 'ஆதி கவியரசனை' மட்டும் நினைச்சுக்கோங்க. அதுவும் இப்போ அவங்க ரெண்டு உயிரா இருக்காங்க... அவங்களுக்காக இல்லையென்றாலும் உங்க குழந்தையைச் சுமந்துக்கிட்டு இருக்காங்கன்னு ஞாபகம் வெச்சுக்கோங்க..." சுலேகா இதுவரை சொன்ன விஷயங்கள் அவன் மூளையைச் சென்றடைந்ததோ இல்லையோ, 'உங்க குழந்தை' என்றது அவன் மனதைத் தாக்கியது.

சுலேகா முடிந்தவரை அவனிடம் அவளின் நிலையை விளக்கிச் சொல்லி முடிக்கவும், ஆதிராவும், நர்சும் வரச் சரியாக இருந்தது.

நர்சிடமிருந்த டெஸ்ட்களை வாங்கிப் பார்த்து விட்டுச் சில மருந்து மாத்திரைகளை எழுதிக் கொடுத்தவர், ஆதிராவிடம் திரும்பி, "உங்க உடல் நிலையில் நீங்க இனிமேல் ரொம்பவும் கவனமாக இருக்கணும் ஆதிரா. ரெண்டு மாசம் கழிச்சு திரும்ப செக்-அப்புக்கு வாங்க..." என்றவர், இருவரிடமும் பொதுவாக, "டேக் கேர்..." என விடை கொடுத்தார்.

அவர்கள் அறையை விட்டுச் சென்றதும், அருகில் இருந்த நர்ஸ், "டாக்டர்... அந்தப் பொண்ணைப் பார்த்தா உங்க பொண்ணு சுனிதா போலவே இருக்குல்ல..." எனவும்,

சுலேகா அவரிடம் புன்னகையை வீசி, "ஆமாம்..." என்றார்.

மருத்துவமனையிலிருந்து வெளியே வந்தவர்கள் தங்கள் காரை அடைந்து அவர்களின் பயணத்தைத் துவக்கினர்.

வரும் வழி நெடுக மௌனம்... மௌனம்... மௌனம் மட்டுமே தன் செங்கோலை உயர்த்தி ஆட்சி செய்து கொண்டிருந்தது.

கவியரசனின் சிந்தனை செல்கள் செயலிழந்து கிடக்க... கண்ணையும் மூளையையும் ரோட்டில் வைத்தவன் மனதை இலக்கில்லாமல் பறக்க விட்டிருந்தான்.

காலையில் குழந்தையைப் பற்றி அவன் எந்த அளவிற்கு ஆனந்தத்தில் திளைத்திருந்தானோ... அந்த ஆனந்தத்தில் ஒரு துளிக்கூட இப்போதில்லை.

அவன் கேட்ட செய்தி என்ன சாதாரணமானதா! தலையில் இடியல்லவா விழுந்திருக்கிறது.

அந்த இடியைத் தாங்கிக் கொண்டு அவன் இத்தனை நேரம், இவ்வளவு நிதானமாக இருப்பதே பெரிய விஷயமல்லவா!

ஆதிராவின் நிலைதான் மிகவும் மோசமாக இருந்தது.



கவியரசனுக்குத் தன்னைப் பற்றிய விபரம் முழுமையாகத் தெரிந்து விட்டதென நிச்சயமாகப் புரிந்து போனது.

இத்தனை நாட்கள் எதற்குக் கவியிடம் தன்னைப் பற்றிய உண்மை தெரிந்து விடுமோ எனப் பயந்து ஒதுங்கினாளோ... அந்த உண்மை, இன்று அவளுக்கு எதிரில் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது.

எதிரிலிருந்த டெல்லி FORTIS மருத்துவ மனையின் கோப்பு காற்றில் ஆட ஆட, அவளது மனதும் ஒரு நிலையில்லாமல் ஊசலாடிக் கொண்டிருந்தது.

அவனுக்கு உண்மை தெரிந்து போனதில் அவளின் உடல் நடுக்கத்திற்கு அளவில்லாமல் இருந்தது.

இனிமேல் அவன் தன்னை எப்படி நடத்துவான்? அதே பழைய காதல் அவனிடம் நிலைத்து நிற்குமா?

ஒரு வேளை தன்னை ஒதுக்கி விடுவானோ?

அப்போது மீண்டும் அதே தனிமையில் வெந்து சாக வேண்டுமா? - என அவள் கன்னங்கள் நனைய, அதைத் துடைக்கக் கூடத் தோன்றாமல் சீட்டில் ஒட்டி அமர்ந்து கொண்டாள்.

பல யுகங்கள் எனக் கடந்து சென்ற ஒரு சில நிமிடக் கார் பயணம், ஒரு நிலையில் முடிவு பெற, அவர்கள் அபார்ட்மெண்ட்டின் வாசலில் காரை நிறுத்தியவன், ஸ்டீயரிங் வீலை இறுகப் பற்றிக் கொண்டான்.

கார் தன் பயணத்தை நிறுத்தியதும்தான் அதை உணர்ந்தவள், கணவனைக் காண உயர்ந்த விழிகள், பயத்தில் கால் கட்டை விரலைப் பார்க்க, சீட் நுனியைக் கிழித்து விடும் அளவிற்குப் பிடித்திருந்தாள்.

"இறங்கு..." உதட்டைப் பிரித்து அவன் சொன்னது அவள் செவிகளைத் தீண்டினாலும், உடல் ஒத்துழைக்க மறுத்தது.

"ம்ம்... இறங்கு..." குரலை உயர்த்தி அவன் அதட்டியது, அவள் நெஞ்சத்தை ஒரு நிமிடம் சில்லிடச் செய்ய, நடுங்கிய விரல்களால் கதவைத் திறந்தவள், வேரூன்றியிருந்த கால்களை உயிர் பெறச் செய்து நிலத்தில் பதித்தாள்.

அவள் இறங்கியதும், அவள் முகத்தைக் கூடப் பார்க்கத் தோன்றாமல், அடுத்த நொடி கவியரசனின் கையில் கார் சீறிட்டது.

அவன் சென்ற வேகத்தில் கிளம்பிய புழுதியிலே, அடுத்து வரும் தன் வாழ் நாட்களின் நிலை ஆதிராவிற்குப் புரிந்து போக, அவள் கைகள் அவளை அறியாமலேயே உயர்ந்து, அவள் வயிற்றில் பதிந்தன.

## 9

**செ**ம்மண் பறக்கும் புழுதியில், ஊதல் காற்று வீசும் வேப்ப மரத்தடியில், தலை யொடிந்த பொம்மையுடனும், காலில்லாக் குதிரையுடனும் சண்டையிட்டு விளையாடிக் கொண்டிருந்தான் அச் செல்ல வாண்டு.



தான் வைத்திருப்பது உடைந்த பொம்மை என்றாலும், அதைப் பார்பி டாலாக நினைத்து, அப் பெண் பொம்மையைக் குளிக்க வைத்து, அழகாக இரட்டைச் சடையிட்டு, நெற்றியில் பொட்டிட்டு, கிழிந்த துணியைக் கிழிசல் தெரியாமல் மடித்துக் கட்டி, பார்க்கவே மிக மிக அழகாகத் தெரிந்த அப் பொம்மையை வைத்திருந்த அக் குழந்தையின் நிலை, அவன் வைத்திருந்த பொம்மை களை விடவும் மோசமானதாக இருந்தது.

பொத்தானில்லாத சட்டைக்குப் பின்னூசியைப் பொத்தானாக வைத்து, காலை விட்டு வழுக்கி ஓடிய ட்ரவுசருக்கு அரைஞாண் கயிற்றால் பெல்ட்டிட்டு, புழுதியில் புரண்டு விளையாடிக் கொண்டிருந்த அக் குழந்தையின் இப்போதைய ஒரே சந்தோஷம், கை யிலிருக்கும் இரண்டு பொம்மைகள்தான்.

அவனின் சந்தோஷத்தை மேலும் இரட்டிப்பாக்கும் வண்ணம், தூரத்திலிருந்து மணியோசை கேட்கவும், கையில் வைத்திருந்த பொம்மைகளைக் கக்கத்தில் செருகிக் கொண்டு ஓடினான்.

அவனைப் போன்று இன்னும் பல குழந்தைகள் வரிசையில் அமர்ந்திருக்க, அவர்களுடன் இவனும் அவன் உடைமைகளுடனும், எவர்சில்வர் தட்டுடனும் தனக்கொரு இடம் பிடித்து அமர்ந்து கொண்டான் - அந்த நான்கு வயதுச் சிறுவன்.

வரிசையாக அனைவருக்கும் உணவளித்து வந்த அப் பெண்மணி, இவனிடம் வந்ததும் பொறுமையாக

அவனுக்குப் பரிமாறி, அவன் தலை கோதி, "அரசுக் கண்ணா... சாப்பாட்டை ஒரு பருக்கை கூடக் கீழே சிந்தாமல் சாப்பிடணும். சரியா... நாம சாப்பிடற சாப்பாடு சாமி மாதிரி... சாமியைக் கீழே போட்டு மிதிச்சாலோ, அதை வீண் பண்ணினாலோ சாமி நமக்கு அடுத்த வேளைச் சாப்பாடு தராமல் பசிக்க விட்டு விடுவார். என்ன, புரிஞ்சுதா?" அப்பெண்மணி பொறுமையாக எடுத்துச் சொல்லவும்,

"சரிங்க ஆதிம்மா... அரசுப் பையன் சிந்த மாட்டேன்..." உறுதியளித்தவன், சொன்னதைப் போலவே, ஒரு பருக்கை கூடக் கீழே சிந்தாமல், அழகாக உண்டு முடித்துத் தன் தட்டைத் தனக்குத் தெரிந்த அளவில் சுத்தமாகக் கழுவி, அதன் இடத்தில் வைத்து விட்டு, மீண்டும் தன் நண்பர்களுடன் விளையாட ஓடி விட்டான்.

நான்கு வயதுக் குழந்தையை இன்னமும் பல தாய்மார்கள், அவர்கள் இடுப்பில் செருகிக் கொண்டு, சோட்டா பீம் நிகழ்ச்சியைக் காட்டிச் சோறூட்டிக் கொண்டிருக்கும் இந்நாளில், தன் வேலையைத் தானாகச் செய்து கொண்டு ஓடும் அக் குழந்தை சுருட்டை முடியுடனும், குழிந்த குண்டுக் கன்னங்களுடனும், மாநிறத்தில் சின்னக் கண்ணனாகத் தெரிந்த அவனுக்கு, அழகில் எந்தக் குறையுமில்லை.

வறுமையையும், பெற்றவர்கள் பாசத்தையும் தவிர... அவனின் வயதுக்கு, அது அவனுக்குக் குறையாகவும் தெரியவில்லை.



அவன் செய்தவை அனைத்தையும் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஆதிலட்சுமியின் தோளில் கை வைத்த இன்னொரு பெண்மணி, "பார்த்தியா லக்ஷ்மி... இப்போவே இந்தப் பிள்ளை என்ன சமர்த்து, பார்த்தியா? இவனுக்கு இருக்கிற சாமர்த்தியத்துக்குப் பெரியவனானா நல்ல நிலைமைக்கு வருவான். ச்சே... இப்படி ஒரு செல்லக் குழந்தையை எப்படித்தான் தூக்கிப் போட இவனைப் பெத்தவங்களுக்கு மனசு வந்ததோ..." எனச் சலித்துப் பேசிக் கொண்டிருந்தவரைப் பார்த்த ஆதிலட்சுமி,

"அம்மா... யார் அவனுக்குப் பெத்தவங்க இல்லைன்னு சொன்னது? பத்து மாசம் வயிற்றில் சுமக்கிறதுதான் தாய்மைன்னு இல்லை. பெற்ற பிள்ளையைத் தன் உயிரை விட அதிகம் நேசிக்கிறதுதான் தாய்மை. அந்த வகையில் இங்கு யாரும் அநாதையில்லை. அவன் என் பிள்ளை... அவனுக்கு மட்டுமில்லை, இங்கே இருக்கிற அத்தனை குழந்தைகளுக்கும் நான்தான் அம்மா. இனிமேல் இந்த மாதிரிப் பேசாதீங்க..." என்றவர்,

அன்று மட்டுமில்லை... அதன் பின் வந்த இருபத்து நான்கு வருடமும் அவனைப் பெற்ற அன்னைக்கும் மேலாக அன்பு காட்டி, நல்வழியில் நடத்தி வந்தவர். கவியரசனைப் பொறுத்த வரையில் தெய்வத்துக்கு நிகரானவர்.

அப்படிப்பட்டவர், ஏன் தனது வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பதில் மட்டும் இப்படி நடந்து கொண்டார் என நினைத்த போது, கவியரசனின் நெஞ்சம் வலித்தது.

ஒரு வேளை தன்னைப் போல் அவருக்கும் இவ்விஷயம் மறைக்கப் பட்டிருக்குமோ என நினைத்தவன், அதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமிருக்க வாய்ப்பிருப் பதை நம்பினான்.

ஆதிராவை வீட்டில் விட்டு விட்டு வந்த கவியரசன், நேராக வந்தது கடற்கரைக்குத்தான்.

ஓடி வரும் அலைகள், வந்த நொடியில் மறைவது போல், தன் வாழ்வின் அடுத்த கட்டம் அவன் கண்ணை விட்டு மறைந்தது போல் உணர்ந்தான்.

அவனின் இப்போதைய நிலையை, அவனாலேயே பகுத்தறிய முடியாதவன் போல் தன் சுயத்தை இழந் திருந்தான்.

கிழிசல் துணிக்கும், எப்போதாவது வரும் வி.ஐ.பி. களின் பிறந்த நாளின் போது கிடைக்கும் ஒரு வேளை வாழையிலைச் சோற்றுக்கும் சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்த காலங்களிலே, அவன் யாருக்கும் எந்தத் தீங்கும் நினைத்ததில்லை.

அப்படியிருக்கத் தனக்கு ஏன் இப்படி ஒரு வாழ்க்கை அமைந்தது என அவன் மனம் தன்னிரக்கத்தில் ஆழ்ந்தது.

அவன் வளர்ந்த சூழ்நிலை அவனுக்கு நிறையப் பொறுமையையும், பொறுப்பையும், அதை விட மேலாக நல்ல பண்பையும் கற்றுக் கொடுத்திருந்த போதும், அவனால் இப்போது நடந்தவைகளை ஏனோ ஜீரணிக் கவே முடியவில்லை.



தானிருக்கும் இந்தக் குழப்பத்தில், எங்கே தன் னிலை அறியாமல் ஆதிராவைக் காயப்படுத்தி விடுவானோ என்ற பயத்திலே அவளை விட்டு ஒதுங்கி வந்தான்.

அவளை விட்டு வந்து விட்டானே ஒழிய, அவனால் அவளின் நினைவைத்தான் மறக்க முடியவில்லை.

பிறந்தது முதலே தனக்கென்று எந்த உறவுமில்லாது வளர்ந்தவனால், இனிமேல் தனக்கென எந்த இரத்த உறவும் வர வாய்ப்பில்லை என்றிருந்தவன், யோசித்துப் பார்த்த போது, தனக்கென ஒரு திருமணம் நடந்தால், தன்னைக் காதலிக்கவும், தன் நலன் பேணவும், 'நீ சாப்பிட்டாயா?' எனத் தலை கோதி அக்கறையாகக் கேட்கவும் ஒரு ஜீவன் வருவாள்... அவளிடம் தான் இழந்த தாய்ப் பாசத்தை உணரலாம்... அவள் மூலம், தனக்கே தனக்கெனத் தன் ஊனால் உருவான ஒரு உயிரும், தன்னை உறவு கொண்டாட ஒரு குழந்தையும் வருமென அவன் கண்ட கனவு, முதல் நாள் ஆதிராவின் பேச் சாலும், அவளின் நடவடிக்கைகளாலும் கலைந்து போனது.

அப்போது, 'சரி... அவள் தன்னைப் பார்த்துக் கொள்ளவில்லை என்றால் என்ன... நான் அவளை என் குழந்தையாகக் கருதுகிறேன்...' என அவன் எடுத்த முடிவும் இப்போது ஆட்டம் கண்டது.

எல்லா ஆண்களையும் போல், தனக்கு வருபவள் பரிசுத்தமானவளாக இருக்க வேண்டுமென அவன் நினைத்தது, இப்போது முற்றிலும் சிதைந்து போனதில், அவனின் நெஞ்சத்தில் மரண வலி உருவெடுத்தது.

இவன் அப்படிக் கண்ட கனவில் எந்தத் தவறும் இருக்கவில்லை.

மற்ற ஆண்களைப் போல், காதலிக்க ஒருத்தி, கலவி செய்ய ஒருத்தி என, அவன் என்றும் ஊதாரித் தனமாக இருந்தவனில்லையே!

தான் எப்படித் தனக்கு வருபவள் சுத்தமானவளாக இருக்க வேண்டுமென நினைக்கிறானோ, அதே போல் தனக்கு வருபவளும் தன்னிடம் அதைத்தானே எதிர் பார்ப்பாள் என அவன் இன்று வரை தனக்கு வந்த எத்தனையோ காதல் அழைப்புகளை நிராகரித்துக் கண்ணியத்தோடு வாழ்ந்து வந்தான்.

தன் மனைவியின் மேனியைப் பார்வையால் கூட எவரும் தீண்டக் கூடாதெனச் சுயநலமாக எண்ணி வந்தவனின் கர்வம், ஒரே நாளில், ஒரு பக்கக் காகிதத்தில் ஒடுங்கிப் போனது. இதை நினைத்த போது, அவனை அறியாமலேயே அவன் கண்கள் வியர்க்க ஆரம்பித்து விட்டன.

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே
அவர் நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே...
அன்னை வளர்ப்பினிலே...”

அவன் தன் நினைவில் மூழ்கிக் கொண்டிருந்த சமயம், அவனின் சிந்தனையைக் கலைக்கவென, அருகிலிருந்த சுண்டல் விற்பனை செய்யும் சின்னப் பையனின் கையிலிருந்த வானொலியிலிருந்து ஒலித்தது அப் பாடல்.



அப் பாடலின் வரிகள் சொன்ன செய்தியை, அவன் மனம் முற்றிலும் ஏற்க மறுத்தது.

அன்னை, தந்தையின் வழிகாட்டுதல் இல்லை யெனில், யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டு மானாலும் தடுமாறலாமா?

அப்படியெனில் அந்த வரிசையில் முதல் ஆளாக நானல்லவா இருந்திருக்க வேண்டும்?

தடுமாற எத்தனையோ வாய்ப்புகள் இவ்வுலகில் கொட்டிக் கிடந்தாலும், அவன் இன்று வரை அவ்வழியில் சென்றதில்லையே!

என்ன கஷ்டங்கள் வந்தாலும், எந்த மனவலி வந்தாலும், எப்போது மனிதன் அவன் சுயத்தை இழக் கிறானோ, அப்போதே அவன் மனிதன் என்ற ஸ்தானத்தை இழந்து விட்டதாகவே அவன் நம்புவான்.

நாம் நடக்கும் வழியில் நல்லதும் இருக்கும், கெட்டதும் இருக்கும். மனிதன் என்பவன், தன் ஆறாம் அறிவை உபயோகித்துத் தனக்கு எது நல்லதென ஆராய்ந்து தனக்கேற்ற நல்வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதுவே நமக்கும் விலங்கினத்திற்கும் இருக்கும் மாபெரும் வித்தியாசம்.

தன் சுய லாபத்திற்காக ஆறாம் அறிவை இழக்கும் மனிதனுக்கும், பசிக்குத் தன் குட்டியையே உணவாக உண்ணும் சிங்கத்திற்கும் என்ன வித்தியாசம்?

மனிதனென்றால் சுய சிந்தனை வேண்டாமா?

அத்தனை நாள் ஆதிரா சின்னப் பெண், சின்னப் பெண் என்று உருப்போட்ட மனது, இப்போது அவன் கண்ணுக்கு ஐந்தரை அடிக்கு வளர்ந்த முட்டாளாகவே தெரிந்தாள்.

அவன், நடந்த நிகழ்வுகளில் ஆதிராவின் பக்கம் ஏதாவதொரு நல்ல விஷயத்தைக் கண்டு பிடித்து, அவளின் தவறுகளை நியாயப்படுத்த நினைத்தாலும், அவனால் அது முடியவில்லை.

கோபம், ஆத்திரம், இயலாமை, சுய பச்சாதாபம் என நொந்த அவன் மனது, என்ன முயன்றும் அவனால் ஆதிராவின் தவறுகளை அவ்வளவு எளிதில் மன்னிக்க முடியவில்லை.

யார் என்ன தவறு செய்தாலும் மன்னித்து ஏற்றுக் கொள்ள அவன் என்ன புத்தரா, காந்தியா!

அவனும், உயிரும் உணர்வுமுள்ள மனிதன்தானே!

அவனுக்கென்று கனவில்லையா?

அவனுக்கென்று ஆசையில்லையா?

தன் மனைவி, தனக்கு மட்டும்தான் என அவன் சுயநலமாக இருப்பதில் எந்தத் தவறுமில்லையே!

அநாதையாகப் பிறந்தவர் அனைவரும், மற்றவர் உபயோகித்த பொருளைத்தான் உபயோகிக்க வேண்டு மென்ற விதியிருக்கிறதா என்ன?



முடியாது... அவனால் நிச்சயம் ஆதிரா செய்த தவறை அவ்வளவு எளிதில் மன்னித்து ஏற்றுக் கொள்ள முடியாது.

அவள் செய்த தப்பை, அவள் இப்போதும் உணர்ந்தது போல் அவனுக்குத் தெரியவில்லை.

அப்படியானால், செய்த தவறைத் தன்னிடம் சொல்லியிருக்க வேண்டாமா? அப்படி என்ன அவளிடம் நம்பிக்கை இல்லாமல் நாம் நடந்து கொண்டோம்!

அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல், பாவம் சின்னப் பிள்ளையென அவள் முதலில் செய்த தப்புகளை மன்னித்து வந்தவனுக்கு, இப்போதென்னவோ அவள் செய்த சின்னச் சின்னப் பிழைகள் கூடப் பூதாகரமாக ஓங்கி நின்றன.

எப்போதுமே எந்தவொரு விஷயத்தையும் அலசி ஆராய்ந்து பார்க்கும் கவியரசனுக்கு, இப்போதும் ஆராய்ந்து பார்த்தபோது எந்தவொரு விஷயமும் ஆதிரா விற்குச் சாதகமாய்ப் படவில்லை.

அவள் செய்தது பெரிய தப்பென்பது அவன் மனதில் ஆணித்தரமாய்ப் பதிந்தபோது, அவன் தோளில் யாரோ கை வைப்பதை உணர்ந்து திரும்பினான்.

காக்கி உடை யணிந்த போலீஸ்காரர் ஒருவர், “ஏம்ப்பா தம்பி... மணி பன்னெண்டு ஆச்சு. கிளம்பு கிளம்பு... இதுக்கு மேல யாரும் இங்க உட்காரக் கூடாது. ம்ம்... எந்திரி... எந்திரி...” என அவனை அவ்விடத்தை

விட்டுக் கிளப்ப... கவியரசன் இருந்த நிலைக்குத் தன் தனிமை கலைந்ததில் சற்றே எரிச்சலடைந்தாலும்... அவனின் இயல்பு அதை வெளிப்படுத்தாமல் அவ் விடத்தை விட்டுக் கிளம்பித் தன் காரருகில் வந்து சேர்ந் தான்.

காரில் ஏறியவனுக்கு அடுத்து எங்கே செல்ல வேண்டும்... என்ன செய்ய வேண்டுமென்பது மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்க... ஸ்டீயரிங் மேல் தலை கவிழ்ந்து படுத்தவன்... அருகில் வந்த ரோந்து வண்டியின் சைரன் சத்தத்தில் உணர்வு பெற்றுக் காரை நகர்த்தினான்.

மனது குழப்பத்தில் இருந்தாலும் கைகள் வழக்கம் போல் அவன் வீடிருக்கும் திசைக்குச் செல்ல... அவன் அபார்ட்மெண்டின் பார்க்கிங்கில் வண்டியை நிறுத்திய பின்தான், தான் வந்திருக்கும் இடம் புரிந்தவன் போல் நிமிர்ந்து அமர்ந்தான்.

நிமிர்ந்தவனுக்கு மனதின் பாரம் அவனை அழுத்தி னாலும் மூளை அடுத்தென்ன என்ற கேள்வியைத் தொடுத்து நின்றது.

அவளின் மீது எந்த அளவிற்குக் காதலை வளர்த்து வைத்திருந்தானோ... இப்போது அதே அளவிற்கு அவளின் மீது கோபமும், வெறுப்பும் இருந்தது.

ஆனாலும், ஆதிரா என்ன தவறு செய்திருந்தாலும், அவள் இவன் மனைவி என்ற பின்... அவளைப் பிரித்து வைக்க அவனின் மனிதாபிமானம் என்றும் இடம் கொடுக் காது.



அதுவும் அவள் இப்போது அவனின் உயிரைச் சுமந்திருக்கும் இந்த நிலையில், அவனால் நிச்சயம் அதைச் செய்யவே முடியாது.

இதை நினைத்தபோதுதான் மருத்துவ மனையில் டாக்டர் சுலேகா சொன்னது அனைத்தும் வரிசையாக அவன் நினைவில் வந்தது.

ஆதிரா செய்த தவறுகளை மறக்கவும் முடியாமல், அவளை மன்னித்து ஏற்கவும் முடியாமல், அவன் மனம் இரண்டாம் கெட்ட நிலையில் அவனை வதைத்தது.

இப்போதிருக்கும் நிலையில் அவளை வெறுத்து ஒதுக்கி, அதனால் அவள் மேலும் பழைய நிலைக்குச் சென்றால்... அதன்பின் ஏற்படும் விளைவுகளில் பாதிக்கப் போகிறது தாங்கள் இருவர் மட்டுமல்ல... இன்னும் இம் மண்ணையே பார்த்தே யிராத தன் குழந்தையும்தான் என அவன் உணர்ந்தபோது அவனால் அந்த எண்ணத்தை ஏற்க முடியவில்லை.

இதுவரை எத்தனையோ பிரச்சனைகளை எளிதில் சமாளித்து வந்த கவியரசனுக்குத் தன் வாழ்க்கையை எப்படிச் சரி செய்வதென ஒன்றும் புரியாமல் இரு கைகளால் தலையைப் பிடித்துக் கொண்டு கதறினான்.

அவன் இட்ட சத்தத்தில் மிரண்ட அபார்ட்மென்ட்டின் காவலாளர் அவன் கார் கதவைத் தட்ட...

அதில் சுய உணர்வு பெற்றவன், கார் கதவைத் திறந்து அதை அறைந்து சாற்றிவிட்டு, விடுவிடுவென மாடியேறினான்.

என்ன வேகமாக வந்தும் அவன் வீடு இருக்கும் தளத்துக்கு வந்ததும் அவன் கால்கள் நடக்கும் வேகத்தைக் குறைத்தன.

ஆனாலும் என்ன செய்ய... வீட்டுக்குப் போகத் தானே வேண்டும்...

மனைவி என்றிருப்பவளைப் பார்த்துத் தானாக வேண்டும்.

மெல்ல நடையிட்டு வந்தவன், தன் வீட்டுக் கதவில் கை வைக்க... அது தானாகத் திறந்து கொண்டது.

மணி ஒன்றரை என்பதை வீட்டின் கதவைத் திறந்ததும் எதிரில் இருந்த சுவர்க் கடிகாரம் சுட்டிக் காட்ட, ஹாலில் இருந்த விளக்கைத் தவிர மற்ற இடங்கள் இருளில் மூழ்கியிருக்க... தன் காலணியைக் கழற்றி விட்டுக் கதவை மூடித் தாழிட்டு வந்தவன், தன்னறைக்குள் நுழைந்து படுக்கையில் சரிந்தான்.

படுக்கையில் புரண்டவனுக்குத் தூக்கம்தான் அவ்வளவு எளிதாக வந்தபாடாக இல்லை.

வெளியிலிருந்தபோது மட்டுப்பட்டிருந்த கோபமும், ஆத்திரமும் வீட்டுக்கு வந்ததும் பன்மடங்காகப் பெருகி யிருக்க, என்ன செய்வது, எது செய்வதெனத் தெரியாமல் எழுந்தவன்... அறை விளக்கை உயிர்ப்பித்துக் கண்களை உலவ விட்டான்.

அறையைச் சுற்றி வலம் வந்தவன், கண்ணில் அறைக்கு வெளியில், பால்கனி கம்பி கிரில்லின் மீது



தலை சாய்த்துக் காலைக் கட்டிக் கொண்டு, பார்வையை எங்கேயோ வைத்து அமர்ந்திருந்த ஆதிரா படவும், விடு விடுவென அவளருகில் சென்றவன், அமர்ந்திருந்தவளின் கையைப் பற்றி மேலே எழுப்பியவன் சுளீரென்ற சத்தத்துடன் தன் வலது கரத்தை அவள் கன்னத்தில் பதித்தான்.

## 10

**கோ**பத்தில் சுயத்தைத் தொலைத் திருந்த கவியரசன், ஒரு நிமிடம் தான் என்ன செய்தோம் என்பதை மறந்திருந்த சமயம், அவன் கை எரிந்த பின்தான்... அவன் செய்ததையே உணர்ந்தான்.

அவனொன்றும் பெண்களைக் காயப்படுத்தி அதில் சுகம் காண நினைக்கும் ரகமில்லையே!

அவனின் உள் நெஞ்சு அவள் ஏற்படுத்திய காயத்தின் வலி தாளாமல்... அவனை மீறி நடந்த இச்செயலில் அவன் மிகவும் வருத்தம் கொண்டான்.

மனைவி மீது வைத்த நம்பிக்கை பொய்த்துப் போன ஏமாற்றத்தை... அவனால் தாங்க முடியவில்லை.

பிறந்தது முதலே தனக்குக் கிடைத்த எல்லாமே இனாமாகவும், சன்மானமாகவும் பெற்றவன் குடும்ப வாழ்க்கையும் அவனுக்கு ஏமாற்றத்தையே கொடுக்க... இப்போது அதிலும் நம்பிக்கையற்றுப் போனதில் உண் டான வலியே... அவன் காதல் கொண்ட மனைவியைக் காயப்படுத்த வைத்தது.

ஆனால் அடித்த பின்தான் தன் தப்பை உணர்ந் தான்.

அவள் என்னதான் தப்பு செய்திருந்தாலும், ஆத்தி ரத்தில் அறிவை இழந்து, எப்படித் தன்னால் அவளைக் காயப்படுத்த முடிந்ததென அவன் மனச்சாட்சி அவனைக் கேள்வி கேட்க... அதற்குப் பதில் சொல்லும் நிலையில் அவனில்லை.

'அடச்சே.. கோபத்தில் இப்படி நடந்து விட்டோமே... அதுவும் அவள் இருக்கும் இந்த நிலையில்... தன் கருவைச் சுமந்திருக்கும் அவளின் பலகீனமான நிலை யைத் தான் ஆணென்ற ஆளுமையால் வெல்ல நினைத்தோமே...' எனத் தன் தவறை உணர்ந்து, அவன் தலையில் அடித்துக் கொண்டான்.

அடித்த தனக்கே கைகள் இப்படி எரிகின்ற தென்றால், அடி வாங்கியவள் எப்படி இதைத் தாங்குவாள் என அவனுக்குள் இருந்த நியாய மனது அவனை வதைக்க... நிமிர்ந்து எதிரிலிருந்த மனைவியைப் பார்த்தவன்... அவள் முகத்தில் தெரிந்த பாவத்தைக் கண்டு குழம்பிப் போனான்.

அடி வாங்கியவள், அவன் அடித்ததற்குக் கண்ணீர் சிந்துவாள்... இல்லை, கோபத்தில் கத்துவாள்... இல்லை யெனில், அவளின் இயல்பு போல் அவன் செய்ததற்கு அவனைத் திருப்பியேனும் அடிப்பாள் என எதிர்பார்த்த வனுக்கு, அவளோ தன் முத்துப் பல்லைக் காட்டிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.



அவன் குழப்பத்தோடு பார்த்துக் கொண்டிருந்த அவ் வேளையில், ஆதிராவின் அதரங்கள் மேலும் விரிந்தன.

அவள் கையைப் பற்றியிருந்த கவியரசனின் கைகளை எடுத்துத் தனக்குள் அடக்கியவள்... அவன் கைகளில் தன் முகத்தைப் புதைத்து அழுகையுடன் கூடிய சிரிப்பைச் சத்தமாக உதிர்த்தாள்.

அவளின் சிரிப்பும், அழுகையும் நொடிக்கு நொடி அதிகரித்துக் கொண்டிருக்கவும், அவளுக்கு மூளை ஏதேனும் குழம்பிப் போய் விட்டதா... என்ற சந்தேகம் கூட வந்தது, கவியரசனுக்கு.

அவளின் செயல்களைத் தடுக்க... அவளுக்குள் அடங்கிய அவன் கைகளை உருவ முயன்றவன்... அது முடியாமல் போக வேகமாக இழுக்க முயன்றான்.

ஆனால் அவளோ அவன் கைகளை அவள் மார்போடு அழுந்தப் பற்றியவள்... இன்னமும் தன் சிரிப் பையும், அழுகையையும் தொடர்ந்தாள்.

அவளை எப்படியாவது நிறுத்த நினைத்தவன், "ம்ச் விடு..." என்ற சொல்லுடன், தன் கைகளைப் பலமாக இழுத்து விலக்கிக் கொள்ள...

அதில் நிமிர்ந்த ஆதிரா இன்னமும் தன் உணர்வு களைக் கட்டுக்குள் கொண்டு வராமல், அதே ஆனந்தக் கண்ணீருடன் தொடர்ந்தாள்.

"கவி... கவி... என்னை... என்னை இதுவரைக்கும் யாருமே இப்படி அடிச்சதில்லை, கவி... இப்போ... இப்போ

நீ அடிச்சது எனக்கு எ... எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?"

அவளின் சந்தோஷம், அவளின் குரலில் அப்பட்டமாக வெளிப்பட்டது.

அவள் சொன்னதில் குழம்பிய கவியரசன், தன் புருவத்தைச் சுருக்கி விரிக்க... அதில் அவன் நினைப்பதை யூகித்துக் கொண்டவள், "நான் தெளிவாத்தான் இருக்கேன் கவி..." என்றவள், "கவி, எனக்கு உன் மேல சாய்ஞ்சுக்கணும் போலிருக்கு. ப்ளீஸ் கவி..." என அவன் கையைப் பிடிக்க வர... அவனோ அவளை விட்டுப் படுக்கையில் வந்தமர்ந்து, அவன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து கொண்டான்.

அவனை விடாமல் பின் தொடர்ந்து வந்தவள்... அவன் முன்னே மண்டியிட்டு அமர்ந்து கொண்டவளின் கைகள் அனிச்சைச் செயலாகக் கவியரசனின் கையை எடுத்து, அவளின் வயிற்றில் வைத்தது.

அவள் இப்படிச் செய்ததும்... கவியரசனின் தலையில் யாரோ சில்லென்ற குளிர்ந்த நீரை ஊற்றியது போல் உடல் சிலிர்க்க... அவனை அறியாமலே அவன் கைகள், அவளின் வயிற்றில் இன்னமும் அழுத்தமாகப் பதிந்தன.

அதை உணர்ந்தவள் போல், "கவி... என் வயித்தில் இருக்கிற நம்ம குழந்தை மேல சத்தியமா சொல்றேன்... முன்னிருந்த அந்த ஆரா எப்பவோ செத்துட்டா. இப்போ உன் முன்னாடி இருக்கிறது உன்னோட ஆதி கவி...



இப்போ உன்னை மட்டுமே நேசிக்கிற உன்னோட ஆதி... இதை எப்படி நிரூபிக்கணும்னு எனக்குத் தெரியலை... ஆனால் நீ என்னை நம்பித்தான் ஆகணும்..." என்றவள் குரலில் அத்தனை அழுத்தம்.

அவள் முகம் பார்க்கப் பிடிக்காதவன் போல்... அவன் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொள்ள, அதைச் சட்டை செய்யாமல், "இதை நான் உன்கிட்ட முன்னமே சொல்லியிருக்கணும் கவி... ஆனால் என்ன செய்ய... ஆண்டவன் எனக்குச் சிந்திக்கும் திறனை அளவா இல்ல படைச்சுட்டார். நான் என்ன செய்ய?" அவள் குரலில் இருந்த ஏதோவொன்று அவனை வதைத்தது.

என்ன தவறு செய்திருந்தாலும் இந்த நான்கு மாதத்தில் அவனின் குழந்தையாகிப் போனவளின் கலங்கிய குரல், அவனைச் சற்றே சற்று அசைத்துப் பார்க்க முயற்சித்தது.

ஆனால் அவன் அசையவில்லை.

"நீ இப்போ விட்டியே ஒரு அறை... அந்த மாதிரி மட்டும் யாராவது என்னை அடிச்சு வளர்த்திருந்தா நான் தடம் மாறியிருக்க மாட்டேன், கவி... என்னை அப்படி வளர்க்க யாருமே இல்லை. என்னைப் பெத்துப் போட்டுட்டு நாட்டைத் திருத்துறேன் பேர்வழின்னு என் அம்மா சமூக சேவை செய்யப் போயிட்டாங்க.

"எங்க அப்பாவுக்கு அவரோட வேலைதான் முதல் மனைவி, குழந்தை எல்லாம். அவங்க அவங்களோட சுகத்துக்கு என்னைப் பெத்துட்டாங்க, கவி... நான் பெத்த

வங்க இருந்தும், அனாதையா வளர்ந்தேன் கவி...” - இதை அவள் சொல்லி முடித்தபோது அவனை அறி யாமலே அவன் இதழ் பிரிந்தது.

“ச்சே... நீ செஞ்ச தப்புக்கும், முட்டாள்தனத்துக்கும் உன்னோட பெத்தவங்களைக் காரணம் சொல்லாதே, ஆதிரா!” எனக் கர்ஜித்தவன், அவளை உறுத்து விழிக்க...

“தயவுசெஞ்சு நீ எதுவும் பேசாதே. உன்னோட தப்புக்களை நியாயப்படுத்த நினைக்காதே. என்னால தாங்கவே முடியலை. நான்... நான் எப்படி எல்லாம் ஏமாற்றப்பட்டிருக்கிறேன்... ச்சே! எல்லாமே என்னோட முட்டாள்தனம்... உன்னை முழுசா நம்பினேனே... அதான் நான் செஞ்ச பெரிய தப்பு ஆதிரா... நீ பொய்டி. இப்போ என் முன்னாடி நீ மனுஷியா தெரியலை. முழு உருவத்தில் இருக்கிற பொய்... இப்போ என் முன்னாடி இருக்கிறது நான் நேசிச்ச ஆதி யில்லை. என்னை ஏமாற்றிய ஆதிரா...”

அவன் ஏமாற்றத்தில் என்னென்னவோ உளற, அவனிடம் தன்னைப் பற்றி அவள் சொல்ல எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியைத் தழுவின.

“இதுவரைக்கும் நான் வார்த்தையால் கூட யாரையும் காயப்படுத்த நினைச்சதில்லை ஆதிரா... என்னையே இன்னிக்கு நீ அடிக்க வைச்சிட்ட... ப்ளீஸ்! தயவுசெஞ்சு என் முன்னாடி வராதே. கோபத்தில் திரும் பவும் உன்னை ஏதாவது பண்ணிடுவேன். கட்டின பொண் டாட்டியை அடிச்சேன்கிற பாவம் எனக்கு வேண்டாம்.



முதல்ல என் முன்னாடி இருந்து போயிடு... என்னைக் கொஞ்சம் தனியா இருக்க விடு...” என இயலாமையில் ஆரம்பித்துக் கோபத்தில் இறைந்தவனை மேலும் காயப்படுத்தாமல் அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

அவள் செல்லவும், “ஒரு நிமிஷம்... நில்லு!” என நிறுத்தியவன்,

பின், “அன்னிக்கு மாதிரி தற்கொலை முயற்சி செய்ய நினைக்காதே. எனக்கு என் குழந்தை வேணும்...” என அவன் வார்த்தைகளில் சுயநலத்தைக் காட்டிச் சொன்னவன், அதற்குப் பிறகு கட்டிலில் கவிழ்ந்து படுத்துக் கொண்டான்.

அவன் தற்கொலை என்றதும் ஆதிராவின் உடல் ஒரு நிமிடம் தூக்கிப் போட, அவனைத் திரும்பிப் பார்த்த வள், ‘அன்னிக்கு நான் தற்கொலைதான் செய்ய நினைச் சேன்னு இவனுக்குத் தெரியுமா?’ என நினைத்தவள்... பின் மௌனக் கண்ணீர் விட்டு, அந்த அறையிலிருந்து வெளியேறி ஹால் சோபாவில் படுத்துக் கொண்டாள்.

ஏற்கெனவே கவியரசனின் மீதான காதல் ஒரு புறம், தான் செய்த தவறில் விளைந்த குற்ற வுணர்வு மறுபுறம் எனத் துவண்டிருந்த ஆதிரா, இப்போது அவனின் அடிபட்ட வார்த்தைகளில் மேலும் நொறுங்கிப் போனாள்.

தன்னால் யாருக்கும் நிம்மதி யில்லை என்ற எண்ணம், அவளின் நெஞ்சில் வியாபித்துப் பல நாட்களான போதும், இன்று கணவனின் கண்ணில்

தெரிந்த வலியும், வேதனையும் அவளைக் கொல்லாமல் கொன்றது.

இதற்கெல்லாம் தான்தான் காரணம் என்ற எண்ணம் அவளுள் ஊறிப் போக, இதற்குப் பின் என்ன செய்வதென்றும் அவளுக்குப் புரியவில்லை.

இத்தனை நாள் தான்தோன்றித் தனமாகத் திரிந்தவளுக்குக் கவியரசன் தான் நல்வாழ்க்கைப் பாடத்தைப் புகட்டினான்.

உறவுகள் மீதும், குடும்பத்தின் மீதும் சிறிதும் பற்றில்லாதிருந்தவளை... குடும்பம் என்றால் என்ன... உறவுகள் என்றால் என்ன என்பதை ஒவ்வொரு நாளும் அவனின் காதலால் உணர்த்திக் கொண்டிருந்தவனின் காதல் இனிமேல் தனக்குக் கிடைக்க வாய்ப்பில்லை என்பதை உணர்ந்து கொண்டாள்.

கவியரசனைத் திருமணம் செய்து கொண்டபோது, அவனைப் பற்றிய எண்ணம் முதல் நாளே தவறு என உணர்ந்தவள், அதன் பின் வந்த நாட்களில் அவனின் அன்பான வார்த்தைகளும், தான் எதைச் செய்தாலும் பொறுத்துப் போகும் குணமும் அவளை முற்றிலும் அசைத்துப் பார்த்தது.

அவள் இதுவரை பார்த்த பல ஆண்களில் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் பெண்களைத் துகிலுரித்துப் பார்க்கும் காமவெறியர்களாக இருந்தனர்.

ஆனால் முதல் முறை கட்டின மனைவியைத் தொடுவதற்கே பல யோசனையுடன், சிறிது நேரத் தயக்கத்திற்குப் பின்னே மென்மையாகக் கையாண்டவனை இப்போதுதான் முதல் முதலில் கவியரசனின் உருவத்தில் கண்டாள்.



அதுவரையிலும் கூட அவள் செய்த செயல்களுக்குச் சிறிதும் அச்சமோ, தயக்கமோ இல்லாது வலம் வந்தவள் மனது முதல் முறையாக அவனுக்காகத் தன்னுடைய தகுதியை ஆராய்ந்தது.

அன்று மட்டுமல்ல, அதற்குப் பின்னர் வந்த நாட்களிலும்... தான் எத்தனை கோபப்பட்டாலும், எரிச்சல் பட்டாலும்... அதற்கு அவனிடமிருந்து வரும் மென்மையான பதிலிலே அவளின் எரிச்சலை இருந்த இடம் தெரியாமல் பறந்து போகச் செய்ய...

அதன்பின் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு சாரி கேட்பதில் அவளின் நெஞ்சம் சற்றுச் சமாதானமடையும்.

இப்படி அவனின் ஒவ்வொரு செயலும், தன்னை எந்தவொரு விதத்திலும் காயப்படுத்தி விடக் கூடாதே என அவன் பார்த்துப் பார்த்துத் தன்னை அன்பால் குளிப்பாட்டி வந்தவனுக்குத் தான் எந்த விதத்தில் தகுதியானவள் என்ற குற்ற வுணர்வு இதுவரை அவளைக் கொன்றதென்றால்... இன்று அவன் கண்ணில் தெரிந்த வலி அவள் நெஞ்சைக் குத்தீட்டி கொண்டு கிளறியது.

தான் கொடுத்த வலிக்கு அவன் தன்னை என்ன செய்தாலும் தகுமென்றுதான் அவள், அவன் கொடுத்த அடியை ஏற்றுக் கொண்டாள்.

கவியரசன் கொடுத்த அடியில் அவளுக்குச் சற்றும் கோபமோ, வருத்தமோ இல்லை. தனக்கு இது தேவை தான் என அவள் மனம் இன்னமும் அவனிடமிருந்து எதிர்பார்த்தது.

அவளுக்கு நிச்சயம் தெரியும்... தான் செய்த செயல் அவனை எந்த அளவிற்குப் பாதித்ததென்றால்... இன்று அவனின் இயல்பையும் மீறித் தன்னைத் தாக்கி யிருப் பான் என்று...!

தனக்காக இத்தனை யோசித்து... தான் பெற்றவர்களிடம் பெற முடியாத சுகத்தை அளித்து... தன்னை இவ்வீட்டின் இளவரசி போல் உணர வைத்து... தனக்கு வாழ்க்கையின் சொர்க்கத்தைக் காட்டியவனுக்குத் துரோகத்தைத் தவிர அவளால் என்ன கொடுக்க முடிந்தது?

அப்போது பார்த்து, அவள் வயிறு குறுகுறுக்க... அவளுக்குள் ஒரு நிம்மதி எழுந்தது.

குறுகுறுத்த வயிற்றில் கை வைத்தவள்... கண் முன்னே முந்தின மாலை கவியரசன் குழந்தை என்று நினைத்துச் செய்த ஆர்ப்பாட்டங்கள்தான் என்ன... என்ன...!

ஆனால் அது உறுதியானபோது, அவன் முகத்தில் மகிழ்ச்சி என்பது முற்றிலும் துடைத்தெறியப் பட்டதை அவள் கண்ணால் கண்டாளே...!

தன்னால் தன் கணவனுக்கு எதுவுமே கொடுக்க முடியாதென நினைத்தவள் நெஞ்சைக் குளிர வைக்கும்



வண்ணம்... அவள் வயிற்றில் முத்தாய் உருவெடுத் திருக்கும் தங்கள் செல்வத்தை, ஒரு சிற்பியின் ஆற்ற லோடு பாதுகாத்துக் கணவனுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்க வேண்டுமென உறுதி பூண்டாள்.

ஆனால் அந்த உறுதியை ஆட்டம் காண வைப்பது போல்... அதற்கு முன்னே தான் இந்தக் குற்ற வுணர் விலே செத்து விடுவோமோ என்ற பயமும், கணவனின் பாராமுகமும் அவளைக் கவலை கொள்ளச் செய்ய... எப்படியாவது தன் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு உயிர் வாழ நினைத்தாள்.

கவியரசனின் காதலையும் நம்பிக்கையையும் இழந்தாலும், இதுவரை அவனிடம் தான் காட்டாத காதலை அவனுக்கு உணர்த்த நினைத்தாள்.

அவள் பிறந்தது முதல் இந்தப் பத்தொன்பது வருடமாகத் தறுதலையாகத் திரிந்து செய்த பல தவறுகளைத் திருத்திக் கொள்ள ஆண்டவன் தனக்கொரு வாய்ப்புக் கொடுத்ததாகவே நினைத்தாள்..

கணவனின் காதல் தனக்கு இனிக் கிடைக்க வாய்ப்பில்லை எனிலும், தான் பெறப் போகும் செல்வத் தைத் தாங்கள் இருவரும் பட்ட துன்பத்தைப் போலில் லாமல், சிறப்பாக வாழ வைக்க வேண்டுமென்ற உறுதியும் எடுத்துக் கொண்டாள்.

இதற்குக் கணவனின் ஒத்துழைப்பு வேண்டுமென அவள் மனம் எடுத்துக் கூற, அதற்கும் ஆதிராவிடம் பதில் இருந்தது.

அவனுக்குத் தன் மேல்தான் கோபம்... தன்னிடம் இருக்கும் கோபத்தை, அவன் ஒருபோதும் தன் குழந்தை யிடம் காட்ட மாட்டான் என்பதை அவள் அறியாதவளா என்ன!

ஆனால், அவளின் நம்பிக்கை பலிக்குமா... என்ற கேள்விக்கு விடை கவியரசனிடம்தான் உள்ளது.

முந்தின மாலை முதல் நடந்த பல உணர்ச்சிப் போராட்டத்தின் முடிவில் ஆதிரா, தன் வாழ்க்கையைப் பற்றிய ஒரு முடிவுக்கு வந்திருக்க... அடுத்த நாள் விடியலை நம்பிக்கையுடனே துவக்கினாள்.

சோபாவிலிருந்து எழுந்தவள்... குளியலறைக்குள் சென்று ஷவரின் அடியில் நின்றாள்.

தன் உடல் மீது விழும் தண்ணீருடன் தான் முன்னால் செய்த தவறுகளும், பாவங்களும் கரைந்ததைப் போல் உணர்ந்தவள்... குளியலறையை விட்டு வெளி வரும்போது, தன் மனச் சஞ்சலங்கள் களைந்து, கவியரசனின் மனைவியாக வெளிவந்தாள்.

தான் தேர்ந்தெடுத்திருக்கும் இவ்வழியில் அவ ளுக்குப் பல சவால்கள் காத்திருந்தாலும், அவற்றை இதே உறுதியுடனே கையாளத் தனக்குத் துணை நிற்கு மாறு வீட்டிலிருந்த சிவனையும், சக்தியையும் வேண் டியவள்... உண்மையாகவே கவியின் ஆதியாக மாறி யிருந்தாள்.

ஆதிரா கணவனுக்காகச் சமையல் செய்து கொண்டி ருந்தாள். அவள் செய்வது வீண்தான் என்றாலும், அவள் முயற்சியில் தளரவில்லை.



காலை உணவைச் செய்து முடித்தவள், கவியரச னுக்குக் காபியைக் கலந்து எடுத்துச் சென்றாள். அவன் அதைப் பருக மாட்டான் எனத் தெரிந்தே...!

அவள் நினைத்ததைப் போலவே... அவள் அறைக்குள் நுழைந்த சமயம் கவியரசன் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான்.

“கவி... காபி...” என அவன் முன்னே நீட்ட,

குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தவனுக்கு இரவு முழுவதும் கட்டுப்படுத்தி வைத்திருந்த கோபம் சிலிர்த்தெழுந்தது.

நேற்று என்ற ஒன்று வரவே இல்லாததைப் போல் அவள் தன் முன்னே நின்று கொண்டிருந்தது, அவன் சீற்றத்தை அதிகரிக்க... அவளை ஒரு வேற்றுப் பார்வை யுடன் கடந்து சென்றான்.

அவன் சென்ற பின்னர், ஒரு பெருமூச்சுடன் தனக்குத் தட்டில் சாதத்தை எடுத்துப் போட்டவள்... கண்ணில் வழிந்த கண்ணீர் அவள் நெஞ்சை நனைத் தது.

அவளுக்கு இப்போது சாப்பாட்டை ஒரு பருக்கை கூட உண்ணக்கூடிய மனநிலை இல்லை எனினும், அவள் உண்ண வேண்டுமே...

அப்போதுதானே அவளுள் இருக்கும் கவியின் உயிர் உதயமாகும்...

வீட்டை விட்டு வெளியே வந்த கவியரசன் காரை வந்தடைந்து, அவன் ஸ்டியரிங்கில் கையை வைக்கத்

தன் முன்னால் நிழலாடிய மருத்துவமனை ரிப்போர்ட் அவனுக்கு நேற்றைய வலிகளை மீண்டும் உயிர்த்தெழச் செய்தது.

ஒரு முடிவுடன் நிமிர்ந்து அமர்ந்தவன்... காரை ஸ்டார்ட் செய்து, நேராகக் காஞ்சிபுரத்தை நோக்கிச் செலுத்தினான்.

## 11

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

'**கா**க்கும் கரங்கள்' எனப் பெயர்ப் பலகையைத் தாங்கி நின்ற கட்டடத்திற்குள் கவியரசனின் கார் சென்றது.

காரை அதன் இடத்தில் நிறுத்தி விட்டு, அவன் வெளியே இறங்கவும்... அவனை வரவேற்கவென வந்த தோட்டக்காரர், "அடடே! அரசுத் தம்பி... வாங்க வாங்க... பார்த்து ரொம்ப நாளாச்சே... நல்லா இருக்கீங்களா?" என வாஞ்சையாகக் கையைப் பிடித்துக் கொண்டு கேட்ட அம்முதியவரின் அன்பில் நெகிழ்ந்த கவியரசன்,

"நான் ரொம்பவும் நல்லா இருக்கேன், ராமுத் தாத்தா... நீங்க எப்படி இருக்கீங்க? பரி பாட்டி என்ன பண்றாங்க?" - அவனும் பரிவுடனே கேட்டவாறு அவருடன் நடை போட்டான்.

"எங்களுக்கென்ன குறை தம்பி... மூணு வேளை நல்ல சோறு. சாப்பிடுற சாப்பாட்டுக்கு நல்ல வேலை.



எங்களைத் தாத்தா, பாட்டின்னு பாசம் காட்ட உங்களை மாதிரி நூத்துக்கணக்கான பேரன், பேத்திக... எல்லாத்துக்கும் மேல எனக்குன்னு இங்க ஒரு அங்கீகாரம் கொடுத்து மதிக்கிற நம்ம ஆதிம்மா... இதுக்கு மேல கடைசிக் காலத்துல எனக்கு என்ன வேணும்... சொல்லுங்க!" எனக் கண்களில் ஒளியுடன் சொன்னவரின் முகத்தில் தெரிந்த சந்தோஷம் அவனையும் தொற்றிக் கொண்டது.

அவருடனே நடந்து சென்றவன், தோட்டத்தின் பராமரிப்பில் லயித்து, "ரொம்ப அழகாத் தோட்டத்தைப் பராமரிக்கிறீங்க தாத்தா... இன்னமும் நிறையச் செடிகள் வையுங்க. அடுத்த முறை வரும்போது சில விதைகள் வாங்கிட்டு வர்றேன்..." எனப் பேசிக் கொண்டு வந்தான்.

அவன் வீட்டிலிருந்து கிளம்பிய போது இருந்த மனநிலைமைக்கும் இப்போதிருக்கும் மனநிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தை ஆராய விடாமல் அவனைத் தடுத்தார்கள், காக்கும் கரங்களின் செல்லக் குழந்தைகள்...

"ஹை... அரசண்ணா..." என ஓடி வந்த குழந்தைகள் கவியரசனைச் சுற்றிக் கொள்ள... அவர்களைக் கண்டவுடன் அவனுக்குமே உற்சாகம் பன்மடங்காகப் பெருகியது.

"ஹே குட்டீஸ்..." என அவர்கள் உயரத்திற்கு மண்டியிட்டவன், கூட்டத்திலே குட்டியாக இருந்த குழந்தையைத் தூக்கித் தன் தோளோடு அணைத்தவன், "ஹே ஜில் ஜில் ரமாமணி... என்ன மேடம் உம்முன்னு

இருக்கீங்க... இன்னிக்கி என்ன சேட்டை செஞ்சீங்க? ஹ்ம்ம்..." எனக் கேட்கவும்,

அவன் கேட்ட கேள்விக்கு அந்தக் குட்டி ராணி பதில் சொல்லும் முன்... அருகில் இருந்த இன்னொரு செல்ல ராணி, "அவளைப் பெரிய ஆயா திட்டிடுச்சு அரசண்ணா... அதான் ஜில் ஜில் உம்முன்னு இருக்கா..." என அப்பெண் பாவத்துடன் சொல்லிச் சிரிக்க...

"அடடே! என்னோட ரமாமணியைப் பெரிய ஆயா எதுக்குத் திட்டினாங்க... ஆயா சும்மாவெல்லாம் திட்ட மாட்டாங்களே...! ஹே ஜில் ஜில்... நீ என்ன பண்ணின?" எனத் தோளில் இருந்தவளைத் தன் புறம் திருப்பிக் கேட்க,

"நா ஒண்ணுமே பண்ணல அசு... கிச்சன்ல ஆயா சோச்சி (சாதம்) செஞ்சுச்சு. நான் ஆயாக்குத் தேயாம இத்துண்டு... இத்துண்டு சக்கர (சர்க்கரை) தான் சாப்பிட்ட அசு... அக்கு ஆயா சொத்த பல்லு வரும்னு சொல்லி திட்டிச்சு அசு... மணி அழுவுறா..." என்று கையை ஆட்டி ஆட்டிச் சொன்னவள்... பின்னொரு அறிக்கையுடன் மணி அலைஸ் ஜில் ஜில் ரமாமணி என்ற மணிமேகலை மீண்டும் அழத் துவங்கினாள்.

"ஹே, ஜில் ஜில்... தப்பை நீ பண்ணிட்டுப் பழியை ஆயா மேல போடறியா.. சர்க்கரை சாப்பிட்டா சொத்தைப் பல்லு வரத்தானே செய்யும்.. அப்புறம் உன் பல்லு எல்லாம் கீழே விழுந்து நம்ம சுந்தரி பாட்டி மாதிரி பேக்கே பேக்கேன்னுதான் சிரிக்கனும். ஹய்யோ மணி குட்டி, அப்படி இருந்தா பெரிய ஆயாக்குக் கஷ்டமா இருக்



குமில்ல... அதான் ஆயா உன்னைச் சாப்பிடக் கூடாதுன்னு சொன்னாங்க... அழுவாதீங்க..." என அழுத குழந்தையைச் சமாதானம் செய்ய... அதுவும் சில விநாடிகளிலே சமாதானமடைந்து சிரித்தது.

சிரித்து முடித்ததும் அவன் முன்னே கை நீட்டி, "அசு... மணி பாப்பாவுக்கு என்ன வாங்கித்து வந்த...?" எனவும்தான் அவன் தலையில் சுருக்கென வலித்தது.

எப்போதும் குழந்தைகளைப் பார்க்க வரும்போது கை நிறையப் பொருட்களுடனும், மனம் நிறைய அன்புடனும் வரும் கவியரசன் இன்று அவன் வந்த மனநிலையில் அதைப் பற்றியெல்லாம் கொஞ்சம் கூடச் சிந்தித்துப் பார்க்கவில்லை.

தன் முன்னே கை நீட்டிக் கேட்ட குழந்தையைத் தன்னோடு அணைத்துக் கொண்டு, அவள் குண்டுக் கன்னத்தில் முத்தமிட்டான்.

குழந்தை கேட்கவும் மனம் மேலும் வலிக்க... "அரசு மறந்து போயிட்டேன்டா ஜில் ஜில்... அடுத்த முறை வரும்போது நிறைய வாங்கிட்டு வர்றேன். சரியா?" என அனுமதி கேட்கவும்,

அதிகம் அடம் செய்யாமல், "சரி அசு... வா, விளையாடலாம்..." எனச் சீக்கிரமே சமாதானமடைந்த அக் குழந்தை, அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு செல்ல...

மற்றப் பிள்ளைகளையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு, அங்கிருந்த சின்ன கிரவுண்டில் சிறிது நேரம்

விளையாடிக் கொண்டிருந்தவன்... குழந்தைகள் அவர்கள் விளையாட்டில் மூழ்கிப் போகவும் அவர்களை விட்டு அருகில் இருந்த மரத்தடியில் சாய்ந்தமர்ந்தான்.

அவன் இங்கே வரும்போது இவ்விடுதியில் வெறும் முப்பது குழந்தைகள்தான் இருந்தனர்.

ஆனால் இப்போது முப்பது, முன்னூற்றுச் சொச்ச மாகப் பெருகிக் கூடவே ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆதரவற்ற முதியோர்களும் இருப்பது... காக்கும் கரங்களின் வளர்ச்சியைக் காட்டவில்லை - நம் நாட்டின் தற்போதைய அவலத்தைக் காட்டுகிறது.

தாங்கள் பெற்ற பிள்ளைகளைக் கவனிக்கவும் வக்கில்லை... தங்களைப் பெற்ற பெற்றோர்களைக் கவனிக்கவும் தெம்பில்லை எனில்... அப்படிப்பட்ட ஜென்மங்கள் இவ்வுலகில் வாழ்வதற்கு என்ன பயன் என்ற எண்ணம் அடிக்கடி கவியரசனின் இதயத்தில் உதயமாகும் ஒன்று...,

இதோ, இப்போது பார்த்தானே மணிமேகலை...

அக் குழந்தையைப் பேசச் சொல்லி, அதன் மழலைப் பேச்சை ஒரு நாள் முழுவதும் கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

அத்தனை அழகும் அறிவும் கொண்ட குழந்தையை வேண்டாமெனத் தூக்கிப் போட, அவள் பெற்றவளால் எப்படித்தான் முடிந்ததோ!

வெளியில் பார்த்த தோட்டக்காரர் ராமு ஒரு காலத்தில் இதே காஞ்சிபுரத்தில் கொடிகட்டிப் பறந்த பெரிய



தொழிலதிபர். அவரின் கெட்ட நேரம், தொழிலில் சின்னச் சறுக்கல் வரவும், அதில் தெளிந்த அவர் பெற்ற இரண்டு பிள்ளைகள், மீதி இருக்கும் சொத்துகளைத் தங்களுக்குள் சரிபாதியாகப் பிரித்துக் கொண்டு பெற்றவர்களை இங்கே விட்டுவிட்டு மாதம் மாதம் செலவுக்குக் கணக்குப் பார்த்துப் பணம் அனுப்பும் அன்பு நெஞ்சங்கள்...?

இவர்களைப் போல் இங்கிருக்கும் அத்தனை பேரும் ஓரோர் கதை பின்னணியில் இருந்தாலும், இப்போது அனைவரும் இருப்பது அன்பெனும் ஓர் கூரையில்... இதே அன்பென்னும் கூரையில் வளர்ந்த அவனும், இதுவரை எந்தக் குறையும் இல்லாமல்தான் இருந்தான்.

ஆனால் அவன் நினைவு வந்து, தானாகச் சிந்திக்க ஆரம்பித்ததிலிருந்து அவன் மனதில் எழும் ஆசை ஒன்றே ஒன்றுதான்.

தனக்கென ஒரு தனிக் குடும்பம், தான் நேசிக்க மனைவி, குழந்தை என அவன் ஆசைப்பட்டான். அதில்தான் பெரிய கல் விழுந்து விட்டதே...

தான் இனி நேசத்தை எதிர்பார்ப்பதில் எந்தப் பலனுமில்லை என நினைக்கையிலே அவன் மனது வலித்தது.

அதையே நினைத்து அமர்ந்திருந்தவனின் தோளில் யாரோ கை வைக்கவும், தன் எண்ணத்திலிருந்து தெளிந்தான்.

தன்னைத் தொட்டவர் இருந்த திசையில் திரும்பிப் பார்த்தவன்... எதிரில் நின்றவரின் தோற்றத்தில் எப்போதும் அவனுக்குத் தோன்றுவது போல இன்றும் தெய்வமாகத் தெரிந்தார்.

"ஆதிம்மா..." என அவன் உதடுகள் உச்சரித்ததே தவிர, சத்தம்தான் வரவில்லை.

அவனின் மனநிலை அந்த அன்னைக்குப் புரிந் ததோ என்னவோ... அவரும் அவனருகில் புல் தரையில் அமர்ந்து கொண்டார்.

"அரசுக் கண்ணா..." எப்போதும் அவர் அழைக்கும் குரலில் அவர் சொன்ன விதத்தில் கவியரசன் முற்றிலும் உடைந்து போனான்.

அந்த இரண்டு வார்த்தையில்தான் எத்தனை அன்பு...

இத்தனை நேரம் தன்னைத் தோள் சாய்க்க யாரேனும் வரமாட்டார்களா என ஏங்கித் தவித்த மனதிற்கு... இப்போது தனக்கொரு பற்றுக்கோல் கிடைத்து விட்டதென எண்ணியவன்... இரண்டு நாட்களாக அவன் நெஞ்சில் அலையடித்துக் கொண்டிருந்த அலைப்புறுதலின் தாக் கத்தில் ஆதிலட்சுமியின் மடியில் சாய்ந்து கதறி அழ ஆரம்பித்து விட்டான்.

"கண்ணா..." என மென்மையாக அழைத்தவர், அவன் முதுகை ஆறுதலாகத் தடவிக் கொடுக்க... அவனும் அவர் மடியில் தன் மனச் சஞ்சலங்களை ஒதுக்கி வைத்து, அவரின் ஸ்பரிசத்தை முழுமையாக உள்வாங்கினான்.



ஒரு சில நிமிடங்கள் நடந்த அந்தப் பாசப் பரிமாற்றத்தில் சற்றே தெளிந்த கவியரசன் நிமிர்ந்து அமர்ந்தான்.

அவன் என்னதான் தெளிந்திருந்தாலும், அவன் கண்களில் வலியை உணர்ந்து கொண்ட ஆதிலட்சுமி,

"என்ன அரசு?" என்க...

"ஆதிம்மா... நீங்க ஆபீஸ் ரூம் போங்க. நான் இதோ வர்றேன்..." என அவரை அனுப்பி வைத்தவன், மீண்டும் காருக்கு வந்தவன்... ஒரு நிமிடம் தயங்கிப் பின் ஆதிராவின் ரிப்போர்ட்களை எடுத்துச் சென்றான்.

வந்தவன் ஆதிலட்சுமியின் அறைக்குள் நுழைய வும், பெரிய ஆயா வெளியே வரவும் சரியாக இருந்தது.

"ஆயா, எப்படியிருக்கீங்க?" என விசாரிக்க...

"நான் நல்லாயிருக்கேன்டா ராஜா... நீ என்னடா கண்ணா ஓய்ஞ்சு போய்த் தெரியுற... ஏன் சாமி உன் பொண்டாட்டி உன்னைச் சரியாக் கவனிக்கிறதில்லையா?

"இரு... வந்து கேட்கிறேன். என் புள்ளைய கவனிக்காம அவளுக்கு என்ன வேலையாம்..." என அப் பாசக்காரப் பெண்மணி கேட்க...

அவன் இயல்பு போல மனைவியை விட்டுத் தராமல், "ஆயா... அவகிட்ட நீங்க சண்டைக்குப் போனீங்கன்னா... அப்புறம் நீங்கதான் பின்வாங்கணும். அவ உங்களை விடச் சண்டைக்காரி..." எனச் சிரித்துச் சமாளித்து வைத்தான்.

"ஹாஹா... அப்படி இருந்தாத்தானே உன்னைக் கட்டி மேய்க்க முடியும். உனக்கேத்த மகராசிதான். உள்ளே போய்யா..." என விடை கொடுக்க... கவியரசன் ஆதிலட்சுமியின் அறைக்குள் வந்தான்.

"உட்காரு அரசு..." அவனை அமர வைத்து, அவனுக்குத் தண்ணீரைக் கொடுக்க... மறுக்காமல் அதை வாங்கிப் பருகிக் கொண்டான்.

"சொல்லு அரசு..." நேரடியாக விஷயத்திற்கு வர,

அவனும் தன் கையிலிருந்த கோப்பை அவரிடம் கொடுத்து விட்டு, "நம்மளை மொத்தக் குடும்பமும் சேர்த்து ஏமாத்திடுச்சு ஆதிம்மா... ஏமாத்திடுச்சு..." எனக் கோபத் துடன் சொன்னான்.

அவன் கொடுத்த கோப்பைக் கையில் வாங்கிப் பார்த்தவர், முதல் பக்கத்திலேயே ஏதோ புரிந்து கொண்டவர், நிமிர்ந்து தன் எதிரில் இருந்தவனைப் பார்த்தவர்... அவனின் கண் சிவப்பிலேயே அவனுடைய கோபத்தின் அளவைப் புரிந்து கொண்டார்.

அவர் ஏதும் சொல்லும் முன்னே அவனே தொடர்ந் தான்.

தங்கள் திருமணமான தினத்திலிருந்து நடந்த வற்றைச் சொன்னான்.

ஆதிராவின் அலட்சியப் போக்கு, அவளின் எடுத்தெறிந்து பேசும் பழக்கம், சொன்னதைக் கேட்காமல் பிடிவாதமாக இருப்பதை மிகைப்படுத்திச் சொன்னவன்...



அவளின் மாற்றங்களையும் ஒரு குறை போலவே சொன்னான்.

எல்லாவற்றையும் சொல்லி முடித்தவன், கடைசியில் நேற்று நடந்த மருத்துவப் பரிசோதனையில் வந்து நிற்க... அவனை அறியாமலேயே அவன் கண்கள் ஒரு சொட்டுக் கண்ணீரைப் பொழிந்தன.

"ஆதிம்மா... அவ... அவ.... ம்ம்... எனக்குக் குழந்தை பிறக்கப் போகுது, ஆதிம்மா..." - கலங்கிய குரலில் சொன்னவனின் மனதைப் படித்தவர் போல் அவன் அருகில் வந்து அவன் தலையைப் பரிவாகக் கோதிக் கொடுத்தார்.

அவரின் பரிவில் நெகிழ்ந்த கவியரசன், "ஆதிம்மா... நான் அவளை ரொம்ப விரும்பினேன். ஆனா... எ...என்னை... அவ ஏமாத்திட்டா... என்னாலதான் அதைத் தாங்க முடியலை..." என முகத்தில் வலியைத் தேக்கிச் சொல்ல...

அதில் ஆதிலட்சுமியும் சற்று அசந்துதான் போனார்.

"என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லி யிருக்கலாமே, ஆதிம்மா... ஏன் என்னை ஏமாத்தணும்... நான் அவளை உயிராக் காதலிச்சேன். அவளும் என்னை உண்மையா நேசிச்சிருந்தா என்கிட்ட உண்மையை மறைச்சிருப் பாளா...? என்னை ஏமாத்த அவளுக்குத் தோணியிருக் குமா? ஏன் ஆதிம்மா, இப்படிச் செஞ்சா?" - கவியரசன் உடைந்து கேட்டான்.

அவன் இதைப் போல் தன்னையே மறந்திருக்கும் சமயங்களில் தோள் சாய நாடும் ஒரே ஜீவன் ஆதி லட்சுமிதான்.

அதே போல் அவன் இது போல் தன்னை மறந்து உடைவதும் ஒரு சில தருணங்களில்தான்.

முதல் முறை அவன் பள்ளிக் காலத்தில்... கூடப் படிக்கும் சக மாணவர்களின் பெற்றோர்களைப் பார்த்து ஏங்கிய போது...

இரண்டாம் முறை, அவன் கல்லூரி நாட்களில் அவனை ஏழை யென உணர வைத்த சில பணக்கார மாணவர்களால்...

அதன் பின் இப்போது...

மனைவி தன் அன்பைப் புரிந்து கொள்ளவில்லை என்று...

ஆதிலட்சுமியின் கண்களுக்கு இன்னமும் நான்கு வயதுச் சிறுவனாகத் தெரிந்த கவியரசனைத் தன் தோளில் சாய்த்து ஆறுதல் சொன்னவர், அவன் சற்று ஆசுவாசப்பட்டதும் அவர் பேச்சைத் துவக்கினார்.

"அரசு... நான் ஒண்ணு கேட்கவா?" என அவனிடம் அனுமதி கேட்க...

"கேளுங்க..." என்பது போல் தலையாட்டி ஒப்புதல் அளிக்க...

ஆதிலட்சுமி தொடர்ந்தார். "அரசுக் கண்ணா... உனக்கு ஆதிரா உன்னிடம் உண்மையைச் சொல்ல



லைன்னு கோபமா... இல்லை, அவள் இப்படியெல்லாம் நடந்து கொண்டாளே எனக் கோபமா...?" எனத் தெளிவாகக் கேட்க...

கவியரசனும் சற்றுக் குழம்பித்தான் போனான்.

அவனுக்குமே ஆதிராவின் மேல்... தான் எதற்குக் கோபம் கொண்டுள்ளோம் எனப் பகுத்தறியத் தெரிய வில்லை.

ஒரு சில நிமிடம் தன்னிடம் உண்மையை மறைத்து விட்டாளே எனக் கோபம் கொள்பவன், அடுத்த நிமிடம் அவள் ஏன் இந்த மாதிரிக் காரியங்களைச் செய்தாள் எனவும் கோபம் கொள்வான்...

ஆதிலட்சுமி கேட்ட கேள்வியைத் தனக்குள்ளே கேட்டுக் கொண்ட கவியரசன் விடை தெரியாமல்... ஆதிலட்சுமியைப் பார்த்தான்.

அவன் பார்வையில் தெரிந்த குழப்பத்தைப் புரிந்து கொண்டவர், "என்ன, சொல்ல முடியலையா அரசு...?" எனக் கேட்டு அவன் எதிரில் வந்தமர்ந்தவர், மீண்டும் அக் கோப்புகளைப் பிரித்துப் பார்த்தவர் ஒரு சில நொடிகளின் பின் அதில் இருந்த பேப்பர்களைத் தாறுமாறாகக் கிழித்து, அருகில் இருந்த குப்பையில் போட்டு, மீண்டும் கவியர சனைப் பார்க்க... அவன் ஆதியைத் திகைப்புடன் பார்த் தான்.

"என்ன பார்க்கிற அரசு...? இத்தனை நாள் தெளிந்திருந்த உன்னோட மனசு இப்போ இந்தப் பேப்பர்லதானே குழம்பிப் போச்சு... அப்போ உனக்கு

அந்தப் பேப்பர் அவசியமில்லை. அதை மறந்துடு..." எனச் சுலபமான தீர்வைச் சொல்ல... அதில் கவியரச னுக்குத்தான் திருப்தி கிடைக்கவில்லை.

"என்ன ஆதிம்மா... இவ்வளவு ஈசியா சொல்லிட் டீங்க... என்னால எப்படி இதை அவ்வளவு ஈசியா எடுத் துக்க முடியும்... அவங்க நம்மளை ஏமாத்தி யிருக்காங்க... நம்ப வைச்சுக் கழுத்தறுத்துட்டாங்க..." எனவும்,

"ம்ம்ச்... என்ன அரசு சும்மா ஏமாத்திட்டாங்க... ஏமாத்திட்டாங்கன்னு சொல்ற... யாரும் உன்னை ஏமாத்தலை. எனக்கு இந்த விஷயம் முதல்லயே தெரியும். இன்ஃபேக்ட், நான்தான் ஒரு வருஷமா இங்க சென்னையில வைச்சு ஆதிராவிற்கு ட்ரீட்மென்ட் கொடுத் துட்டு இருந்தேன்..." என ஆதிலட்சுமி பட்டெனச் சொல் லவும், அவர் சொன்ன செய்தி கவியரசனின் காதுகளைச் சென்றடைந்தாலும், மூளையைச் சென்றடையச் சில நிமிடங்கள் பிடித்தன.

அந்த ஒரு சில நிமிடங்களில் ஆதி சொன்ன செய்தி, அவனைத் தாக்கிய பின், "வாட்...?" என்ற அதிர்ச்சியான வார்த்தைகளுடன் அவன் சிலையாக அமர்ந்திருந்தான்.

## 12

ஆதிலட்சுமி சொன்ன செய்தி...

ஆம். அவனைப் பொறுத்தவரையில் கடந்த இரண்டு நாட்களாக அவன் காதில் கேட்பது அனைத்துமே ஒரு செய்தியாகத்தான் அவனை வந்தடைகிறது.



யாருக்கு விஷயம் முதலில் தெரிய வேண்டுமோ அவனுக்கு அவன் கேட்கும் விஷயங்கள் எல்லாம் ஒரு தகவலாகவோ, இல்லை செய்தியாகவோதான் தெரியப் படுத்தப்படுகிறது. இப்போதும் ஆதிலட்சுமி சொன்ன செய்தியைக் கேட்ட கவியரசனின் மூளை செயலிழந்து போயிருந்தது.

தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது... என்ற கேள்வி அவனை ஏற்கெனவே குடைந்து கொண்டிருக்க... இப்போது ஆதிலட்சுமியின் உபயத்தால் தலையில் ஏதோ குடைந்து கொண்டிருந்த குழப்பம்... இன்னும் சற்று நேரத்தில் வெடித்து விடும் போலிருந்தது.

இடிக்கு மேல் இடி அவன் தலையில் விழவும், அதன் பாரத்தைத் தாங்க முடியாமல், தலையைக் கைகளில் ஏந்திக் கொண்டு அமர்ந்திருந்தான்.

அவனின் திகைப்பையும் தவிப்பையும் புரிந்து கொண்டவர் போல் ஆதி அவனை ஏறிட்டார்.

மேசையின் மீதிருந்த தனது கை விரல்களை ஆராய்ந்து கொண்டிருந்த ஆதிலட்சுமி, "கவி... நீ என்னைப் பத்தி என்ன நினைக்கிற?" என்ற கேள்வியைத் தொடுக்க...

அவன் அக்கேள்வியை உள்வாங்கியது போலவே தெரியவில்லை. அவன் இன்னமும் அவன் திகைப் பிலேயே அமர்ந்திருந்தான்.

மெதுவாக எதிரில் இருந்தவன் கையைத் தொட்ட ஆதி, "கவி... உன்கிட்டதான் கேட்கிறேன். நீ என்னைப்

பத்தி என்ன நினைக்கிற?" என அவர் ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்தி, நிதானமாகக் கேட்க...

அந்த இடைவெளியில் சற்றுத் தன்னை நிலைப் படுத்திக் கொண்ட கவியரசன் இப்போது எதற்கு இந்தக் கேள்வி என எரிச்சல் படுவது அவன் முகத்தில் அப்பட்டமாக வெளிப்பட்டது.

அதைப் புரிந்து கொண்டாலும், அதைக் கண்டு கொள்ளாமல், அவனின் பதிலுக்காகக் காத்திருந்தார்.

ஆனாலும் அவனால் அவனின் எரிச்சலை வெளிப் படுத்த முடியவில்லை. இத்தனை தூரம் தான் வளர்ந்து, தான் இப்படி ஒரு நிலையில் இருக்க முற்று முதல் காரணம் ஆதிலட்சுமியல்லவோ!

அதை உணர்ந்து ஆதியின் கேள்விக்குப் பதிலளித்தான்.

"இன்னிக்கு நான் இப்படி ஒரு நிலைக்கு இருக்கிறதுக்கு முக்கியமான காரணமே நீங்கதானே, ஆதிம்மா... நான் மட்டுமில்லை. என்னை மாதிரி எத்தனையோ பேருக்கு நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுத்திருக்கீங்க. எங்களை மாதிரி அநாதைக் குழந்தைகளுக்கு அன்னையா இருக்க, குடும்பம் குழந்தைன்னு ஒரு சாதாரணப் பெண் அடைய வேண்டிய சந்தோஷத்தைக் கூட இழந்துட்டு நிக்கிற நீங்க எனக்கு எப்போதுமே தெய்வம்தான், ஆதிம்மா... ஆனா... நீங்க ஏன்...?" என அவன் ஏதோ கேட்க வரவும்...



அவனின் முன்னே தன் கையைக் காட்டி நிறுத்தினார், ஆதிலட்சுமி.

"நீ தெய்வம்னு நினைக்கிற நான்... உன்னோட ஆதிம்மா... எந்த மாதிரி ஒரு நிலைமையிலிருந்து இப்போ உன் கண் முன்னாடி தெய்வம்ங்கிற ஸ்தானத்தை அடைஞ்சிருக்கேன்னு உனக்குத் தெரியுமா, அரசு...?" - அவர் குரலில் இருந்த ஏதோவொன்று கவியை வாயடைக்கச் செய்தது.

"என்ன சொல்றீங்க?"

அவனுக்குச் சுத்தமாக எதுவுமே புரியவில்லை. இவரிடம் தன் வாழ்க்கையைப் பற்றிப் பேச வந்தால், அதற்கு இவர்தான் காரணம் என்கிறார்.

சரி... அதை ஏன் நீங்கள் செய்தீர்கள் என்றால், அதற்கு அவரைப் பற்றிய சுய விவரத்தை இப்போது சொல்ல என்ன காரணம்...?

அவன் உள் மனது ஏகப்பட்ட எரிச்சலில் குமைந்து கொண்டிருந்தாலும், வெளியில் அமைதி காத்தான்.

"கோபப்படாதே, அரசு... எல்லாத்துக்கும் ஒரு விளக்கம் இருக்கு. நீ பொறுமையா இருந்தால் உன்னோட கேள்விகள் எல்லாத்துக்கும் விடை கிடைக்கும். ஆனால் அதுக்கு முன்னாடி எனக்கு உன்கிட்ட இருந்து சில தெளிவான பதில்கள் வேண்டும். நான் வளர்த்த உன்னைப் பற்றி நான் நினைச்சுட்டு இருக்கிறது சரியா, தவறான்னு தெரிஞ்சுக்கணும். அதுக்குத்தான் இப்போ

என்னைப் பற்றிய சின்னச் சுய சரிதை... கேட்க உனக்குப் பொறுமை யிருக்கா?" எனச் சிரிப்புடன் முடிக்க...

அவன் தலையைக் குனிந்து கொண்டான்.

"அனுமதி தந்துட்டேன்னு நினைக்கிறேன். ரொம்பச் சின்னதா என்னோட ஃப்ளாஷ்பேக் முடிச்சிடுறேன்..." எனச் சிரித்தவர், தொடர்ந்தார்.

"எனக்கும் கிட்டத்தட்ட ஆதிராவோட நிலைமை தான்..." எனத் துவங்கவும், கவியரசனின் குனிந்திருந்த தலை நிமிர்ந்தது.

அவனைப் பார்த்தவாறு ஆதிலட்சுமி தொடர்ந்தார்.

"ம்ம்... முதல்ல எதுல ஆரம்பிக்கிறது... ஹ்ம்... நான் ஒரு பணக்கார அப்பாவுக்கும், சுயநலவாதி அம்மாவுக்கும் பிறந்த ஏழைப் பெண். ஹ்ம்ம்... ஏழைன்னா பணத்தால ஏழை யில்லை அரசு... அன்பால, பாசத்தால... குடிசை யில வாழற கூலித் தொழிலாளி கூட அவன் சம்பாதிச்ச காசுல ஒரு நேரக் கஞ்சின்னாலும், அதை அவன் குடும்பத்தோடதான் குடிக்க ஆசைப்படுவான். ஆனா எனக்கு..." அவர் இதழில் இகழ்ச்சிப் புன்னகை...

"என் அம்மாவுக்கு அவங்க ஆசைப்பட்ட வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்காம... என் தாத்தா அவரோட கௌரவம் போயிடக் கூடாதுன்னு என் அம்மா வுக்கு அப்பாவைக் கட்டாயத் திருமணம் செய்து வைச் சாங்க. அதனால என் தாத்தாவைப் பழி வாங்குறதா நினைச்சுட்டு, என் அம்மா பேருக்கு என்னைப் பெத்துப் போட்டுட்டு, அவங்க ஆசைப்பட்டவனைக் கல்யாணம் பண்ணிட்டுப் போயிட்டாங்க...



"என் அம்மாவோட நடத்தை என் அப்பாவுக்கு என் மேல ஒரு வெறுப்பை வர வைச்சிடுச்சு. அந்த வெறுப் பால நாளடைவுல என்னை வார்த்தையால குத்திக் கிழிக்க ஆரம்பிச்சுட்டாரு. பிறந்ததிலிருந்து பாசம்ன்னா என்னன்னே தெரியாம வளர்ந்த எனக்கு... நான் பருவமடைஞ்சதும் ஒருத்தன் பாசம் காட்டுறேன்னு வந்தான். அதுவும் காதல் என்ற வார்த்தையை யூஸ் பண்ணிக்கிட்டு...

"ஹ்ம்ம்... நானும் அவனோட வார்த்தையில மயங்கி என்னையே கொடுத்தேன். அதுக்குப் பரிசா என் வயித்துல ஒரு பிள்ளையைக் கொடுத்துட்டு அவன் ஓடிப் போயிட்டான். விஷயம் தெரிஞ்ச என்னோட அப்பா, நானும் என் அம்மா மாதிரிதான்னு கரிச்சுக் கொட்டி வீட்டை விட்டுத் துரத்திட்டாரு. வயித்தில இருக்கிற கரு அழிக்கக்கூடிய காலகட்டத்தை எல்லாம் மீறிடுச்சு. அப்புறம் என்ன செய்ய...?

"தப்பான வழி காட்டுதலால வயிற்றில் பிறந்த பிள்ளையைக் குப்பைத் தொட்டிக்குப் பரிசாக் கொடுத்துட்டு நான் என் வேலையைப் பார்க்க ஆரம்பிச்சுட்டேன். அது நடந்த பத்தே நாள்ல என்னோட அப்பாவும் மாரடைப்பில செத்துப் போயிட்டாரு. அவரோட பொண்ணுங்கிற காரணத் தால அவர் சம்பாதிச்ச சொத்து எல்லாம் என்னோட பேருக்கு வந்துச்சு...

"அப்பாவோட இறுதிக் காரியமெல்லாம் முடிஞ்சதும், என்னோட அவ்வளவு பெரிய வீட்டுல நான் மட்டும் தனியா இருந்தேன். அந்த வீட்டில இருந்த ஒவ்வொரு நாளும் என்னால ஒரு நிமிஷம் கூட நிம்மதியாத் தூங்க முடியலை. என் கண் முன்னாடி அத்தனை பணம் இருந்தும், என்னோட தனிமையை அந்தப் பணத்தால போக்கிக்க முடியல...

"பிறந்தது முதல் தனிமையை அனுபவிச்ச எனக்கு... இந்தத் தனிமை பழக்கப்படல... அதுக்குப் பதில் அந்தத் தனிமை எனக்குப் பயத்தைத்தான் கொடுத்துச்சு... எங்கே இந்தத் தனிமையே என்னைக் கொன்னுடுமோன்னு ஒவ்வொரு நிமிஷமும் நெட்டி முறிச்சேன். நான் தனியா இருந்து யோசிச்சபோதுதான் என்னோட இருபது வருஷ வாழ்க்கை என் கண்ணு முன்னாடி வந்து நின்னுச்சு...

"மனுஷங்களோட மனசைப் புரிஞ்சுக்காம, பணத் துக்குப் பின்னாடி ஓடின என்னோட அப்பா...

"யாரையோ பழி வாங்க என்னை உபயோகிச்ச என்னோட அம்மா...

"உடல் சுகத்துக்காக என்னைப் பயன்படுத்திகிட்ட ஒரு கொடூரக் காதலன்.... அவனைச் சொல்லியும் தப்பில்ல... ஊசி இடம் கொடுக்காம நூல் நுழையுமா?" என்ற ஆதிலட்சுமியின் முகத்தில் வெற்றுப் புன்னகை...

"இப்படி என்னைச் சுத்தி எனக்கு எதுவுமே நல்லதா அமையல, அரசு... எல்லாருமே சுயநலமா இருந்தாங்க....



யோசிச்சுப் பார்த்தா எனக்கு வாழ்க்கையே ஒரு சாபக் கேடாத்தான் இருந்தது, அரசு..."

அவர் குரல் அடைத்தது.

"ஆனா ஆண்டவன் எனக்கொரு வாய்ப்புக் கொடுத்தான். நான் நல்லா வாழ எனக்கொரு பொக் கிஷத்தைக் கொடுத்தான். ஹ்ம்ம்... அதையும் அடுத்தவங்க பேச்சைக் கேட்டுகிட்டுத் தொலைச்சிட்டு தனி மரமா நின்னேன். அன்னிக்கு நான் தனியா நின்னப்போ நம்ம பெரிய ஆயாதான் எனக்குத் துணையா இருந்தாங்க...

"ஆனா, என்னோட தனிமை எனக்கு ஒரு விஷயத்தைப் புரிய வைச்சுது... பெத்தவங்க இருந்தும் அநாதையா இருக்கிற என்னை மாதிரி எத்தனையோ குழந்தைகள்... பிறந்தவுடன் நான் செஞ்ச மாதிரி குப்பைத் தொட்டிக்கு இரையான குழந்தைகள்னு இந்த உலகத்தில எத்தனையோ பேர்... அவங்களுக்கு நான் தாயா இருக் கணும்னு நினைச்சேன்.

"ஒரு குழந்தையை நான் தெரிஞ்சே தொலைச்ச பாவத்துக்கு நூறு குழந்தைகளை வளர்க்க ஆசைப் பட்டேன். அந்த ஆசைதான் இந்தக் காக்கும் கரங்கள்..."

தனது ஐம்பது வருட வாழ்க்கையை அரை மணி நேரத்தில் சொல்லி முடித்தார்.

அவர் சொல்லி முடிக்கும்வரை அவரின் முகத் தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த கவியரசனின் உணர்வுகளை வார்த்தைகளால் வடிக்க முடியவில்லை.

அவன் முகம் உணர்ச்சிகளைக் காட்ட மறுக்க... அமர்ந்த இடத்திலே விரிந்த பார்வையுடன் அமர்ந்திருந் தான்.

அவன் தெய்வமாகப் பூஜித்து வந்த ஆதிலட்சுமி வாழ்க்கையில் இத்தனை அடிகளைத் தாண்டி, இன்று ஒரு தனி மனுஷியாக இத்தனை குழந்தைகளுக்குத் தாயாக இருக்கிறார் என்ற நினைப்பே அவன் நெஞ்சில் பிரமாண்டமாக விரிந்தது.

சில நொடிகளுக்கு முன்னர்வரை தெய்வமாகத் தெரிந்தவர், இப்போது இந்த நொடி அவனுக்குத் தெய்வத் துக்கு மேலாக ஏதேனும் உன்னத சக்தியிருந்தால் அது ஆதிதான் என்ற எண்ணம் அவனுள் எழுந்தது.

அவனின் எண்ணம் அவருக்குப் புரிந்ததோ என்னவோ, அவர் தொடர்ந்தார்.

"அன்னிக்கு நான் பண்ணினது சின்னத் தப்பில்லே, அரசு... பாவம். மிகப் பெரிய பாவம். இன்னிக்கு நான் முந்நூறு குழந்தைகளுக்குத் தாயா இருந்தாலும், அன்னிக்கி நான் தொலைத்த என்னோட குழந்தையை என்னால திருப்பிக் கொடுக்கவே முடியலை... நம்ம விடுதியில் இப்போ இருக்கிற இந்தக் குழந்தைகளின் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் என்னை அறியாமலே எனக்குள்ள ஒரு குற்ற வுணர்வு எழுது... இந்த உணர்வு நான் சாகுறவரைக்கும் போகாது, அரசு..." என்றவர் கண்கள் சற்று ஈரமாயின.

"ஆதிம்மா...!" அவர் கண்கள் ஈரமானதைப் பொறுத்துக் கொள்ள முடியாத கவியரசன், அவர் முன்னே



வந்து அவரைத் தன் தோளோடு அணைத்துக் கொண்டான்.

"ப்ளீஸ் ஆதிம்மா... நீங்க அழவே கூடாது. நீங்க குற்ற வுணர்வில் இருக்க வேண்டிய அவசியமே இல்ல, ஆதிம்மா... இத்தனை குழந்தைகளோட வாழ்க்கையை மீட்டுக் கொடுத்த உங்களோட குழந்தை நிச்சயம் எங் காவது நல்ல நிலையில் இருக்கும்மா... நீங்க தயவு செஞ்சு வருத்தப்படாதீங்க..." - அவரைத் தேற்ற ஆறுத லாகப் பேச...

"இல்ல, அரசு... பெத்தவங்க செஞ்ச பாவம் பிள்ளைகளைத்தான் சேரும்னு சொல்வாங்க. அந்த மாதிரி நான் என்னோட அம்மாவோ, அப்பாவோ செஞ்ச பாவம் என்னைப் பழி வாங்கிச்சு. அதே மாதிரி அன்னிக்கு நான் செஞ்ச பாவமும் நிச்சயம் என் பிள்ளையைப் பாதிக்கும். எனக்கு நல்லாத் தெரியும்..." எனக் குழந்தை யாக ஆதிலட்சுமி கண்ணீர் சிந்த...

அதைப் பொறுக்காத கவியரசன், "ஆதிம்மா... ஆதிம்மா..." எனக் குரலை உயர்த்த, அவன் குரலுக்குத் தலை நிமிர்த்த...

"இதோ பாருங்க, ஆதிம்மா... நீங்க செஞ்சதுல எது வுமே தப்பில்ல. அந்த வயசுல யாரோட வழிகாட்டுதலும் இல்லாம நீங்க எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பீங்கன்னு என்னால நல்லாப் புரிஞ்சுக்க முடியுது. அன்னிக்கு நீங்க இருந்த நிலைமையில வேற யாரா இருந்தாலும்

அப்படித்தான் நடந்துப்பாங்க. இதுல நீங்க குற்ற வுணர்வோட இருக்கிறதில எந்த நியாயமுமில்லை.

"உங்களோட இந்த நிலைமைக்கு முழுக்க முழுக்க உங்களைப் பெத்தவங்க கிட்டத்தான் தப்பிருக்கு. அவங்க மட்டும் உங்களுக்கு நல்ல பெத்தவங்களா இருந்திருந்தா நீங்க இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதில்லை, ஆதிம்மா... சொல்லப் போனா, இந்த வயசில தனி மனுஷியா நீங்க இத்தனை பேரோட வாழ்க்கையில ஒளி கொடுத் திருக்கீங்க. எங்களோட பிரார்த்தனை நிச்சயம் உங்க குழந்தையை நல்லா வைச்சிருக்கும், ஆதிம்மா..." - தனக்குப் பாசத்தை உணர்த்திய ஜீவன் இன்று கலங்கி நிற்பதைப் பார்க்க முடியாமல் அவன் சமாதானம் சொல்ல...

"நிஜமாவா, அரசு... என் மேல எந்தத் தப்பு மில்லையா?" அவர் குழந்தையாகக் கேட்க...

"நிச்சயமா, ஆதிம்மா... இதுல உங்க மேல துளிக்கூடத் தப்பில்லை. உங்களைச் சுத்தி எத்தனை சுயநலவாதிகள் இருந்திருக்காங்க... அத்தனை பேர் கிட்ட இருந்தும் தப்பிச்சு இன்னிக்கு நீங்க இப்படி ஒரு நிலைமையில இருக்கீங்களே... நிச்சயமா உங்க மேல எந்தத் தப்புமில்லை, ஆதிம்மா..." - அவன் சொன்ன வார்த்தைகளிலே அவர் தரப்பு நியாயத்தைப் பிடித்துக் கொண்டார்.

"அப்படியா, அரசு... அப்போ என் மேல நூறு சதவீதம் எந்தத் தப்புமில்லையா?" - அவர் மீண்டும் உறுதிப் படுத்திக் கொள்ளக் கேட்க...



"இருநூறு சதவீதம், ஆதிம்மா..." - அவன் அடித்துச் சொல்ல...

"ஹ்ம்ம்... இப்போ எனக்கு நிம்மதியா இருக்கு, அரசு... இத்தனை வருஷமா இதை நான் மனசுல நினைச்சு நினைச்சு வருத்தப்படாத நாளில்லை. இந்த விஷயம் நம்ம ஆயாவைத் தவிர வேற யாருக்கும் தெரியாது. இன்னிக்கு உன்கிட்ட சொன்னதும், மனசு கொஞ்சம் ரிலீஃபா இருக்கு..." என்றதும், அரசு அவன் இடத்தில் அமரப் போக...

"வா அரசு... மண்டபம் போலாம். எனக்கு மனசு ஏதோ பாரம் இறங்கின மாதிரி இருக்கு... கொஞ்ச நேரம் அங்க தியானம் பண்ணினா சரியா இருக்கும்..." என்க... அவனுக்கும் இப்போது மன அமைதி தேவைப்பட்டது.

இருவரும் விடுதியின் நடைபாதையில் நடக்க... நடுவில் வந்த குழந்தைகளையும், பெரியவர்களையும் நலம் விசாரித்தவாறு வந்த கவியரசனும், ஆதிலட்சுமியும் விடுதியின் தியான மண்டபத்திற்குள் நுழைந்தனர்.

இருவரும் சம்மணமிட்டு அமர்ந்து, கண்களை மூடி, ஆழ்ந்த மூச்சுகளை உள்ளிழுத்து வெளியிட்டு, நினைவுகளை ஒரு நிலைப்படுத்தினர்.

கவியரசன் மனதில் தனக்கு விடுதியில் சொல்லிக் கொடுத்த ஸ்லோகங்களைச் சொல்லி மனதையும், மூளை யையும் ஒன்று சேர்க்க முயற்சித்துக் கொண்டிருந்தான்.

கவியரசனால் இரண்டு நிமிடங்களுக்கு மேல் அவனின் மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அவன் கண் முன்னே ஆதிராவின் முகம் வந்தது.

அன்று ஒரு நாள் அவள் பால்கனியில்... கண்ணீர்க் கண்களுடன் நின்றது, இப்போதும் அவன் கண் மூடியிருந்தும் அவன் முன்னால் வந்தது.

அன்று அவள் கால்கள் உயர்த்தி நின்றதை என்னவோ ஏதோவென நினைத்தவன் நேற்று நடந்த சம்பவத்தில்தான் அவள் தற்கொலைக்கு முயன்றிருக் கிறாள் என்பதை யூகித்தான்.

அன்று மட்டும் அந்த நொடி அவளை இவன் அழைக்காமல் இருந்திருந்தால்...

மூடியிருந்த கவியின் கண்கள் பட்டெனத் திறந்தன.

கண் திறந்ததும் எதிரில் இருந்த ஆதிலட்சுமியைப் பார்த்ததும், அவரின் வாழ்க்கையும் அவன் கண் முன்னே விரிந்தது.

இரண்டு பேரின் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்த கவியின் மனம் குழம்பிப் போனது.

ஒரு தாயாய்த் தன்னை வளர்த்த ஆதிலட்சுமியின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை ஏற்றுக் கொள்ள முடிந்த அவனால்... ஏன் ஆதிராவின் வாழ்க்கையில் நடந்ததை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதை அவனால் பிரித்தறிய முடியவில்லை.

தான் எந்த விதத்தில் யோசிக்கிறோம், தனக்கு ஆதிராவின் மீது எதனால் கோபம் என்றும் அவனால் அவனையே புரிந்து கொள்ள முடியவில்லை.



அவனின் மேல் அவனுக்குப் பல கேள்விகள் எழவே, அக்கேள்விகளுக்கு விடையைத் தேடியவனுக்குக் கண் முன்னே ஆதிலட்சுமிதான் தெரிந்தார்.

அவனின் தேடலை உணர்ந்து கொண்டாரோ, அல்லது அவரின் தியானத்தை முடித்துக் கொண்டு கண் திறந்தாரோ...

ஆதிலட்சுமி கண் திறந்து எழுந்தவர், தியான மண்டபத்தை விட்டு வெளியே வந்து புல் தரையில் நடக்க... கவியரசனும் அவர் பின்னே தொடர்ந்தான்.

அவனின் பொறுமை நொடிக்கு நொடி போய்க் கொண்டிருப்பது அவனின் நடையில் தெரிந்தாலும், லட்சுமி அவனிடம், "என்ன அரசு... ஒரு மாதிரி இருக்க?" என்றவர்,

அவன் பதிலைக் கூட எதிர்பார்க்காமல், "அட... நீ ஆதிராவைப் பற்றிக் கேட்டேல்ல... நான் பாரு... உன்னோட லைஃபை பத்திப் பேசாமல் என்னோட பழைய கதையைப் பத்திப் பேசி உன்னோட டைம் வேஸ்ட் பண்ணிட்டேன். வா, அரசு... வந்து இப்படி உட்காரு. எல்லாம் பேசிடலாம்..." என ஒரு மரப்பெஞ்சைக் காட்டி அவனை அதில் அமர வைத்துத் தானும் அவனுடன் அமர்ந்து கொண்டார்.

"இப்போ கேளு, அரசு... உன்னோட முதல் கேள்வி... ஹ்ம்ம்... நடத்தை தவறிய ஆதிராவை ஏன் உனக்குக் கல்யாணம் பண்ணி வைச்சேன்னுதானே?" - அவர் முடிக்கக் கூட இல்லை.

அதற்குள், "நோ ஆதிம்மா... நோ. ப்ளீஸ்... என்னோட ஆதியை அப்படியெல்லாம் சொல்லாதீங்க..." எனக் குரல் உயர்த்தி ஆவேசமாய்க் கத்தினான்.

## 13

**அ**வன் கத்தலில் உதட்டில் மெல்லிய புன்னகையைப் பூசிக் கொண்ட லட்சுமி மௌனமாக அமர்ந்திருந்தார்.

அவன் இன்னமும் தன் மனைவியின் மேல் அதீதக் காதலில் இருக்கிறான் என்பது அவனின் இந்த ஆவேசத்தில் தெரிந்தது.

இனிமேலும் அவனிடம் ஆதிராவின் கடந்த காலத்தைப் பற்றி மறைப்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்தவர், கவியின் தோளில் கை வைத்தார்.

அதில் உணர்ச்சி பெற்றதன் அடையாளமாய் அவனது தோள்கள் ஒரு முறை இறுகித் தளர்ந்தன.

"அரசு, வாழ்க்கை ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு மாதிரி அமையுது. ஒருத்தருக்கு வரமா, ஒரு சிலருக்கு சாபமா... நானும் ஆதிராவும் அதில் இரண்டாவது ரகம்...

"எல்லாருக்கும் எல்லாமும் கிடைப்பதில்லை. கிடைச்சவங்க எல்லாரும் சந்தோஷமா இருக்காங்கன்னும் சொல்ல முடியாது..." என்று ஆரம்பித்த ஆதிலட்சுமியின் எண்ணங்கள் பின்னோக்கிச் சென்றன.

**நா**ட்டின் தலைநகரான டெல்லி... பல பெருமைகளையும், சில பல சிக்கல்களையும் தாங்கி நிற்கும் மாநகரம் வாகன நெரிசல்களுடனும், மெட்ரோ ரயில்



வேகத்துடனும் அக்காலை வேளையில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

தமிழர்கள் அதிகமாக வசிக்கும் ஆர்.கே. புரத்திலிருக்கும் அடுக்கு மாடிக் குடியிருப்பில் நான்காவது தளத்தில் ப்ளாட் நம்பர் சி-3இன் முன் கதவு அடைக்கப்பட்டிருந்தது.

ஆனால், கதவு அடைத்திருந்தாலும், அதனுள் இருந்து வந்த சத்தம் அத்தளத்தைப் பிளக்கும் அளவிற்கு அலறிக் கொண்டிருந்தது.

அதே தளத்திலிருக்கும் மற்றக் குடியிருப்பு வாசிகள், அந்த ப்ளாட்டைக் கடந்து செல்லும் போது, தானாக அவர்களது கைகள் உயர்ந்து தலையில் அடித்துக் கொண்டும், வெறுப்பான முணுமுணுப்பை உதிர்த்து விட்டுக் கொண்டும் சென்றனர்.

ஆனால் அதே வீட்டிலிருக்கும் படுக்கையறையில் எந்தச் சலனமுமில்லாமல் காதில் ஹெட்போனை மாட்டிக் கொண்டு ஆழ்ந்த நித்திரையிலிருந்தாள் ஆரா என்ற ஆதிரா...

அவளின் நிம்மதியான தூக்கம் காதிலிருந்த ஹெட்போனின் உபயத்தால் கலைந்தது.

கண்களைத் திறக்காமலேயே, "ஹ..லோ..." என்ற ஒரு வார்த்தையைத் தூக்கத்தினூடே வெளியிட...

அதற்குப் பதிலாய், "Hey babe... Where are you... I am in downstairs... its getting late yaa..." என்ற ஆணின் குரல் அவள் தூக்கத்தை முற்றிலும் கலைக்க...

அடித்துப் பிடித்து எழுந்த ஆரா...

"ஹே சுதீப்... Am on my way... will be there within 5 minutes..." என்றவள், காதில் மாட்டியிருந்த ஹெட் போனைக் கழற்றிக் கட்டில் மீது வீசியவள், நேராகக் குளியலறைக்குள் சென்று பல்லைத் துலக்கி, முகத்தை மட்டும் கழுவிவிட்டு வெளியே வந்தாள்.

கண்களையும், உதட்டையும் மைகளாலும், சாயத்தாலும் அலங்கரித்தவள், தான் கலரிங் செய்த முடியைச் சிலுப்பி விட்டுக்கொண்டு தனது ஸ்லிங் பேகைத் தோள் வழியே மார்பின் குறுக்கே போட்டவள், அதில் சில ஃபைல்களை அடக்கி செல்போனையும் எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள்.

"உன்னை மாதிரி ஆம்பளைங்களுக்குப் பெண்ணை அடக்கிப் பார்க்கிறதிலதானே சந்தோஷம்... இத பாரு தேவ்... Am not a slave for you... என்னால உனக்குச் சேவகம் பண்ணிக்கிட்டு இருக்க முடியாது. எனக்கு ஆயிரம் வேலையிருக்கு..." என ஆதிராவின் அன்னை மஞ்சரி கத்திக் கொண்டிருக்க...

"சீ... உன்னை யெல்லாம் மனுஷியா நினைச்சு பேசிக்கிட்டு இருக்கேன் பாரு... Its all my fate..." என மகாதேவன் டைனிங் டேபிள் மேலிருந்த செராமிக் தட்டைக் கீழே தட்டிவிட, அத்தட்டு கீழே விழுந்து சுக்கு நூறாக உடைந்து சிதறியது.

இவர்களுக்குள் நடந்த களேபரத்தைக் கண்டு கொள்ளாமல் நேராக அவள் தந்தையிடம் சென்று, "டேட்... எனக்குக் கொஞ்சம் பணம் வேணும்... இன்னிக்குக் காலேஜ் அட்மிஷன்..." எனத் தகவலைத் தெரிவிக்க...



மகாதேவன் அவர் பர்சிலிருந்து ஒரு கிரெடிட் கார்டை எடுத்து டேபிள் மேல் வைக்க, அதை எடுத்துக் கொண்டு ஆதிரா வெளியே வர,

அவளைத் தொடர்ந்து, "இப்போ எதுக்குப் பிளேட்டைக் கீழே போட்ட... என்ன... சம்பாதிக்கிறேனு திமிரா...?" என்ற மஞ்சரியின் குரல் அவளைத் துரத்த, அதற்குப் பயந்தே நடையின் வேகத்தைக் கூட்டினாள்.

அவர்கள் இருவரும் இருந்த நிலையில் தாங்கள் பெற்ற மகள் எங்கே செல்கிறாள், எதற்குப் பணம் கேட் கிறாள் என்ற எந்தச் சிந்தனையுமில்லாமல் இருவரும் தெரு நாய்கள் போடும் சண்டையைப் போல் குரைத்துக் கொண்டிருந்தனர்.

ஆதிரா லிஃப்ட்டின் உதவியுடன் கீழே வந்து, அவளுக்காகக் காத்திருந்த சுதீப்பிடம், "ஹே... சாரி மேன்..." எனவும்,

"நோ ப்ரோப்ஸ் டியர்... கமான்..." எனவும், ஆதிரா அவனின் யமஹா FZஇல் அமர்ந்து கொள்ள, வண்டி அசுர வேகத்தில் பறந்தது.

சுதீபும், ஆதிராவும் பள்ளித் தோழர்கள்... சுதீப் அவளின் உயிர் நண்பன்...

மேல் குறிப்பிட்ட வகையில் ஆதிராவின் பெற்றோர் தினமும் ஒரு சண்டையுடன் அன்றைய விடியலை ஆரம்

பிக்க, சின்ன வயதிலிருந்து ஒவ்வொரு நாளும் அதைப் பார்த்துப் பார்த்து வளர்ந்த ஆதிராவுக்கு ஒரே சந்தோஷம் அவள் பள்ளிக்குச் செல்வதே...

வீட்டிலிருந்து வெளி வருவதை ஏதோ விடுதலை பெற்ற உணர்வாய் நினைப்பவள், பள்ளியில்தான் அவளின் சிறகு விரியும்...

ஆதிராவிற்கு நட்பின் வட்டாரம் பெரிது.

ஆண், பெண்ணென்று எந்த வரையறையுமில் லாமல், ஹாய் சொன்னாலே, தன் நட்பின் லிஸ்ட்டில் சேர்த்துக் கொள்ளும் ரகம்.

டெல்லியின் புகழ் பெற்ற கல்லூரி வாசலில் சுதீப்பின் வண்டி நிற்க, இருவரும் அதனுள் சென்றனர்.

அவர்களைப் போல இன்னமும் பல மாணவர்கள் அவர்கள் பெற்றோர்களுடன் வந்திருக்க, சுதீப்பின் அன்னையும் சற்று நேரத்தில் அவர் காரில் வந்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கல்லூரிச் சேர்க்கைக் கான அறிவிப்பு வெளியாக, ஆதிரா அட்மிஷன் ஃபார்மைப் பூர்த்தி செய்து, அவளின் கையெழுத்தைப் போட்டுக் கீழே, ‘பேரண்ட்ஸ் சிக்னேச்சர்’ என்ற இடத்தில் அவளின் தந்தையின் கையெழுத்தையும் போட்டு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தாள்.

சற்று நேரத்தில் ஒவ்வொருவரின் பெயரையும் மைக்கில் அழைக்க, அவர்கள் சென்று பணத்தைக் கட்டிவிட்டுக் கல்லூரியில் சேர்க்கப்பட்டதற்கான படிவத்



தைப் பெற்றுக் கொண்டு, தங்கள் பெற்றோர்களுடன் சென்று கொண்டிருந்தனர்.

ஆதிராவின் முறையும் வர, அவளும் பணத்திற்குப் பதிலாகக் காலையில் அவள் தந்தை கொடுத்த கார்டை வைத்துப் பணம் கட்டிக் கல்லூரியில் சேர்ந்தாள்.

ஆதிராவைத் தொடர்ந்து சுதீபின் முறை வர, அவனின் வேலை முடிந்ததும் அவனின் அன்னை அங்கிருந்து கிளம்பிச் சென்று விட்டார்.

தங்கள் கையிலிருந்த சேர்க்கைப் படிவத்தைப் பார்த்து இருவரும் தங்களுக்குள் ஹை-ஃபை கொடுத்துக் கொள்ள,

அதைத் தொடர்ந்து சுதீப், “ஆரா... வீ நீட் டு செலிபிரேட் திஸ்... சொல்லு, எங்கே போகலாம்...?” என உற்சாகமாகக் கேட்க...

“நிச்சயமா இதை செலிபிரேட் பண்ணியேதான் ஆகணும், சுதீப்... நம்ம எடுத்த மார்க்குக்கு நமக்குக் காலேஜ்ல இடம் கிடைச்சதே பெருசுதானே...”

“ஹா ஹா... எல்லாம் பணம்மா... பணம்...” எனக் கட்டை விரலை ஆள்காட்டி விரலால் தேய்த்து, அவன் சொல்ல, அதற்கு ஆமோதிப்பாகத் தலையாட்டிய ஆரா,

“ஓ.கே... லெட்ஸ் கோ... நான் இப்போவே அக்கான்ஷா, இஷான்க்கு கால் பண்ணி Skooterக்கு வரச் சொல்லிடறேன்...” என்றதும், மீண்டும் சுதீப்பின் வண்டி வேகமெடுத்தது.

பப்பில் ஆரா, சுதீப், அக்கான்ஷா, இஷான் போக இன்னும் சில நண்பர்கள் கூடி அரட்டை அடிக்க ஆரம்பிக்க, ஆண்கள் ஹாட் லிக்கருடனும், பெண்கள் கையில் வோட்கா மற்றும் வைனுடனும் அமர்ந்து கொண்டனர்.

அந்த பப்பில் மற்ற ஆண்கள் போதை தலைக் கேறித் தாங்கள் அழைத்து வந்த பெண்களுடன் உல்லாச நடனமாடத் துவங்க, ஆதிராவின் குழுவும் ஜோடியாகக் களத்தில் இறங்கியது.

ஆதிரா கையில் வைனுடன் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

வெகு நேரம் தொடர்ந்த நடனத்தின் மத்தியில் அவளருகில் வந்த இஷான், "ஹே ஆரா... கமான்... லெட்ஸ் டான்ஸ்..." எனக் கை நீட்டியவனின் தலை தாறுமாறாகப் போதையில் ஆடியது.

"நோ இஷான்... நான் வரல... யூ கைஸ் ராக் தி ஃப்ளோர்..." என சிரித்தவாறு மறுக்க...

"ஹே கமான்..." அவள் கையைப் பிடித்திழுத்தவன், அவள் உடலைத் தன் கையால் தழுவி ஆட ஆரம்பிக்க, அவனின் இச்செயலைத் தடுத்து அவனைத் தள்ளிவிட, போதையிலிருந்தவன் கீழே விழுந்தான்.

நொடியில் அங்கிருந்தவர்களுக்கு நடந்தது புரிய, சுதீப், "இவனுக்குப் போதை தலைக்கேறிடுச்சுன்னா என்ன பண்றான்னே தெரியாது... ஆரா தான் டான்ஸ் ஆட மாட்டால்ல..." என அக்கான்ஷாவிடம் குறையாக அறிவிக்க...



அங்கிருந்த பௌன்சர்கள் இஷானை இழுத்துச் சென்று சோபாவில் கிடத்த, ஆரா தள்ளி விட்டதில், இஷான் அந்தப் போதையிலும் கண்ட வார்த்தையைப் பேசி ஆதிராவைத் திட்டிக் கொண்டிருக்க... ஆதிரா அமைதியாக இன்னொரு இடத்தில் அமர்ந்து கொண்டாள்.

அதன் பின்னரும்கூட நடுநிசிவரை அவர்களின் ஆட்டமும் பாட்டமும் தொடர்ந்தது...

ஒரு வழியாக அவர்களின் ஆட்டம் முடிவுக்கு வர, நண்பர்கள் கலைந்து அவரவர் வீட்டுக்குப் புறப்பட, ஆதிராவும் சுதீப்புடன் மீண்டும் பயணத்தைத் துவக்கினாள்.

அவள் அமைதியாக வரவும், சுதீப், "ஆரா... இன்னமும் அந்த இஷான் திட்டினதை மனசில நினைச் சுட்டு இருக்கியா... ஜஸ்ட் ஃபர்கெட் இட் மேன்... அவன் ஒரு லூசு... அவனைப் பத்தித்தான் உனக்குத் தெரியுமில்ல..." எனச் சமாதானம் சொல்ல...

"நோ சுதீப்... நான் அதுக்கு ஃபீல் பண்ணல... எனக்கு இப்போ வீட்டுக்குப் போகத்தான் பிடிக்கல... I feel disgusting..." என அருவருத்த குரலில் சொல்ல...

சுதீப்புக்குத் தெரியும், அவள் ஏன் இப்படித் தயங்கு கிறாளென்று...

"ஆரா... நீ வேணா என்னோட வீட்டுக்கு வாயேன்..." என அழைக்க...

"நோ சுதீப்... ஐ கேன் மேனேஜ்... இதைத்தானே சின்ன வயசிலிருந்து அனுபவிக்கிறேன்..."

அவன் தோளில் சாய்ந்து அதனுடன் அப்பேச்சை முடித்துக் கொண்டாள்.

சுதீப் அவளை அவள் அபார்ட்மெண்ட்டில் இறக்கி விட்டு, "டேக் கேர்..." என்ற அறிவிப்புடன் விடைபெற, ஆதிராவின் கால்கள் அவள் வீட்டிற்கே செல்ல மறுத்தன.

அதற்குக் காரணம் பயமல்ல... வெறுப்பு.

வீட்டிற்குள் சென்றால், அங்கு இப்போது என்ன நடந்து கொண்டிருக்கும் என்பதை அறிந்தவளாயிற்றே...!

அதீத வெறுப்புடன் கால்களை நகர்த்தியவள், இப்போது மின் தூக்கியைப் பயன்படுத்தாது மெல்ல நடந்தாள்.

எவ்வளவு மெதுவாக வந்தும், அவர்கள் வீடு இருக்கும் தளம் வந்துவிட, மிகவும் வெறுமையுடன் வீட்டிற்குள் நுழைய, நுழைந்த கணமே, அவள் காது களில் கேட்ட ஒலி அவளின் உடலைக் கூசச் செய்தது...

நாராசமாக ஒலித்த அந்த ஒலியில் காதைப் பொத்திக் கொண்டு வேகமாகத் தனது படுக்கையறைக்கு வந்தவள்... கதவை அடைத்தும் அந்த ஒலியின் அளவு குறைந்தபாடில்லை...

காலையில் தெரு நாய்களைப் போன்று குரைத்துக் கொண்டிருந்த அவளின் பெற்றோர், இப்போது கூடிக் கொண்டிருந்தார்கள்...

இவர்களா... காலையில் அப்படி அடித்துக் கொண் டிருந்தார்கள் என்ற ஐயம் அவளுக்கு எப்போதும் எழும் ஒன்று...



வயதுக்கு வந்த பெண், காலையில் சென்றவள் என்ன செய்கிறாள், எப்படி இருக்கிறாள் என்ற எந்தக் கவலையுமின்றி இருவரும் தங்களது காம உலகில் சஞ் சரித்துக் கொண்டிருக்க, அந்த வீட்டிலிருப்பதே ஏதோ பாவச் செயலைப் போல் ஆதிராவின் உடல் கூசியது.

ஆதிரா நினைவு வந்தது முதல், இந்தக் கேவ லத்தைச் சகித்துக்கொண்டு இவ்வீட்டில் நடமாடிக் கொண் டிருக்கிறாள்.

பெற்றது முதல் பாசம் என்பதை யாரிடமும் காணா தவள்...

அன்பின் வாசம் அறியாதவள்...

அன்னையின் மடிக்கும், தந்தையின் தலைக் கோதலுக்கும் ஏங்கி ஏங்கித் தினம் தினம் துடிப்பவள்தான் இந்த ஆதிரா...

காலை முதல் மாலைவரை எப்படியாவது ஏதேதோ செய்து, தன் மனநிலையைத் திசை திருப்பும் ஆதிராவுக்கு இந்த இரவைத்தான் எப்படிக் கடத்துவதென்று தெரியாது.

தனிமை அவளைத் தினம் தினம், கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்றது.

தனது இயலாமையால் அறைக்குள்ளிருந்த பொருட் களைத் தூக்கி எறிந்தாள்... தன் கைகளால் தரையைத் தனக்கு வலிக்கும்வரை குத்தினாள்.

அறைக்குள்ளே, "ஓஓஓஓ..."வெனக் கத்தினாள்... கதறினாள்.

என்ன செய்தும் அவளின் கோபம் குறைந்த பாடில்லை.

ஏனென்று கேட்க ஒரு நாதியுமில்லை.

யார் வருவார்...?

பெற்றுப் போட்டவர்கள்தான் அவர்களின் உடல் பசியாற்றிக் கொண்டிருந்தார்களே...!

மனம் முழுவதும் ரணமாகத் துடித்தது அப்பதினெட்டு வயதுப் பதுமைக்கு...

எதுவும் செய்ய முடியாமல் அழுது அழுது ஓய்ந் தவள், தான் உள்ளருந்திய போதையாலோ, இல்லை மன ரணத்தாலோ அவளை அறியாமலே வெற்றுத் தரையில் கண்ணயர்ந்தாள்.

## 14

கல்லூரிக் காலம், மனதில் ஆயிரம் கனவுகளோடு துவங்கும் வாழ்க்கையின் அடுத்த கட்டம்...

எதிர் வரும் எதைப் பற்றியும் கவலைப்படாமல், பள்ளியில் முளைக்காத சிறகுகள் விரிந்து சின்னஞ்சிறு பட்டாம்பூச்சி போல் பறப்பதும் இங்குதான்...

தப்புக்கும் திருத்தத்திற்கும் தொடக்கமும், முடிவும் இங்கேதான்...

ஆதிராவும் வாழ்க்கையின் அடுத்த படியை எட்டி யிருந்தாள்.



புதுக் கல்லூரி, புது நண்பர்கள், புத்தம் புதுச் சூழ் நிலை அவளை நாளுக்கு நாள் மாற்றியது.

அதேபோல் அவளின் மனநிலையிலும் நாளுக்கு நாள் மாற்றம் ஏற்பட்டதை யாரும் கவனிக்கவில்லை.

கல்லூரியில் ஆதிராவுக்கு நட்பின் வட்டம் பெருகி யது.

பணம் மிக எளிதில் கிடைப்பதால் அவளுக்கு அது ஒரு பொருட்டாகவே தெரியவில்லை...

ஆதிராவின் தந்தை மகாதேவன் மிகப் பிரபலமான மென்பொருள் நிறுவனத்தில் பெரிய பதவி வகிக்கிறார்... அவரது மாத வருவாய் கால் கோடிக்குச் சில லட்சங்கள் மட்டுமே குறைவு...

சம்பளம் அதிகம் கிடைப்பதால், வேலையும் அதிகமே... உடல் உழைப்பை விட, மூளைக்குத்தான் அதிக வேலை... அதனால்தான் என்னவோ மனிதருக்குக் குடும்பம், பாசம் என்றால் அர்த்தம் விளங்கவில்லை போலும்!

ஆதிராவின் அன்னைக்குக் கணவன், மகளை விடவும், சமூக சேவையில் நாட்டம் அதிகம்... டெல்லியில் மகளிர் அணியின் பொதுச் செயலாளராக விளங்கும் மஞ்சரி, நாட்டில் பெண்ணுக்கு எதிராக எந்தச் சம்பவம் நடந்தாலும், போர்க் கொடி தூக்கும் வீரமங்கை...

எந்த அரசியல் தலைவர், எந்த வார்த்லதயை விடுவார், அதை வைத்துப் போராட்டத்தைத் துவக்கலாம்

எனப் பெண் குலத்திற்காகத் தன்னையே அர்ப்பணித் திருக்கும் தியாகி...

அந்த வீரத் தமிழச்சிக்கு நாட்டைத் திருத்தக் கிடைத்த நேரத்தில் அரைமணி நேரத்தைக் கூட, மகளுக்காக ஒதுக்க முடியவில்லை.

நினைத்த நேரத்தில் கிடைக்கும் அதிகப்படியான பணம். வரைமுறையில்லாத நட்பு, தவறான வழிகாட்டுதல் என ஆதிராவின் வாழ்க்கை முள் பாதைக்குப் பயணித்துக் கொண்டிருந்தது.

வீட்டிலிருக்கும் பெற்றோர் முகத்தில் விழிப்பதை விடவும், வெளியில் நண்பர்கள் என்ற பெயரில் அவளுடன் ஊர் சுற்றும் தறுதலைகளுடன் உலவுவது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

இப்படியாகக் கல்லூரியில் ஒரு வருடம் ஓடியது.

முதல் வருட செமஸ்டர் விடுமுறை முடிந்து, இரண் டாம் வருடத்திற்கான வகுப்புகள் துவங்கின.

கல்லூரியில் புது வரவாக இருந்தவர்கள், இப்போது சீனியர்கள் என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்தனர்...

முதல் நாள் ஆதிராவின் நண்பர்கள் கூட்டம் பைக் பார்க்கிங்கில் அமர்ந்து கொட்டமடித்துக் கொண்டிருந் தார்கள்.

அப்போது வந்து சேர்ந்தான், முதல் வருட மாணவ னாக அக்ஷய்...



அவனது வகுப்புதான் முதல் வருடம், ஆனால் வயது இருபதைக் கடந்திருந்தது.

பள்ளியில் அட்டெம்ப்ட் வைத்துத் தேர்ச்சி பெற்று இப்போதுதான் கல்லூரியில் இடம் கிடைத்திருக்கிறது...

பைக்கின் சத்தம் காதைப் பிளக்க, உறுமிக் கொண்டு வந்தவனை ஆதிராவின் நண்பர்கள் தடுத்து நிறுத்தினர்.

"அரே ரோகா ரோகா..." என சுதீப் அவனை நிறுத்த, அவனுடன் இஷானும் இணைந்து கொண்டான்.

இஷான் காலையிலேயே மது அருந்தியிருந்தான். சும்மாவே நிதானமில்லாமல் இருக்கும் இஷான், இப்போது உள்ளே சென்றிருக்கும் போதை அவனைத் தலைகால் புரியாமல் ஆட வைத்தது.

"க்ராவதார் ஃபாஸ்டா சான்க தியா... (என்னடா இவ்ளோ ஃபாஸ்டா வர...)" என இஷான் கேட்க.

(இதற்கு மேல் இவர்களின் உரையாடல் அனைத் தும் ஹிந்தி மற்றும் இங்கிலிஷ் கலந்து வரும்படியால் நாம் தமிழிலேயே தெரிந்து கொள்வோம்..)

"ஹே... நீ என்ன ஃபர்ஸ்ட் இயரா...?" சுதீப் கேட்க...

அக்ஷயின் தலை ஆமென்று ஆடியது...

"பார்ரா... ஃபர்ஸ்ட் இயர், ஃபர்ஸ்ட் டேலயே உனக்கு அவ்ளோ திமிரா... வண்டிய விட்டு இறங்கு மேன்... கெட் டவுன்..." என இஷான் அவனைச் சொடுக்கிட்டு இறங்கச் சொல்ல...

அக்ஷய் அவனை முறைத்தவாறு இறங்கினான்...

இங்கே நடப்பவற்றை ஆதிராவும், மற்ற நண்பர்களும் சுவாரசியமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

"உன் பேரென்ன...?" இஷான் கேட்க,

அக்ஷய் முறைத்துக் கொண்டே நின்றிருந்தான்.

"என்னடா முறைக்கிற.... கேட்டதுக்குப் பதில் சொல்லு...?" எனக் கோபமாகக் கேட்கவும், அதற்கும் அவனிடமிருந்து எந்தப் பதிலுமில்லை.

"அடிங்க..." எனக் கையை ஓங்கிய இஷானைச் சுதீப் தான் சமாதானப்படுத்தினான்.

"மச்சி, இவனைச் சும்மா விடக் கூடாதுடா... சீனியர்ஸை மதிக்காம இருக்கிற இவனுக்கு என்னடா பனிஷ்மென்ட் கொடுக்கலாம்..." என இஷான் சுதீப்பிடம் கேட்க...

"சாரி கேட்டுட்டு, சீனியர் போயம் சொல்லிட்டுப் போகச் சொல்லுடா..." என்ற சுதீப், அங்கிருந்த பைக்கின் மீது அமர்ந்து கொண்டான்.

"ஐய... ஆளைப் பார்த்தா ஜிம் பாய் மாதிரி இருக்கான்... இவனுக்கு வெறும் போயம் மட்டுமில்லை... போயமோட சேர்த்து ஆக்ஷனும் பண்ணனும்..."

இஷான் ஒரு முடிவுக்கு வர, பெண்கள் அனைவரும் அவர்கள் செல்போனை எடுத்து ரெடியாக வைத்துக் கொண்டார்கள்... படம் பிடிக்க...!



"ஓ.கே... ஓ.கே... ஸ்டார்ட்..." என இஷானும் இன்னொரு பைக்கின் மீது அமர்ந்து கொண்டான்.

அனைவரும் அவன் சொல்லப் போகும் போயமிற்காகக் காத்திருக்க... அவனோ, அசால்ட்டாக அவன் பைக்கில் ஏறி வண்டியை ஸ்டார்ட் செய்தான்.

கோபம் கொண்ட இஷான்... "ஹே என்னடா திமிரா...?" என அருகில் வந்து அவனது பைக் சாவியைப் பிடுங்க...

அவன் சாவியைப் பிடுங்கியதும் கோபம் கொண்ட அக்ஷய், இஷானின் கன்னத்தில் ஒரு குத்து விட, அங்கே ஒரு பெரிய களேபரம் நடக்கக் காத்திருந்தது.

பெண்கள் அனைவரும் நமக்கு எதற்கு வம்பு எனப் பிரச்சனை நடக்க ஆரம்பித்தபோதே இடத்தைக் காலி செய்திருக்க, ஆதிரா மட்டும் தனது உயிர் தோழனுக்காகக் காத்திருந்தாள்.

அக்ஷய்க்கும், இஷானுக்கும் சண்டை பெருக, அவர்களைத் தடுக்க சுதீப், ஆதிரா மற்றும் பிற நண்பர்கள் போராடினர்.

சண்டை ஒரு கட்டத்திற்கு மேல் முற்றிப் போக, கடைசி நேரத்தில் காலேஜ் செக்யூரிட்டி வந்து மேலிடத்தில் புகார் செய்ய, இஷான், சுதீப், அக்ஷய், ஆதிரா மற்றும் இருவர் என ஆறு பேர் கல்லூரி மேலாளரின் அறையில் தலை குனிந்து அமர்ந்திருந்தனர்.

விசாரணையில் அக்ஷய் புது மாணவன் என்பதால், அவனை ராக் செய்ய முற்பட்ட சுதீப், இஷான், ஆதிரா

மேலும் இரண்டு மாணவர்களின் பெயரில்தான் கல்லூரி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டியதாகியது.

அதுவும் இஷான் குடித்திருப்பது, அனைவருக்கும் சேர்த்து ஆப்பு வைத்தது. ஏற்கெனவே இவர்களின் கான்டக்ட் ரிப்போர்ட் சரியில்லாததால் அவர்களைக் கல்லூரியை விட்டு நீக்கும் அளவிற்குக் கூட நடவடிக்கை எடுக்க அவர்களுக்கு உரிமையிருந்தது.

இருந்தாலும் அவர்களுக்குக் கடைசி ஒரு வாய்ப் பாக அனைவரின் பெற்றோர்களை அடுத்த நாள் வரும் படி முதல்வர் உத்தரவிட்டுச் சென்றார்.

ஆதிராவைத் தவிர, மற்றவர்கள் ஆண்கள் என்ப தால் அவர்களுக்கு இந்த மாதிரி வீர தீரச் செயல்களில் எந்தக் கவலையுமில்லை.

மற்ற இரு நபர்கள், "பை!" சொல்லி விடைபெற, சுதிப், இஷான் மற்றும் ஆதிரா மட்டும் தனித்திருந்தனர்.

ஆதிராவுக்கு இந்தப் பிரச்சனையை எப்படிச் சமா ளிக்கப் போகிறோம் என உள்ளுக்குள் பயம் எழுந்தது...

இவ்வளவு பெரிய பிரச்சனைக்கு இஷான் தான் காரணமென அவளுள் ஆத்திரம் எழ, அந்தக் கோபத்தை அவனிடம் காட்டினாள்.

"எல்லாம் உன்னாலதான்டா... எப்போ பாரு, காலேஜுக்குக் குடிச்சுட்டு வந்து யாரையாவது வம்புக்கு இழுக்க வேண்டியது... இப்போ பாரு, நீ பண்ணின பிரச்சனையால நாங்களும் மாட்டிக்கிட்டோம்!" என அவனைச் சரமாரியாகத் திட்ட,



ஏற்கெனவே கோபத்திலிருந்த இஷான், இப்போது ஆதிரா பேசவும் அவனுக்கும் கோபம் எழுந்தது.

அவளைப் பாரபட்சமில்லாமல் அவனும் திட்ட, ஒரு கட்டத்தில் இஷான் வார்த்தைகளை வீசி அவளைத் தகாத வார்த்தையில் திட்ட, அதில் வெகுண்ட ஆதிரா இஷானின் கன்னத்தில் பளாரென அறைந்தாள்.

குடித்துவிட்டு நிதானமில்லாமல் இருந்த இஷான், இவள் அடித்ததில் சுருண்டு விழுந்தான்.

இவர்களுக்குள் நடந்த இந்தச் சண்டையைக் கல்லூரி மொத்தமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

அவள் அடித்த அடியில் போதை தெளிந்தவன் சுற்றிலும் வேடிக்கை பார்க்க, ஒரு பெண் கையால் அடி வாங்கியது இஷானுக்குப் பெருத்த அவமானமாகத் தெரிந்தது.

அதிலும் தன்னைக் கேலியாகப் பார்க்கும் அழகான பெண்கள் கூட்டம் இவனைப் பார்த்துச் சிரித்து வேறு வைக்க... இஷான் எனும் ஆண் சிங்கம் தலையைச் சிலுப்பிக் கொண்டு எழுந்தது.

ஆனால் அதற்குள் சுதீப் ஆதிராவைச் சமாதானம் செய்து அவ்விடத்தை விட்டு அழைத்துச் சென்றான்.

அன்றைய மாலை சுதீப்புடன் தன் வீட்டுக்கு வந்த ஆதிராவின் முகம் கவலையில் தோய்ந்திருக்க, "ஹே ஆரா, ஏன் ரொம்ப டல்லா இருக்க...?"

"Don't you know சுதீப்...?" - ஆதிரா கவலையாகச் சொல்ல...

"ஹே கமான்... இன்னிக்கு நடந்தது எல்லாம் நம்ம தான் ஏற்கெனவே ஸ்கூல்லயே பண்ணியிருக்கோமே... இதுக்கெல்லாம் போய் ஃபீல் பண்ணிக்கிட்டு..." அவன் அசால்ட்டாகச் சொல்ல...

"என்ன சுதீப், இவ்ளோ கூலா சொல்ற... நம்ம இப்போ மாட்டி யிருக்கிறது ராகிங்ல... அவங்க நினைச் சிருந்தா ஒரே ஒரு கம்ப்ளெய்ன்ட்... நம்ம பேர்ல மட்டும் ஏதாவது கேசாகியிருந்தா நம்ம லைஃப்பே காலியாகி யிருக்கும்... ஏதோ நம்ம பிரின்சி பொழைச்சுப் போகட் டும்னு நமக்கொரு சான்ஸ் கொடுத்திருக்காரு... நாளைக்கு மட்டும் நான் என்னோட பேரண்ட்சைக் கூட்டிட்டு வரல, I can't pursue my studies anymore..." என வருத்தத்துடன் சொல்ல...

"ஹே... ஜஸ்ட் ரிலாக்ஸ் பேபி... நீ ஏதும் வொர்ரி பண்ணிக்காதே ஆரா... எதுக்கும் உன்னோட டேட் கிட்ட ஒரு தடவை கேட்டுப் பாரு... கண்டிப்பா வருவாங்க... அப்பா வந்து, காலேஜுக்குக் கொஞ்சம் டொனேஷன் கொடுத்தா எல்லா ப்ராப்ளமும் சால்வாகிடும்..." என சுதீப் தேற்றி, அவளை அனுப்பி வைக்க, அவன் கொடுத்த தைரியத்தில் அந்த இரவைக் கழித்தாள்.

அடுத்த நாள் காலை வழக்கம் போல் தாய் தந்தையின் கத்தலோடு விடிய, முகத்தில் அதிகப்படியான சலிப்புடன் எழுந்து தயாராகிக் கொண்டிருக்க... ஆதிராவின் காதில் தாயின் வார்த்தைகள் விழுந்தன..

"என்ன பொண்ணைப் பெத்து வைச்சிருக்க... ஸ்கூல்ல இருந்தே இவளோட தினமும் ஏதாவது பிரச்



சனை... இப்போ காலேஜ்ல என்ன பண்ணினாளோ, பிரின்சிபல் கூப்பிட்டு கம்ப்ளெய்ன்ட் பண்றாங்க... எனக்கு வேற வேலை இல்லையா... நான் என்னோட வேலை யைப் பார்ப்பேனா, இல்லை உன்னோட பொண்ணுக்கு கேர் டேக்கர் வேலை பார்ப்பேனா...! ஏன்டா கல்யாணம் பண்ணினோம்னு இருக்கு...

"ச்சே... நீயும் உருப்படி யில்லை, நீ பெத்ததும் உருப்படி யில்லை... எனக்குன்னு வந்து வாய்ச்சிருக் கீங்களே...!" என மஞ்சரியின் குரல் உயர்ந்தது.

அவர் பேசியதின் சாராம்சம் புரிய, 'ஹய்யோ... காலேஜ்ல இருந்து கால் பண்ணிச் சொல்லிட்டாங்க போலவே...' என மனதினுள் நினைத்துக் கொண்டிருந்த ஆதிராவின் எண்ணப் போக்கை மகாதேவனின் குரல் தடுத்தது...

"ஹே என்னடி ரொம்பப் பேசுற... அவளை நானா பெத்தேன்... எனக்குப் பொறந்திருந்தா அவள் ஏன்டி இப்படி இருக்கப் போறா... உன் வயித்துல இருந்து பொறந்துதான் அவ இப்படியிருக்கா... யாருக்குத் தெரி யும்... நீ அவளை எனக்குப் பெத்தியா... இல்ல, அடுத்த வனுக்குப் பெத்தியான்னு..." மகாதேவன் வார்த்தைகளைத் தவற விட...

அதைக் கேட்ட மஞ்சரியை விடவும், ஆதிரா தான் துடித்துப் போனாள்... காதுகள் அவர் சொன்ன வார்த் தையைக் கேட்டுக் கூசிப் போக, உடல் எரிந்ததைப் போல உணர்ந்தாள்.

எந்தப் பெண்தான் தன்னைப் பெற்றவர் வாயால் இந்த வார்த்தைகளைக் கேட்பாள்.

அவளின் கோபமும், ஆற்றாமையும் பெருக, கையில் வைத்திருந்த ரோலிங் சீப்பைத் தூக்கித் தூர வீசினாள்.

அவள் வீசிய வேகத்தில் எதிரிலிருந்த கண்ணாடி யில் கீறல் விட்டது.

அதே கோபத்துடன், தன் பையை எடுத்துக் கொண்டு வேகமாக அறையை விட்டு வெளியே வர, அங்கே மஞ்சரி கையில் கிடைத்த பொருட்களை எடுத்துக் கீழே விசிறியடித்துக் கொண்டிருக்க,

இவள் வந்த வேகத்தில் மகாதேவன் மீதிருந்த கோபம் மகளிடம் பாய, கையில் வைத்திருந்த கண்ணாடி டம்ளரை ஆதிராவை நோக்கி வீசினார்.

எதிர்பாராத இந்தத் தாக்குதலின் விளைவால், அக் கண்ணாடிக் குவளை ஆதிராவின் நெற்றியில் பட்டுத் தெறித்து அவளின் வெண்ணிற நெற்றியில் சிவப்புக் கோடை இழுத்தது.

## 15

“இஷான்... ரேகிங் இஸ் அஃபென்சிவ்னு உனக்குத் தெரியாதா...? நீங்க எல்லோரும் அடிக்கடி இதை மறந்துட றீங்கன்னு சொல்லித்தானே காலேஜ் சுற்றிலும் ஹோர்டிங்ஸ் வைச்சிருக்கோம்... அப்படி இருந்தும்



இப்படியெல்லாம் செய்யலாமா...?” முதல்வர் கோபமாகக் கேட்டார்.

அவரது அறையில் இஷானும், தலையில் பெரிய கட்டுடன் ஆதிராவும் நின்று கொண்டிருக்க, இஷானின் தாயார் முதல்வர் எதிரிலிருந்த இருக்கையில் பணிவாக அமர்ந்திருந்தார்.

முதல்வர் கேட்ட கேள்விக்கு இஷானிடமிருந்து எந்தப் பதிலுமில்லாமல் போக, அவன் இதழுக்கிடையில் இருந்த கேலிப் புன்னகையைக் கண்டு... அவர் பேச்சை இஷானின் அன்னையிடம் திருப்பினார்.

“மிஸஸ் சரிதா... உங்க பையனுக்கு கிளாஸ் ட்யூட்டர்கிட்ட இருந்து எந்த நல்ல ரிப்போர்டுமில்லை... காலேஜுக்குக் குடிச்சுட்டு வந்து கலாட்டா பண்ணியிருக் கான்.. இவன் பண்ணியிருக்கற தப்புக்கு ஆன்டி-ராகிங் செல்க்கு ஒரே கால் பண்ணினா இவனோட லைஃபே போயிடும்...

“சரி... ரொம்ப சின்னப் பையனா இருக்கான், அது மட்டுமில்லாம, உங்க ஹஸ்பெண்ட் காலேஜுக்கு ரொம்ப ஹெல்ப் பண்ணியிருக்கார்... அதனாலதான் நான் இப்போ உங்களைக் கூப்பிட்டு வைச்சுப் பேசிக்கிட்டு இருக்கேன்...” எனவும்,

சரிதா, “என்னோட பையன் செஞ்ச தப்புக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன் சார்... இனிமேல் இவன் இந்த மாதிரி நடக்காமல் நான் பார்த்துக்கிறேன்... இந்த ஒரு முறை மட்டும் எக்ஸ்கியூஸ் பண்ணுங்க...”

"எல்லாம் இவன் அப்பாவுக்காகத்தான் மிஸஸ் சரிதா... இனிமேல் இதுபோல நடந்ததுன்னா நான் எதைப் பத்தியும் கவலைப்படாம ஆக்ஷன் எடுக்க வேண்டியதா இருக்கும்..." முதல்வர் அதே கோபத்துடன் சொல்ல...

"இனிமேல் நடக்காது சார்... இஷான், இஷான், க்ஹெத் புச்சே..." என்று உறுதியுடன் சொன்ன சரிதா, இஷானை நோக்கி, முதல்வரிடம் மன்னிப்பைக் கேட்கச் சொல்ல...

அவனோ அவன் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "ஐ அம் சாரி சார்..." எனவும், சரிதா தனது பேகிலிருந்து ஒரு செக்கை எடுத்து முதல்வரிடம் நீட்ட,

"இது எனக்கில்லை மிஸஸ் சரிதா... அட்மினிஸ்ட்ரேடிவ் செக்ஷன்ல கட்டிடுங்க..." எனவும்,

"தேங்க் யூ சார்..." எனச் சரிதா எழுந்து கொள்ள, இஷானும் அவன் அன்னையின் பின்னால் சென்றான்.

அவர்கள் செல்லவும், "யஹா சப் க்யா ஹை இஷான்...?"

சரிதா கோபமாகக் கேட்கும் குரலும்,

அவருக்கு, "மே மனோரஞ்சன் கேலேகிய தா மாம்..." என்ற இஷானின் குரல் காற்றில் சென்று மறைந்தது.

அவர்கள் சென்றதும் முதல்வரின் பார்வை ஆதிரா விடம் சென்றது.



தப்பு செய்த இஷானைத் தண்டிக்க முடியாமல், கல்லூரியின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட வேண்டிய தன் நிலையையும் நினைத்து வந்த கோபமும், தப்பு செய் தவன், தன்னைக் கேலியாக நோக்கிய கோபமும் சேர்த்துத் தலை குனிந்து நின்ற ஆதிராவின் மேல் பாய்ந்தது.

"வேர் இஸ் யுவர் பேரண்ட்ஸ் ஆதிரா?"

முதல்வர் குரலிலிருந்த கடுமை, ஆதிராவின் உடலை ஒரு நிமிடம் தூக்கிப் போட்டது...

அவரின் குரலிலே திகைத்திருந்த ஆதிராவுக்கு அவளுக்குப் பதில் சொல்ல மூளை வேலை செய்ய வில்லை...

"கேட்கிறேனில்ல... பதில் சொல்லு... உன்னோட பேரண்ட்ஸ் எங்கே...?" என உறும,

"ச... சார்... என்னோட அப்பா... வெளியூர் போயிருக் கார்..." அவள் முடிக்கவில்லை.

"ஏதாவது சில்லி ரீசன் சொல்லிச் சமாளிக்காதே, ஆதிரா... இன்னிக்கு காலையில கூட நான் அவங் களுக்குக் கூப்பிட்டுச் சொன்னேனே... ச்சே... உங்களை மாதிரி பிள்ளைங்களைப் பெத்துட்டு அவங்களால என்ன செய்ய முடியும்... அவங்களுக்குத்தான் தேவையில்லாத அவமானம்..." என ஆதிராவின் பெற்றோரை நினைத்து முதல்வருக்குப் பாவமாகிப் போனது.

"ஆமா... ஆம்பளைப் பசங்ககிட்ட உனக்கென்ன வேலை... மத்தப் பொண்ணுங்கெல்லாம் அவங்கவங்க

வேலையைப் பார்த்துகிட்டு இருக்காங்கதானே... உனக்கு மட்டுமென்ன குடிகாரப் பசங்களோட ஃப்ரெண்ட்ஷிப்...?"

அவர் கோபத்தில் கேட்க, ஆதிராவின் கண்கள் கண்ணீரை உற்பத்தி செய்தன...

"உங்களுக்கெல்லாம் இப்படிப் பேசிட்டு இருக்கக் கூடாது... அண்ட் யூ know வாட்...? ஃப்ரெண்ட்ஸ்க்காகத் தானே நீ அங்க இருந்த... அதே ஃப்ரெண்ட்ஸ்க்காக நீ இப்போ தண்டனையை அனுபவி...! ஐ அம் டிஸ்மிசிங் யூ ஃபார் திஸ் ஹோல் செமஸ்டர் ஆதிரா... நீ எக்ஸாம் அப்போ மட்டும் வந்தாப் போதும்... நீ போகலாம் ஆதிரா..." என முடிக்க,

ஆதிரா திகைப்பான பார்வையுடன் நின்றிருந்தாள்.

'என்ன சொல்கிறார் இவர்... கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் கல்லூரிக்கு வரக் கூடாதாமே...' அவள் காது களில் அவர் சொன்னதையே உள் வாங்கச் சற்று நேரம் பிடித்தது.

அவர் சொன்னதன் அர்த்தம் புரிந்ததும், அவள் நெஞ்சில் ஒரு பயப் பந்து உருண்டது.

'கிட்டத்தட்ட ஆறு மாதங்கள், கல்லூரி எனும் சந்தோஷமில்லாமல், தன் வீட்டில், தனது பேய் போன்ற பெற்றோருடன் ஒரே வீட்டில்... முடியுமா அவளால்...!

'இத்தனை வருடங்கள், நண்பர்கள், பள்ளிக் காலம் என அவள் உலகம் வெளியிலே இருந்தது. பள்ளியில் வரும் விடுமுறைக் காலத்தைக் கூட, ஏதாவது சிறப்பு



வகுப்புகளில் சேர்ந்து பொழுதைப் போக்கும் ஆதிராவுக்கு முழுதாக ஆறு மாதங்கள் வீட்டிலிருக்கச் சொன்னால்...!

'நிச்சயம் அவளை அவள் தனிமை கொன்றே விடும்...'

அதை அவள் நினைத்துக் கொண்டிருக்க...

அவள் தான் சொன்ன பிறகும், அங்கேயே நின்று கொண்டிருந்தது முதல்வரின் கோபத்தை எகிறச் செய்ய, "ஆதிரா... நான் உன்னைப் போகச் சொன்னேன்... யூ கேன் கோ நவ்..." என வெளியே கை காட்ட,

"சார் சார்... ஐ அம் சாரி சார்... இனிமேல் இது மாதிரி நடக்காது... ப்ளீஸ் எக்ஸ்கியூஸ் மீ திஸ் டைம்... இனிமேல் இது மாதிரி எந்தப் பிரச்சனையும் செய்ய மாட்டேன்... என்னை நம்புங்க சார்..." அவள் கெஞ்சல் முதல்வரின் காதில் விழவே யில்லை.

"நோ ஆதிரா... நான் உனக்கொரு சான்ஸ் கொடுத்தேன்... நீ அதைப் பயன்படுத்திக்கல... இதுக்கு மேல ஐ கான்ட் ஹெல்ப் யூ... யூ மே லீவ் நவ்..." எனக் கறாராகச் சொல்ல...

ஆதிராவுக்கு இதற்கு மேல் எப்படி அவரைச் சமாதானம் செய்வதெனப் புரியவில்லை.

எப்படியாவது தனக்கு வரப்போகும் தனிமை யிலிருந்து தப்பிக்க வேண்டுமென்ற ஒரே எண்ணம் மட்டுமே மனதிலிருக்க, முதல்வரின் கோபம் புரியாமல் செயல்பட்டாள்.

"சார்... நான் வேணா டொனேஷன் கட்டிடுறேன் சார்... எவ்ளோ வேணாலும் கட்டறேன்... ப்ளீஸ் சார்... இந்த ஒரு தடவை மட்டும் சான்ஸ் கொடுங்க..."

அவள் பேசப் பேசக் கோபத்தில் சிவந்தன முதல்வரின் கண்கள்.

"ஆதிரா... பார்க்கச் சின்னப் பொண்ணுன்னு இவ்ளோ நேரம் பொறுமையாப் பேசிட்டு இருந்தேன்... இனி ஒரு நிமிஷம் நீ இங்க நின்ன... நான் உன்னை காலேஜை விட்டே சஸ்பென்ட் பண்ண வேண்டியதா வரும்... அதுக்கு அப்புறம் நீ எந்த காலேஜ்லயும் படிக்க முடியாதபடி ராக்கிங் கேஸ் ஃபைல் பண்ணிடுவேன்... சாய்ஸ் இஸ் யுவர்ஸ்..." என்றவருக்குக் கோபம் தலைக்கு மேலேறியது.

இப்போது சென்ற இஷானைத் தவிர, இதற்கு முன்னர் வந்த மீதி மூன்று பேரும், ஆதிராவின் உயிர் நண்பன் சுதீப் உட்பட அனைவரும் அவரவர் அன்னை மாருடன் வந்து, அவரவர்களுக்குத் தகுந்தபடி, பெருந் தொகையைக் கட்டி, இப்பிரச்சனையிலிருந்து தப்பித்து விட்டனர்.

ஆதிராவும் அவள் பெற்றோருடன் வந்திருந்தால் அவளும் இதைத்தான் செய்திருக்கக்கூடும்... அவளும் தப்பித்திருப்பாள்!

ஆனால் அவளின் கெட்ட நேரம்... மற்றவர்கள் செய்த தப்பிற்கு, அவர்கள் மேல் காட்ட முடியாத கோபத்தை முதல்வர் ஆதிராவின் மேல் காட்டித் தீர்த்துக்



கொண்டு, அவர் தன் வேலையைப் பார்க்கத் துவங் கினார்.

இதற்கு மேலும் இங்கிருந்தால் தனக்கு எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை என்ற உண்மை புரிய, ஆதிரா அவ்வறையை விட்டு வெளியே வந்தாள்.

வெளியே வந்தவள் மனமும், மூளையும், இனி வரப் போகும் தனிமையை எவ்வாறு தீர்த்துக் கொள்ள முடியும் என்ற கேள்வியே குடைந்து கொண்டிருந்தது.

தினமும், நள்ளிரவு முதல் அடுத்த நாள் காலை வரை அவ் வீட்டில் இருப்பதே நரக வேதனை என்றிருக்க, இனி முழுதாக ஆறு மாதங்கள் அந்த நரகத்தில் இருக்கத் தன்னால் முடியுமா என்ற பயம் அவளைக் கொன்றது.

இத்தனை நாள் நண்பர்கள், பார்ட்டி, டேட்டிங் எனத் தனிமையைப் போக்கிக் கொண்டவளால் இனி எப்படி அதில்லாமல் இருக்க முடியும்...?

இதே யோசனையுடன் நடந்து வந்தவள் எதிரில் சுதீப் இருப்பதைக் கூட உணராமல் நடந்து சென்றாள்.

அவள் வருவதைப் பார்த்த சுதீப் அவளைத் தடுத்து நிறுத்த முயன்றதைக் கூட அவள் கவனிக்கவில்லை.

"ஆரா... ஹே ஆரா... நில்லு... கொஞ்சம் நில்லுன்னு சொல்றேனில்ல..."

அவள் தோளைத் தொட்டுத் தன்புறம் திருப்பியதும் தான் ஆதிரா தன் யோசனையிலிருந்து வெளிவந்தாள்.

"ஆரா... நான் கூப்பிடறது கூடத் தெரியாம என்ன யோசிச்சுகிட்டு வர... ப்ரின்சி என்ன சொன்னார்... அப்பா வராததுக்கு ஏதாவது திட்டினாரா...?"

சுதீப் கேட்டதற்கு அவளிடம் பதிலில்லை.

"ஹே... கேட்கிறேனில்ல... உள்ளே என்னாச்சு...?" அவன் திருப்பித் திருப்பிக் கேட்கவும், ஆதிரா உடைந்து போனாள்.

"சுதீப்... சுதீப்..." என்றவளுக்கு அதற்கு மேல் வார்த்தை வரவில்லை... கண்ணீர் தொண்டையை அடைத்துக் கொண்டது.

இருந்தாலும் நடந்ததைத் தன் உயிர் நண்பனிடம் சொல்ல வேண்டுமல்லவா...!

அடைத்த தொண்டையைச் செருமிக் கொண்டு உள்ளே நடந்ததை விளக்கிச் சொல்ல, கேட்ட சுதீப்பிற்குப் பாவமாகப் போனது.

"ஹே ஆரா... ஜஸ்ட் ரிலாக்ஸ்... நீ எதுக்கும் கவலைப்படாதே... ஜஸ்ட் ஆறு மாசம்தானே... சீக்கிரமா போயிடும்... தினமும் இங்கே காலேஜ் முடிஞ்சதும் நான் உன்னை வந்து கூட்டிட்டுப் போறேன்... அப்புறம் நம்ம ஃப்ரெண்ட்சோட நிறைய பார்ட்டி பண்ணலாம்... சரியா...?"

அவன் சமாதானமாகச் சொன்னாலும், ஆதிரா விற்குள் அவளின் தனிமையை நினைத்துப் பயம் உள் ளுக்குள் உதறியது.

அதைச் சுதீப்பிடம் வெளியிட்டாள்.



"சுதீப்... உனக்கு எங்க வீட்டைப் பத்தித் தெரியாதா... நீ மட்டும் இன்னிக்குக் காலையில வரலைன்னா...! அவ, அந்த ஆள் மேல இருக்கற கோபத்துல என்னை என்ன செஞ்சிருப்பாளோ...

"ஹய்யோ... சும்மாவே அந்தப் பஜாரி ஆடுவா... இந்த விஷயம் தெரிஞ்சுதுன்னா... ஐ அம் வெரி ஸ்கார்ட் டு கோ ஹோம் சுதீப்... நான் வேணா ஏதாவது லேடீஸ் ஹாஸ்டல்ல தங்கிக்கட்டும்மா..." - அவள் மிரட்சியுடன் கேட்க...

சற்று நேரம் யோசித்த சுதீப்பிற்கும் அதுதான் சரியாகப் பட்டது. "நீ சொல்றது சரியான ஐடியா, ஆரா... நீ அப்படியே செய்... நான் நம்ம கேர்ள்ஸ்கிட்ட கேட்டு ஏதாவது அரேஞ்ஜ் பண்றேன்..."

அவள் கலக்கத்திற்கு விரைவில் ஒரு விடை கிடைக்க.. ஆதிராவின் முகத்தில் வெளிச்சம் பரவியது...

வீடெனும் நரகத்திலிருந்து தனக்கொரு விடுதலை கிடைக்கப் போகிறது என்ற பூரிப்பிலும், சந்தோஷத்திலும் வீடு நோக்கிச் சென்றவளின் சந்தோஷம் ஒரு பகல் கூட நீடிக்கவில்லை...

மாலை ஏழு மணியளவில் வீடு வந்த தம்பதி யினர் ஹாலில் அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்த ஆதிராவை நோக்கிக் கோபத்துடன் வந்தனர்.

மகாதேவன் கோபத்துடன், "ஆரா... உன்னைக் காலேஜ்ல இருந்து டிஸ்மிஸ் பண்ணிருக்காங்களா...?" எனக் கேட்க...

அவள் அமைதியாக அமர்ந்திருக்கவும், அப்போது தான் அவள் அமர்ந்திருந்த சோபா அருகில் பெரிய பெட்டி ஒன்றிருப்பதைக் கவனித்த மஞ்சரி மகளை நோக்கி, "ஹே... என்னடி இது...?"

அதற்கு அவளிடமிருந்து பதிலில்லை என்றதும், கோபத்தின் உச்சியிலிருந்த மஞ்சரி, "கேட்கிறேனில்ல... பதில் சொல்லு... என்னது இது...?" குரல் இரைந்தது.

"கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் உனக் கென்ன திமிர்...?" என்ற மஞ்சரி அவள் கையில் வைத் திருந்த ரிமோட்டைப் பிடுங்கித் தூக்கி விசிறி அடிக்க, அது சுவரில் பட்டுச் சில்லுச்சில்லாக நொறுங்கியது.

அன்னையின் இந்தச் செயலில் ஆதிராவின் சினமும் சிலிர்த்தெழ,

"சீ... நீங்க எல்லாம் என்ன மனுஷங்க... என்னைக் கொஞ்சம் கூட நிம்மதியா இருக்க விடமாட்டீங்களா...?" எனக் குரலுயர்த்திக் கத்த...

"உனக்கென்ன இப்போ நிம்மதி கெட்டுடுச்சு... உன்னைப் பெத்த பாவத்துக்கு லட்ச லட்சமாச் செலவு பண்ணிப் படிக்க வெச்சா, நீ உன் இஷ்டத்துக்கு ஆடிக் கிட்டு இருப்பியா...?" மகாதேவனும் கத்த...

"ஓஹோ... இப்போ எப்படி நீதான் என்னைப் பெத்தன்னு கன்ஃபார்மாச்சு... காலையில நான் யாருக்குப் பிறந்தேன்னு உனக்கு டவுட் வந்துச்சே... ஒரு வேளை இப்போ நீ ஆம்பிளைதான்னு தெரிஞ்சுடுச்சா என்ன...?"



அவள் பேசி முடிக்கவில்லை, அவள் கன்னத்தில் மகாதேவனின் ஐந்து விரல்கள் பதிந்திருந்தன...

கன்னம் காந்த, தன்னை அடித்த மகாதேவனை உறுத்து விழித்தவளுக்கு, வலியில் கண்ணீர் ஒரு சொட்டுக் கூட வரவில்லை.

தன் பிறப்பைப் பற்றிக் காலையில் அவ்வளவு அசிங்கமாய்ப் பேசிய பெற்றவனை நன்றாகக் கேட்டு விட்டோமென்று திருப்திதான் வந்தது.

தன் அடிக்குச் சற்றும் அசையாமல் திமிராக நின்றிருந்த மகளின் மீதிருந்த கோபம் மனைவியின் மேல் பாய்ந்தது.

"இங்க பாருடி... இவ எப்படி எல்லாம் பேசுறான்னு... எல்லாம் உன்னாலதான்... பெத்த நீ... பேய் மாதிரி ஆடும் போது, உனக்குப் பொறந்தவளும் அப்படித்தானே பேசுவா... சீ..." எனத் தேவன் கடுகடுக்க...

"என்னடா திமிரா... காலையில நீ பேசினதுக்குத் தான் அவள் பதில் கொடுக்குறா... நல்லா வாங்கிக்கோ... நீ பேசினதுக்கு இன்னும் நல்லா நாலு வார்த்தை கேட் கணும்..."

மஞ்சரியும், அவளின் குரலை உயர்த்த, ஆதிரா விற்கு அந்த இடத்தில் நிற்பதே ஏதோ சாக்கடையில் நனைந்தது போல் உடல் அருவருத்தது.

பெற்றவர்கள் ஒருவருக்கு ஒருவர் தங்களைப் பற்றி எவ்வளவு அசிங்கமாகப் பேச முடியுமோ, அவ்வளவு

அசிங்கமாகத் தங்களைத் தரம் தாழ்த்திப் பேசிக் கொண் டிருந்தனர்.

இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க, அவர்கள் வீட்டுக் கதவு தட்டப்பட, ஆதிராதான் வேகமாகச் சென்று திறந்தாள்.

அவளுக்கு வந்திருப்பது யாரென்று தெரியும்...

தனக்கு விடுதலையை வாங்கிக் கொண்டு வந்தி ருக்கும் சுதீப்பை எதிர்நோக்கிக் காத்திருந்தவளுக்குப் பெற்றோரின் வரவால் அது மறந்தே போனது.

இப்போது கதவு தட்டப்படவும்தான், நினைவு வந்து ஓடிச் சென்று கதவைத் திறந்தாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே சுதீப் தான் வந்திருந் தான்.

அவன் வரவும், திரும்பச் சென்று தன் பெட்டியை நகர்த்திக் கொண்டு நடந்து செல்ல முற்பட்ட ஆதிராவை, மஞ்சரியும், மகாதேவனும் ஒரு சேரத் தடுத்தனர்.

"ஆரா... பெட்டி எடுத்துட்டு எங்கே போற...?" மஞ்சரி கேட்கவும்,

"ஹாஸ்டலுக்கு..." ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விட்டு அவள் நடக்க...

"ஹே நில்லுடி... உனக்கென்ன அவ்வளவு நெஞ் சழுத்தம்... இங்க நாங்க ரெண்டு பேரும் இருக்கோம்... கொஞ்சம் கூட மதிக்காம நீ பாட்டுக்குக் கிளம்பற... எங்களைப் பார்த்தா எப்படித் தெரியுது...?"



"ஹான்... பேயுங்க மாதிரி... நீங்கெல்லாம் மனுஷ ஜென்மங்களே கிடையாது..." அவள் ஆவேசமாகப் பேச, மஞ்சரி அவள் கன்னத்தைப் பதம் பார்த்தார்.

மஞ்சரியின் அடியைப் பார்த்துக் கொண்டிருந்த சுதீப்பிற்குத் திகைப்பாகிப் போனது... அந்த அடியைப் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கே தொண்டை ஒரு நிமிடம் வறண்டு போனதென்றால் ஆதிராவின் நிலை...

சுதீப் கலக்கத்துடன் அவளைப் பார்க்க, அவளோ சற்றும் அசையாமல் நின்றிருந்தாள்... கண்ணில் ஒரு சொட்டுத் தண்ணீரில்லை... காலையிலிருந்து ஆதிரா பல அடிகளை வாங்கிவிட்டாள்.

ஏன்...! இரத்தம் சொட்டச் சொட்ட நின்றபோது கூட அவள் கண்கள் கண்ணீரை உற்பத்தி செய்யவில்லை.

ஆனால், காலையில் முதல்வர் டிஸ்மிஸ் என்றதும், அவள் அழுத அழுகையைச் சொல்ல முடியாது...

இந்த அடியிலிருந்து தப்பிக்கவாவது அவளை இங்கிருந்து அழைத்துச் செல்ல வேண்டுமென அவன் மனதில் தோன்றியது.

ஆனால் அவளின் பெற்றோரை மீறி, அதை எப்படி அவனால் செயல்படுத்த முடியும்...

"இப்போ எங்கடி பெட்டியைக் கட்டிட்டு கிளம்பிட்ட...?" மஞ்சரி அதிலே நிற்க...

"இந்த ஜெயிலிலிருந்து தப்பிச்சுப் போகப் போறேன். நான் ஹாஸ்டலுக்குப் போறேன்... இனி ஒரு நிமிஷம்

இங்கிருந்தா நான் என்ன செய்வேன்னே எனக்குத் தெரியாது...” பேசியவாறு அவள் பெட்டியை நகர்த்த, அதைப் பிடுங்கித் தள்ளிவிட்ட மகாதேவன்...

“உன்னை ஹாஸ்டலில் விட்டா, என்னோட ஸ்டேட்டஸ் என்னாகிறது... எனக்குன்னு இந்த ஊரில நல்ல பேர் இருக்கு... அதை ஏற்கெனவே கொஞ்சம் கொஞ்சமா கெடுத்துக்கிட்டு இருக்கறது பத்தாதா...? இப்போ நீ ஹாஸ்டல் போய், இன்னமும் என் பேரைக் கெடுக்கணுமா...?

“நீ எங்கயும் போக முடியாது ஆதிரா.. வீட்டுக்குள்ளே போ...” - அவர் மிரட்ட, அதைச் சற்றும் கண்டு கொள்ளாமல், ஆதிரா சுதீப்பை நோக்கி நடக்க...

“சுதீப்... இதெல்லாம் உன்னோட வேலையா...? நீதான் அவளுக்கு இப்படியொரு ஐடியா கொடுத்ததா...?” சுதீப்பை நோக்கித் தேவனின் வார்த்தை அம்புகள் பாய்ந்தன.

“நோ... நோ அங்கிள்... ஆராதான்...” அவன் இழுத்தான்.

பாவம்... அவனால்தான் என்ன செய்ய முடியும்... அவனும் அதே பதின் பருவத்திலிருக்கும் பையன்தானே!

ஐம்பதை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் மகாதேவனுக்கே தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பது புரியாதபோது, சுதீப்பால் என்ன செய்து, அல்லது என்ன சொல்லி ஆதிராவை அவர்களிடமிருந்து தப்பித்து அழைத்து வர முடியும்...?



“வேண்டாம், சுதீப்... உனக்கு இந்த வேலையெல்லாம் வேண்டாம்... நீ உன் வீட்டுக்குப் போ... நாங்க பெத்த பிள்ளையைக் கவனிச்சுக்க எங்களுக்குத் தெரியும்... நீ கிளம்பு... ஆரா எங்கயும் வர மாட்டா...” தேவன் இறுக்கமாகச் சொல்ல...

“ஓ.கே. அங்கிள்...” என சுதீப் திரும்பி நடக்க...

“சுதீப்! வெயிட்... நானும் வரேன்... என்னால இங்க ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது சுதீப்... ஐ காண்ட் லிவ் இன் திஸ் ஹெல் எனிமோர்...” ஆரா அவன் பின்னாலே செல்ல...

“ஆரா... ஜஸ்ட் ஸ்டாப்...” மஞ்சரி மகளின் கையைப் பிடித்துச் சோபாவில் தள்ளிவிட்டார்...

“சுதீப்! நீ கிளம்பு... இனிமேல் நீ ஆராவுக்கு இந்த மாதிரி ஏதாவது ஐடியா கொடுத்தேனா, அப்புறம் நான் உன்னோட அப்பாகிட்ட பேச வேண்டியதா வரும்...” மகாதேவன் சொல்ல, அதோடு சுதீப் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

அவனுக்குத் தோழியின் நிலையை நினைத்துப் பாவமாகத்தா னிருந்தது... ஆனால், தோழிக்காகப் பார்த்தால், அவனின் நிலை மோசமாகிவிடும் என்று உணர்ந்தவன், அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்...

அவன் சென்றதும், “ஆரா... ரூமுக்குப் போ...” தேவன் சொல்ல...

“முடியாது... நான் இந்த வீட்டில இருக்க மாட்டேன்...” அவள் வெளியே செல்ல முற்பட...

"சொல்லிக்கிட்டே இருக்கேன்... உனக்கென்ன அவ்வளவு திமிர்..." என்ற தேவன், அவளைத் தரதரவென இழுத்துச் சென்று, அவளது அறையில் தள்ளிக் கதவை இழுத்து மூடி, வெளிப்பக்கமாகப் பூட்டினார்.

தனக்கு இன்று இந்த நரகத்திலிருந்து விடுதலை கிடைத்து விடுமென்ற களிப்பிலிருந்த ஆதிராவின் நிம்மதி அரைமணி நேரத்தில் வடிந்து கானல் நீராகிப் போனது.

அறைக்குள் அடைக்கப்பட்ட ஆதிரா, கோபத்திலும் ஆற்றாமையிலும் கத்திக் கதறினாள்.

முதல் நாளே தனக்கு இந்த நிலையென்றால் இனி வரப் போகும் மீதி நாட்களை எப்படிக் கடத்தப் போகிறோம் என்ற பயம், நெஞ்சில் பூதாகரமாக எழுந்தது.

நெஞ்சில் மூண்ட பயத்துடன் அறையிலிருந்த பொருட்களைத் தூக்கி எறிந்தாள்.

கையில் கிடைத்ததை எல்லாம் போட்டு உடைத்தாள்.

என்ன செய்தும் அவளின் கோபம் போவேனா என்றது...

தனக்கு விடுதலையில்லை என்ற அவளின் ஆசை, நிராசையானதில் அவளது கோபம் வெறியாக மாறியது...

எந்தளவிற்கென்றால், தன்னைத் தானே காயப் படுத்திக் கொள்ளும் அளவிற்கு...!

கீழே சிதறிக் கிடந்த கண்ணாடித் துண்டு ஒன்றை எடுத்துத் தன் கால்களைக் கீறிக் கொண்டாள்.

வலி யெடுத்தது...



ஆனால் அந்த வலி அவள் நெஞ்சின் வலியைக் குறைக்கவில்லை... என்ன செய்வது... என்ன செய்வ தென அறையைச் சுற்றினாள்.

அறையை அங்குமிங்கும் வலம் வந்த ஆதிரா, கோபத்தில் தூக்கி வீசிய பொருளிலிருந்து அவள் கண்ணில் பட்டது அது...!

சில தினங்களுக்கு முன்னர் ஆதிராவும் அவள் நண்பர்களும் ஊருக்குச் சற்று ஒதுக்குப்புறமாக அமைந் திருந்த பப்பிற்குச் சென்றிருந்தனர்.

இஷான் தான் அங்கு அழைத்துச் சென்றிருந்தான்.

அந்த இடத்தில் சில ஆண்களும், பெண்களும் தங்களை மறந்த நிலையில் படுத்திருந்தனர்...

அவர்களைப் பார்த்தாலே தெரிந்தது, அவர்கள் மதுவைத் தவிர்த்து வேறு ஏதோ உட்கொண்டிருக்கிறார்கள் என்று...

ஆதிராவுக்கு ஏனோ அந்த இடம் பிடிக்கவில்லை.

அவள் பல பப்புகளுக்குச் சென்றிருக்கிறாள்... பப்புகளில் ஆண், பெண் வித்தியாசமில்லாமல் ஒன்றாக உருளும் பல பேரைச் சந்தித்திருக்கிறாள்.

ஆனால், ஆதிரா மற்றவர்களைப் போல் நெஞ்சு வரை குடித்துக் கொண்டு தள்ளாடும் ரகமல்ல...!

அவள் பப்புகளில் அருந்தும் ஒரே பானம், ஒயின் மட்டுமே... அதையும் அளவோடு அருந்தும் அவள், மற்றவர்களைப் போல் ஆண்களைக் கட்டிக்கொண்டு

ஆடவும் மாட்டாள். உருளவும் மாட்டாள்... எங்கும் அவள் அளவை மீறியதில்லை... இதை அவள் நண்பர்களும் அறிவர்.

இந்த இஷான் மட்டும், போதை அதிகமாகி விட்டால், இவளிடம் வந்து வம்பு செய்து வாங்கிக் கட்டிக் கொள் வான்.

அப்படியிருக்க, ஆதிராவுக்கு இஷான் அழைத்துச் சென்ற இந்தப் புது இடம் பிடிக்கவில்லை.

இருந்தாலும் அவளுடன் வந்த மற்ற நண்பர்கள் சந்தோஷமாக மது அருந்திக் கொண்டிருக்க, அவர்களைத் தொந்தரவு செய்ய மனமில்லாமல் சுதீப்பிடம் சொல்லி விட்டுச் செல்லலாம் என அவனைத் தேடிக் கொண்டி ருந்தாள்.

அவள் சுதீப்பைத் தேடிக் கொண்டிருந்த நேரத்தில் அந்த இடத்தில் ஏதோ சலசலப்புக் கேட்க, பப்பின் ஊழியர் ஒருவர் ஓடி வந்து போலீஸ் ரெய்டு என அறிவிக்க, அனைவரும் அடித்துப் பிடித்துக் கொண்டு இடத்தைக் காலி செய்தனர்.

ஆதிரா, சுதீப்பைத் தேடி வர, சுதீப்பும் அவளைத் தான் தேடிக் கொண்டிருந்தான்.

"ஹே ஆரா... நீ இங்கயா இருக்க...?" என அவளை நெருங்கியவன்,

"ஆமா சுதீப்... நீ எங்க போனே... அகான்ஷா, இஷான் எல்லாரும் எங்கே...? போலீஸ் வந்துட்டாங்



களாம்... நம்ம உடனே கிளம்பணும்..." அவள் பரபரப் பாகச் சொல்ல...

"நானும் உன்னை அதுக்குத்தான் கூப்பிட வந்தேன். நீ குடிக்கல யில்ல...?" சுதிப் கேட்க,

"இல்ல... எனக்கு இங்க எதுவும் பிடிக்கல..." அவள் முகத்தைச் சுருக்கிச் சொல்ல...

"ஓகே... ஓகே... வா... அங்க ஒரு பேக் டோர் இருக்கு... அது வழியா வெளியே போயிடலாம்... மத்த வங்க எல்லாரும் கார்ல இருக்காங்க..."

அவளிடம் விஷயத்தைப் பகிர்ந்தவாறு தன்னுடன் அழைத்துச் சென்ற சுதீப், அந்த இடத்தை விட்டு வெளியே வந்ததும், ஒரு சின்னப் பொட்டலத்தை அவளின் பேகில் போட்டான்.

ஆதிரா அதைக் கவனித்தாலும், போலீஸ் என்ற பரபரப்பில் அதைக் கண்டு கொள்ளாமல் அவனுடன் நடந்தாள்.

காருக்கு வந்ததும், அகான்ஷாவும், இஷானும் காரின் பின்சீட்டில் தாறுமாறாகப் படுத்திருக்க, அதைப் பார்த்தவள், "என்னது இது சுதீப்... இவங்க என்ன இப்படி யிருக்காங்க...?"

"அதெல்லாம் போகும்போது சொல்றேன்... நீ இப்போ வண்டியை எடு..." அவன் அவசரப்படுத்த...

"ஏன்... நீதானே எப்பவும் ட்ரைவ் பண்ணுவ..."

அவள் குழப்பமாகக் கேட்க...

"ம்ச்... சும்மா கேள்வி கேட்காம வண்டியை எடு, ஆரா... போலீஸ்ல மாட்டினா அவ்வளவுதான்..." அவன் சொன்னதும்தான், இப்போதிருக்கும் சூழ்நிலை புரிய, டிரைவர் இருக்கையில் அமர்ந்த ஆதிரா, உடனே வண்டியை எடுத்தாள்.

சற்று நேரத்தில் அகான்ஷாவிடமிருந்து மெல்லிதான புலம்பல் வெளிப்பட்டது.

அவளின் புலம்பலைக் கண்டுகொண்ட ஆதிரா, "சுதீப்... இவங்க ரெண்டு பேரும் ஏன் இப்படியிருக்காங்க... அவங்க சாதாரணமாக் குடிச்ச மாதிரி தெரியல... என்ன விஷயம்...?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல..." சுதீப் சமாளிக்க...

"ம்ச்... நீ இப்போ சொல்லப் போறியா இல்லையா... சொல்லு சுதீப்..." அவள் வற்புறுத்திக் கேட்கவும்தான் சுதீப் விஷயத்தைச் சொன்னான்.

"ஓ.கே... ஓ.கே... சொல்றேன்... அவங்க ரெண்டு பேரும் ட்ரக்ஸ் எடுத்திருக்காங்க..." சுதீப் சொல்லவும்...

"வாட்ட்ட்...!" அதிர்ச்சியுடன் ஆதிரா வண்டியை நிறுத்தினாள்.

"என்ன சொல்ற... எப்போயிருந்து இவங்களுக்கு இந்தப் பழக்கம்...? ஹே சுதீப்... நீ... நீயுமா...?" அவள் அதே திகைப்புடன் கேட்க...

அவன் அமைதியாக வரவும், "சுதீப்! சொல்லு.. நீயும் எடுத்துக்கிட்டியா...?" அவள் கண்டிப்புடன் கேட்க...



"நோ நோ... பட்... இன்னிக்கு ட்ரை பண்ண லாம்ன்னு நினைச்சேன்... அதுக்குள்ள என்னென்னமோ நடந்துடுச்சு..." அவன் வருத்தமாகச் சொல்லவும்...

"டேய்... உனக்கு இதுல வருத்தமா... கொன்னுடு வேன்... சுதீப்... இட்ஸ் நாட் குட் ஃபார் ஹெல்த்... நீ அதெல்லாம் பண்ணக் கூடாது. சரியா...?" அவள் நண்பனின் மீது கொண்ட அக்கறையில் சொல்ல...

அவன் வெறுமனே, "ம்ம்... ம்ம்..." என்று மண்டையை மட்டும் ஆட்டி வைத்தான்...

அன்றைய நாளுக்குப் பின், ஆதிரா அப்படி ஒரு நிகழ்வு நடந்ததையே மறந்திருந்தாள்.

அன்று சுதீப் அவள் பேக்கில் போட்ட பொருளை அவனும் மறந்துவிட்டான்.

ஆனால் இன்று ஆதிரா கோபத்தில் வீசிய அவள் பேக்கிலிருந்து சிதறிக் கிடந்த பொருட்களின் நடுவே தென்பட்டது அப் பொட்டலம்...

அதைப் பார்த்ததுமே ஆதிராவிற்குப் புரிந்துவிட்டது.

அதைக் கையில் வைத்து யோசித்துக் கொண் டிருந்த ஆதிராவின் காதில், அவள் பெற்றோரின் காட்டுக் கத்தல் காதில் விழுந்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் தரம் தாழ்த்திப் பேசிக் கொண்டிருந்தனர்.

நடுநடுவே மஞ்சரி ஆதிராவையும் அவர்கள் சண்டையில் இழுத்தாள்.

இருவரின் பேச்சும் காதுகளில் சகிக்க முடியாதவை யாக இருக்க, ஆதிரா கையிலிருந்த அந்தப் பொட்டலத் தையே வெறித்துப் பார்த்து நின்றிருந்தாள்.

பின்பு அதனால் ஏற்படும் பின்விளைவுகள் புரிய, "வேண்டாம். தப்பு... இது வேண்டாம்..." என மூளை அறிவுறுத்த, அன்று அந்த பப்பில் கண்ட காட்சிகள் நினைவு வந்தன.

அங்கிருந்த மக்கள் அனைவருமிருந்த நிலை புரிய, மின்சாரத்தைப் பற்றியது போல் அவள் கையில் வைத்திருந்த பொட்டலத்தைக் கட்டில் மீது வீசி விட்டுத் தரையில் தலை வைத்து அமர்ந்து கொண்டாள்.

ஆனால், தேவன் - மஞ்சரியின் பேச்சு ஓயவில்லை.

சாவுக்கு அடிக்கும் தாரை, தப்பட்டைச் சத்தத்தைப் போல், அவள் காதுகளில் அவர்களின் பேய்க் குரலே கேட்டுக் கொண்டிருந்தது.

ஒரு கட்டத்திற்கு மேல், அன்னை தந்தையின் பேச்சு, அவள் தலையில் சம்மட்டியாகத் தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்தது...

கைகள் இரண்டாலும் அவள் காதுகளை அடைத் தாலும், அதையும் மீறி இருவரின் குரல் அவள் காதில் பலமாக ஒலித்தது...

இனித் தாங்க முடியாது...

ஏதாவது செய்... ஏதாவது செய்...!



இவர்கள் பேச்சை இனித் தன்னால் கேட்க முடியா தென மனம் கெஞ்ச, காதுகளை அடைத்திருந்த கையை விலக்கினாள்...

அவள் கைகள் நடுக்கத்துடன் கட்டிலை நெருங்கின.

கைகள் வேர்க்க, விரல்கள் நடுங்க, அப் பொட் டலத்தைப் பற்றினாள்...

அதையே சில நொடிகள் வெறித்துப் பார்த்தவள், சட்டென அப்பொட்டலத்தைப் பிரித்து உள்ளிருந்த மாத் திரையில் இரண்டினை விழுங்கினாள்...

ஒன்று... இரண்டு... மூன்று...

முழுதாகப் பத்து நிமிடங்கள் சென்ற நிலையில் அவள் கண்கள் லேசாகச் செருக ஆரம்பித்தன...

காதுகள் அடைத்தன...

மஞ்சரி மற்றும் மகாதேவனின் பேச்சு மெல்லத் தேய்ந்து போனது...

ஸ்பீக்கர் இருக்குமிடத்தில் செல்போன் மணி அடித் தால் வருமே "ஞ்ஞ்ங்க்க்க்..." என்ற ஒலி... அது போல் அவள் காதுகள் அடைத்தன.

உடல் பறப்பதைப் போலுணர்ந்தாள் ஆதிரா...

தேகமென்று ஒன்றிருப்பதை அவள் உணர வில்லை...

வானில் மிதப்பது போன்றதொரு உணர்வு...

அவள் இப்போதிருந்த நிலையில் அன்னை தந்தையின் பேச்சு கேட்கவில்லை...

காலில் அவள் கீறிய இடத்திலிருந்து வழிந்த இரத்தத்தின் வலி புரியவில்லை...

காலையில், அவள் அன்னை அடித்தது வலிக்கவில்லை...

கல்லூரியில் முதல்வரின் முன் பட்ட அவமானம் தெரியவில்லை...

இப்போது அவளிருப்பது சொர்க்கம் என்பதைச் சுகமாய் உணர்ந்தாள்...

இந்தச் சுகம் இன்னும் இன்னும் வேண்டுமென உடல் கெஞ்சியது...

இதே போல் இன்னும் வரும் நாட்களைக் கழித்தால், இந்த நரகத்திலிருப்பது கூடச் சுகமெனத் தோன்றியது.

அதே உணர்வுடன் அவள் கண்கள் செருகத் தரையில் சரிந்தாள்.

## 16

**கா**தலில் விழுந்த கவிஞர்கள் அவர்களின் காதலின் தீவிரத்தைப் போதைப் பொருட்களுடன் ஒப்பிடுவர்...

காரணம் காதலிலும், போதையிலும் விழுந்தவர்கள் அதிலிருந்து எளிதில் மீள முடியாது...



அது ஒரு புதைகுழி போன்றது... ஒரு தடவை கால்கள் அதில் சிக்கினால் அவ்வளவு சுலபமாக விடுபட முடியாது...

புத்தம் புதுக் காதலர் தங்கள் துணையின் அருகாமையை அதிகம் நாடுவர்...

அதேபோலதான் ஆதிராவின் நிலையும்...

தவறெனத் தெரிந்து செய்த செயலுக்கு அவள் அடிமையாகிப் போனாள்...

மேலும் மேலும் அந்த இன்பத்தில் திளைத்துத் தன் துன்பத்தை மறக்கப் போதையின் துணை நாடினாள்...

அவள் துன்பமாக நினைத்த அவள் பெற்றோரின் காட்டுக் கத்தலை இந்தச் சின்ன மாத்திரை மறக்கச் செய்துவிட்டதே என்று பூரித்தே போனாள்.

இனி என்ன வேண்டும் அவளுக்கு...?

அதையே இனி வரப்போகும் நாட்களுக்குத் துணையாக்கிக் கொண்டாள்...

ஆனால், அது அவ்வளவு எளிதாக நடந்து விடவில்லை...

அவள் நாடும் மருந்து அவ்வளவு சாதாரணமானதா...!

யோசித்துப் பார்த்தாள்.

கிடைத்தது சுதீப்பின் நினைவு...

உடனே அவனுக்குத் தொடர்பு கொண்டு அவனைத் தன் வீட்டில் வந்து அழைத்துக் கொள்ளச் சொல்ல நினைத்து அவனை அழைத்தாள்.

ஆனால் அவனோ தூக்கக் கலக்கத்தில், "ஹலோ!" என்பதற்குள்,

ஆதிராவின் குரல், "சுதீப்... ஐ நீட் டு சீ யூ..." என்க...

அவனோ அதைக் காதிலே வாங்காமல்... "என்ன ஆரா... நேத்து உன்னோட அப்பா உன்னை ரொம்ப திட்டிட்டாரா... டோன்ட் வொர்ரிடா... அவங்க அப்படித் தான்னு உனக்குத் தெரியுமில்ல... அவங்க சொன்னதைக் காதிலே வாங்கிக்காதே..." எனச் சமாதானம் சொல்ல...

"ச்சு... சுதீப்... வேர் ஆர் யூ? நான் உன்னை உடனே பார்க்கணும்... எப்போ வர?"

"ஏன் ஆரா... இஸ் எனிதிங் அர்ஜெண்ட்...?"

"ம்ச்... எப்போ யிருந்து என்கிட்ட கேள்வி கேட்க ஆரம்பிச்ச, சுதீப்... உன்னால இப்போ வர முடியுமா, முடியாதா...?"

"ஓகே... ஓகே... வரேன்... இன்னும் ஹாஃப் அன் ஹவர்ல வரேன்..."

"எதுக்கு ஹாஃப் அன் ஹவர்... அடுத்த சந்துல இருந்து வர்றதுக்கு உனக்கு அரை மணி நேரமா...?" கோபமாக ஆதிரா கேட்க...

"ஹே லூசு... குளிக்க வேண்டாமா... அட்லீஸ்ட் பல்லாவது வெளக்க வேண்டாமா...?"



"நீ இப்போ உடனே வரணும், சுதீப்... அவ்வளவு தான்... கம் சூன்..." என்ற கட்டளையுடன் அவள் போனை வைத்தாள்.

ஆதிரா நேற்றைய ஒரு இரவில் கிடைத்த நிம்மதி யான உறக்கம் தினமும் வேண்டுமென்பதில் மிகத் தீவிர மாக இருந்தாள்...

பிறந்ததிலிருந்து பெற்றவர்களால் எந்த சந்தோ ஷமும் அவளுக்குக் கிடைத்ததில்லை... பணம் என்ற ஒன்றைத் தவிர...!

அப்படியிருக்கையில், நேற்று ஒரு நாளில் சுய நலத்தின் உச்சபட்சப் பிரதிநிதிகளாகத் திகழ்ந்த அவள் பெற்றோரை அவள் அடியோடு வெறுத்தாள்.

நேற்று அவள் தந்தை சொன்ன ஒவ்வொரு வார்த் தையும் அவளைக் குத்தீட்டியாகக் குத்திக் கொன்றது...

அவள் ஹாஸ்டல் போய் விட்டால் அவரின் ஸ்டேட்டஸ் பாதித்து விடுமாமே...!

அப்படியென்றால் மகாதேவனின் அந்தஸ்தைப் பாதுகாக்கும் மிகப் பெரிய கடமை அவரது பெண்ணான ஆதிராவுக்கு உண்டல்லவா...!

அதனாலேயே சுதீப்பை அவள் அழைத்தாள்.

சுதீப் வந்தவுடன் அவன் இவளைப் போனில் அழைக்க, தனது உடையையும், முகத்தையும் சரி செய்து கொண்டு கதவருகே வந்தவள் அதை வேகமாக இழுக்க அது வெளிப் பக்கமாகத் தாழிடப்பட்டிருந்தது.

"ஷிட்..." எனக் கதவைக் காலால் உதைத்தவள் மீண்டும் சுதீப்பிற்கு அழைத்து மேலே வரச் சொன்னாள்.

மேலே வந்தான். அவர்கள் வீட்டுச் சாவி, உள் பக்கத்தில் ஜன்னலோரமாக இருக்குமென்பது அவன் அறிந்ததே...

அதைக் கொண்டு கதவைத் திறந்தவன் திகைத்தே போனான்...

என்னதான் சுதீப், ஆதிராவின் உயிர்த் தோழனாக இருந்தாலும் அவனை இதுவரை அவள் வீட்டுக்கு அழைத்ததில்லை.

தனது பெற்றோரின் குணமறிந்து, எதுவாக இருந் தாலும், அவனிடம் கீழேயே பேசி அனுப்பி விடுவாள்...

சுதீப்பும் அவள் வீட்டுக்குள் வருவதற்கு ஆர்வம் காட்டியதில்லை...

நேற்று அவள் போன் பல முறை அடித்த பிறகும் அவளிடமிருந்து பதில் கிடைக்காமல் மேலே வந்தான்.

ஆனால் நடந்த களேபரத்தில் அவன் அந்த வீட்டின் நிலையைச் சற்றும் கண்டு கொள்ளவில்லை.

ஆனால் இன்றோ, அந்த வீட்டின் நிலையைப் பார்த்ததும் அவனின் முகம் தானாகச் சுழித்தது...

வீட்டில் ஒரு பகுதிகூடச் சுத்தமாக யில்லை... ஹாலில் பல பொருட்கள் உடைந்த நிலையில் இருந்தன.

எந்தப் பொருளும் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை. டைனிங் டேபிளில் உணவுப் பொட்டலங்கள் அப்படியே கிடந்தன.



இந்த வீட்டில் எப்படி இவர்கள் மூன்று பேரும், உண்டு உறங்குகிறார்களோ என அவனுக்கு முதல் சந்தேகம் எழுந்தது.

ஆனால் இப்போதைக்கு அந்தச் சந்தேகத்தை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு ஆதிராவின் அறையைக் கண்டறிந்து கதவைத் திறந்து விட்டான்...

அவன் கதவைத் திறந்ததும் வேகமாக வெளியே வந்த ஆதிரா, அவனின் கையைப் பிடித்துத் தன்னுடன் வெளியே அழைத்துச் சென்றாள்.

அவள் பின்னே வந்த சுதீப்பிற்கு அவளைப் பார்த்ததுமே பாவமாகிப் போனது... நேற்று ஒரே இரவில் அவள் இப்படி உடைந்து போகக்கூடுமென அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

வீட்டின் கீழ்த் தளத்திற்கு அழைத்து வந்தவள், அந்த அபார்ட்மென்ட்டின் பூங்காவிற்குள் நுழைந்த மறு வினாடி சுதீப்பிடம் எந்த முன்னுரையும் இல்லாமல், "சுதீப்... எனக்கு ஸ்டஃப் வேணும்..." எனவும் அவன் திகைத்தே போனான்.

"வாட்ட்ட்...?" அவன் உச்சபட்சத் திகைப்பில் கேட்க...

"ம்ச்... உனக்குப் புரியலையா... எனக்கு ஸ்டஃப் வேணும்... உடனே... நிறையா வேணும்..."

"ஹே... ஆரா... உனக்கென்ன பைத்தியமா... தெரிஞ்சுதான் பேசுறியா...?"

"சுதீப்... ஐ know வாட் ஐ அம் டூயிங்... இன்னமும் நான் பைத்தியமாகல... உன்னால எனக்கு ஏற்பாடு செஞ்சு தர முடியுமா, முடியாதா...?"

"ஹே... நீ எப்படி ஆரா... அதெல்லாம் தப்புன்னு நீதானே சொல்வ... இப்போ நீயே..." சுதீப்பிற்கு இன்னமும் ஆச்சர்யம் விலகவில்லை.

அவன் அவள் தோழியைப் பற்றி அறியாததா...!

இருவரும் சின்ன வயதிலிருந்து ஒன்றாகக் கெட்டவர்கள் ஆயிற்றே...!

ஒரே குட்டையின் இரு மட்டைகளைப் பற்றி ஒருவருக்கு ஒருவர் தெரியாமல் இருக்குமா...?

"ஹய்யோ... நீயும் என்னைக் கேள்வி கேட்டுக் கொல்லாதே சுதீப்... என்னால இங்க... இந்த வீட்டில ஒரு நிமிஷம்கூட இருக்க முடியல... இனிமேலும் இங்க இருந்தேன்னா சத்தியமா நீ சொன்ன மாதிரி சீக்கிரம் எனக்குப் பைத்தியம் பிடிச்சுடும்... பட், அதுக்காக நான் இங்கிருந்து போகவும் மாட்டேன்...

"எனக்கு அவ்வளவு சீக்கிரம் எதுவும் ஆகிடக் கூடாது... நான் இதே மாதிரி சுயநினைவோட இருக்கணும்... இருந்து அந்த ரெண்டு பிசாசுகள் மூஞ்சியில கரியைப் பூசணும்... என்னை அவங்களோட ஸ்டேட்டஸ்க் காகவும், ப்ரெஸ்டீஜ்க்காகவும் யூஸ் பண்ணிக்கிற அவங்களை எப்படியாவது, ஏதாவது வழியில பழி வாங்கணும்... அதுக்கு எனக்கு ஸ்டஃப் வேணும்..." எனக் கண்களில் வெறியுடன் சொல்ல...

"ஆரா... எனக்கு நீ சொல்றது ஒண்ணுமே புரியல... நீ ஏன் திடீர்னு இப்படி முடிவு பண்ணின... நீ லிக்கர் கூட அதிகம் எடுத்ததில்ல... அப்படியிருக்க... வேண்டாம், ஆரா... இட்ஸ் நாட் குட் ஃபார் ஹெல்த்..." அவளின் அறிவுரையை அவளுக்கே எடுத்துரைக்க...



"ம்ச்... சுதீப்... உன்னை எனக்கு இப்போ அட்வைஸ் பண்ணுன்னு கேட்டேனா... உன்னால முடிஞ்சா எனக்கு ஏற்பாடு பண்ணிக் குடு... இல்லைன்னா நான் வேற வழியில பார்த்துக்கிறேன்..." அவள் தீர்மானமாகச் சொல்ல...

சுதீப்தான் அவள் வழிக்கு வர வேண்டியதாகிப் போனது.

முன்னாள் நடந்த சம்பவத்திற்கு முன், வெறும் பொறுப்பில்லாத பெற்றோராக இருந்தவர்களின் சுயநல சுய ரூபம் அவளுக்குப் புரிந்து போனது.

அப்படிப்பட்டவர்களைப் பழிவாங்க வேண்டுமென, அவள் எடுத்த ஆயுதம் 'போதை.'

ம்ம்... அவர்களைப் பழி வாங்குவதாக நினைத்துத் தன்னைத் தானே அழித்துக் கொள்ள முனைந்தாள்...

அதன் பிறகு ஆதிராவுக்கு அவள் ஆசைப்பட்டது தங்கு தடையின்றிக் கிடைக்க ஆரம்பித்தது.

இதுவரை அவர்களின் நட்பு வட்டாரத்தில் ஒரு வரைமுறையுடன் பழகி வந்தவளின் வரைமுறை பறந்தோடியது.

ஏற்கெனவே பெரியதாக இருந்த ஆதிராவின் நட்பு வட்டம் மேலும் மேலும் பெருகியது...

பணத்திற்கு எந்தப் பஞ்சமும் இல்லாமல் இருந்ததால், அவளின் கெட்ட சகவாசத்திற்கும் எந்தத் தடையும் ஏற்படவில்லை.

எலியும், பூனையுமாக இருந்த இஷானும், ஆதிராவும் இப்போது ஒத்த சிந்தனையுடன் நெருங்கிய தோழர்களாகினர்...

சுதீப் இல்லாத பட்சத்தில், ஆதிரா இஷானிடமிருந்து தனக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாகிப் போனது...

அவளுக்குத் தண்டனையாகக் கிடைத்த நாட்களை நண்பர்களுடன் உல்லாசமாகக் கழித்தாள்...

வீட்டில் இருக்கும் நேரத்தை மிக மிகக் குறைத்துக் கொண்டாள்...

அந்தக் குறைந்த நேரத்திலும், அவளின் போதை மாத்திரைகள் உறக்கத்திற்கு உதவின...

கொஞ்சம் கொஞ்சமாக அந்த மாத்திரைகள் கொடுத்த சுகத்திற்கு அடிமையாகிப் போனாள்...

இப்படியாக இரண்டு மாதங்கள் கழிந்தன...

ஆதிராவின் உடலிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

மகாதேவனும், மஞ்சரியும் நல்ல பெற்றோராக இருந்திருந்தால், ஆதிராவின் இந்த மாற்றங்களை ஒரு சில தினங்களிலே கண்டறிந்திருப்பார்கள்...

ஆனால், அவர்களுக்கு அவர்களின் ஊடலுக்கும், கூடலுக்குமே நேரம் சரியாக இருந்தது...

கட்டுப்படுத்த ஆள் இல்லாததும், கேள்வி கேட்காத பெற்றோரும், அவளைப் போலவே அமைந்த நண்பர்கள் கூட்டமும் ஆதிராவின் நிலையை மேலும் மோசமாக்கின.



அதன் விளைவு...

அன்று ஒரு நாள்...

சனிக்கிழமை...

ஆதிராவும், அவள் நண்பர்கள் சுதீப், இஷான், அகான்ஷா, மேலும் ஒரு சிலர் ஒன்று கூடி டேட்டிங் சென்றிருந்தனர்...

அந்த இடம் டெல்லியைத் தள்ளிச் சற்றுத் தொலைவில் இருந்த ரிசார்ட்...

சனிக்கிழமை மாலையிலே துவங்கிய அவர்களின் பார்ட்டி, இரவு வெகு நேரம்வரை தொடர்ந்தது...

அந்த ரிசார்ட்டில் ஏதோ புதிதாகப் பார்ட்டி ஏற்பாடு செய்திருக்க, எங்கும் இளைஞர்களின் பட்டாளமாக இருந்தது.

அதே பட்டாளத்துடன் இவர்களின் கூட்டமும் சேர்ந்து விட, சந்தோஷத்திற்கு எல்லையில்லாமல் இருந்தது.

அங்கிருந்த அனைத்து இளைஞர்களின் மனத்திலும் சொர்க்கம் என்பது இதுதானோ என எண்ண வைக்கும் வகையில் பார்ட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது...

எங்கும் விளக்கொளியும், உடம்பை அதிர வைத்து, காதைப் பிளக்கும் பாட்டுச் சத்தமும், ஆண் பெண் வேறுபாடின்றி ஆடலும், பாடலும், விதவிதமான மதுபாட்டில்களுடன் அந்த இடமே ஜெகஜோதியாகக் காட்சியளித்தது.

ஆதிராவின் குழுவும், கூட்டத்தோடு கூட்டமாக ஒன்று கூடிக் கூத்தடித்தவர்களுக்குப் போதையும் தலைக்கேறிக் கிடந்தது...

ஆதிராவும் போதையில் தத்தளித்து, வானத்தில் மிதந்து கொண்டிருந்தாள்.

பெற்றோர் கத்தலுக்குப் பயந்து சொர்க்கம் என நினைத்து நரகத்திற்குப் பயணித்துக் கொண்டிருக்கிறோம் எனத் தெரியாமலே...

நள்ளிரவைத் தாண்டியும் சென்ற அந்தப் பார்ட்டி, அனைவரும் போதையில் சரியவும், பார்ட்டி களையிழக்க ஆரம்பித்தது...

விளக்கொளி மறைந்து, மதுக் கோப்பைகள் காலி யாகி, ஆண்கள் ஒருபுறம், பெண்கள் ஒருபுறம் எனப் போதையில் சரிந்த நிலையில் ஆதிரா மெதுவாகக் கண் விழித்தாள்.

மெதுவாக எழுந்தவளுக்குத் தலைக்குள் ஏதோ பெரிய பாறாங்கல் இருப்பது போல் கனத்தது...

வாய்க்குள் எச்சில் சுரக்க, வயிற்றுக்குள் எதுவோ புரட்ட, வாந்தி வருவதைப் போல் உணர்ந்தாள்...

மேலும் அவளை இயற்கை அழைக்கவே, மெல்ல மெல்லத் தத்தித் தள்ளாடி எழுந்தவளுக்குத் தான் இருக் கும் இடம் தெரியாமல் குத்துமதிப்பாக நடந்து சென்றாள்.

அவள் கால்கள் இடறின...

தலை சுழன்றது...



உடல் பறந்தது...

ஆனாலும் மெல்ல மெல்லத் தள்ளாடி நடந்தாள்...

அவள் எழுந்த அதே நேரத்தில் இன்னொருவனும் எழுந்தான்...

ஆதிராவைப் பின் தொடர்ந்தான்.

ஆதிரா தான் நடப்பதையே கனவாக நினைத்து நடக்கையில், அவளைப் பின் தொடர்பவனை எப்படி உணர்ந்திருப்பாள்...?

மெல்ல நடந்தவள், ரிசார்ட்டின் ஒரு மூலையில், கண் முன்னே மரக் கதவுகளில் பலகையைக் கொண்டு, 'ரெஸ்ட் ரூம்' என எழுதப்பட்டிருந்த எழுத்துகள் மங்கலாகத் தெரிந்தன...

அது மட்டும்தான் தெரிந்தது..

அதன் பின் ஒருவன் அவளை ஆவேசமாக இழுத் தான். "அடியே... ஏஏஏ... அ...ன்னிக்கு எ...ன்ன அ...டிச்ச...ல்ல..... பாரு.....டி... உன்ன இ...ப்போ... என்ன செய்றேன்னு..." என்ற குரல் குழறலாக ஆதிராவின் காதுகளைத் தீண்ட...

அதன் பின் நடந்தவை எதையும் அவள் உடல் உணரவில்லை...

ஆனால் மனது உணர்ந்தது...

தன்னை எவனோ ஒருவன் நாசம் செய்கிறான் என மனது நன்றாக உணர்ந்தது...

ஆனால் கண்களுக்கு யாரவன் எனப் புலப்பட வில்லை...

அனைத்தும் மங்கலாகப் புகை மூட்டமாகவே தெரிந்தது...

மூளை, “அவனை எப்படியாவது தடு... அடிச்சு விரட்டு...” எனக் கட்டளையை விடுத்தாலும், அதற்கு அவள் அருந்திய போதை ஒத்துழைக்கவில்லை.

கைகள் தன்மேல் இருப்பவனை அடிக்க உயர்ந் தாலும் அந்த அடியில் பலமில்லை...

அவனை எட்டி உதைக்க வேண்டுமெனக் கால்கள் முனைந்தாலும், கால்கள் அந்தரத்தில் பறந்தன...

“டே.....ய் வி..... வி.....டுடா.... விடு....டா நாயே.....

“விடு என்னை... போ....டா..... தள்ளிப் போ....

“ஹே... போ... ஐ...யோ... வலிக்குது....டா....” என அவள் குரல் மட்டும் சுரத்தே இல்லாமல் ஒலிக்க, அவளால் அதற்கு மேல் எதுவும் செய்ய இயலவில்லை...

முடிந்தது...

அனைத்தும் ஒரு சில நிமிடங்களில் முடிந்து போனது...

தன் பெற்றோரைப் பழி வாங்கவென அவள் எடுத்த ஆயுதம் அவளையே பழி வாங்கிவிட்டது.

ஆனால் அதைக்கூட உணராத நிலையில், கண்கள் சுழன்று, மதுவின் போதையிலும், உடலில் ஏற்பட்ட வலியிலும் மயங்கிப் போயிருந்தாள், ஆதிரா.



## 17

அந்த ரிசார்ட் சின்னச் சின்னக் குடில்களைக் கொண்டிருந்தது... குடில்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அமைந் திருக்க, நட்ட நடுவில் பெரிய நீச்சல் குளமும், அதைச் சுற்றிப் புல் தரைகளும் அமைக்கப்பட்டு அங்கு தான் பார்ட்டி நடந்து கொண்டிருந்தது...

ஆதிரா இருந்தது நடுப் பகுதியிலிருந்து சற்றுத் தள்ளி, ஒரு குடிலைத் தாண்டி இருந்த தோட்டப் பகுதியில்...

அழகுக்காக வைக்கப்பட்டிருந்த இடுப்பு உயரச் செடிகளுக்கு மத்தியில், புல் தரையில்... கிழிந்த நாராகக் கிடந்தாள்...

அந்த இடம் ரிசார்ட்டின் பின்பக்கம் என்பதாலும், அங்கிருந்த பெரும்பாலான மக்கள், போதையின் பிடியில் இருந்ததாலும் ஆதிராவின் நிலையை ஒருவரும் கண்டு கொள்ளவில்லை...

ஹோட்டல் ஊழியர்களும், பார்ட்டி என்பதால் யாரும் அங்கு என்ன நடக்கிறது என்பதைக் காணத் தவறினர்...

போதையின் பிடியிலிருந்த ஆதிராவுக்கு, உள் அருந்திய போதை மெல்ல மெல்லத் தெளிய ஆரம் பித்ததும், உடல் வலி பெருகியது...

உடலில் உள்ள ஒவ்வொரு பாகமும் கனலாக எரிந்தது...

கண்கள் திறந்திருந்தும் முன்னால் இருப்பது அனைத்தும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு தாறுமாறாக இருந்த உடைகளைச் சரிசெய்து, பக்கத்திலிருந்த மரத்தைப் பிடித்துச் சிரமப்பட்டு எழுந்து நின்றவளுக்குக் கால்கள் நடக்க மறுத்தன...

வயிற்றிலும் ஏதோ அழுத்துவது போலிருக்க... இரண்டு கைகளாலும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு, "அம்மா..."வெனக் கதறினாள்.

"அம்மா..." என்ற அவளின் அழைப்புக்குச் செவி சாய்க்க அங்கே யாருமேயில்லை...

"அம்மா!" என்றவள் ஆதிராவுக்கு அம்மாவாக நடந்திருந்தால் நிச்சயம் அவளுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டிருக்காது...

கண்களிலிருந்து கண்ணீர் உற்பத்தியானது...

உடலில் ஏற்பட்ட வலியை விடவும், மனதின் வலி தொண்டைக் குழியை அறுத்தது...

கால்கள் நடுங்க, உடலின் மரண வலியைப் பொறுத்துக் கொண்டு நடந்தாள்...

தத்தித் தத்தி நடந்து அவர்கள் புக் செய்திருந்த குடிலுக்குள் செல்வதற்குள் ஆதிராவுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

குடிலுக்குள் நுழைந்த மறு நிமிடம் கதவை அடைத்துக் கொண்டவள் அதே கதவில் சரிந்தமர்ந்தாள்.

அவளின் முகம் இரத்தம் வடிந்து வெளேரென வெளுத்திருந்தது.



அவளின் கண்கள் எதையோ வெறித்துப் பார்த்திருக்க, இமைகள் கூட இமைக்க மறந்திருந்தன...

ஒரு சில நிமிடம்வரை அப்படியே அமர்ந்திருந்தவள், தொண்டை யடைக்க அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

வாயை இரண்டு கைகளால் மூடிக் கொண்டு அழுதாள்... ஆனால் அந்த அழுகை ஒரு சில நொடிகளில் அலறலாக மாற, அவள் கைகளை மீறி, அவளின் அலறல் அந்த அறையை நிறைத்தது.

இரண்டு கைகளாலும் தலையில் வேகவேகமாக அடித்துக் கொண்டவள்... தன் கைகளாலேயே இரண்டு கன்னத்திலும் மாறி மாறி அறைந்து கொண்டாள்.

"ஹய்யோ... ஹய்யோ... ஓஓஓஓஓ..." எனக் கதறியவளுக்கு என்ன செய்வதெனப் புரியவில்லை...

அவள் அடித்த அடியில் அவளின் தங்க நிற மேனி, சிவப்புக் குடைமிளகாயாய்ச் சிவந்தது...

ஏற்கெனவே ரணப்பட்டிருந்த உடல், அவள் தன்னைத் தானே தாக்கிக் கொள்ளவும், உடலால் பாரத்தைத் தாங்க முடியவில்லை.

வலித்தது. ஆனால் அந்த வலி மனதைப் பாதிக்கவில்லை...

அவள் இப்போது எதற்கு அழுகிறாள்...?

உடல் வலியாலா...? இல்லை... பெண்ணிற்குப் பெருமை சேர்க்கும் மானத்தை இழந்ததற்கா...? தெரியவில்லை...!

பெற்றோர் பாசமில்லாமல் தான் தறிகெட்டுப் போய், இப்போது எதிர்காலத்தைத் தொலைத்துக் கொண்டு நிற்கும் நிலைக்காகவா...? புரியவில்லை...

பெண்ணாகப் பிறந்தவள் எதைப் போற்றிப் பாது காக்க வேண்டுமோ அதைத் தொலைத்ததற்கு முழுக் காரணம் அவள் பெற்றோர் இல்லை...

நடந்த அனைத்திற்கும் அவள் மட்டுமே பொறுப்பு... நடந்த அனைத்திற்கும் அவள் ஒருத்தியே காரணகர்த்தா...!

ஆனாலும் அவளுக்கு இது ஏதும் புரியவில்லை...

புரியவில்லை என்பதை விடவும் அவளுக்குத் தெரியவில்லை...

இனி என்ன செய்வது...?

அவளின் மூளை அடுத்து என்ன என்று யோசிக்கும் திறனை இழந்திருந்தது...

பல மணி நேரம் எந்தவித யோசனையுமில்லாமல் இருந்தவளின் நிலையை அந்த அறையின் சுவர்க் கடிகாரம் கலைத்தது...

கடிகாரத்தின் சின்ன முள் நான்கிலும், பெரிய முள் பன்னிரண்டிலும் காட்ட, அதையே பார்த்திருந்தவள் மூளையில் ஒரு கட்டளை பிறந்தது.

முதலில் இந்த இடத்தை விட்டுப் போக வேண்டும் என்ற கட்டளை பிறந்ததும், அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தாள்...



கிழிந்திருந்த தனது உடையைக் களைந்து எறிந் தவள், தான் கொண்டு வந்திருந்த பேக்கிலிருந்து வேறொரு உடை மாற்றிக் கொண்டு தனது உடைமை களையும் எடுத்துக் கொண்டு குடிலை விட்டு வெளியே வந்தாள்...

காட்டுக் கத்தலாக அலறிக் கொண்டு பார்ட்டி நடந்த இடம் இப்போது அமைதிக்குத் தத்துப் பிள்ளையாகியது...

குடிமக்கள் அனைவரும் தூக்கத்தின் பிடியில் இருந்தனர்...

ஆதிரா, தனது உடைமைகளுடன் - சோர்ந்த நடை என்றாலும் - வேகமான எட்டுக்கள் எடுத்து வைத்து ரிசார்ட்டின் வரவேற்புக்கு வந்தாள்...

அங்கு ஹோட்டல் ஊழியர்கள் இரண்டு பேரிருக்க, அந்த நேரத்தில் இவளைப் பார்த்ததும். “எக்ஸ்கியூஸ் மீ மேம்... அப கிசிபி மட்ட கி சருரதி ஹே... (உங்களுக்கு ஏதாவது உதவி வேண்டுமா)?” எனக் கேட்கவும்,

ஆதிராவின் மனதில், “இப்போது நீ உதவி செஞ்சா என்ன, செய்யலைன்னா என்ன...?” என்ற கேள்வி உதித் தாலும்...

“எஸ்... கேன் யூ அரேஞ்ச் சம் கேப் ஃபார் மீ?” எனவும்,

“ஷ்யூர் மேம்...” என போனை எடுத்து அழைக்க, அடுத்து ஐந்து நிமிடத்தில் ஒரு வண்டி ரிசார்ட்டின் போர்டிகோவில் வந்தது...

ஆதிரா வந்தது சுதீப்புடன் என்பதாலும், அவர்கள் ஏற்கெனவே தங்கள் குடிலுக்கான முழுப் பணத்தையும் கட்டிவிட்டதாலும், அந்த ஹோட்டல் ஊழியன் ஆதிராவிடம் வேறு எதையும் விசாரிக்கவில்லை...

வண்டி வந்து நின்றதும் அதில் ஏறிய ஆதிராவிடம் டிரைவர் எங்கே போக வேண்டுமென்று கேட்க, அதற்கு அவளிடம் பதிலில்லை...

பின் ஓட்டுனர் தன் பதிலுக்காகக் காத்திருக்கவும், அப்போதைக்கு அந்த இடத்தை விட்டுப் போக வேண்டும் என்பது மட்டுமே அவளது குறியாக இருக்க, "ஆர்.கே. புரம்..." என்று இடத்தைச் சொல்லிச் சீட்டில் சாய்ந்து கண் மூடினாள்.

கண் மூடியவளுக்கு எண்ணங்கள் எங்கெங்கோ பயணித்தன.

இனி என்ன செய்வது...?

அவளுக்குத் தன்னை நாசப்படுத்தியது யாரென்று நன்றாகவே தெரிந்தது... ஆனாலும் இனி என்ன...?

அவனைப் பழி வாங்க வேண்டுமா...!

அவனைக் கொன்று விடுவோமா...!!

இல்லை, "எனக்கு வாழ்க்கை கொடு..." என அவனிடம் கெஞ்ச வேண்டுமா...?'

இந்த எண்ணம் வந்ததுமே, "ச்சோ சீ சீ..." என்று அவளை மீறி அவளின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன...



எப்படி எப்படியோ யோசித்தவளுக்குச் சாக வேண்டு மென்ற எண்ணம் மட்டும் ஏனோ வரவில்லை... அது வரையிலும் அவள் மூளை நன்றாக வேலை செய்தது...

யோசனையின் முடிவில் வண்டி அவள் அபார்ட் மென்டின் முன் நிற்கவும், வண்டி நின்று ஐந்து நிமிடமான பின்னும், ஆதிராவால் வண்டியை விட்டு இறங்க முடிய வில்லை...

ஓட்டுனர், "மேடம்..." என்று குரல் கொடுத்ததும், நகர மறுத்த தன் கால்களை வலுக்கட்டயமாக நகர்த்திக் கீழே இறங்கியவள், ஓட்டுனர் கேட்ட பணத்தை விட அதிக மாகக் கொடுத்துவிட்டுத் திரும்பினாள்.

அந்த அபார்ட்மென்டில் பெரிய மாற்றம் எதுவும் நிகழவில்லை... அதே கட்டடங்கள்தான்...

ஆனாலும், அவளுக்கு அந்த இடம் ஏதோ நரகத்தின் மறு வீடாய்த் தெரிந்தது...

வீட்டுக்குச் சென்றால் அன்னை, தந்தை என்ன செய்து கொண்டிருப்பார்கள்...?

ஏற்கெனவே ஸ்டேடஸ், ஸ்டேடஸ் என்று ஆடிக் கொண்டிருக்கும் அவளின் தந்தைக்கு நடந்த விஷயங்கள் தெரிந்தால் என்ன செய்வார்...?

பஜாரியாக இருக்கும் அன்னை காட்டேரியாக மாறி விடுவாளோ....?

அந்த நிலையிலும் ஆதிராவுக்கு அவளின் வீட்டிற்குப் போகப் பயமாக இருந்தது...

அவள் வெகு நேரம் அங்கேயே நின்று யோசித்துக் கொண்டிருக்கவும், வாட்ச் மேன் வந்து, "வாட் மேடம்... சஹாரா அந்தர ஜானே...?" எனவும்,

ஆதிராவின் கால்கள் மெல்ல நடந்தன...

எவ்வளவு மெதுவாக வந்தும் அவள் வீடு வந்து விட, மிகுந்த குழப்பத்துடனே வீட்டின் கதவில் கை வைத்தாள்...

கதவு திறக்கவில்லை...

யோசனையாக அவர்கள் சாவி வைக்கும் இடத்தில் தேடியவளுக்குச் சாவி கிடைத்தது...

அதைக் கொண்டு கதவைத் திறந்து உள்ளே வந்து கதவை மூட, கதவின் குமிழில் 'வாய்ஸ் மெயில்' என எழுதப்பட்டிருந்தது...

இது எப்போதும் நடக்குமொன்று...!

பெற்றோர்க்கும், மகளுக்கும் நடக்கும் தகவல் பரிமாற்றம்...

ஹாலின் நடுவிலிருந்த அந்த கார்ட்லெஸ் போனை எடுத்து ஆன் செய்ய, அதிலிருந்து அவள் அன்னையின் குரல் எழுந்தது...

"ஆரா... நானும், உன் டேட்டும் ஒரு மாசம் மலேசியா டூர் போறோம்... தேவோட ஆபீஸ்ல காம்ப்ளிமென்ட்ரி கிஃப்ட் கொடுத்திருக்காங்க... சோ, நாங்க வர்றவரைக்கும் வீட்ல ஒழுங்கா இருக்கணும்..."



"உன் ஃப்ரெண்ட்ஸோட ஊரு சுத்திட்டு இருக்காதே... உனக்குத் தேவையான பணம் உன்னோட அக்கௌண்ட்ல அப்பா ட்ரான்ஸ்ஃபர் பண்ணியிருக்கார்... பி கேர்ஃபுல்... பை..." என்ற வாய்ஸ் மெயில் இருக்க,

ஆதிராவுக்கு அதைக் கேட்டவுடன் ஒரு பக்கம் நிம்மதி எழுந்தது என்றாலும், மனதில் மறு பாதியில் வலித்தது.

இந்த நிலையில் அவள் பெற்றோரைக் காண முடியாமல் போனதில் அவளுக்குப் பெருத்த நிம்மதி.

ஆனாலும், தாங்கள் பெற்ற மகளை இங்கே தனியாக விட்டுவிட்டுத் தம்பதி இருவரும் மலேசியாவிற்குச் சுற்றுப் பயணம் சென்றிருப்பதை நினைத்து, ஆதிராவின் இதழ்களில் இகழ்ச்சிப் புன்னகை அரும்பியது...

எப்படியோ இனி ஒரு மாதத்திற்கு இந்த வீட்டில் அவள் நிம்மதியாக இருக்கலாம் என்ற நினைப்பே அவளுக்குத் தித்தித்தது...

அந்த நிம்மதி ஏனோ நடந்த சம்பவத்தை அப்போதைக்கு மறக்கச் செய்தது...

ஆனால் அது அந்த ஒரு நாள் மட்டுமே...

அந்த நிம்மதியுடன் அந்த ஒரு பொழுதைக் கடந்து விட்டாள்...

இரவும் வந்தது...

அவள் இன்னமும் தனக்கு நடந்திருக்கும் அநியாயத்தை மனதால் உணர மறுத்தாள்...

அவளுள் உணர்வுகள் ஆட்சி செய்யாமல், மூளை தான் அவள் செய்ய வேண்டிய வேலைகளைப் பட்டிய லிட்டுக் கொண்டிருந்தது.

போதைக்கு அடிமையான மூளை, அவளைத் தவ றாக வழி நடத்தியது...

நேற்றைய இதே இரவு அவளுக்கு ஞாபகம் வந்தது...

கூடவே போதையின் நினைப்பும், அதன் பின் நடந்தவைகளும் ஒன்றுக்கு ஒன்று படையெடுத்தது...

நடந்தவைகளை மறக்க வேண்டுமென்று காரணம் பூசி, அந்த இரவைப் போதையில் கழித்தாள்...

அடுத்தடுத்து வந்த நாட்களில் அவளின் தனிமை அவளைக் கொன்றது...

அன்று நடந்த அந்தச் சம்பவத்தால் இரண்டு நாட்கள் சுதீப்பின் நினைவை மறந்திருந்தாள்... இரண்டு நாட்கள் அவளின் போதை நடந்ததை மறக்க உதவியது...

ஆனால் மூன்றாவது நாள், சுதீப்பின் ஞாபகம் வந்தது...

நட்பின் பாசத்தால் அல்ல... போதை கொடுத்த சுகத்தால்...!

அவளுக்குத் தேவையானது இருப்பிலிருந்து தீர்ந்து விட்டதே... அவளுக்கு இன்னமும் தேவைப்பட்டது...

அதற்காகச் சுதீப்பிற்கு அழைக்க, எடுத்தவுடன், "ஹே ஆரா... நீ என்ன... சொல்லாம அப்படியே



கிளம்பிட்ட... நான் உன்னை எங்கெல்லாம் தேடினேன் தெரியுமா...?" எனப் பாசமாகப் பேச...

"சீ நாயே... வாயை மூடு...! நீ தேடின லட்சணம் எனக்குத் தெரியாது...?

"உன் ஃப்ரெண்ட் எப்படியும் எல்லாத்தையும் சொல்லி யிருப்பானே... துரோகிகளா... சே... இனிமேல் என் வாழ்நாளில் உங்களை எல்லாம் பார்க்கவே கூடா துன்னு நினைக்கிறேன்... ம்ச்... வெட்டிப் பேச்சுப் பேசி என் மூடைக் கெடுக்காதே... எனக்கு ஸ்டஃப் வாங்கிக் கொடு... ஐ நீட் இட்... பட், நீ கொண்டு வந்து தர வேண் டாம்..." என்றவள் குரல் குழறியது.

தோழி தன்னைக் கண்டுபிடித்து விட்டாளே என்று எண்ணினாலும் அவள் கேட்டதை அவள் வீட்டுக்கு டோர் டெலிவரியாக அனுப்பி வைத்தான்.

அன்று மட்டுமல்ல...!

அதன்பின் வந்த நாட்களும் அவள் ஆசைப்பட்டது தங்கு தடையின்றிக் கிடைத்தது...

நண்பர்கள் என்ற மாயத் திரையிலிருந்து விலகி, போதை என்ற சிலந்தி வலையில் மாட்டிக் கொண்டாள்.

சரியான உணவில்லாமல், போதை என்ற ஒன்றை மட்டுமே உணவாக எடுத்துக் கொண்ட ஆதிராவின் உடல் நாளுக்கு நாள் மோசமாகியது...

'தனிமை... தனிமை...' என்று அவளே அவளின் தனிமைக்கு ராணியாகவும், சேவகியாகவும் வலம் வந்தாள்.

அந்த வீட்டை மட்டுமே தனது கோட்டையாக்கி அதிலே தன்னை அடைத்துக் கொண்டாள்...

**நா**ட்கள் இப்படியாகச் சென்று, முழுதாக ஒரு மாதம் முடிந்து, மேலும் பதினைந்து நாட்கள் கடந்த நிலையில்...

ஆதிராவின் பெற்றோர் தங்கள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பினர்.

வீடு வந்தவுடன் மஞ்சரி, "ச்சே... போகும் போது வீடு எப்படி இருந்ததோ இப்போவும் அப்படித்தான் இருக்கு... என்ன பொண்ணோ...?"

"நான் அப்பவே சொன்னேன்... அவளை எங்கே யும் ஊரு சுத்தாதேன்னு... தறுதலை... எங்க மேயப் போச்சோ..." என வழக்கமான புலம்பலை ஆரம்பிக்க...

அந்த நேரம் ஆதிராவின் அறையில் ஏதோ 'தொப்'பென விழும் சத்தம் கேட்டது...

கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்த வாறு, ஆதிராவின் அறைக் கதவைத் தட்ட,

கதவு தானாகத் திறந்து கொண்டது...

கதவு திறந்ததும் அவர்கள் கண்ட காட்சி அவர்களை ஒரு நிமிடம் உலுக்கிப் போட்டது...

"ஆராஆஆஆ..." என்ற கூவலுடன் மஞ்சரி திகைக்க,

மகாதேவன் மகளின் நிலையில் அதிர்ந்தே போனார்.



## 18

**"எ**ன்ன பேசறீங்க நீங்க... ச்சே! நீங்க எல்லாம் ஒரு பெத்தவங்களா...?" என்ற கோபமான டாக்டரின் குரலைத் தொடர்ந்து,

"டாக்டர்... இந்த விஷயத்தை சென்டி மென்டலா பார்க்காம, ப்ராக்டிக்கலா பாருங்க... நாங்க சொல்றது உங்களுக்குப் புரியும்..."

மகாதேவனின் குரல், ஆதிலட்சுமியை ஒரு நிமிடம் நின்று கவனிக்கச் செய்தது.

இந்தியாவில் உள்ள பல ஆசிரமங்களின் சேவை யைப் பாராட்டி, வருடா வருடம் அந்தந்த ஆசிரமங்களை நிர்வகிக்கும் பொறுப்பாளர்களை மத்திய அரசு ஊக்கு விக்கும் வண்ணம் அவர்களுக்குச் சிறந்த சேவைக்கான விருதை அளித்துக் கௌரவிக்கும்...

அந்த வருடம், காக்கும் கரங்களுக்கு அந்த வாய்ப்புக் கிட்டியது...

எனவே, காக்கும் கரங்களின் நிறுவனர் என்றதால், அவ்விழாவில் பங்கெடுக்க ஆதிலட்சுமியும், ஆசிரமத்தில் இருக்கும் குழந்தைகளால் செல்லமாக அழைக்கப்படும் 'பெரிய ஆயா' என்ற பார்வதியும் டெல்லிக்கு வந்திருந் தனர்.

வந்த இடத்தில் பார்வதிக்குப் பயணத்தின் காரணமாக லேசான சோர்வினால், மயக்கம் வரவே, லட்சுமி பார்வதியை மருத்துவ மனைக்கு அழைத்து வந்திருந்தார்.

அவரைப் பரிசோதனை செய்த டாக்டர், அது ரத்தக் கொதிப்பால் வந்த மயக்கம் எனவும், அந்த ஒரு பொழுது

மட்டும் பார்வதியை மருத்துவ மனையில் இருக்கும்படியும் சொல்லிச் சென்றார்.

மாத்திரையின் உதவியால் பார்வதி சற்று நேரம் கண்ணயர, லட்சுமி மருத்துவமனை காரிடாரில் சற்று நேரம் நடந்து கொண்டிருந்தபோது தான் அவர் காது களில் இவர்களின் உரையாடல் கேட்டது. அதுவும் அவர்களின் உரையாடல் தமிழ் என்பது வேறு, ஒரு காரணமாக அமைந்தது...

மனதில் ஏதோ உந்த, தன் நடையை நிறுத்தி, அவர்கள் பேசுவதைக் கவனித்தார்...

"மிஸ்டர் மகாதேவன்... நீங்க கொஞ்சமாவது யோசிச்சுத்தான் பேசுறீங்களா... அவள் உங்க பொண்ணு தான்... அன்ட் ஷீ இஸ் நவ் இன் எ வெரி கிரிட்டிகல் கண்டிஷன்... ஐ நோ தட்... அதுக்காகக் கருணைக் கொலை செய்யச் சொல்றீங்களே... பணம் இல்லாதவன் கூட, எப்படியாவது அவன் பெத்த குழந்தையைப் பிழைக்க வைச்சிடணும்னு நினைக்கிறான்... ஆனால் நீங்க ஏன் இப்படி யோசிக்காம பேசுறீங்க...

"நாங்களும் எங்களால் முடிஞ்ச எல்லா முயற்சி களையும் செய்து பார்க்குறோம்... நிச்சயம் நல்லது நடக்கும்..." டாக்டரின் குரலில் ஒரு விதக் கெஞ்சல் தெரிந்தது.

"இவள் பொழைச்சு என்ன பண்ணப் போறா டாக்டர்... ஏற்கெனவே போதைப் பழக்கம் வேற... இதுல எவன்கிட்டயோ போய்ச் சீரழிஞ்சுட்டு வந்து நிக்கிறா... இந்த



மாதிரி ஒரு பொண்ணு எங்களுக்கு இருக்கறதைவிடச் சாகுறதே மேல்..." மஞ்சரியின் குரலால்,

"சீ... இவளும் பெண்ணா...?" என லட்சுமியை முகம் சுழிக்க வைத்தது...

"மிசஸ் மஞ்சரி... இன்னிக்கு உங்க பொண்ணு இந்த நிலைமையில் இருக்கிறானா அதுக்கு நீங்களும் ஒரு காரணம்... அதைப் புரிஞ்சுகிட்டு பேசுங்க..." டாக்டரின் குரல் கறாராக ஒலித்தது...

"ஓ.கே டாக்டர்... வாக்குவாதம் வேண்டாம்... என்ன செய்யலாம்னு நீங்களே சொல்லுங்க..." மகாதேவன் பேச்சைத் தொடர்ந்தார்...

"நான் முதல்லே சொன்ன மாதிரிதான்... ஹெவி டோஸ் ட்ரக்ஸ் அவங்க இரத்தத்தோட கலந்திருக்கு... கீழே விழுந்ததால பின் மண்டையில் பலமான அடி... இதுல அபார்ஷன் வேற... அதிகமா இரத்தம் போயிருக்கு... அதனாலதான் அவங்க இப்போ கோமால இருக்காங்க...

"கொஞ்ச நாள் ஹாஸ்பிட்டலதான் அப்சர்வேஷன்ல வைச்சிருக்கணும்... எப்போ நினைவு வரும்னு என்னால சரியாச் சொல்ல முடியாது..." என ஆதிராவின் நிலையை விவரிக்க...

"உங்களாலயே அவளுக்கு எப்போ நினைவு திரும்பும்னு உறுதியா சொல்ல முடியல... அப்புறம் எதுக்குத் தேவையில்லாமல் செலவு பண்ணணும்... சோ..." என அவர் முடிப்பதற்குள்.

"மிஸ்டர் மகாதேவன்... முதல்ல சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லாதீங்க... நீங்க நினைக்கிற மாதிரியெல்லாம் என்னால செய்ய முடியாது... நான் இந்த டாக்டர் தொழிலைத் தெய்வமா மதிக்கிறேன்... எனது தொழில் ஒரு உயிரைக் காப்பாற்றுமே ஒழிய, நிச்சயம் ஒரு உயிரை எடுக்காது... அப்படி உங்க மகளைக் கொலை செய்யணும்னு நீங்க முடிவு பண்ணினா, அடுத்து நீங்க போலீஸ்கிட்டத்தான் பேச வேண்டியது வரும்..." டாக்டர் திட்டவட்டமாகச் சொல்ல...

"ம்ச்... தேவ்... நீங்க வாங்க..." என்ற மஞ்சரி கடுப் பாகச் சொல்லி விட்டு வெளியேற, அவரைத் தொடர்ந்து மகாதேவனும் மருத்துவரின் அறையை விட்டு வெளியே வருவதை லட்சுமி பார்த்தார்...

அவர்கள் அந்தத் தளத்தை விட்டு மறையும்வரை அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தவர், மனம் ஏதோ உந்த அவர்கள் வெளியேறிய மருத்துவரின் அறையின் கதவைத் தட்டி அனுமதி வாங்கினார்.

டாக்டர் அனுமதிக்கவும், உள்ளே வந்த லட்சுமியின் தோற்றத்தில் மரியாதை தெரியவும், "சொல்லுங்க..." என உந்த...

"வணக்கம் டாக்டர்... என் பேரு ஆதிலட்சுமி..." என்றவர், தன் கைப்பையிலிருந்த ஒரு கார்டை எடுத்து அவரிடம் நீட்ட, அதை வாங்கிப் பார்த்தவுடன் டாக்டரின் முகத்தில் கடுப்பு விலகிச் சின்னப் புன்னகையுடன் வர வேற்று,



"ஹலோ மேடம்... என் பேரு சகாயம்... உட்காருங்க..." என உபசரித்தார்.

"எப்படி நான் தமிழ்னு கண்டுபிடிச்சீங்க...?" எனவும்...

"உங்க ரூம் முன்னால, உங்க பேரைப் பார்த்தேன். அப்புறம்... அப்புறம்... நீங்க பேசினதை நான் கேட் டேன்..." எனத் தயங்கித் தயங்கிச் சொல்ல...

"ஓஹோ..." என இழுத்த சகாயம், சென்றவர்களை நினைத்துக் கோபத்துடன் அமர்ந்திருக்கவும், லட்சுமிதான் ஆரம்பித்தார்...

"டாக்டர்... நான் சென்னையில் 'காக்கும் கரங்கள்' என்ற ஆசிரமத்தை இருபத்தைஞ்சு வருஷமா நடத்திக்கிட்டு வரேன்... இப்போ நீங்க பேசினதைக் கேட்டேன்... அந்த... அந்தப் பொண்ணுக்கு என்ன பிரச்சனை...?" எனவும்...

சகாயம் சற்றும் யோசிக்கவில்லை... சாதாரணமாக வேறு யார் கேட்டிருந்தாலும் அவர் தனது நோயாளியைப் பற்றி மூன்றாம் மனிதரிடம் பகிர்ந்து கொண்டிருக்க மாட்டார்.

ஆனால், லட்சுமியின் தோற்றத்தில் தெரிந்த ஏதோ வொன்றால், உடனே லட்சுமிக்குப் பதிலளித்தார்...

"என்ன சொல்ல, மேடம்... நானும் ஒரு பெண் ணுக்கு அப்பா என்ற முறையில் சொல்றேன்... அந்தப் பெண்ணோட நிலைமை யாருக்கும் வரவே கூடாது..." அவர் விரக்தியுடன் சொல்ல...

"ஏன்... என்னாச்சு...?"

லட்சுமிக்கு ஏனோ மனதில் ஏதோ ஒரு படபடப்பு. அந்தப் பெண்ணை உடனே பார்க்க வேண்டுமென்று உள்ளுக்குள் மனது அடித்துக் கொண்டது. அது எதனாலென்று அவரால் பகுந்தறிந்து சொல்ல முடியவில்லை...

ஒருவேளை ஆதிராவின் பெற்றோர் பேச்சில் விளைந்த எண்ணமோ...!

சகாயம் தொடர்ந்தார். "சின்ன வயசுலேயே ட்ரக்ஸ்க்கு அடிக்ட் ஆகியிருக்கா... அதனால வந்த விளைவு... என்னைப் பொறுத்தவரை அவளுக்கு இப்போ இருக்கிறது பிரச்சனையே இல்லை... அவளோட பெத்தவங்கதான் பெரிய பிரச்சனை..." எனவும்,

அடுத்த நொடி, "எனக்கு அந்தப் பொண்ணைப் பார்க்கணும் போல இருக்கு... உங்க அனுமதி கிடைக்குமா...?" லட்சுமி வேண்டுதலாகக் கேட்டார்.

"ஓ சூயர் மேடம்... வாங்க. நானே கூட்டிட்டுப் போறேன்..." எழுந்த சகாயம், ஆதிரா இருந்த அறைக்கு அழைத்துச் சென்றார்.

அவர் காட்டிய அறையினுள் சென்ற லட்சுமி ஒரு நொடி திகைத்தே போனார்.

அந்தக் கட்டிலில் படுத்திருப்பது பருவப் பெண்ணா, அல்லது வெறும் எழும்புகளின் கூடா என்ற பெரிய சந்தேகம் எழுந்தது.

இதற்கு முன் லட்சுமி ஆதிராவைப் பார்த்ததில்லை எனினும், ஒரு சராசரிப் பெண் இந்த வயதில் எந்த



அழகைக் கொண்டிருப்பாள் என்பதை அவர் நிச்சயம் அறிவாரே...!

ஆதிராவின் வெளுத்த தேகம், அவள் உடலில் இரத்தமில்லை என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டியது...

மூடியிருந்த கண்கள் உள்ளுக்குள் சென்றிருக்க, அவளது கரு விழிகள் மட்டும் மேலே நீட்டிக் கொண்டிருப்பதைப் போல் இருந்தன.

உதடுகள் காய்ந்து போய், கன்னங்கள் ஒட்டிப் போய், அவள் படுத்திருந்த கோலம் அவரை உலுக்கியே போட்டது.

லட்சுமிக்கு ஏனோ அப்படியொரு நிலையில் ஆதிராவைப் பார்த்ததும், இயற்கையாகவே பெண்ணிற்குள் இருக்கும் தாய்மை உணர்வு பொங்கி எழ, ஆதிராவை நோக்கித் தன் பாதங்களை எடுத்து வைத்தார்...

மெல்ல அவளை நெருங்கியவரின் கை தானாக உயர்ந்து அவளின் கலைந்த கேசத்தை இதமாகக் கோதியது...

அவரின் கைபட்ட நேரமோ என்னவோ, பக்கத்தில் இருந்த இதயத் துடிப்பைக் காட்டும் மெஷினில் எண்கள் வேகமாக முன்னேற, அதிலிருந்த சத்தமும் அதிகரித்தது.

அதை அவர் உணரும் முன்பே, டாக்டர் சகாயம் கண்டு கொள்ள, "ஓ மை காட்..." எனவும், சுதாரித்து லட்சுமி தனது கைகளை விலக்கிக் கொள்ள முயல...

"நோ மேம்... நோ... நீங்க உங்க கையை அப்படியே வைங்க..." எனவும், சற்று நேரத்தில் ஆதிரா வின் உடல் மேலே தூக்கிப் போட ஆரம்பித்தது...

லட்சுமி உண்மையாகவே பயந்தே போனார்...

சட்டெனத் தன் கைகளை விலக்கிக் கொள்ளவும், சகாயம் உடனே நெருங்கி அவள் பல்ஸைப் பற்றிப் பரிசோதிக்க, "மேடம்... நீங்க கொஞ்சம் வெளியே இருங்க.. நர்ஸ்... என்னோட ஸ்டெதஸ் எடுத்துட்டு வாங்க... குயிக்..." எனவும், லட்சுமி பயந்து போய் வெளியே ஓடி வந்தார்.

அவருக்கு மனசு அடித்துக் கொண்டது...

'தான் கை வைத்த நேரம் அந்தச் சிறு பெண்ணிற்கு ஏதாவது ஆகிவிட்டால், அதன் பின் அந்தப் பாவம் தன்னை ஏழேழு ஜென்மத்திற்கும் விடாதே... ஏற்கெனவே தான் செய்திருக்கும் பாவத்தின் வீரியம் அறிந்தவராயிற்றே...' பயம் அவர் நெஞ்சை அரித்துக் கொண்டது.

பயத்துடனே மார்பின் மீது கைவைத்து, மூச்சுகளை வேகவேகமாக வெளியிட்டு, முகம் வேர்க்க நின்று கொண்டிருந்த லட்சுமியின் மனதில் பாலை வார்க்கவெனச் சகாயம் வெளிப்பட்டார்.

"மேடம்... இது நிஜமாவே ஒரு மெடிக்கல் மிராக்கிள் தான்..." எனவும், லட்சுமிக்குக் குழப்பமே ஏற்பட்டது...

"நீங்க என்ன சொல்றீங்க...?" குழப்பத்தினூடே வார்த்தைகளை வெளியிட...



"இந்தப் பொண்ணு திரும்பக் கண் முழிக்கவே மாட்டானு இப்போதான் அவளோட அப்பா, அம்மா அவளைக் கருணைக் கொலை பண்ணச் சொல்லிட்டுப் போனாங்க... ஆனா... நீங்க இப்போ வந்து கை வைச் சதும்... அவள் நினைவு திரும்பிடுச்சு... ரியல்லி இட்ஸ் அன்பிலீவபிள்..." சகாயம் உற்சாகமாகச் சொல்ல...

"நிஜமாவா சொல்றீங்க...?" லட்சுமியின் மனம் இன்னமும் நம்ப மறுத்தது...

"சத்தியம் மேடம்... இது நிஜமாவே ஒரு ஆச்சரியமான விஷயம்தான்... இந்த இருபத்தைஞ்சு நாளா நான் செய்யாத ட்ரீட்மென்ட் இல்லை... ஆனால் உங்கள் கைபட்ட நேரம், அந்தப் பொண்ணு பொழைச் சிக்கிட்டா... தேங்க்ஸ் டு யூ..."

"நான்... நான் இப்போ அந்தப் பொண்ணைப் பார்க்கலாமா...?"

"நிச்சயமா... உங்களாலதான் அந்தச் சின்னப் பொண்ணு உயிர் பொழைச்சிருக்கா... போய்ப் பாருங்க..." சகாயம் அனுமதியளிக்க...

லட்சுமியின் கால்கள் பரபரப்புடன் ஆதிராவின் அறைக்குள் நுழைந்தன.

அவர் நுழைந்தபோதும், ஆதிராவின் கண்கள் மூடியிருக்கவும்... கவலையாகப் பின்னால் வந்த சகாயத்தைப் பார்த்த லட்சுமியிடம், "அவளுக்கு நினைவு வந்திடுச்சு... இப்போ மருந்தின் வீரியத்தில் தூங்கிட்டு

இருக்கா... இன்னும் சில மணி நேரத்தில் கண்ணு முழிச் சிடுவா..." அவர் உறுதியாகச் சொல்லவும்...

என்னமோ லட்சுமிக்குத் திருப்தி கிடைக்கவில்லை.

"டாக்டர்... நான் இந்தப் பொண்ணுகூட இந்த ரூம்லயே இருக்க அனுமதி கிடைக்குமா...?" எனத் தயங்கித் தயங்கிக் கேட்க...

"கண்டிப்பா... இந்தப் பொண்ணோட அம்மா, இவளைத் தொடக்கூட யில்லை மேடம்... ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ண இந்த இருபத்தைஞ்சு நாளில் தினமும் ஒரு தடவை, அதுவும் பத்து நிமிஷம்தான் வந்து பார்த் துட்டுப் போவாங்க... ஆனா... நீங்க யாரோ எவரோ... உங்க ஸ்பரிசம் பட்டுச் சில நொடியில இவள் கண்ணு முழிச்சிருக்கானா, நிச்சயம் உங்ககிட்ட எதுவோ இருக்கு..." சகாயம் உண்மையான அன்புடன் சொல்ல...

மெல்லிய முறுவலை அவருக்குப் பதிலாகக் கொடுத் தவர், பின் யோசனை வந்தவராக, "டாக்டர்... கீழே ரூம் நம்பர் 205-இல் என்னோட அம்மா அட்மிட் ஆகி யிருக்காங்க... அவங்க கண் விழிச்சுட்டாங்களானு தெரியல... ஒரு நர்சை அனுப்பி அவங்ககிட்ட விவரம் சொல்ல முடியுமா...?" கெஞ்சலாகக் கேட்க...

"நிச்சயம் சொல்லிடுறேன்..." என்ற சகாயத்தின் மனதில் ஒரு நிம்மதி வந்ததைப் போல் உணர்ந்தார்...

அவர் சென்றதும் ஆதிராவின் அருகில் ஒரு நாற்காலியைப் போட்டு அமர்ந்த லட்சுமியின் எண் ணங்கள் அவரின் கடந்த காலத்தை அசை போட்டன...



கிட்டத்தட்ட தானும் இந்தப் பெண்ணைப் போன்ற தொரு சூழ்நிலையைக் கடந்து வந்துள்ளோம் என்ற எண்ணமே ஆதிராவின்பால் அவர் மனம் சாய உதவி யது...

அதுவும் நேரம் செல்லச் செல்ல அவள் தலை முதல், பாதம்வரை ஆராய்ந்தவருக்கு, அவள் கால் களிலும் கைகளிலும் இருந்த சிறு சிறு கீறல்களின் தழும்புகள் அவரின் உடலை நடுங்கச் செய்தன...

அதே நடுக்கத்துடன் அவள் படுக்கைக்கு அருகில் இருந்த பேடை எடுத்துப் பார்த்தார்...

அதில் ஆதிராவைப் பற்றிய அனைத்துக் குறிப்பு களும் அடங்கியிருந்தன.

அவள் பெயரைப் பார்த்தவர், ஒருமுறை அவர் உதட்டால் அவள் பெயரை உச்சரித்துப் பார்த்தார்...

அதன் கீழே அவள் வயதைக் கண்டவுடன் அவரின் உடம்பில் ஏதோ சுருக்கெனத் தைத்தது போல் ஒரு வலி...

"பதினெட்டு வயதுப் பெண்ணிற்கா இப்படி ஒரு கொடுமை...?" அவர் உள்ளம் ஏனோ குமுறியது...

அவருக்குள் ஏனோ இந்தப் பெண்ணை எப்படி யாவது காப்பாற்ற வேண்டுமென உள்ளுக்குள் வெறியே கிளம்பியது...

அவர் எண்ணங்களின் பிடியில் இருந்த சமயம் ஆதிராவிடமிருந்து மெல்லிய அசைவை உணர்ந்தார்...

அவள் கருவிழிகளில் அசைவு தெரியவே, டாக்டரை அழைக்க நினைத்தவர், அவளிடமிருந்து, "த...ண்ணி.... தண்ணி... தண்ணி...." என்ற மெல்லிய முனகல் வெளிப் படவே...

சுற்றியும் பார்த்த ஆதிலட்சுமி பக்கத்தில் ஃபிளாஸ்க்கில் தண்ணீர் இருக்கவே, ஆதிராவின் தலையை மடியில் தாங்கி அவளுக்குப் புகட்ட, அவள் மிடறு மிடறாகக் குடித்து முடித்தாள்...

சற்று நேரத்தில் அவள் மீண்டும் கண்ணுறங்க, லட்சுமி அவளைப் படுக்கையில் படுக்க வைத்து விட்டு எழுந்தவர் சில நொடிகள் நின்று பார்த்து விட்டுச் சகா யத்தின் அறைக்கு விரைந்தார்...

சகாயத்தின் அறைக்குள் அனுமதி வாங்கிச் சென்றவர், "டாக்டர்... ஆதிராவை நான் என்னோட சென்னைக்குக் கூட்டிட்டுப் போறேன்... அதுக்கு நீங்க தான் அவளோட அப்பா, அம்மாகிட்ட அனுமதி வாங்கித் தரணும்..." என நேரடியாக விஷயத்துக்கு வர...

"வாட்... என்ன சொல்றீங்க மேடம்?"

"ஆதிராவை நான் என்னோட கூட்டிட்டுப் போறேன் டாக்டர்... கருணைக் கொலை பண்ணச் சொன்ன அவ ளோட பெத்தவங்களுக்கு இதுல எந்தப் பிரச்சனையும் இருக்காதுன்னு நினைக்கிறேன்... இருந்தாலும் அவங்க அனுமதி எனக்கு வேணும்... அவங்களைப் பார்க்க ஏற்பாடு செய்ய முடியுமா...?" விளக்கமாகச் சொல்ல,



சகாயம் - லட்சுமியின் இந்த அதிரடி முடிவில் - திகைத்துத்தான் போனார்...

ஆனால் அவர் திகைப்பைப் போக்கும் வண்ணம் ஒரு நர்சு அறையின் உள்ளே வந்து, "டாக்டர்... அந்த பேஷன்ட் கண்ணு முழிச்சுட்டாங்க... ஆனால் எழுந்ததும் ரொம்ப அரோகன்ட்டா நடந்துக்கிறாங்க... நர்சைப் பிடிச்சுத் தள்ளி விடறாங்க... நீங்க உடனே வாங்க ப்ளீஸ்..." என ஹிந்தியில் படபடக்கவும்...

சகாயம் வேகமாக நடக்க, அவர் பின்னாலே லட்சுமியும் விரைந்தார்...

நர்ஸ் சொன்ன பேஷன்ட் ஆதிராதான்... அவள் நினைவு திரும்பிக் கத்த ஆரம்பித்திருந்தாள்...

"நான் இங்க இருக்கமாட்டேன்... ஐ டோன்ட் நீட் திஸ்... எனக்கு ட்ரக்ஸ் வேணும்... என்னை விடுங்க... நான் போறேன்... விடுங்க... விடுங்கஆஆஆ..." எனக் கத்திக் கொண்டிருக்க, அவளை அடக்க மூன்று நர்சுகள், இரண்டு வார்ட் பாய்கள் போராடிக் கொண்டிருந்தனர்.

ஆனால் அவர்களின் அடக்கத்திற்கு ஆதிரா அடங்கி விடவில்லை...

நடுவில் லட்சுமி வந்து அவள் கையைப் பிடித்த போது, ஒரு நொடி லட்சுமியின் முகத்தைப் பார்த்து அமைதியானவள் மீண்டும் கத்தத் துவங்கினாள்...

"லீவ் மீ... லீவ் மீ... விடுங்கடா... என்னை விடுங்க. நான் போகணும்... எனக்கு யாரும் வேண்டாம்... எனக்கு

இருட்டு ரூம்தான் வேணும்... எல்லாரும் போங்க...” என அவள் வெறி கொண்டவளைப் போல் கத்த, அவள் சொன்ன சொற்கள் லட்சுமியின் கண்களைப் பனிக்கச் செய்தன.

அவளை அடக்கப் போராடிக் கடைசியில் தோற்றுப் போகவே, சகாயம் அவளுக்கு மயக்க ஊசியைப் போட்டு மீண்டும் அவளை உறக்கத்திற்கு அனுப்பினார்...

அவள் தூங்கிய மறு வினாடி சகாயம் அந்த மருத்துவமனையின் மனநோய்களுக்கான மருத்துவரை அழைக்க, அவர் உடனடியாக ஆதிரா இருந்த அறைக்கு விரைந்தார்.

அவர் வந்தவுடன் இப்போது ஆதிரா நடந்துகொண்ட முறையை விவரிக்க, லட்சுமி கண்ணீர்க் கண்களுடன், “டாக்டர்... அவ எனக்கு இருட்டு ரூம் வேணும்னு கேக்குறா டாக்டர்... எனக்கு யாருமே வேண்டாம்னு சொல்றா...” எனவும்,

சகாயத்திற்கு லட்சுமியின் குரலிலிருந்த ஏதோ வொன்று நெஞ்சைச் சுட்டது...

அவருக்கும் ஆதிராவின் நிலை புரிந்தது... அவரும் அவளுக்குப் பரிதாபம் பார்த்தார்தான்...

ஆனால், லட்சுமி அவரை விட ஒரு படி மிஞ்சி விட்டார்...

மன நோய்க்கான மருத்துவர் அவர்களைத் தனது அறைக்கு அழைத்துச் சென்று சகாயத்திடம் சில விஷயங் களைக் கேட்டறிந்தார்...



சகாயத்திற்கு ஒரு வகையில் மகாதேவனைத் தெரியும்...

நண்பர் அல்ல... தெரியும் மட்டுமே...!

அந்த வகையில் மகாதேவனின் பொறுப்பில்லாத தன்மையும், மஞ்சரியின் குணத்தையும் பற்றிச் சொன் னவர், “ஆதிரா இப்போ இப்படி இருக்கக் காரணம் அவங்க பெற்றோர்தான் மிஸ்டர் குப்தா... அவளுக்கு அதிகப்படியான தனிமைதான் இப்படி ஒரு நிலைமையை உண்டாக்கியிருக்கு...” சகாயம் தன் யூகத்தைச் சொல்லவும்...

“யூ ஆர் ரைட் மிஸ்டர் சகாயம்... ஆதிராவின் மனது பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கு... நல்ல வேளை... அவள் இந்த நிலைமையில அவளோட அப்பா, அம்மாவைப் பார்க்கல... அவள் மட்டும் பார்த்திருந்தா நிச்சயம் அவங்களைப் பலமாத் தாக்கியிருக்கக் கூடும்...” குப்தா விளக்க...

கேட்டுக் கொண்டிருந்த லட்சுமி வாய் திறந்தார்...

“டாக்டர்... நான் ஆதிராவை என்னோட அழைச் சிட்டுப் போறேன்... நான் அவளை நல்லா பார்த்துக் கிறேன்... ப்ளீஸ்... நீங்க என்னை நம்பி அனுப்புங்க... உங்களுக்கு நம்பிக்கை யில்லைன்னா நீங்களே என்னோட ஆசிரமத்திற்கு வந்து அவளை விடுங்க...” சகாயத்திடம் வேண்டுதலாகக் கேட்க...

அதைப் புரிந்து கொண்ட குப்தா, “சகாயம்... இப்போ ஆதிராவுக்கு இடமாறுதல் நல்லதுதான்... புது

இடம், புது மனிதர்கள் அவள் மனதை மாற்றலாம்...” என ஒப்புதலளிக்க...

சற்று யோசித்தவர், “ஓகே மேடம்... நான் அவளோட பேரெண்ட்ஸ்கிட்ட கேட்டு ஏற்பாடு செய்றேன்...” என்ற சகாயம் அடுத்து ஆக வேண்டிய வேலைகளைப் பார்க்க ஆயத்தமானார்...

லட்சுமி சொன்னதைப் போல் ஆதிராவின் பெற்றோர் பெரியதாக ஒன்றும் எதிர்க்கவில்லை...

அவர்களைப் பொறுத்தவரை சமூகத்தில் ஒரு நல்ல அந்தஸ்திலிருக்கும் அவர்களின் நற்பெயர், ஆதிராவின் கெட்ட சகவாசத்தாலும், அவளின் கெட்ட பழக்கவழக்கங்களாலும் கெட்டுப் போய்விடக்கூடாது என்பது மட்டுமே கருத்தில் பதிந்தது...

அவர்களுக்குச் சொந்த இரத்தம் பெரிதில்லை...

சமூகத்தின் பாராட்டுதலும், பணமும் மட்டுமே முதன்மையாகப் பட்டது...

அன்று அவர்கள் வீட்டில் இரத்த வெள்ளத்தில் மயங்கிக் கிடந்தவளைப் பார்த்த பின்னும்கூட அவர்கள் மனம் இளகவில்லை...

சிலர் சொல்லித் திருந்துவார்கள்... சிலர் பார்த்துத் திருந்துவார்கள்... ஒரு சிலர் தன்னாலே திருந்துவார்கள்...

ஆனால் இன்னொரு ரகமிருக்கிறது...

அவர்கள் எத்தனை சொன்னாலும், எத்தனை பார்த்தாலும், எத்தனை பட்டாலும் திருந்த மாட்டார்கள்..



மகாதேவனும், மஞ்சரியும் நான்காம் ரகத்தைச் சேர்ந்தவர்கள்...

அந்த வகையில் அவர்களிடமிருந்து ஆதிராவை அழைத்துச் செல்வது லட்சுமிக்குப் பெரிய சிரமமாக இல்லை...

மேலும் இரண்டு நாட்களில் ஆதிராவை லட்சுமி தன்னுடன் அழைத்துச் செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்...

இந்த இரண்டு நாட்களும் ஆதிரா நீண்ட தூக்கத்தில் தான் இருந்தாள்.

ஆதிராவை ஆம்புலன்ஸில் ஏற்றும் சமயம் மஞ்சரி, லட்சுமியிடம், “எவ்ளோ பணம் தேவைப்பட்டாலும் சொல்லுங்க... அனுப்பி வைக்கிறோம். பணத்தைப் பற்றி எந்தக் கவலையும் வேண்டாம்...” எனவும்,

லட்சுமி அவரின் ட்ரேட்மார்க் புன்னகையை வெளியிட்டு, “சரிங்க...” என்று மட்டும் சொல்லிப் பார்வதியுடன் விடை பெற்றார்...

அனைத்தையும் சொல்லி முடித்த ஆதிலட்சுமி தலையில் கைவைத்து, சிவந்த கண்களுடன் கேட்டுக் கொண்டிருந்த கவியரசனைப் பாவமாகப் பார்த்தார்...

அவருக்கு அவன் நிலைமையைப் பகுத்தறிய முடியவில்லை...

தான் ஒன்று நினைத்து அவனுக்கு ஆதிராவை மணமுடித்து வைக்க, அதன் பின்விளைவு அவனைப் பாதித்துவிட்டதே என்ற குற்ற வுணர்வு தான் எழுந்தது...

"அரசு..." என ஆதியின் அழைப்புக்கு அவனிடம் உணர்வில்லை...

"அரசுக் கண்ணா..." என அவன் தோள் மீது கை வைக்கவும், அதில் உணர்வு பெற்றவனாய் லட்சுமியை நிமிர்ந்து பார்த்தான்.

அந்தக் கண்களில் என்ன இருக்கிறது...?

நிச்சயம் லட்சுமியால் கண்டுபிடிக்க முடியவில்லை...

கோபமா...?

ஏமாற்றமா...?

பரிதாபமா...?

புரியவில்லை...

"கண்ணா..." என லட்சுமி அவனைத் தன்னோடு அணைத்துக் கொள்ள, அவன் முற்றிலும் உடைந்து அழுதான்...

வெகு நேரம் அழுது ஓய்ந்தவன்... அவன் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தவன், "நீ... ம்கும்... நீங்க... எங்க... எங்க... வைச்சு அவளுக்கு ட்ரீட்மென்ட் கொடுத்தீங்க? ஆசிரமத்தில் யாருக்கும் தெரியாதா...?"

அவன் குரல் உடைந்திருந்தது.

ஆனாலும், அவனுக்கு ஆதிராவைப் பற்றி முழுதாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென உந்துதல் இருந்ததை லட்சுமி மனதில் குறித்துக் கொண்டார்.



## 19

கெட்டதிலும் ஒரு நல்லதாக, லட்சுமியின் டெல்லி பயணம் முதலில் கவியரசனோடு தான் நிச்சயிக்கப் பட்டிருந்தது...

கடைசி நேரத்தில் கவியரசனுக்கு அவனது நிறுவனத்தில் முக்கியமான வேலை இருந்தமையால் அவனால் லட்சுமியுடன் பயணிக்க முடியவில்லை...

சென்னைக்கு வந்ததும்தான் லட்சுமிக்கு நிறையச் சவால்கள் காத்திருந்தன...

முதலில் அவளைத் தனக்குத் தெரிந்த மிகவும் நம்பிக்கையான மருத்துவ மனையில் அனுமதித்தார்...

ஆசிரமத்தில் இருப்பவர்கள் யாரிடமும் லட்சுமியும் சரி, பார்வதியும் சரி, ஆதிராவைப் பற்றி எந்த விஷயத்தையும் சொல்லவில்லை...

சென்னைக்கு வந்ததும் அவளுக்குத் தூக்க மருந்து கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள்...

அவள் கண் விழிக்கும் போது அருகிலே இருந்த லட்சுமிக்கு உடம்பு உதறியது...

'அவள் என்ன கேட்டு எப்படி ஆர்ப்பாட்டம் செய்வாளோ, ஆண்டவனே... இந்தப் பெண்ணைச் சமாளிக்கும் திடத்தை எனக்குக் கொடுத்து அருள் புரிவாயாக!' என அவரின் வேண்டுதல் கடவுளை எட்டியதோ என்னவோ...

ஆதிரா கண் விழித்ததும் கத்தவில்லை... ஆர்ப்பாட்டமில்லை...

தன்னைச் சுற்றியிருந்த மருத்துவர்கள், நர்சுகள் அனைவரும் புதியவராக இருக்க, அவர்கள் அனைவரிடமும் ஒரு ஆராய்ச்சிப் பார்வையை வீசியவளின் கண்கள் லட்சுமியிடம் வந்ததும் ஒரு நிம்மதி ஒளி தெரிந்ததை... லட்சுமி புரிந்துகொண்டாரோ என்னவோ, மருத்துவர் ராஜி உணர்ந்து கொண்டார்.

லட்சுமியின் வேண்டுகோளின் பேரில், ராஜி தான் ஆதிராவின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கும் மனநல மருத்துவர்...

ஆனால், ஆதிராவின் அமைதி ஒரு சில மணி நேரங்கள் மட்டுமே நிலைத்தது...

நேரம் செல்லச் செல்லத் தூக்கத்துக்குக் கொடுத்திருந்த மருந்தின் வீரியம் குறையக் குறைய ஆதிராவின் தேவை அதிகரித்தது.

"எனக்கு வேணும்... போதை வேணும்... கொடுங்க... ஏதாவது ஊசி போடுங்க... ஹய்யோ... வேணும்..." கத்த ஆரம்பித்தவள், தலையை அழுத்திப் பிடித்துக் கொள்ள, அவளை யாராலும் அடக்க முடியவில்லை.

ஒவ்வொரு முறையும், அவள் கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணும் போதெல்லாம் தூக்க மருந்தைக் கொடுத்தால், அதற்கும் ஒரு வகையில் அடிமையாகக் கூடும் என்ற ராஜியின் அறிவுரையின்பேரில் லட்சுமி அன்பை மருந்தாக எடுத்துக் கொண்டார்...

ஆதிரா போதைக்கு அடிமை என்பதுதான் லட்சுமிக்கும், ராஜிக்கும் மிகப் பெரிய சவாலாக இருந்தது.



மயக்கத்திலிருந்து கண் விழிக்கும் பொழுதெல்லாம் அவள் அதைக் கேட்டுக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்யும் போது, லட்சுமியும், மற்ற மருத்துவர்களும் சிரமப்பட்டுப் போனார்கள்...

தொடர்ந்து மூன்று மாதங்கள் இடைவிடாது அவள் அந்தப் போதையை உட்கொண்டதன் விளைவால், அவ்வளவு எளிதில் அவளை மீட்க முடியவில்லை...

மற்றவர்களைப் பார்த்துக் கத்தும் அவள், லட்சுமியைக் கண்டால் மொத்தமாக அமைதியாகிவிட மாட்டாள் என்றாலும், தனது ஆர்ப்பாட்டத்தைச் சற்றுக் குறைத்துக் கொள்வாள்...

அதையே அவர்கள் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டனர்... லட்சுமியின் முகத்திலிருந்த சாந்தமோ... அவரின் "கண்ணம்மா!" என்ற அன்பான அழைப்போ... ஏதோ ஒன்றுதான் ஆதிராவை லட்சுமியிடம் ஒண்ட வைத்தது.

அவளுக்கென முழு நேர நர்ஸ் வைத்திருந்தாலும், லட்சுமியிடம் மட்டுமே உணவும், உறக்கமும்...

லட்சுமி இருந்தால் மட்டுமே ராஜியைக் கூடப் பக்கத்தில் விடுவாள்...

லட்சுமி இருந்தாலும் கூட அவரிடம் இவள் ஒன்றும் ஊர் உலகக் கதை பேசிவிட மாட்டாள்...

அவர் ஏதாவது கேட்டால், அதற்குண்டான பதிலை ஓரிரு வார்த்தைகளில் சொல்லும் அளவிற்குத்தான் இருந்தாள்.

பல முயற்சிகளுக்குப் பின், கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் கழித்துத்தான் ஆதிராவின் போதைப் பழக் கத்தை மறக்கடிக்க முடிந்தது...

எப்படி எப்படியோ முயற்சிகள் எடுத்ததன் விளை வால் ஒரு சவாலைக் கடந்த லட்சுமியால் என்ன செய்தும் அவளின் தனிமை வேண்டுதலை யாராலும் போக்க முடியவில்லை...

போதையை மறந்த அவள், லட்சுமி இல்லாத சமயத்தில் யாரிடமும் பேசாமல் அந்த அறையில் தனியாக அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்து விடுவாள்...

ஆனால் அவள் சிந்தனை எதைப் பற்றியும் இருக் காது... வெறும் வெற்றுச் சிந்தனையோடு ஒரு வாரம் உணவும், உறக்கமும் இல்லாமல் அமரச் சொன்னாலும், சளைக்காமல் அமர்ந்து கொள்ளக் கூடிய நிலையில் இருந்தாள், ஆதிரா.

முதல் ஆறு மாதங்கள் ஆர்ப்பாட்டமாகக் கழித்தாள் என்றால் அடுத்து ஆறு மாதங்கள் அமைதியாகக் கழித்தாள்...

அந்த அளவிற்கு அவளது மனம் தனிமைக்குப் பழக்கப்பட்டிருந்தது...

சிறு வயதில் உடலில் அடி வாங்குவது வேறு...

ஆனால், ஆதிரா அந்த வயதில் மனதில் பல அடி களை வாங்கி விட்டாள்...

அவள் சென்னை வந்ததிலிருந்து ஒருமுறை கூட அவள் பெற்றோர் எங்கே என்று கேட்கவில்லை...



அதை ஒரு நாள் லட்சுமி ராஜியிடம் கேட்க,

ராஜி, "அவர்களைப் பற்றி நினைக்க, அவர்கள் இவளுக்கு என்ன நல்லது செஞ்சிருக்காங்க, லட்சுமி...?" எனவும், லட்சுமிக்கும் உண்மை புரிந்தது.

இப்படியாகச் சென்ற நாட்களில் ராஜி ஒரு நாள் லட்சுமியை அழைத்தார்.

"இன்னமும் ஆதிராவோட விஷயத்தில் எந்த முன்னேற்றமும் இல்லையே... எனக்கு அவளைப் பார்க்கப் பார்க்க ரொம்பவும் கஷ்டமா இருக்கு, ராஜி..." என்றவர்...

ராஜி தலையை உருட்டி, "எனக்கும்தான் லட்சுமி... அதனாலதான் நான் ஒரு முடிவெடுத்திருக்கேன்..." எனவும்,

"என்ன சொல்லு... அவள் நல்லபடியாகக் குணமாக நான் என்ன வேணும்னாலும் செய்றேன்..." லட்சுமி பரிதவிப்பாகச் சொல்ல...

ராஜிக்கு உருகி விட்டது...

ராஜி - லட்சுமியின் உறவு நெடுங்காலத்து உறவு... பார்வதிக்குப் பின் லட்சுமியின் வாழ்க்கையைப் பற்றி அறிந்தவர்...

அவர் செய்த ஒரு தப்பிற்குப் பார்க்கும் அனைத்துக் குழந்தைகளையும் தன் பிள்ளையாக நினைக்கும் அவரின் நற்குணம் அறிந்தவர்...

"இனிமேலும் ஆதிராவை இப்படியே விட்டுட்டு இருக்க முடியாது, லட்சுமி. நானும் பல வகையில அவளுக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டேன்... ஆனால் அது எதுவுமே அவளைப் பாதிக்கலை..."

"அதுதான் ஏன், ராஜி...?"

"ஒண்ணும் பெருசாயில்ல, லட்சுமி... அவளோட ஆழ் மனசு அன்புக்கு ஏங்குது... பிறந்தது முதலிருந்தே அவளுக்குப் பாசம்னா என்ன, அன்புன்னா என்ன... உறவுகள்ன்னா என்னன்னு தெரியாம வளர்ந்திட்டா... அதுதான் இப்போ அவ மனசுல ஏக்கமாப் பதிஞ்சுடுச்சு... முதல்ல அவள் ஏக்கத்தைப் போக்கணும்... அதைச் செஞ் சுட்டாலே அவள் முழுசாக் குணமாகிடுவா..."

லட்சுமிக்கு, ராஜி சொன்னது புரிந்தும், புரியாமலும் இருந்தது.

அதைப் புரிந்து கொண்ட ராஜி, "அவள் இதே ஹாஸ்பிடல்ல குழந்தைகளோட வரும் தாய்மார்களை ஏக்கமாப் பார்க்குறா, லட்சுமி... அழும் குழந்தையைப் பரிவாகத் தூக்கிக் கொஞ்சும் அன்னையைப் பார்க்கிறா... சின்னக் குழந்தையைத் தன் தோளில் தூக்கிக்கிட்டு அவள் ஊசிக்குப் பயந்து அழும்போது சமாதானம் செய்யும் தந்தையைப் பார்க்கிறா...

"மனைவியைப் பாசமாகத் தன் தோளில் சாய்த்துக் கொள்ளும் கணவனைப் பார்க்கிறா.... இவர்கள் எல்லாத் தையும் பார்க்கும்போது, அவள் கண்ணுல ஒரு ஏக்கம் தெரியறதை நான் அப்சர்வ் பண்ணினேன்... இது



எல்லாம்தான் அவளோட பிரச்சனை..." ராஜி பேசிக் கொண்டிருக்க, லட்சுமி இடையிட்டார்.

"இன்னும் கொஞ்சம் புரியுற மாதிரி சொல்லேன், ராஜி..."

லட்சுமிக்கு ராஜி தீர்வைக் கண்டு பிடித்துவிட்டார் என்பது புரிந்தது.

"ஓ.கே. நான் சிம்பிளா சொல்றேன்... ஆதிராவுக்கு ஒரு கல்யாணம் நடக்கணும்... அதுதான் தீர்வு..." அவர் முடிக்க, லட்சுமி ஒரு நொடி திகைத்தார்.

"என்ன சொல்ற ராஜி... இது எப்படிச் சாத்தியம்...?"

"ஏன் சாத்தியமில்ல...?"

"அதில்ல... அவ... அவளோட பழைய விஷயம்... யார் ஒத்துக்குவா...?"

"ஏன் ஒத்துக்க மாட்டாங்க... முதல்ல யாரு அவளோட பழைய விஷயத்தை வெளியே சொல்லப் போறாங்க...?"

ராஜி ஒன்றன் பின் ஒன்றாகப் பேசியது லட்சுமியைத் தலையைப் பிடிக்க வைத்தது.

"ம்ச்... ராஜி... எனக்கு நீ பேசுறது ஒண்ணுமே புரியல... சொல்றதைத் தெளிவாச் சொல்லு..."

"இது பாரு, லக்ஷ்மி... ஆதிராவோட பழைய விஷயங்கள் எல்லாமே ஒரு கசப்பான பழம் மாதிரி... கசப்பான பழத்தை யாருமே விரும்ப மாட்டாங்க... மோர்

ஓவர்... பழைய விஷயங்கள் நமக்குத் தேவையில்லாதவை. முடிஞ்சது முடிஞ்சதாகவே இருக்கட்டும்..." ராஜி சொல்ல...

"அது சரிதான், ராஜி... ஆனால், வாழ்க்கை என்று வரும்போது அது வேற இல்லையா...? எனக்கு எப்படி யாவது ஆதிரா குணமாகணும்தான்... அதுக்காக..." அவர் தயங்க...

"இல்லை, லட்சுமி... இது நிச்சயம் சரியா வரும்..." ராஜி உறுதியாகச் சொல்ல... லட்சுமிக்கு ஏனோ ராஜி ஏற்கெனவே ஒரு முடிவுடன் தான் பேசுகிறார் எனப் புரிந்து போனது...

"நீ ஏற்கெனவே முடிவெடுத்துட்ட போல...?"

"ஆமா... பையன் கூடப் பார்த்துட்டேன்... அவனை உனக்கு ரொம்ப நல்லாத் தெரியும்..." எனவும், லட்சுமிக்கு ஆர்வம் மேலோங்கியது...

"அப்படியா... யாரு ராஜி...?" அவர் கண்களில் மின்னல்...

கடந்த ஒரு வருடமாக ஆதிரா படும் கஷ்டத்தைக் கண்ணால் பார்த்தவராயிற்றே...!

அவள் துன்பத்திற்கு ஒரு தீர்வு கிடைக்குமெனில், அது அவருக்குக் கசக்குமா...?

அவர் ஆர்வமாகக் கேட்க, ராஜி, "கவியரசன்..." என்று மாப்பிள்ளையின் பெயரைச் சொல்லவும், லட்சுமி யின் உணர்வுகள் ஒரு நொடி நின்று அதன் பின் இயங் கியது...



"நீ யாரைச் சொல்ற... என்னோட அரசுவையா...?" நடுங்கிய குரலைச் சரி செய்து கொண்டு கேட்க...

ராஜியோ, "எனக்கு வேற எந்தக் கவியரசனையும் தெரியாதே, லட்சுமி...!" - புன்னகையுடன் சொல்ல...

"நோ ராஜி... அரசுக்கு... அரசு பையன், இதை யெல்லாம் தாங்க மாட்டான்டா... அவனுக்குக் குடும்பம், குழந்தைகள் மேல எவ்வளவு ஆசைகளும், கனவுகளும் இருக்கு தெரியுமா... என்கிட்ட அடிக்கடி சொல்வான்...

" 'ஆதிம்மா... நான் சீக்கிரமா ஒரு கல்யாணம் செஞ்சுகிட்டு ஒரு குழந்தை பெத்துக்குவேன்... என்னை எப்படி என்னோட அம்மா தூக்கி எறிந்தாளோ, அதைப் போல இல்லாம, நான் என் குழந்தையை ராஜா மாதிரி வளர்ப்பேன்!'னு... அவனுக்கு ஆதிரா...!

"எனக்கு மனசு ஒத்துக்கலை ராஜி..." லட்சுமி கனத்த இதயத்துடன் சொல்ல...

ராஜி உக்கிரமாக லட்சுமியை முறைத்தார்.

"ஓஹோ... அப்போ, நீயும் சுயநலவாதியா மாறிட் டியா, லட்சுமி... இப்போதான் ஆதிராவுக்காக என்ன வேணாலும் செய்வேன்னு வசனம் பேசின..."

"ஹய்யோ... இப்பவும் அவளுக்காக நான் என்ன வேணா செய்வேன்... ஆனா... அரசு... அவன் ஆதிரா வின் விஷயத்தை எப்படி எடுத்துப்பான்னு எனக்குத் தெரியாது, ராஜி.... அவனுக்கு ஏதாவது கனவுகள் இருந்து அதை நான் அழிச்சுட்டேன்னு அவன் நினைச்சிடக்

கூடாதில்லையா... வேணும்னா அவன்கிட்ட நம்ம உண்மையைச் சொல்லியே சம்மதம் கேட்போம்..."

"நீ வேணா உண்மையைச் சொல்லிக் கேட்டுப் பாரு, லட்சுமி... அவனில்ல... இந்த உலகத்தில் எந்த ஆம்பளையும் ஒரு பொண்ணு இந்த மாதிரியெல்லாம் இருந்தான்னு தெரிஞ்சா மனசு வந்து ஏத்துக்க மாட்டான்... ஆனாலும் வாய்ப்பிருக்கு... யாராவது அவளை ரெண்டாம் தாரமாகவோ, இல்லை வேற மாதிரியோ தான் வெச்சுப்பான்... அப்படி மட்டும் நடந்தது... ஆதிராவை இப்போ இருக்கிறதை விட ரொம்ப மோசமாத்தான் நம்ம பார்க்க முடியும்...

"அப்படியே நம்ம கவிகிட்ட உண்மையைச் சொன்னாலும், அவன் இவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாலும், வாழ்க்கை முழுவதும் ஆதிராவின் பழைய நாட்கள் அவன் மனசை உறுத்த வாய்ப்பிருக்கு...

"அந்த உறுத்தல், ஏதாவது ஒரு வகையில் ஆதிராவைப் பாதிச்சாலும், நிச்சயம் அவளைத் திரும்ப மீட்டெடுக்கிறது ரொம்ப ரொம்ப கஷ்டம், லட்சுமி...

"இப்போ அவளுக்குத் தேவை அன்பும், பாசமும், பரிவும்தான்... அது கவிகிட்ட கிடைக்கும்னு நான் நம்புறேன்... நான் ஆதிராவுக்குக் கல்யாணம்தான் தீர்வுன்னு ஒரு முடிவு பண்ணினதும், என் மனசில தோணினது அவன்தான்...

"எனக்கு அவனைத் தவிர வேற யாருமே மனசுல தோணலை... அவனைத் தவிர வேற யாராலயும்



ஆதிராவை மீட்க முடியாதுன்னு என் உள்மனசு சொல்லுது... அப்படியில்லாம உனக்கு வேற யாராவது இருந்தாங்கன்னா சொல்லு... எதுவுமே இல்லைன்னா அந்தப் பொண்ணு சாகுறவரைக்கும் இப்படியே இருக்கட்டும்...

"பாவம்... அந்தப் பொண்ணுக்குப் பிறப்பே சரியில்ல... இனி இறப்பும் இப்படித்தான் இருக்கும் போல... தப்பு அவள் பேரில் இல்லை யென்றாலும், தண்டனை அனுபவிக்கணும்னு அவள் தலையில் எழுதியிருக்கு போல..."

ராஜி ஆதங்கமாகப் பேசப் பேச, லட்சுமியின் இதயம் இங்கு கரைந்து கொண்டிருந்தது.

இரண்டு பேருமே லட்சுமியின் இரண்டு கண்களைப் போல...

இருவரின் நல்லதும் லட்சுமிக்கு முக்கியமானதே...

இருவரில் ஒருவரின் மனம் புண்பட்டாலும் கூட, அதை அவரால் நிச்சயம் ஏற்றுக் கொள்ள முடியாது...

ஆனால்... ஆதிரா குணமாக வேண்டுமே... அவளுக்கு உறவுகள் வேண்டுமே...

கவியரசனுக்கும் உறவுகளின் மீது அதிக மதிப்புண்டு.. அவன் நிச்சயம் ஆதிராவைக் கைவிடமாட்டான் என்ற நம்பிக்கை எழுந்தது...

இருவரையும் ஏன் இணைக்கக் கூடாது என்ற கேள்வி லட்சுமியின் மனதில் எழுந்தது.

அவர் யோசிக்க யோசிக்க... 'ஏன்?' என்ற கேள்வி, 'நடக்கலாமே...' என்ற பதிலைக் கொடுத்தது...

லட்சுமியின் முகத்தில் ஒப்புதலுக்கான பாவம் கிடைக்கவே, ராஜிக்கும் சற்று நிம்மதியாக இருந்தது...

"என்ன லட்சுமி, முடிவு பண்ணியிருக்க..?" ராஜி கேட்கவும்...

"பண்ணலாம் ராஜி... ஆனால் கவிக்கு எதிர் காலத்தில் இந்த விஷயம் தெரிஞ்சா அவன் எப்படி இதை எடுத்துப்பான்னு நினைச்சாத்தான் பயமா இருக்கு... அவன் நான் வளர்த்த பையன்தான்... ஆனாலும் இருவருக்கும் உணர்வுகள் வேறுதானே... இருந்தாலும் ஆண்டவன் பேரில் நம்பிக்கை வைத்து இந்தக் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்றேன்... அதுக்கு முன்னே ஆதிரா இந்த விஷயத்தை எப்படி எடுத்துப்பானு தெரியல... அவளுக்கு விஷயத்தைச் சொல்லணும்..."

லட்சுமி ஒப்புதல் கொடுக்க, ராஜிக்கு ஆதிராவின் பிரச்சனைக்குத் தீர்வு கண்டதில் நிம்மதி வந்தது...

"நல்ல விஷயம் முடிவாகிடுச்சு... அதைத் தள்ளிப் போட வேண்டாம், லட்சுமி... இப்போவே அவள்கிட்ட பேசிடலாம்..." எனவும், இருவரும் ஆதிராவின் அறைக்குச் சென்றனர்.

அறையில் இருந்த ஜன்னலில் சாய்ந்து கீழே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவளை லட்சுமியின் அழைப்பு மீட்டெடுத்தது...



"ஆதிரா..." என்ற அழைப்புக்குச் சட்டெனத் திரும்பிப் பார்த்த ஆதிரா, லட்சுமியைப் பார்த்ததும் உதட்டில் ஒரு புன்னகையுடன் அவரை நெருங்கி அவர் கையைப் பற்றிக் கொண்டாள்.

"எப்படிடா இருக்க...?" அவர் எப்போது வந்தாலும் கேட்கும் ஒரே கேள்வி...

அவளும், "நல்லா இருக்கேன்..." என்ற வழக்கமான பதிலைக் கொடுக்க...

அதன் பின் ராஜியும், லட்சுமியும் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்க்க,

ராஜி, லட்சுமியைப், "பேசு... பேசு..." என உந்த,

லட்சுமி சற்றுப் பயத்துடனே ஆரம்பித்தார்.

அவள் இவ்விஷயத்தை எப்படி எடுத்துக் கொள்ளக் கூடுமென்று அவரால் யூகிக்க முடியவில்லை...

லட்சுமி, "ஆதிரா... உனக்கு... ம்ம்க்கும்... நீ... நீ கல்யாணம் செஞ்சுக்கிறியா?" அவர் பதட்டமாகக் கேட்க...

பற்றியிருந்த லட்சுமியின் கையை விடுத்து, சிரித்துக் கொண்டிருந்த உதடுகள் மூடி, எழுந்து நின்ற ஆதிரா மீண்டும் ஜன்னலுக்குச் சென்று நிற்க, லட்சுமிக்குப் பீதி யானது...

"ஹய்யோ... இந்தப் பொண்ணு கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணப் போறா... போச்சு...!" எனப் பயந்து கொண்டு அவளின் பதிலுக்காகக் காத்திருந்த நேரத்தில் அவருக்கு வேர்த்தே போனது.

ஆனால் ஜன்னலோரம் சென்ற ஆதிரா, யோசித்தாள்... யோசித்தாள்... யோசித்துக் கொண்டே இருந்தாள்.

வெகு நேர யோசனைக்குப் பின், "சரி... பண்ணிக்கிறேன்...." எனவும்...

ராஜிக்கும், லட்சுமிக்கும் எதையோ பெரிதாகச் சாதித்த நிம்மதி...

இவளைச் சமாளிக்கத் தாங்கள் பெரிதாகப் போராட வேண்டுமென, அவர்கள் யோசித்து வந்ததை ஒன்றுமில்லாமல் செய்து விடவே, ராஜியும் லட்சுமியும் விரைவாக வேலையைத் துவக்கி விட்டனர்...

நடுவில் ஒரு நாள் ஆதிராவிடம் கவியின் புகைப்படத்தைக் காட்ட, அந்தப் படத்தைக் கையில் வாங்கி வைத்துக் கொண்ட ஆதிரா, பல நிமிடங்கள் அவனையே தீர்க்கமாகப் பார்த்த பின், படத்தை லட்சுமியிடம் கொடுத்து விட்டுப் படுக்கையில் படுத்துக் கொண்டாள்.

லட்சுமிக்கு இவள் செய்கை எல்லாம் புதிராக இருந்தாலும், ராஜி அவரது நிலையில் திடமாக இருந்தார்.

என்னதான் ஆதிரா, அவளின் பெற்றோரை இந்த ஒரு வருடத்தில் தேடவில்லை எனினும், திருமணம் என்று வந்ததும், ஆதிராவைப் பெற்றவர்களிடம் தெரிவிப்பது தனது கடமை என்று உணர்ந்தவர்... உடனே அவர்களுக்குத் தகவல் சொல்ல...

"ஓஹோ... அப்படியா... ரொம்பச் சந்தோஷம்... மேரேஜ் எப்போன்னு சொன்னீங்கன்னா எங்களுக்கு வர்றதுக்கு வசதியா இருக்கும்... அப்புறம் மேரேஜ்க்கு எவ்வளவு செலவானாலும் தயங்காமக் கேளுங்க... ஆயிரம்தானிருந்தாலும் அவளைப் பெத்த கடமையிருக்கு இல்லையா...?"



மஞ்சரி பேசப் பேச, லட்சுமிக்கு ஏன்டா இவளிடம் தான் பேசிக் கொண்டிருக்கிறோம் என்ற கொலை வெறியே எழுந்தது.

அதன் பின் நடந்தவை அனைத்தும் கவியரசன் அறிந்ததே...

ஆதிராவின் பழைய நாட்களின் துன்பங்கள் அனைத்தையும் கவியரசனிடம் சொல்லிக் கொண்டிருந்த லட்சுமி, மேலும் தொடர்ந்தார்.

"என்ன நினைச்சு ஆதிரா உன்னைத் திருமணம் செய்துக் கொள்ளச் சம்மதிச்சானு எங்களுக்குத் தெரியல, கவி... ஆனால் அவள் உன்கிட்ட ரொம்பச் சந்தோஷமா இருந்தா... கல்யாணத்தன்னிக்கு அவளோட பெத்தவங்களைப் பார்த்து எங்காவது அவள் கத்தி, ஆர்ப்பாட்டம் பண்ணிடுவாளோன்னு நான் ரொம்பவே பயந்தேன்...

"ஆனால் அவள் உன்கிட்ட ரொம்பவே வித்தியாசமா இருந்தா... அப்போதான் ராஜி சொன்னது புரிஞ்சது... அவளுக்கு உன்னால ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்கும்னு எனக்குள்ள நம்பிக்கை இருந்தாலும், மனசுல ஏதோ ஒருவிதப் பயம் இருந்துகிட்டே இருந்துச்சு. அந்தப் பயமும் அன்னிக்கு எனக்குப் போயிடுச்சு...

"நீ அப்போவே சொன்னல்ல... பெத்தவங்க இல்லன்னாலும் நல்ல வழியில வாழ முடியும்னு... ஆனால் அரசு... அப்போ அவள் இருந்த அந்த நிலைமைக்குக் காரணம் அவளில்லை கண்ணா... சூழ்நிலைதான் அவளை இந்த மாதிரி ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளியிருக்கு...

"நம்ம என்ன வேணாலும் பேசலாம்... அப்பா, அம்மாவோட அன்பு இல்லன்னா, வேற விஷயத்தில் தன்னை நிலைப்படுத்தி இருக்கலாம்னு... சொல்றது ரொம்ப ரொம்ப ஈசி. ஆனால், அந்த இடத்தில் இருக்கறவங்களுக்குத்தான் அந்தத் தனிமையின் கொடுமை புரியும்...

"உனக்கு நான் இருந்தேன், அரசு... ஆனால் ஆதிராவுக்குத் தப்பு எது, தவறு எதுன்னு சொல்லிக் கொடுக்க யாருமே இல்ல. நண்பர்களும் அவளுக்குத் துரோகிகளா இருந்தாங்க... என்னைப் பொறுத்தவரையில் அவள் எந்தக் களங்கமும் இல்லாதவள்... அவளை இந்த மாதிரி ஒரு நிலைக்குத் தள்ளின அவளோட அப்பா, அம்மா, சுற்றத்தார் அவங்கதான் மிகப் பெரிய குற்றவாளி...

"ஆனா அரசு... நீ ஒண்ணைப் புரிஞ்சுக்கணும்... யாருமே உன்னை ஏமாற்றணும்னு நினைக்கல... அதுவும் முக்கியமா ஆதிராவுக்கு அந்த எண்ணம் இல்லவே இல்ல... நிஜமாச் சொல்றேன்... அவள் உன்னைக் கல்யாணம் பண்றதுக்கு முன்னாடிவரை இருந்ததை நீ பார்த்திருந்தா... உனக்கு நான் சொல்றது புரியும்...



"அப்படியும் அவளுக்கு நீ ஏதாவது தண்டனை கொடுக்கணும்னு நினைச்சா... நீ எனக்குத்தான் கொடுக்கணும், அரசு... நான்தான் உண்மையை மறைச்சு அவளை உனக்குத் திருமணம் செய்து வைச்சேன்..."

அவர் கை கூப்பி அவனிடம் மன்னிப்பை வேண்ட, கவி வேகமாக அவரின் கையைப் பற்றித் தன் நெஞ்சில் வைத்துக் கொண்டான்.

லட்சுமி முழுதாக நடந்ததை ஒன்று விடாமல் சொல்லி முடிக்கவே, அவர் பேச்சின் முடிவில் கவி யோசனைக்குச் சென்றான்...

யோசித்தபோதுதான் அவனின் மனப் போக்கு அவனுக்குப் பிடிபட்டது...

தலையைக் கையில் தாங்கித் தலை குனிந்து சற்று நேரம் அமைதி காத்தான்.

திருமணமான புதிதிலிருந்து நடந்த சம்பவங்கள் அனைத்தையும் ஒரு முறை நினைவுக் கிடங்கிலிருந்து தட்டி எழுப்பினான்.

ஆதிராவின் ஒவ்வொரு செயலையும் யோசித்துப் பார்த்தான்.

ஆதிராவிடமிருந்து துவங்கிய அவனது எண்ணம், கடைசியில் ஆதிலட்சுமியிடம் வந்து முடிந்தது.

எப்போதும் ஒவ்வொரு விஷயத்தையும் அடியாழம் வரை யோசிக்கும் கவியரசனுக்கு முந்தின நாள் காலை முதல் அவனது சிந்தனை செல்கள் செயலிழந்து கிடந்தன.

ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து அதிர்ச்சியைத் தாங்கிய அவனது மூளையும், மனதும் இப்போது முழு நேரப் பணிக்குத் தயாரானது...

இத்தனை நேரம் விடை தெரியாத கேள்விகளுடன் உழன்று கொண்டிருந்த மனதிற்கு விடை கிடைத்து விட்டதைப் போல் தெளிவாக அமர்ந்திருந்தான்.

அவன் அமைதியாக யோசிக்கத் துவங்கி விட்டான் என்பதை உணர்ந்து ஆதிலட்சுமி மௌனம் காத்திருக்க, யோசனையின் முடிவுரையிலிருந்த கவியரசன் நிமிர்ந்து அமர்ந்த லட்சுமியின் கண்களை ஏறிட்டான்.

அவனின் பார்வையைத் தாங்கிய லட்சுமி இப்போது அவனுக்கு விளக்கும் கடமை தனக்கிருப்பதை உணர்ந்து பேச முற்பட்டார்.

ஆனால், அவரை ஒரு கை காட்டித் தடுத்த கவியரசன் பேசினான்...

"ஆதிம்மா... நான் அம்மாவைப் பார்த்ததில்லை. என்னோட சின்ன வயசுல இருந்து உங்களைத்தான் எனக்கு எல்லாமுமா நினைச்சேன். அதனாலதான் என்னோட எதிர்கால வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை உங்ககிட்ட கொடுத்தேன்... நீங்க எதை நினைச்சு எனக்கு ஆதிராவைத் திருமணம் செஞ்சு வைச்சீங்கன்னு எனக்குத் தெரியல...

"ஆனால் நீங்க எதுக்காக என்கிட்ட இருந்து இந்த விஷயத்தை மறைச்சீங்கன்னுதான் எனக்குப் புரியல... எனக்கு மனைவியாகப் போறவளோட கடந்த காலத்தைப் பற்றி எனக்குத் தெரிய எந்த உரிமையும் இல்லைன்னு நினைச்சுட்டீங்களா...?" அவன் அமைதியாக, ஆனால் அழுத்தமாகக் கேட்க..



அவன் கேட்ட கேள்வியில் நூறு மடங்கு நியாய மிருப்பதை அவர் உணர்ந்து தானிருந்தார். அதற்குப் பதில் சொல்லவும் அவர் தயங்கவில்லை...

"அப்படியில்ல, அரசு... எங்களைப் பொறுத்தவரை யில் ஆதிராவின் கடந்த கால வாழ்க்கை ஒரு முடிஞ்சு போன விஷயம்... தேவயில்லாத குப்பையைக் கிளற வேண்டாம்னுதான் சொல்லல..."

"நீங்க எப்படி அப்படி நினைக்கலாம், ஆதிம்மா...? நீங்க ஏன் என்னைப் பத்தி கொஞ்சம் கூட யோசிச்சுப் பார்க்கல... என்னோட மனதையும் நீங்க கொஞ்சம் யோசிச்சுப் பார்த்திருக்கணும், இல்லையா...?"

அவன் கேட்கும் கேள்வி ஒவ்வொன்றும் சாட்டை யாக வெளி வந்தது...

அதில் காயம் பட்டவராய், அவரும் தன் தவறை உணர்ந்தார். தான் தேவையில்லாதது என நினைத்த ஒன்றால், இன்று தான் மகனாக வளர்த்தவனின் வாழ்க்கை அந்தரத்தில் தொங்குவதை நினைத்து அவருக்கும் குற்ற வுணர்வு எழுந்தது.

"அப்போ அரசு... நீ... உனக்கு ஆதிரா வேண் டாமா...?" அவர் உயிரைக் குரலில் தேக்கிக் கேட்க...

கவியின் தலை இல்லை என்பது போல ஆடியது.

## 20

ஆதிலட்சுமி அவரின் உயிரைக் குரலில் தேக்கிக் கேட்ட கேள்விக்கு....

கவியரசனின் தலை இல்லை என்பது போல் இடமும், வலமுமாக ஆட, லட்சுமி விக்கித்துப் போனார்...

கடைசியில் அவர் பயந்தது போலவே நடந்து விட்டதே...!

ஆதிராவுக்கு நல்வாழ்வு என நினைத்துத் தான் செய்தது, கவியரசனின் மனதைப் பாதித்து விட்டதே...!

நாம் இதைச் செய்யும் முன் பல முறை யோசித் திருக்க வேண்டுமோ...?

கடவுளே... இனி ஆதிராவின் நிலை...!

அவன் தலையாட்டிய பின் லட்சுமியின் எண்ணப் போக்கு, ஜெட் வேகத்தில் பறக்க... அவரின் சிந்தனை ஓட்டத்தைத் தடுத்தது, கவியரசனின் குரல்...

"இல்லை, ஆதிம்மா... நோ. என்னைப் பொறுத்த வரை, என்னோட வாழ்க்கையில் திருமணம் என்பது ஒரு முறைதான்... அது ஆதிராவோட நடந்துடுச்சு. ஆனால்..."

அவன் இடைவெளி விடவும், அவன் பேச ஆரம் பித்தபோது லட்சுமிக்குள் எழுந்த சந்தோஷப் பேரலை, அவனின் 'ஆனா'வில் தடைப்பட்டு நின்றது.

'ஹய்யோ கவி... சொல்வதை முழுதாகத்தான் சொல்லேன்...' லட்சுமியின் மனது கூக்குரலிட்டது.

அதைப் புரிந்து கொண்டானோ என்னவோ, அவனே தொடர்ந்தான்.



"ஆனா, ஆதிம்மா... நீங்க மட்டும் என்கிட்ட முன்னாடியே உண்மையைச் சொல்லியிருந்தா... நான்... நான் அவளைக் கஷ்டப்படுத்தி யிருக்க மாட்டேனே... எனக்கும் அவளைப் பத்தி மனசுல தப்பான எண்ணங்கள் வந்திருக்காதே... ஒரு நாள் என்றாலும், என்னோட மனைவியை நானே கேவலமா நினைக்கிற மாதிரி ஆகிடுச்சே, ஆதிம்மா..."

அவனின் ஆதங்கத்தை வெளியிட, லட்சுமிக்கு அவன் சொல்வது புரிந்தது...

அவன் மேலும் தொடர்ந்தான்... "இப்போ எனக் குள்ள இருக்கிறது எல்லாமே குற்ற வுணர்வுதான். என்னோட உயிரா இருந்தவளை நானே வெறுத்து ஒதுக்கி யிருக்கேனே, ஆதிம்மா... அதுதான் மனசு வலிக்குது.

"முதல் நாளே எனக்கு அவள்கிட்ட வித்தியாசம் தெரிஞ்சுது. ஆனால் அந்த வித்தியாசத்தை ஆராயாமல்... அவளோட... ஹய்யோ... சீ... என்னை நினைச்சா எனக்கே ரொம்பக் கேவலமா இருக்கு, ஆதிம்மா... அவளை ரொம்பக் காதலிக்கிறேன்னு மார்தட்டிக்கிட்டு இருந்தேன். இப்போ தான் புரியுது... அது காதல் யில்ல. அவளைப் பார்த்ததும் என் மனசுல உண்டான ஒரு கிளர்ச்சின்னு...

"காதல் இருந்திருந்தா முதலில் அவள் மனசைத் தானே நான் புரிஞ்சிகிட்டு இருந்திருக்கணும்... நான்தான் அதைச் செய்யலையே..." கவியரசன் அவனின் காத லையே பொய்யென்று கூறி, முகத்தை மூடிக் கொண்டு கலங்கிய குரலில் சொல்லவும், ஆதிலட்சுமிக்கு உயிரே போய் விட்டது.

'காதல் இல்லாமல்தான் இப்போது அவளுக்காகக் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறானா...?'

ஆதிராவின் மீது காதல் என்ற ஒன்று இல்லையெனில், எதற்காக அவன் தன்னைத் தேடி வர வேண்டும்? அவன் செய்யாத தப்புக்கு, அவன் ஏன் குற்றவுணர்வு கொள்ள வேண்டும்... அதைக் களைய முற்பட்டார்.

"இல்ல, அரசு... உன் மேல எந்தத் தப்புமே இல்லடா கண்ணா... உன்னோட காதலிலும் எந்தக் களங்கமும் இல்லை அரசு... தப்பு எல்லாமே என் பேரில்தான். நீ என் மேல வச்ச முழு நம்பிக்கைக்கு நான்தான் நியாயம் செய்யல... நான்தான் தப்பு செஞ்சேன். தயவு செஞ்சு நீ உன் மனசைப் போட்டுக் குழப்பிக்காதே..." என்று அவர் செய்த சமாதானம் அவனை அசைக்கவில்லை...

அவன் இன்னமும் தன் எண்ணத்திலே உழன்று கொண்டிருந்தான்...

கவி, "ஒவ்வொரு தடவை அவள் என்னை எடுத்தெறிந்து பேசும் போதும், அவளுக்கு ரொம்பவே திமிருன்னு மனசுல நினைச்சிருக்கேன், ஆதிம்மா... அது எல்லாம் எவ்வளவு தப்பு...

"அன்னிக்கு எங்க கல்யாணம் முடிஞ்சு முதல் முறையா நான் ஆபீஸ் கிளம்பும்போது அவள் கேட்டா ஆதிம்மா... 'நீயும் என்னைத் தனியா விட்டுட்டுப் போறியான்னு...' ச்சே... அவளோட அந்த ஏக்கமான கேள்வி அன்னிக்கு எனக்குச் சுத்தமாப் புரியலம்மா... புரியல..."

அவன் மனமும், உதடுகளும், மனைவிக்காக இடைவேளையின்றி அரற்றிக் கொண்டிருந்தன.



"எத்தனை முறை அவள் வீட்டைச் சுத்தமா வைச்சுக் கலைனு சொல்லித் திட்டி யிருக்கேன் தெரியுமா...?"

லட்சுமியைப் பார்த்து அவன் குழந்தையாக மாறிக் கேள்வி கேட்க, லட்சுமிக்கு அவனின் மனப் பாரம் கண்டு இவரின் மனம் கனத்தது.

"இந்த விஷயம் தெரிந்த நாள், என் மனசு என்ன யோசிக்குதுன்னு எனக்கே தெரியல, ஆதிம்மா... அந்த நொடி நான் ரொம்பவும் ஏமாற்றத்தைச் சந்திச்சேன்... அப்போ என் மனசு என்ன மாதிரியெல்லாம் சுயநலமா யோசிச்சது, தெரியுமா... ச்சே... அன்னிக்கு அவளை நான் கைநீட்டி அடிச்சுட்டேன், ஆதிம்மா...

"என்னோட ஆதியோட மனசுல என்ன இருக்குன்னு தெரியாம... அவளை ஒரு வார்த்தை கூடப் பேச விடாம அவளை அடிச்சுட்டேன்... அவ... அவ மனசுல நானும் ஒரு சுயநலவாதின்னு எண்ணம் வந்திருக்குமில்ல...?

"நிச்சயம் வந்திருக்கும்... நானும் ஒரு சுயநலக்காரன்னு அவள் நினைச்சிருப்பா..." ஆதியிடம் கேட்டு, அதற்கு அவனே பதிலையும் சொன்னான்.

"நான் அடிச்சும் கூட என்கிட்ட என்ன சொன்னா தெரியுமா... 'கவி... இந்த மாதிரி யாராவது என்னை அடிச்சு வளர்த்திருந்தா நான் இப்படி ஒரு நிலைக்குப் போயிருக்க மாட்டேன்!'னு சொன்னா. ஆனா, அதையும் நான் கோபப்பட்டுத் திட்டிட்டேன்... ச்சே... கோபம் என் கண்ணையும், மனசையும் மறைச்சிருச்சு... என் ஆதியோட பேச்சை நான் கேட்டிருக்கணும். கேட்கல... அவளை நான் பேசவே விடல..." கண்ணீர் அவன் சட்டையை நனைத்தது.

“ஆதிம்மா... கிட்டத்தட்ட ஒரு வருஷம் யாரோடயும் பேசாம, வெளி உலகத்தைப் பார்க்காம இருந்தவ, என்னைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிச்சிருக் கானா, அப்போ அவளோட உள் மனசு என் மேல ஏதோ வொரு வகையில என்னை நம்பியிருக்குன்னுதானே அர்த்தம். அந்த நம்பிக்கையை நான் கெடுத்துட்டேனே... இனி அவள் திரும்ப என்னை நம்புவாளா, ஆதிம்மா... நம்புவாளா...?”

லட்சுமியை உலுக்கி அவன் கேட்ட கேள்விக்கு, லட்சுமியிடம் பதிலில்லை...

‘இவன் இப்படிக் குற்ற வுணர்வில் தகிப்பது அவ ரால் அல்லவா...? தான் செய்த ஒரு செயல் அவனின் மனதை இந்தளவிற்குப் பாதித்துவிட்டதே... இவனிடம் உண்மையைச் சொல்லியே திருமணம் செய்து வைத் திருக்கலாமோ...! என் மகனை நான் நம்பாமல் போனது என் தவறல்லவா...!’ லட்சுமிக்கும் கவியின் இந்த நிலை தன்னால்தான் என்ற எண்ணமே அவரை வதைத்தது.

ஆனால் அவரின் எண்ணம் எதையும் தெரியாமல், அவனின் புலம்பலைத் தொடர்ந்து கொண்டிருந்தான்.

“ஹய்யோ... கடவுளே... அன்னிக்கு... அன்னிக்கு... ஆதிம்மா... அன்னிக்குப் பால்கனிகிட்ட நின்னு அவ... ஹய்யோ... ஆதிம்மா... அ... அன்னிக்கு அவள் தற்கொலை பண்ணப் பார்த்தா, ஆதிம்மா...” என அவன் முடிக்கையில்,

“என்னது... தற்கொலையா... நீ என்ன சொல்ற அரசு...?” லட்சுமி திகைப்புடன் கேட்க...



“ஆமா... அன்னிக்கு மட்டும் நான் ஒரு நிமிஷம் லேட்டாப் பார்த்திருந்தா, இப்போ என் ஆதியை நான் உயிரோடவே பார்த்திருக்க முடியாது... அப்போ எனக்கு அவள் தற்கொலைதான் பண்ணப் போயிருக்கானு தெரியல... நேத்து யோசிச்சபோதுதான் அவள் அதுக் காகத்தான் அங்க போயிருக்கணும்னு யூகிச்சேன்... அன்னிக்கு அவள் எத்தனை துன்பத்தை அனுபவிச் சிருந்தா அப்படி ஒரு முடிவெடுத்திருப்பா...!” அவன் கண்களில் கண்ணீர் கரைந்தோடியது.

“கடவுளே...” லட்சுமி தலையில் கை வைத்து அமர்ந்து கொண்டார்.

அவர் அப்படி அமரவும், கவி அவரைக் கேள்வி யாகப் பார்க்க, “எ... என்னாச்சு...?” நடுங்கிய குரலில் கேட்க...

“போச்சு அரசு... எல்லாம் போச்சு... இத்தனை நாள் நானும், ராஜியும் பட்ட கஷ்டம் எல்லாம் வீணாப் போச்சு... இத்தனை நாள், எந்த நிலைக்கு அவள் போகக் கூடா துன்னு நானும் ராஜியும் நினைச்சோமோ, அதுவே இப்போ நடந்துடுச்சு...” – அவர் புலம்ப...

“எ... என்ன... கொஞ்சம் தெ... தெளிவாப் புரியற மாதிரிச் சொல்லுங்க....”

“என்ன சொல்ல, கவி... இங்க வர்றதுக்கு முன்னாடி, ஆதிரா ஒரு விதமாப் பாதிக்கப்பட்டிருந்தாள்னா, இப்போ வேறொரு விதமாப் பாதிக்கப்பட்டிருக்கா... ராஜி அப்பவே சொன்னா... இன்னொரு முறை ஆதிராவின் மனசு சலனப்பட்டுச்சுன்னா அவளைத் திரும்ப மீட்கிறது ரொம்ப

ரொம்பக் கஷ்டம்னு சொன்னா... இப்போ அது நடந் துடுச்சு..." - நம்பிக்கையற்று அவர் சொன்ன வார்த்தைகள் கவியரசனைப் பாதித்தன.

அவனும் யோசித்தான்...

ஒவ்வொரு முறையும் அவள் இருட்டறையில் சலன மற்றுப் படுத்துக் கொண்டிருந்த கோலம் அவன் முன்னே நிழலாடியது...

அப்போதெல்லாம் அவளைச் சோம்பேறி என மனம் சாடியது நினைவு வந்தது...

இன்றும் அவளைக் காலை முதல் தவிர்த்தது... ஹய்யோ... ஒரு நாள் முழுவதும் அவள் வீட்டில் தனித் திருக்கிறாளே... அன்று போல் ஏதேனும் விபரீத முடிவெடுத்து விட்டால்...?

"ஓ காட்...!" எனத் தலையில் கை வைத்தவன், பரபரப்பாக இருந்த இடத்தை விட்டு எழுந்தான்...

அவன் பரபரப்பைப் பார்த்ததும், "என்ன... என்ன அரசு...?" என்ற லட்சுமியின் கேள்விக்கு...

"நான் உடனே வீட்டுக்குப் போகணும், ஆதிம்மா... நேற்றிலிருந்து அவளை நான் ரொம்பவே நோகடிச் சுட்டேன்... இன்னிக்கும் அவ காலையிலிருந்து தனியா வீட்ல இருக்கா. சாப்பிட்டாளா என்னன்னு தெரியலையே...! இப்போ அவ இருக்கற நிலைமையில... ச்சே... நான் வரேன்..." எனப் படபடப்பாகச் சொன்னவன், வேகமாகப் பார்க்கிங் வந்து, தனது வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.



காஞ்சிபுரத்திலிருந்து சென்னை அண்ணா நகர் வர எடுத்துக் கொள்ளும் இரண்டு மணி நேரத்தை அத்தனை போக்குவரத்து நெரிசலை எல்லாம் சமாளித்து ஒன்றரை மணி நேரத்தில் அவனது அபார்ட்மெண்டிற்கு வந்து சேர்ந்தான்...

வந்தவன் அவசரமாகக் காரை நிறுத்திவிட்டு, அவனது ஃபிளாட்டிற்குச் செல்ல எடுத்துக் கொண்ட இரண்டு நிமிடமும் அவனின் இதயத் துடிப்பு சராசரியை விட அதிகமாக இருந்தது.

வீட்டு வாசலில் வெளி விளக்குப் போடப்படாமல் இருக்க, கதவு லேசாகத் திறந்திருந்தது.

உள்ளேயும் விளக்குகள் எதுவும் போடவில்லை...

வீடே இருட்டின் ஆதிக்கத்திலிருக்க, அவசரமாக ஹால் விளக்கைப் போட்டு மனைவியைத் தேடினான்.

அவள் ஹாலில் இல்லை என்றதும், கால்கள் வேக மெடுத்து கிச்சனுக்குள் நுழைய, அங்கிருந்த டைனிங் டேபிள் மீதிருந்த சாப்பாட்டுத் தட்டில் பாதி உணவு மீந்து போய்க் காய்ந்திருந்தது...

குளியலறைக்குள்ளும் அவள் இல்லாமல் இருக்க, கடைசியில் அவன் கால்கள் படுக்கையறையில் நுழைந்தன.

அங்கேயும் அவளில்லாமல் இருக்க, கவியின் மனம் அடுத்து என்னவென்றும் யோசிக்க மறுத்தது.

மனைவியை எங்கும் காணவில்லை என்ற எண்ணமே, அவனை வதைக்க... "ஹய்யோ... ஆதி...

எங்கடி போன...?" எனப் புலம்ப ஆரம்பித்தவன், கட்டிலில் மல்லாக்கப் படுத்துக் கண்ணீர் சிந்தினான்.

"ஆதிம்மா... என்கிட்ட வந்துடுடி... உண்மை தெரியாம உன்னை நான் ரொம்பவும் கஷ்டப்படுத் திட்டேன். வந்துடுடி குட்டிம்மா... வந்துடுடி..." அவன் மனம் இடைவிடாது புலம்பிக் கொண்டிருந்த வேளை...

அவன் காதுகளில், "க...வி.... எ...என்னை ம...ன்...னிச்சுடு... ப்...ளீஸ்... கவி... நீ...யும் எ...ன்னை விட்டுட்டுப் போயிடா...தே..." என்ற மெல்லிய புலம்பல் ஒலி பால்கனி பக்கமிருந்து வர, கட்டிலில் படுத்திருந்தவன் சட்டென எழுந்து அங்கே ஓடினான்.

அந்த ஒற்றையறை ஃபிளாட்டில் எங்கும் தேடி யவன், மனைவி என்றும் வாசம் செய்திருக்கும் பால்கனியை மறந்தே போனான்.

அவசர எட்டுகள் வைத்து அங்கே ஓடியவன், அங்கே பால்கனி சுவரில் ஒண்டி, உடம்பைக் குறுக்கிப் படுத்திருந்த ஆதிரா, கைகளைத் தலைக்குத் தலையணை யாக்கிக் கண் மூடிப் படுத்திருந்தாள்.

மூடியிருந்த அவள் கண்கள் கண்ணீரை மட்டுமே சிந்திக் கொண்டிருக்க, உதடு மட்டும், "கவி... என்னை... மன்னிச்சுடு... கவி... கவி..." என அரற்றிக் கொண்டிருந்தது.

மனைவியை அந்த நிலைமையில் பார்த்த கணவ னானவனின் மனம் நூறு கிலோ எடையைத் தாங்கியது போல் கனத்துப் போனது...

இதயம் வலிக்க, மனைவியின் தலையைத் தூக்கித் தனது நெஞ்சில் சாய்த்துக் கொண்டவன், "ஆதிம்மா...



ஆதிம்மா... ஹய்யோ... உன்னை இப்படி ஒரு நிலைமை யில கை விட்டுட்டுப் போயிட்டேனே... சாரிடி... சாரி. என்னை மன்னிச்சுடு குட்டி..." என அவள் தலையில் தன் கன்னம் வைத்து அவளைத் தன்னுள் புதைத்துக் கொள்ள முயல...

அவளோ கணவனின் நெஞ்சத்தில் மஞ்சம் கொண் டிருப்பதையே உணரவில்லை.

நேற்று இரவு முழுவதும் ஆதிரா யோசித்து எடுத்த முடிவெல்லாம் காலையில் அவன் கணவனின் பாரா முகத்தில் ஆட்டம் கண்டதென்றால், நேரம் செல்லச் செல்ல அவள் இதயம் மேலும் மேலும் பலகீனப்பட்டுப் போனது.

பதினெட்டு வருடமாகப் பெற்றவர்கள் என்பவர்கள் அவளுக்குத் தராத நம்பிக்கையை, நான்கு மாதங்கள் என்றாலும், கணவன் என்றவன் அவளுள் விதைத்த நம்பிக்கையும், காதலும் அவன் தன்னுடன் இருக்கிறான் என்ற ஒன்றே அவளிடம் வெகு விரைவில் மாற்றத்தைக் கொண்டு வந்து கவிக்கு ஏற்ற மனைவியாய் மாறச் செய்தது.

உறவுகள் என்பது உனக்காக நான் இருக்கிறேன், எனக்காக நீ இருக்கிறாய் என்ற நம்பிக்கையை விதைத்து, மனிதர்களை உயிர்ப்புடன் வைக்க உதவும் உன்னதமான பந்தம்...

தந்தை, மகள் உறவு...

தாய், மகன் உறவு...

அண்ணன், தங்கை உறவு...

கணவன், மனைவி உறவு...

மற்ற எந்த நாடுகளிலும் இல்லாத இந்த உறவு களின் பந்தம், நம் நாட்டில் மட்டுமே ஓங்கி வளர்ந்து நிற்கிறது...

எத்தனை பெரிய நாகரிக மாற்றம் வந்தாலும், நம் நாட்டின் கலாச்சாரமும், அதன் பாரம்பரியமும் தான் இந்தியாவின் பெருமைக்கு மிக முக்கிய காரணம்...

இப்போதும் வேலையின் காரணமாகவோ, குடும்பச் சூழ்நிலையின் காரணமாகவோ பிரிந்திருக்கும் தனிக் குடும்பங்கள், எந்த ஒரு நல்ல நாள் பண்டிகையின் போதும் ஒன்று கூடி உறவுகளின் சந்தோஷத்தை வெளிப் படுத்துவர்.

அப்படிப்பட்ட உறவுகள் ஒன்று கூடி யிருக்கையில், நம்முள் ஒரு பலம் ஏற்படும்...

தனக்காக அழ, சிரிக்க, துன்பத்தில் தோள் கொடுக்க ஒரு ஜீவன் இருக்கிறது என்ற எண்ணமே நம்மை உயிர் வாழ வைத்து விடும்.

அத்தகைய உறவின் மேன்மையைக் கவி அவனை அறியாமலே ஆதிராவிற்குள் விதைத்திருக்கிறான்.

அப்படி யிருக்கையில் அவன் விதைத்த நம்பிக் கையை அவனே அறுவடை செய்யும்படியானதில் ஆதிரா வின் மனது வெகுவாகப் பலகீனப்பட்டது.

முதலில் தனக்கு யாருமில்லை என்று நொந்தவள், இப்போது தனக்கிருக்கும் கணவன் தன்னை விட்டுப் போய் விடுவானோ என்ற பயம் அவளுள் விளைந்தது.



என்னதான் அவனிடம் தன் காதலை உணர்த்தி, அவன் தன் மீது கொண்ட காதலை மீட்கலாம் என அவள் சபதம் எடுத்தாலும், அந்தச் சபதத்தை நிறைவேற்ற அவளிடம் மனோ திடம் சற்றும் இருக்கவில்லை...

ஆதிராவிற்கு எது இனிமேல் நடக்கக் கூடாதென்று ராஜியும், லட்சுமியும் பயந்தார்களோ, அதுவே இப்போது நடந்து விட்டது.

அதன் விளைவே இப்போது அவளிருக்கும் நிலைமை...

ஆதிராவிற்குள், கவியரசன் மன திடத்தை விதைத்துத் தன் மனைவியை மீட்பானா...?

## 21

தன் நெஞ்சில் தாங்கிய மனைவியை அள்ளி எடுத்துக் கொண்டு தங்களது படுக் கையில் கிடத்தினான், கவியரசன்...

அவளைப் படுக்கையில் கிடத்திய பின் னும், கணவனின் சட்டையைப் பற்றியிருந்த கைகள் சற்றும் தளர வில்லை...

எங்கே கையை எடுத்தால் தன் கனவில் தன்னைத் தாங்கிக் கொண்டிருக்கும் கணவன் மறைந்து விடுவானோ என்ற பயத்தில்... அவனின் மார்புச் சட்டையைத் தன் வலது கைகளில் இறுக்கமாகப் பற்றிக் கொண்டாள்...

அவளின் இறுக்கமான பிடியில் கவியின் கண்கள் ஊற்றெடுத்தன.

எவ்வளவு பயந்திருந்தால்... தான் பக்கத்தில் இருப்பதைக் கூட உணராமல் படுத்திருப்பாள். கவியின் நெஞ்சம் வலித்தது...

தன் மார்புச் சட்டையைப் பற்றியிருந்தவளின் தளிர் விரல்களை மென்மையாகப் பிரித்தெடுத்து, அதில் தன் இதழொற்றியவன் கண்களில் வழிந்த நீர் அவள் கைகளில் பட்டுத் தெறித்தது...

அதில் உணர்ச்சி பெற்றவளாய், "கவி... என்...னை விட்டு எங்க... எ..ங்கேயும் போ...காதே... நா...த...ப்பு... பண்ணி...ட்டேன்... சா...ரி... சாரி கவி..." அவள் இதழ்கள் இடைவிடாது புலம்பிக் கொண்டிருக்க...

"ஆதிம்மா... நான் எங்கயும் போகலடா... என் குட்டிமா பக்கத்துலதான் இருக்கேன். இங்க பாருடாம்மா... இங்க பாரு... உன்னோட கவிடா... கண்ணைத் திறந்து பாரு, குட்டி..." அவன், அவளைத் தன்னைப் பார்க்க வைக்க எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாயின.

அவன் சொன்ன எந்த ஆறுதல் வார்த்தையும் அவள் காதுகளில் செல்லவில்லை...

அவள் நிற்காமல் தன் புலம்பலைத் தொடர்ந்து கொண்டிருக்க, அவளை எப்படி அமைதிப் படுத்துவ தென்று அறியாமல், அரற்றிக் கொண்டிருந்தவளின் இதழ்களைப் பூட்டிட, தன் இதழ்களைச் சாவியாக்க நினைத்துத் தன் நெஞ்சில் தாங்கியிருந்தவளின் முகத்தை நோக்கிக் குனிந்தான்.

ஆனால் குற்ற வுணர்வு கொண்ட மனம் தடுத்தது... ஏற்கெனவே அவள் நிலல புரியாமல், அவளின் துன்பம்



புரியாமல், அவளை ஆண்டு அனுபவித்தது பத்தாதா...? மீண்டும் அதே தவறைச் செய்ய அவனின் உள் மனம் தடுத்தது...

எதுவும் செய்ய இயலாமல் மனைவியை இன்னும் இன்னும் அழுத்தித் தன் நெஞ்சோடு இறுக்கிக் கொண்டான்...

அதில் சற்று அமைதி அடைந்தவள் மீண்டும் கண் மூடி அமைதி நிலைக்குச் சென்றாள்...

அவள் உறங்கியதும், உடனே தனது செல்போனை எடுத்து லட்சுமிக்கு அழைத்தான்.

அவன் எதிர்பார்த்தது போலவே, முதல் மணி அடித்து முடிக்கும் முன்னரே போனை எடுத்த லட்சுமி,

"அரசு... ஆதிரா எப்படி இருக்கா...?" - பரபரப்புடன் கேட்க...

லட்சுமியின் குரலில் உடைந்த கவி, "அம்மா... ரொம்பப் பயந்து போயிருக்காம்மா... நான் பக்கத்துல இருக்கிறதைக் கூட அவள் உணரவே யில்லை..." சொற்கள் வலியுடன் வந்தன.

கேட்ட லட்சுமிக்கும் வருத்தமாகத்தான் இருந்தது...

கடைசியில் அவர் பயந்தது போலவே நடந்து விட்ட தல்லவா...!

எது நடக்கக் கூடாதென்று கவியரசனிடம் ஆதிரா வைப் பற்றிய உண்மையை மறைத்துத் திருமணம் முடித்து வைத்தார்களோ... அதுவே இப்போது நடந்து விட்டதே...!

இருவருக்கும் நல்லதென்று யோசித்துச் செய்தது, அவர்களுக்கு எதிராகவே திரும்பி விட்டதே... இனி என்ன?

அவர் மனம் கேட்ட கேள்விக்கு விடை கிட்ட வில்லை...

அவர் தன் யோசனையில் இருக்க, "அம்மா... ஆதிம்மா..."

கவியின் பதட்டமான குரலை உணர்ந்து, "ஸ்... சொல்லு அரசு..." என்க...

"என்னாச்சு...?"

"ஒண்ணுமில்லடா, கண்ணா..." என்றவர் நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "சரி... இப்போ நான் சொல்ற மாதிரி செய்... அவ காலையிலிருந்து எதுவுமே சாப்பிட்டு இருக்க மாட்டா. அவளுக்குச் சாப்பிட ஏதாவது கொடு... நீயும் கொஞ்சம் சாப்பிடு.. அப்போதான் அவளைக் கவனிக்க உனக்குத் தெம்பிருக்கும்...

"நாளைக்குக் காலையில, நான் ராஜியைக் கூட்டிட்டு நேராவே அங்க வரேன்..." எனச் செய்ய வேண்டிய வேலைகளைப் பட்டியலிட்டார்...

அதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டு அழைப்பைத் துண்டித்த கவியரசன்... மனைவியைக் கட்டிலில் கிடத்திவிட்டுக் குளியலைறைக்குள் சென்று முகத்தைத் தண்ணீர் அடித்துக் கழுவியவன் மனதில் முழுவதும் இனி வரும் நாட்களில் தன் மனைவியை எந்தத் துன்பமின்றி சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் மட்டுமே இருந்தது...



அதன் பின் உடையை மாற்றிக் கொண்டு, நேராகச் சமையலறைக்குள் புகுந்தான்...

காலையில் அவள் செய்து வைத்திருந்த இட்லிகள் இன்னமும் ஹாட்பேக்கில் கேட்பாரின்றி கிடக்க... அதைப் பொடித்து, எண்ணெய்யில் தாளித்து இட்லி உப்புமா செய்தவன், அதை ஒரு தட்டில் பரிமாறிக் கொண்டு, படுக்கையறைக்குள் நுழைந்தான்...

தலையணையில் முகத்தைப் புதைத்திருந்தவளை எழுப்பித் தனது இடது தோளில் சாய்த்தவன், கையோடு கொண்டு வந்திருந்த சின்னக் கிண்ணத்தில், டவலை நனைத்து, ஆதிராவின் முகத்தைத் துடைத்தெடுத்தான்.

ஜில்லென்ற தண்ணீர் முகத்தில் பட்டதும், இத்தனை நேரமிருந்த மயக்க நிலை சட்டெனக் கலைந்ததில், திடுக் கிட்டுக் கண் விழித்த ஆதிரா ஒரு நிமிடம் தன்னைச் சுற்றி நடப்பதைத் திகிலுடன் பார்த்தாள்...

தான் கணவன் நெஞ்சில் இருக்கிறோம் என்பது அவள் மனதில் இன்பச் சாரல்கள் பொழிந்தாலும், உள் ளுக்குள் உதறல் எடுத்தது...

கணவன் தன்னைத் தாங்கியிருப்பது 'காதலாலா? கடமையாலா?' என்ற குழப்பம் அவள் நெஞ்சை அரித்தது.

அதைக் கணவனிடமே கேட்டு விட எண்ணி, அவள் உதடுகள் பிரிய, உள்ளிருந்த குற்ற வுணர்வு அவளைத் தலை குனிய வைத்தது...

எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவனிடம் பேசுவது...?

ஏற்கெனவே அவனைக் காயப்படுத்தியிருப்பது பத்தாதா...?

எத்தனை எதிர்பார்ப்புகளுடன் தன்னை மணந் திருப்பான்...? அவனின் எதிர்பார்ப்புக்கும் காதலுக்கும் தனக்கு ஒரு சதவீதம் கூடத் தகுதி யில்லை என்று தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டு அவளின் எண்ணம் தொடர்ந்தது.

தான் ஏதாவது பேசி, அதில் கோபம் கொண்டு கடமைக்காகவாவது இப்போது தன்னுடன் இருக்கும் கணவன், தன்னை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து சென்று விட்டால்... அதன்பின் தான் உயிருடன் இருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்று ஏற்கெனவே பலகீனப்பட்டு இருந்த இதயம் மேலும் குழம்பி அதற்கு விடையாய்த் தனது வாய்க்குப் பெரிய பூட்டு ஒன்றைப் போட்டுக் கொண்டது..

இங்கே கணவனும் அதே நிலையில்தான் இருந் தான்...

நேற்று ஒரு நாள் அவளைக் காயப் படுத்தியது போதாதா...?

இன்றும் அவளிடம் சமாதானம் என்ற பெயரில் தான் ஏதாவது பேசி அவளை மேலும் நோகடிக்க விரும் பாமல் அமைதியாக அமர்ந்திருந்தான்.

இருவரின் மனதிலும் கடலளவு காதல் இருந்தும், ஒருவரின் மனம், இன்னொருவரால் புண்பட்டு விடுமோ என்று அமைதி காத்தனர்...



அதே அமைதியுடன் கவியரசன் மனைவிக்குச் செய்த உணவைக் கையிலெடுத்து, அவளைத் தன் தோள்களில் தாங்கியவாறே ஊட்டினான்.

இருவரும் தாங்கள் அமர்ந்திருக்கும் அந்நிலையை மாற்ற விரும்பவில்லை...

கிடைக்கும்வரை ஒருவரின் அருகாமையை அனுப விக்க நினைத்தனர்...

கவியரசன் உப்புமாவை மனைவியின் வாயருகே எடுத்துச் செல்ல, எண்ணெய்யில் தாளித்த உணவு ஆதிராவின் மூக்கருகே சென்றதும் அதன் வாசத்திற்குக் குமட்டல் எடுத்தது...

எங்கே அதைச் சொன்னால், கோபப்பட்டு விடு வானோ என்ற பயத்தில் வாயைத் திறந்து உணவை வாங்கிக் கொண்ட ஆதிரா, தொடர்ந்து உணவை உட் கொண்டாள்...

கர்ப்ப காலத்தில் பெண்களின் நிலை பற்றிப் பெரிய தாகத் தெரியாத கவியரசனும் உணவை ஊட்டிக் கொண் டிருந்தான்...

கிட்டத்தட்ட முக்கால் வாசி உணவை அனுமதித்த ஆதிராவின் வயிற்றுக்குள் சற்று நேரத்தில் ஒரு பிரளயம் உருவாக ஆரம்பித்தது...

இன்னும் அரை நிமிடத்தில் உண்ட உணவு வெளியே வந்துவிடும் என்ற அறிவிப்பு ஆதிராவின் மூளைக்குள் சென்ற வேளை, அனைத்தும் கணவனின் நெஞ்சில் விழுந்தது...

"ஹே... ஹே... ஷிட்..." எனக் கவியரசன் படுக்கையை விட்டு உடனே எழுந்து விட, ஆதிராவிற்கு என்னவோ போலானது...

இது என்ன சினிமாவா, மனைவி வாந்தி எடுக்கப் போகிறாள் என முன்னரே தெரிந்து, கணவன் கையேந்தி நிற்க...

அவன் எதார்த்தமாகச் சொன்ன வார்த்தைகள் ஆதிராவின் மனதைத் தைக்க, அவளின் முகம் கூம்பிப் போனது...

அதைப் பார்க்கத் தவறிய கவியரசன் கையிலிருந்த தட்டை எடுத்துக் கொண்டு தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு வந்தவன், கிண்ணத்தில் வைத்திருந்த டவலால் ஆதிராவின் முகத்தைத் துடைத்து விட்டான்.

அவன் முகம் துடைத்து விட்டது, ஆதிராவின் கருத்தில் பதியவில்லை.

அவனின் முகத் திருப்பலே அவளுக்குப் பெரியதாக இருந்தது...

அவளையும் சுத்தப்படுத்திய கவியரசன் போனை எடுத்துக் கொண்டு பால்கனிக்குச் செல்ல, ஆதிராவும் படுக்கையை விட்டு எழுந்து குளியலறைக்குள் சென்றாள்.

பால்கனியில் கவி, "ஆதிம்மா... நான் கொடுத்த சாப்பாடு எல்லாத்தையும் அவ வாந்தி எடுத்திட்டா... அவளுக்கு நான் செஞ்சது பிடிக்கலை போல..." அவன் குற்றப் பத்திரிகை வாசிக்க...



"நீ என்ன செஞ்சு கொடுத்தே...?" லட்சுமி கேட்க...

"காலையில அவள் செஞ்சு வைச்ச இட்லி மீதியிருந்தது. அதைப் பொடிச்சு உப்புமா செஞ்சு கொடுத்தேன்..."

"டேய் கிறுக்கா..." லட்சுமி அவன் குறும்பு செய்யும் போது மட்டுமே அவனை 'டா' போட்டு அழைப்பார்.

சின்ன வயதில் அடிக்கடி திட்டு வாங்கியவன், வளர்ந்ததும் அதற்கு வாய்ப்புக் கிட்டாமல் போனது...

இப்போது வெகு நாட்கள் கழித்து, லட்சுமியிடமிருந்து, "டா..." திட்டைக் கேட்கவும், இறுகியிருந்த அவன் மனது சற்று இளகி, உதடுகள் புன்முறுவலை உதிர்த்தன.

"ஏன் ஆதிம்மா திட்டுறீங்க...?" அவன் உண்மையாகவே வருத்தத்துடன்தான் கேட்டான்...

"பின்னே... திட்டாம... அவளே காலையிலிருந்து ஒண்ணும் சாப்பிடாமலிருக்கா... இப்போ யிருக்கற நிலைமையில எண்ணெயில் தாளிச்ச சாப்பாட்டை அவளுக்குக் கொடுப்பாங்களா... அதுவும் காலையில் செஞ்ச இட்லி... ஏன்டா... நீ உன் கம்பெனியில் லட்ச லட்சமாச் சம்பாதிக்கிற பணத்தை என்ன செய்யுற... கஞ்சப் பிசினாரி..." லட்சுமி சரமாரியாகத் திட்ட...

"போதும், போதும்... போதும்... சான்ஸ் கிடைக்குதுன்னு இப்படியா திட்டுவாங்க... எனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்... நான் என்ன இதுக்கு முன்னாடி பத்துப் பதினைஞ்சு பிரசவம் பார்த்திருக்கேனா என்ன...?" அவன் தன் நியாயத்தைச் சொல்ல...

“எல்லாத்தையும் இனிமேல் நீதான்டா கண்ணா கத்துக்கணும்... குடும்பஸ்தன் ஆகிட்டல்ல...” இருவரும் தங்களது கவலைகளைச் சற்று ஒதுக்கி வைத்துப் பேசிக் கொண்டிருந்த வேளை, குளியலறையிலிருந்து வெளியே வந்த ஆதிராவிற்குத் தலையைச் சுற்றி மயக்கம் வருவது போலிருந்தது.

அவள் கண்கள் துணை தேடிப் பால்கனி பக்கம் பார்க்க, திரும்பி நின்றிருந்த கவியரசன் மனைவியைக் கவனிக்க மறந்தான்...

சுவரைப் பிடித்து மெல்ல அடியெடுத்து வைத்தவள், இரண்டாவது எட்டில் கண்கள் இருட்டாக, “கவி...” என்ற மெல்லிய அழைப்புடன் அப்படியே சுவரை ஒட்டிச் சரிந்தாள்.

இதை யறியாமல், “சரி சரி... வாராதீங்க... இப்போ அவளுக்கு என்ன சாப்பிடக் கொடுக்கிறது... பாவம்... அவளுக்குப் பசிக்குமே...” கவலையாகக் கேட்க,

“இப்போதைக்குக் குடிக்கப் பால் மட்டும் கொடுத்துத் தூங்க வை. வாந்தி எடுத்ததுக்கு அவளுக்குக் கொஞ்சம் மயக்கம் வரும்... அதைப் பார்த்துட்டுப் பயப்படாதே... இனி மேல் அவளுக்கு இப்படித்தான் அடிக்கடி வரும்...” என்று அக்கறையுடன் சொன்னவர்...

சற்றுப் பொறுத்து, “அவளைப் பத்திரமாப் பார்த்துக்கோ, அரசுக் கண்ணா... பிறந்ததிலிருந்து அன்புன்னா என்னன்னே தெரியாம வளர்ந்திட்டா... இனிமேல் நீதான் அவளுக்கு எல்லாமா இருந்து ஆதரவு கொடுக்கணும்... அவளே உன்னை ஏதாவது கோபப்பட்டுப் பேசினாலும்



கூட, உண்மையை மறைச்சுட்டானு அவளைக் குத்திக் காட்டிப் பேசி நோகடிச்சுடாதே...” அவர் மனம் தாங்காமல் சொல்ல...

“என்ன ஆதிம்மா... இப்படி எல்லாம் பேசுறீங்க... உங்களுக்கு என்னைப் பத்தித் தெரியாதா... நான் அந்த மாதிரிப் பேசும் ஆளா...” - அவன் கலங்கிய குரலில் கேட்க...

“அச்சோ... இல்லை, அரசு... நான் உன்னைத் தப்பாச் சொல்லல... உன்னை மீறி ஏதாவது வார்த்தையை விட்டுட்டா... பாதிப்பு உங்க ரெண்டு பேருக்கும் தானே... அவள் கொஞ்சம் மனசளவில் திடமாகும்வரை அவளை நாம ஒரு கண்ணாடிப் பாத்திரம் மாதிரிதான் பார்த்துக்கணும்...

“அதுவும் தாய்மை, எந்தப் பலமான பெண்ணையும் சற்றுப் பலகீனப்படுத்தும் என்னும்போது, ஏற்கெனவே மனசளவில் குழந்தையா இருக்கிற ஆதிராவுக்குச் சொல்லவா வேணும்...”

அவருக்கு எந்தப் பக்கம் பேசுவதென்று புரியவில்லை... இருந்தாலும், இப்போது கவியை விட ஆதிராவுக்காகத்தான் அதிகம் பார்க்க வேண்டியதாக இருந்தது.

அவரைப் பொறுத்தவரை இரண்டு பேரும் இரண்டு செல்வங்கள்தான்...

யாருக்குப் பாதிப்பு நேர்ந்தாலும், அது அவரையும் நோகடிக்கும்...

லட்சுமி சொல்ல வருவதைப் புரிந்து கொண்ட கவியரசு, “இனி நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க,

ஆதிம்மா... நான் அவளைக் கண்ணுக்குள்ள வைச்சு பார்த்துக்கிறேன்..." - அவன் உறுதியாகச் சொல்லவும், லட்சுமிக்கு மனதினுள் நிம்மதி பிறந்தது.

போனை அணைத்தவன் அதையே சற்று நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டு ஒரு பெருமூச்சுடன் திரும்பி நடக்க, அங்கே சுவரில் சாய்ந்து மயங்கியிருந்த மனைவியைக் கண்டு பதறியவன், உடனே அங்கு விரைந்தான்...

அவளைக் கையில் தாங்கிப் படுக்கைக்கு எடுத்து வந்தவன், மனதில், "லூசுப் பெண்ணே... மயக்கம் வருதுன்னா என்னைக் கூப்பிட வேண்டியதுதானே... கீழே விழுந்து எங்காவது அடிபட்டிருந்தா..." என்ற புலம்பலுடன் அவளைக் கிடத்தினான்.

உடனே அவன் கைகள் லட்சுமியை அழைக்கப் பார்க்க, அப்போதுதான் அவர் சொன்னது ஞாபகம் வந்தது...

அவளைக் கட்டிலில் விட்டுச் சென்று பாலைச் சூடாக்கிக் கொண்டு வந்தவன் அவளை நெஞ்சில் தாங்கி மெல்ல மெல்லப் புகட்டித் தன் மீதே உறங்க வைத்தான்.

அவள் உறங்கியதும் அவளைத் தலையணையில் படுக்க வைக்க நினைத்து, அவள் பின்னந்தலையில் கை வைக்க, அப்போதுதான் அவள் தலையில் இருந்த தழும்பை அவன் கைகள் உணர்ந்தன.

அதை உணர்ந்ததும், லட்சுமி அவளைப் பற்றிச் சொன்னது அனைத்தும் ஞாபகம் வந்தது...



அவளது கால்களுக்கு அடியில் சென்றவன் அவள் அணிந்திருந்த ஸ்கர்ட்டை மேலே தூக்கிப் பார்த்தான்... அவள் கணுக்கால்கள் முழுவதும் பல கீறல்களின் தழும்பைப் பார்த்தவன் நெஞ்சம் வலித்தது.

இவ்வளவு நாட்கள் இதைக் கவனிக்கத் தவறியதில் அவனுள் சின்னதாக இருந்த குற்ற வுணர்வு மேலும் பரந்து விரிந்தது.

அந்தக் குற்ற வுணர்வே தன் மனைவியை இனி எந்தச் சூழ்நிலையிலும் எந்த விதக் கஷ்டத்தையும் அனுபவிக்க விடக் கூடாதென்ற உந்துதலை விளை வித்தது.

## 22

அதிகாலை விடியலில் முதலில் கண் விழித்தது கவியரசன்தான்...

அறையில் எங்கோ ஒரு மூலையில் அவனது செல்போனின் ஒலி அவனின் தூக்கத்தை முற்றிலும் கலைக்க, முன்னதாக இது போல் ஒரு காலை யின் விடியலின் ஞாபகம் வந்தது அவனுக்கு.

புன்னகை தாங்கிய முகத்துடன், தன் கைகளைத் தலையணையாக்கிப் படுத்திருந்த மனைவியின் தலையை விலக்கிப் படுக்க வைத்தவன், கட்டிலருகில் டீபாயில் கிடந்த தனது செல்போனை எடுத்த சமயம் கால் கட்டானது...

லட்சுமிதான் அழைத்திருந்தார்....

உடனே அந்த நம்பருக்கு மீண்டும் அழைக்க, ஒரே ரிங்கில் எடுத்த லட்சுமி, "என்ன அரசு... தூங்கிட்டு இருந்தியா...?" அன்பொழுகக் கேட்ட லட்சுமிக்கு...

"ஆமா, ஆதிம்மா... நைட் தூங்க ரொம்ப லேட் டாகிடுச்சு..." குரலில் சோர்வுடன் சொல்ல...

அது எதனால் எனப் புரிந்தவர், "சரி கண்ணா... நானும், ராஜியும் இப்போ கிளம்பிட்டோம்... கூட ஆயாவும் வர்றாங்க... இன்னும் ரெண்டு மணி நேரத்துல வந்துடு வோம்... ஆதிரா எழுந்துட்டாளா...?"

"இல்லம்மா... தூங்குறா... நைட் நீங்க சொன்ன மாதிரியே மயங்கி விழுந்துட்டா... வெறும் பால் மட்டும் தான் குடிச்சா..." அவன் கவலையுடன் சொல்ல...

"நான்தான் சொன்னேனில்ல, கண்ணா... இந்தச் சமயத்துல அப்படித்தானிருக்கும்... காலையில் எழும் போதும் கூடத் தலை சுத்தும்... எப்படியாவது ஏதாவது சாப்பிட வைச்சிடு... எதுவுமே சாப்பிடலைன்னா ரொம்ப பலவீனமாகிடுவா... நாங்க அதுக்குள்ள வந்துடுவோம்... சரி, வைச்சிடவா..." எனக் கேட்டு, அவன், "ம்..."மைப் பதிலாகப் பெற்றவுடன் இணைப்பைத் துண்டித்தார்...

அவர் இணைப்பைத் துண்டிக்கவும் வாசுவிடமிருந்து கால் வரவும் சரியாக இருந்தது.

அவன் அழைத்ததும்தான், அவனுக்குத் தன் வேலையைப் பற்றியே ஞாபகம் வந்தது...

ஒரு தகவலும் தெரிவிக்காமல் நேற்று அவன் விடுப்பு எடுத்தது ஞாபகம் வர, தன்னை நொந்தவாறே, அழைப்பை ஏற்று, "சாரி வாசு... நேத்து ஏதும் இன்ஃபார்ம் கொடுக்காமயே லீவ் போட்டுட்டேன்... சேனா ஏதாவது கத்தினாரா...?" அவன் கவலையாகக் கேட்க...



"சேனாவை விடுடா... அவன் கிடக்கறான் டபரா தலையன்... ஏன்டா, நீதான் ஒரு போன் பண்ணி ஏன் வரலைன்னு சொல்லல... அட்லீஸ்ட் நான் கால் செஞ்ச போதாவது பேசியிருக்க வேண்டியதுதானே... அப்படி என்ன உனக்கு வெட்டி முறிக்கிற வேலை...?" வாசுவின் குரலில் ஏகப்பட்ட கடுப்பு...

நேற்று வாசு அழைத்த போதெல்லாம் போன் முழு அழைப்பிற்குச் சென்று கட்டானது...

கவியரசன் போனைக் காரில் வைத்து விட்டு, அன்று பொழுதும் ஆசிரமத்தில் லட்சுமியிடம் பேசிக் கொண்டிருந்தது அவனுக்கு எப்படித் தெரியும்... வீட்டுக்கு வந்தும் கூட மனைவியின் நிலை மட்டுமே ஞாபகம் இருக்க... மற்றது எல்லாம் பின்னே சென்றது...

"சாரி மச்சி... அதான் முதல்லயே ஒரு சாரி சொல் லிட்டேனில்ல... கோவிச்சிக்காதேடா...." - கவி சமாதானம் செய்யவும்...

"சரி சரி. பொழைச்சுப் போ... மன்னிச்சு விடறேன்... ஆமா... நேத்து ஏன் நீ வரல...? நீ சேனாவுக்குப் பதில் சொல்றியோ இல்லையோ... முதல்ல இந்த வாசுவுக்குப் பதில் சொல்லு... டெல் மீ... டெல் மீ..." என அவசரப் படுத்த...

"அடச்சே...! கேப் விடுடா... அப்போதானே நான் பேச முடியும்..." என்ற கவி...

"மச்சி... ஆதிக்கு உடம்புக்குச் சரியில்லடா..." அவன் முடிக்கும் முன்...

"அடப் பாவி! என்னடா செஞ்ச அந்தப் பச்ச மண்ண... அதுவே ஒரு கொழந்தப் பிள்ள... அதை எங்காவது கடிச்சுக் கிடிச்சு வைச்சியா... மவனே... நீ செஞ் சாலும் செஞ்சிருப்படா... எனக்கு உன்னைப் பத்தி நல்லாத் தெரியும்டா... லண்டன் கிளைன்ட் மேல இருக்கிற கடுப்பை அந்தப் புள்ள மேல காட்டினியா...?"

முன்னொரு முறை இதே பதிலை வாசு சொன்ன போது, அவனைப் பேச விடாமல் தாக்கிய கவியரசனைப் போல் இன்று வாசு பேசவும்...

"டேய் எருமை... என்னைப் பழி வாங்குறியா... பேச விடுடா எருமை... எருமை..." - கவி கடுப்புடன் சொல்ல...

"சரி சரி... அதுக்கு ஏன் வாழ்த்துற... என்னாச்சு ஆதிக்கு...?" பொறுமையாகக் கேட்க...

"ம்ம்... ஆதியும் ப்ரெக்னன்ட்டா..." கவி சொல லவும்...

"அடப் பாவி... ஆனாலும் உனக்கு இப்படி ஒரு வேகம் ஆகாதுடா... உன் நண்பன் நான் அஞ்சு மாசமா ராத்திரிப் பகலா உழைச்சுச் சாதிச்ச விஷயத்தை எப்படிடா நீ ஒரே நாள்ல நடத்திக் காட்டின...?" வாசு வியப்பாகக் கேட்க...

"டேய்... உன்னை இப்போ கொல்லப் போறேன் பாரு..." கவியரசன் பல்லைக் கடிக்கவும்...

"கூல் மச்சி கூல்... சும்மா சும்மா அந்தப் பல்லைக் கடிச்சு, உன்னோட பி.பி., சுகர்க்கு என்னைக் காரணமாக் கிடாதே..." அவனை வம்பு செய்தவன்...



"ஆனா மச்சி... ஐ அம் வெரி ஹேப்பி ஃபார் யூ போத் டா... கடைசியில நீ ஆசைப்பட்ட மாதிரியே நடந் துடுச்சு... ரொம்ப ரொம்பச் சந்தோஷம்டா நண்பா..." வாசுவின் குரலிலிருந்த உண்மையான சந்தோஷம் கவியை நெகிழ்த்தியது...

"தேங்க்ஸ் மச்சான்... அங்க இந்து எப்படியிருக்கா? அவளுக்கு இப்போ உடம்பு பரவாயில்லையா?" அக்கறை யுடன் கேட்க...

"அவளுக்கென்ன... வாந்தி வருது... வாந்தி வருதுன்னு, எனக்கு எதையும் தராம அவளே நல்லா மூக்குப் பிடிக்கக் கொட்டிக்கிட்டு இருக்கா... பத்தாததுக்கு அவளோட அம்மாவும், என்னோட அம்மாவும் அவளைத் தலையில் தூக்கி வைச்சுத் தாங்குறாங்க... என்னை யாருமே கண்டுக்கவே யில்லை... அவங்க எல்லாருக்கும் என்னாலதான் இது நடந்துச்சுன்னு மறந்தே போச்சு... இரு இரு... எனக்கும் சான்ஸ் கிடைக்குமில்ல... அப்போ வச்சிக்கிடுறேன் அவங்களை..." எனக் குறைப்பட்டுக் கொள்ள...

"அடப் பாவி... அப்போ நீயும் அர்னால்ட் படம் ஜுனியர் மாதிரி குழந்தை பெத்துக்கப் போறியா...?" கவி வியப்புடன் கேட்க...

"ஐயோ... காமெடி... சிரிப்பே வரல... போடாங்க..." என எதையோ திட்ட வந்தவன், அதை விடுத்து, "அது எல்லாம் பொண்ணுங்களால மட்டும்தான் மச்சி முடியும்... நாம எல்லாம் சிக்ஸ் பாக் வைச்சு என்ன பிரயோஜனம்... அவங்க அளவுக்கு நம்மால வலியைத் தாங்க முடி யுமா...?" என்றவனுக்கு,

"உண்மைதான்டா..." என ஆமோதிக்க...

"சரி அரஸ்... ஆதியை நல்லாப் பாத்துக்கோ மச்சி... அவங்க பேரண்ட்ஸ் லண்டன் போயிட்டதா சொன்னியே... நீதான்டா அவளை நல்லாக் கவனிச்சுக்கணும்... ஏதாவது ஹெல்ப் வேணும்னா எனக்குக் கண்டிப்பா கால் பண்ணு..." என உயிர் நண்பனாகப் பேச...

"கண்டிப்பாடா... நான் இப்போ சேனாவுக்குக் கூப்பிட்டு லீவுக்குச் சொல்றேன்... இந்துகிட்ட விஷயத்தைச் சொல்லிடுடா. ஆதிக்கு உடம்பு சரியானதும் வந்து பார்க்கிறோம்... பைடா..." என வாசுவுடன் பேசி அழைப்பை வைக்கவும்,

கவியின் மனதிலிருந்த இறுக்கமெல்லாம் தொலைந்து போய்ச் சற்று ஆறுதலாக இருந்தது...

அதற்குள் கட்டிலில் படுத்திருந்த ஆதிராவிடம் சற்று அசைவு தெரிய, வேகமாக எழுந்து குளியலறைக்குள் சென்று முகம் கழுவி வந்தவன், ஆதிராவுக்குப் பாலையும், தனக்குக் காபியையும் எடுத்துக் கொண்டு அறைக்குள் வர... அவள் மெல்லக் கட்டிலை விட்டு எழவும்... அவளின் தலை வேகமாகச் சுழல ஆரம்பித்து, அவள் கைகள் உயர்ந்து தலையைத் தாங்கிக் கொண்டதைக் கண்டு கொண்ட கவியரசன்...

கப்புகளை டீபாயின் மீது வைத்து விட்டு, அவசரமாக மனைவியைத் தாங்கியவன்... நெஞ்சில் சாய்ந்தவளுக்கு இப்போது பிடிப்புக் கிடைத்துவிட கணவனைப் பற்றி நேராக நின்றாள்.



சில நொடிகளுக்குப் பின், "இப்போ பரவாயில்லையா...?" - கவியரசனின் குரலைக் கேட்கவும், சந்தோஷ ஊற்று உள்ளுக்குள் பிறக்க, புன்னகை விரிக்க... பிரிந்த இதழ்களை அடக்கியது அவள் குற்றவுணர்வு கொண்ட இதயம். உடனே அவன் முகம் காண வெட்கித் தலை கவிழ்ந்து கொண்டது...

எப்படி அவன் முகத்தைப் பார்ப்பது...?

ஏதேனும் வெறுப்பை அவன் முகம் காட்டிவிட்டால் அவளால் அதைத் தாங்க முடியுமா...? மெல்லத் தலை குனிந்தவாறே குளியலறைக்குள் செல்ல எத்தனித்தவளைத் தானே அழைத்துச் சென்று, உள்ளே விட்டுக் கதவை மூடி விட்டு வந்தவன் அவளுக்காகப் பால்கனியில் பாலை வைத்துக் கொண்டு காத்திருந்தான்.

சற்று நேரத்தில், கலைந்த தலை முடியுடனும், நெகிழ்ந்த ஆடையுடனும், முகத்தில் சொட்டிய தண்ணீருடனும் வெளியே வந்த மனைவியைக் கண் இமைக்காமல் பார்த்திருந்தான்...

ஏனோ இன்றுதான் அவளை முதல் முறை பார்ப்பது போல் அவளையே கண்ணெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவனின் பார்வை... ஆதிராவைத் தாக்க, அவனைப் பார்க்கச் சொல்லிக் கெஞ்சிய கண்களை அடக்கி நிலம் நோக்கினாள்.

அவள் தன்னைப் பார்க்க மறுப்பதை ஒரு வலியுடன் பார்த்துக் கொண்டிருந்த கவியரசனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. தன்னவள் தன்னைப் பார்க்க மறுப்பதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

என்ன செய்வதென்றும் அவனுக்குப் புரியவில்லை. அவள் தன்னையும் சுயநலவாதி என நினைத்துக் கொண்டால்... என அவன் நெஞ்சம் உரைக்க, எப்படித் தன்னை நியாயப்படுத்திக் கொள்வதென்றும் தெரியவில்லை...

யோசனையுடனே இருந்தவன், அவள் இன்னமும் தன்னிடம் வராமல் அறையிலேயே இருக்கவும், எழுந்து அவளருகில் வந்தான்...

தலை குனிந்து அமர்ந்திருந்தவளின் முன்னே மண்டியிட்டு அமர்ந்தவனுக்கு என்ன பேசுவதென்று புரியவில்லை...

குனிந்திருந்தவளின் தலையை நிமிர்த்தியவன்... அவள் கண்களை நேராகப் பார்த்தான்.

அவள் கண்கள் அலை பாய்ந்து அதில் தவிப்பைக் காட்டவும், எதற்கென்றே புரியாமல் கவியரசனின் மனம் வருந்தியது...

அதே வருத்தத்துடன், "ஆதிம்மா..." எனக் கலங்கிய குரலில் அழைக்கவும், ஆதிராவின் கண்களிலிருந்து கண்ணீர்க் கோடுகளாக அவளின் கன்னத்தை நனைக்க, அதைத் துடைத்தவனின் அன்பில் முற்றிலும் உடைந்து போனாள்.

அவனின் முகத்தைப் பார்க்கப் பார்க்க, அதில் தெரிந்த கனிவும் அமைதியும் அவளை உடைத்துப் போட்டது.

தெளிந்த நீரோடையாக இருந்த கணவனின் வாழ்க்கையைக் களங்கப்படுத்த வந்ததாக நினைத்து அவளுள் உறுத்தல் எடுத்தது...



அதை உணராத கவியரசன், "வாடா, பால் குடி... நேத்தும் எதுவும் சரியாச் சாப்பிடல... இந்த நிலைமையில சாப்பிடாம இருக்கக் கூடாதுன்னு ஆதிம்மா சொன்னாங்க... வா..." என அழைத்துச் செல்ல...

அவளுள், "ஓஹோ... அவங்க சொன்னாங்களா... அப்போ எல்லாத்தையும் சொல்லி யிருப்பாங்க... அப்போ கவிக்கு என் மேல பரிதாபம் போல..." என அதற்கும் அவளுள் எதிர்மறையான கருத்தே வெளிப்பட்டது.

மறுக்காமல் அவனுடன் சென்று, அவள் கையில் திணித்த கப்பிலிருந்த பாலை மிடறு மிடறாகத் தலை குனிந்து குடிக்க, கவியரசனோ மனைவியைக் காப்பியோடு விழுங்கிக் கொண்டிருந்தான்...

ஒரு வழியாக இருவரும் தங்களுக்கான பானத்தை அருந்திவிட, அடுத்து என்ன என்று இருவருக்கும் புரியவில்லை... காற்றில் கரைந்த சில நிமிடங்களைத் தாண்டி முதலில் ஆதிரா தான் அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தாள்...

கவி குடித்து விட்டுக் கீழே வைத்திருந்த காபி கப்பைக் குனிந்து கீழே எடுக்கவும், அவள் குடித்த பால் குமட்டிக் கொண்டு வந்தது.

வாயைக் கையால் அடைத்துக் கொண்டு அவள் திரும்ப, "ம்ச்... உன்னை யாரு இப்போ கீழே குனிஞ்சு அதை எடுக்கச் சொன்னது... எனக்கு எடுக்கத் தெரியாதா... வாந்தி வருதுன்னா எடுத்துடு ஆதி... வா வா..." என அவளைக் கடிந்தவாறே குளியலறைக்குள் சென்று அவள் தலையைப் பிடித்துக் கொள்ள... குடித்த பால் அனைத்தையும் வெளியிட்டாள்.

அவன் கடிந்து கொள்ளவும் ஆதிராவின் மனதில், “ஹய்யோ... இவனை ரொம்பவே கஷ்டப்படுத்துறோமே...” என்ற தவிப்பு எழுந்தது...

அவன் அக்கறையாகச் சொன்ன எல்லா வார்த்தைகளும் அவளிடம் எதிர்மறையான உணர்வையே வெளிப்படுத்தின.

“சரி... நீ போய்ப் படு... நான் ஏதாவது சாப்பிடச் செய்றேன்...” அவன் சொன்னதும்...

“இ... இல்ல... நா... நான் செய்யறேன்...” அவள் குரல் தடுமாற்றமாக வந்தது.

மனைவி தன்னிடம் பேசியது, அவனுக்குச் சற்று நிம்மதியாக இருக்க, அவள் சொன்னதன் சாராம்சம் உணர்ந்து, “வேண்டாம்டா... உன்னால முடியாது... நீ ரெஸ்ட் எடு... நான் செய்றேன்...”

அவன் சொல்வதை மறுக்க முடியாமல் சரியெனத் தலை யசைத்தவளிடம், “சரி, போய்ப் படுத்துக்கோ...” எனவும்...

“இல்...ல... குளிக்கணும்...” என்ற கோரிக்கையை விடுக்க, ஒரு புன்னகையுடன் அவளுக்கு ஹீட்டர் போட்டுக் கொடுத்து, அவள் அலமாரியிலிருந்து உடையை எடுத்துக் கொடுக்க... அதை வாங்கிக் கொண்டு குளியலறைக் கதவை அடைத்தாள்...

கதவையே ஒரு சில நொடிகள் ஆசையாகப் பார்த்த கவியரசன், மெல்லிய சிரிப்புடன் தலையை இடமும் வலமுமாக ஆட்டிக் கொண்டு சமைக்கச் சென்றான்...



சற்று நேரத்தில் வாசலில் அழைப்பு மணியடிக்க, அடுப்பை அணைத்து விட்டு வாசல் கதவைத் திறக்க, வெளியே லட்சுமி, ராஜி மற்றும் பார்வதி மூவரும் நிற்க, அவர்களைப் பார்த்ததும் கவியரசனின் முகத்தில் புன்னகை ஒட்டிக் கொண்டது...

“அடடே... வாங்க வாங்க... உள்ளே வாங்க...” அனைவரையும் வரவேற்று ஹாலில் அமர வைக்க, அமர்ந்த மறுநொடி லட்சுமியின் கண்கள் வீட்டைச் சுற்றி வந்து, கவியிடம், “எங்க ஆதிரா...?” எனக் கேட்க வைத்தது.

“ஹ்ம்ம்... வந்ததும் அவள்தான் வேணுமா உங்களுக்கு... எங்களை எல்லாம் பார்த்தா மனுஷங்களா தெரியலையா?” அவன் ஏதோ விளையாட்டாகக் கேட்டது குளியலறைக்குள் இருந்த ஆதிராவுக்கு ஏதோ சுருக்கெனத் தைத்தது...

தன்னை அடியோடு வெறுத்து விட்டான் போல... கணவன் என்று கடமைக்காக மட்டுமே அவனின் இப்போதைய அக்கறை என்ற எண்ணம் அவளுள் ஆழப் பதிந்தது...

“தெரியலையே... உன்னைத்தான் நாங்க நேத்துக் கூடப் பார்த்தோமே... எங்களுக்கு இப்போ ஆதிப் பாப்பாவும், அது வயித்துல இருக்கிற குட்டிப் பாப்பாவும் தான் முக்கியம்... நீ போய் எங்களுக்குச் சூடாக் காப்பி கொண்டா... எனக்குச் சர்க்கரை ஜாஸ்தி...” எனப் பார்வதி அவனுக்கு ஆர்டர் போட...

அதற்குப் பதிலாய், “ஆயா... ஆனாலும் உனக்கு லொள்ளு தாங்கல... உடம்புல ஒரு டன் சர்க்கரையை

வைச்சிட்டு, உனக்குச் சக்கரை ஜாஸ்தியா காபி கேக்குதா... ஒழுங்கா இருந்து என் மகளை வளர்த்துக் குடுத்திட்டுப் போ..." அவன் பார்வதியை மிரட்டிக் கொண்டிருக்க...

"பின்ன... நான் வளர்க்காமே... என் பேத்தி கல்யாணத்தைக் கண் குளிரப் பார்த்த பின்னதானே என் உயிர் போகும்... அதுவரைக்கும் நான் குத்துக் கல்லு மாதிரி இருப்பேன்..."

பார்வதி கண்களில் ஆசையுடன் சொல்லிக் கொண்டிருந்த எதுவும் தனது எண்ணத்தின் ஆதிக்கத்திலிருந்த ஆதிராவுக்குக் கேட்கவேயில்லை...

அவளது குளியலை முடித்து வரவும், கவியரசன் வந்தவர்களுக்குக் காபி கொண்டு வரவும் சரியாக இருக்க...

அவளைப் பார்த்த பார்வதி... "அடடே ஆதிப் பாப்பா...! குளிச்சுட்டு இருந்தியா... இது என்ன தலை இவ்வளவு ஈரமா இருக்கு... துவட்டலையா கண்ணு... அட லூசு புள்ள... இப்படியே விட்டா சளி பிடிக்காது... வா, வா... நான் துவட்டி விடறேன்..." என்ற பார்வதி...

"டேய் அரசுப் பையா... இங்க எங்காவது கங்கு இருந்தா எடுத்தா... புள்ளைக்குச் சாம்பிராணி பிடிக்கலாம்..." எனவும்...

"ஹான்... இந்த அபார்ட்மெண்ட்ல எங்க போய் நான் கங்க தேடறது... போ ஆயா..." என அவன் நொடித்துக் கொள்ளவும், அவர்கள் கிண்டலாகப் பேசிக் கொண்டிருப்பதைச் சிரிப்புடன் பார்த்திருந்த லட்சுமிக்கும், ராஜிக்கும் சற்று நிம்மதியாக இருந்தது...



ஆனால் ஆதிரா தான் இதில் எதிலும் கலந்து கொள்ளாமல் அமைதியான முகபாவத்துடன் அமர்ந்திருக்க, அதைக் கண்ட லட்சுமி, ராஜியின் தோளில் கை வைக்க, அவர் புரிந்தவராய்க் கண்ணை மூடித் திறந்தார்.

## 23

**சோ**பாவில் அமர்ந்திருந்த ஆதிராவின் பார்வை நிலத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க... அவளைக் கண்டு லட்சுமியும், கவியும் வேதனையில் முகம் வாட, அவரைத் தேற்றும் விதமாக ராஜி கண்ணை மூடித் திறந்தார்...

பின், "ஆதிரா..." என்று அவர் அழைக்க, அந்த வார்த்தை அவளைச் சென்றடையவே யில்லை என்றதற்குச் சான்றாக அவள் அமர்ந்திருக்கவும், தலையைத் துவட்டிக் கொண்டிருந்த பார்வதி அவள் தலையில், 'நங்' கென்று குட்ட...

அது கொடுத்த வலியில், "ஸ்ஸ்ஸ்..." என அவள் தலையைப் பிடித்துக் கொண்டு பாவமாகப் பார்வதியைப் பார்க்கவும்,

கவியரசனோ, "ஆயா... இப்போ எதுக்கு அவளை அடிச்சீங்க...?" எனக் கோபமாகக் கேட்க...

"டேய்... நீ சும்மா இரு... அவளுக்குச் சப்போர்ட் பண்ணி, நீயும் என்கிட்ட அடி வாங்காதே..." எனக் கை நீட்டி மிரட்டியவர், தன்னையே பாவமாகப் பார்த்துக் கொண்டிருந்தவளை, "அதான் அவங்க கூப்பிடறாங்கல்ல...

கூப்பிட்டதுக்குப் பதில் பேசாம, என்னத்த வேடிக்கை பார்த்துட்டு இருக்க..." பார்வதி போட்ட அதட்டலில்...

"ச... சாரி... கவனிக்கவேயில்ல... சொ... சொல்லுங்க, டாக்டர்..." எனத் தடுமாற்றமாகக் கேட்கவும்,

கவி, மனைவியின் தடுமாற்றத்தில் வேதனை அடைந்தான் என்றால், பார்வதியைக் கொலை வெறியுடன் நோக்கிக் கொண்டிருந்தான்...

அதை எல்லாம் பார்வதி கண்டு கொள்ளவேயில்லை...

அவர் எப்போதும் இப்படித்தான். அவருக்கு எப்போதும் தன் அன்பை அதட்டலாகத்தான் வெளிப்படுத்தத் தெரியும்...

ஆசிரமத்திலிருக்கும் சிறியவர்கள் முதல், மூத்தவர்கள்வரை அனைவரும் பார்வதியிடம் குட்டு வாங்கியிருக்கிறார்கள்... அதில் கவியும் அடக்கம்...

அனைவரையும் எளிதில் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் திறமையைப் படைத்தவர்... ஆனால் மனதில் எந்த வஞ்சமும் இல்லாத வெள்ளை உள்ளம் கொண்டவர்... அவரை அறிந்தவருக்கு, அவரின் இந்த அதிரடிக் குணம் தவறாகத் தெரியாது...

இன்று காக்கும் கரங்கள், இந்தச் சமுதாயத்தில் நற்பெயர் பெற்றிருக்கிறது என்றால், அதற்குப் பார்வதியின் பங்கு அதிகம்...

அவரையே முறைத்துக் கொண்டிருந்த கவியரசனை அலட்சியமாக நோக்கிய பார்வதி, தாடையைத் தோளில் இடித்துக் கொண்டு திரும்பினார்.



அவர்களுக்குள் நடந்த அந்தச் செல்லச் சீண்டலை லட்சுமி ஒரு பக்கம் ரசித்தாலும், இப்போது அவருக்கு ஆதிராவின் இந்த மௌனம்தான் பெரும் கவலையாகிப் போனது. சில நொடிகளில் கவியும் அந்தக் கவலையில் பங்கெடுத்தான்...

அதை உணர்ந்த ராஜி, "ஆதிரா... இங்க வாடா..." என அழைக்க, மென்னடையிட்டு ராஜியின் அருகில் சென்று, அந்த நீண்ட சோபாவில் ராஜி மற்றும், லட்சுமியின் நடுவில் அமர்ந்து கொண்டாள்...

"ரெண்டு நாள் முன்னாடி டாக்டர் கிட்ட போனதா அரசு சொன்னானே... என்ன சொன்னாங்க... இது எத்தனாவது நாளாம்..."

அவள் பதில் சொல்லு முன்... "முப்பதுன்னு சொன்னாங்க... இன்னையோட முப்பத்து மூணு நாளாச்சு..." அரசு பதிலளிக்க...

அவனை ஒரு சேர மூன்று பெண்களும் முறைத்தனர்...

அவர்களின் பார்வைக்கு, "இப்போ நான் என்ன சொல்லிட்டேன்... எல்லாரும் இப்படி முறைச்சுப் பார்க்குறீங்க..." என்ற அவனின் மைண்ட் வாய்சை உணர்ந்து கொண்ட பார்வதி,

"அரசுப் பையா... எங்களுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுப்பியா... இல்ல... இப்படியே அனுப்பிடுவியா...?" எனவும்,

"தரேன் தரேன்..." என்றவாறு, இன்னொரு தனி சோபாவில் அவன் அமர வர...

"என்ன உக்காந்துட்ட... வா வா... ரெண்டு பேரும் சேர்ந்து சமைக்கலாம்... ரொம்ப சீக்கிரமாவே அங்கிருந்து கிளம்பினதால சாப்பிடவே யில்ல... வா வா..." என்ற பார்வதி, அவன் கையைப் பற்றிச் சமையலறைக்குள் அழைத்துச் செல்ல...

அவனோ ஆதிராவைப் பின்னால் திரும்பிப் பார்த்த வாறே, பார்வதியுடன் நடந்தான்.

அவனின் கவலை புரிந்த ராஜி, ஆதிராவை எழுப்பி அவளைப் படுக்கையறைக்கு அழைத்துச் செல்ல... அவரின் பின்னேயே லட்சுமியும் தொடர்ந்தார்...

படுக்கைக்குள் சென்றதும், ராஜி பேச்சைத் துவக்கி னார்...

"இப்போ உடம்புக்கு எப்படி யிருக்குடா...? தலை சுத்தல், வாந்தி இருக்கா...?"

"ம்ம்..." என்ற தலையாட்டலை மட்டுமே பெற்றுக் கொண்ட ராஜி...

"என்னம்மா... ஏன் ஒரு மாதிரி யிருக்க... கவி உன்னை ஏதாவது திட்டினானா...?"

அதற்குள் லட்சுமி இடை புகுந்தார்... அவருக்கு மனம் தாளவில்லை...

கவியைத் திருமணம் செய்த பின்தான்... கொஞ்சம் கொஞ்சமாக அவளின் கூட்டுக்குள்ளிருந்து வெளி வந்து கொண்டிருந்தாள். ஆனால் அவள் இப்போது மீண்டும் பழைய நிலையிலிருக்கிறாள் என்பதைக் கண் கூடாகப் பார்த்த பின் அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...



ராஜி அவரைப் பார்வையால் அடக்க, அமைதி காத்த லட்சுமி தவிப்புடன் அவள் அருகில் அமர்ந்தார்.

ராஜி, "ஆரா..." எனவும்,

"என்னை ஆதின்னு கூப்பிடுங்க..." என்ற பதில் ஆதிராவிடமிருந்து உடனடியாக வந்தது...

அவளின் அந்த வேகப் பதிலில் சந்தோஷமடைந்த இரு பெண்களும், ஒரு நிம்மதிப் பெருமூச்சை வெளி யிட்டனர்...

"ஓகே ஓகே... ஆதிதான்... ஆனால், நீதானே உன்னை ஆரான்னு கூப்பிடணும்னு என்கிட்ட ஒரு முறை சொன்ன..." ராஜி கேள்வியாகக் கேட்க...

"அது அப்போ... இப்போ எனக்கு அந்தப் பேரே பிடிக்கல... கவிக்கு என்னை 'ஆதி'ன்னு கூப்பிட்டாத்தான் பிடிக்கும்... நீங்களும் அப்படியே கூப்பிடுங்க..." இந்த வாக்கியத்தைச் சொல்லும்போது, அவள் குரலில் எந்தத் தடுமாற்றமும் தெரியவில்லை...

அதை மனதில் குறித்துக் கொண்டவர், "ம்ம்... உனக்குக் கவியைப் பிடிக்குமா...?"

"ம்ம்... ரொம்பப் பிடிக்கும்..." என்றவள், கண்களில் கண்ணீர்க் கோடுகள் சரசரக்க, "ஆனா... ஆனா... இப்போ கவிக்கு என்னைப் பிடிக்கலை... ஹி ஸ்டாட்டர்ட் டு ஹேட் மீ... கவி என்னை வெறுக்க ஆரம்பிச்சுட்டான்..." என்றவள், தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்...

"ஷ்... ஆதி... அழாதே..." என்ற ராஜி, அவள் முதுகைத் தடவித் தேற்ற...

பின் அவரே தொடர்ந்தார். "உனக்குக் கவியைப் பிடிக்கும்னு எப்படிச் சொல்ற... அப்போ நீ அவனைக் காதலிக்கிறியா...?" கேள்வியாகக் கேட்க....

"அஃப் கோர்ஸ் ஐ டு லவ் ஹிம்..." என வெடுக்கென்று சொன்னவள் கண்களில் அத்தனை தீவிரம்...

ஆனால், அதனைத் தொடர்ந்து அவள் கண்கள் வேதனையைச் சுமந்து கொண்டன.

கண்கள் கண்ணீரைப் பொழிய, "யூ நோ... கவி என்னை ரொம்ப ரொம்ப விரும்பினான்... நான் பிறந்ததுல இருந்து என்னை அந்த அளவுக்கு யாருமே விரும்பினதில்ல... அந்த விருப்பத்தை நான் உணர்ந்ததுமில்ல... அந்த அளவுக்குக் கவி என் மேல அன்பு காட்டினான்... ஆனா... ஆனா... நான்... அவனை ஏமாத்திட்டேன்... ஹி டோன்ட் டிசெர்வ் மீ..." எனப் புலம்ப ஆரம்பித்தாள்...

கவியரசனைப் பற்றிப் பேச ஆரம்பித்ததும், அவள் மனதிலிருப்பது அவளை மீறி வெளி வர ஆரம்பிக்க...

ராஜி அமைதியாக இருக்கவும், அதுவே அவளுக்குப் பேச வழி வகுத்தது.

"லட்சுமி... நீங்க என்னை முதல்ல கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேட்டபோது, நான் சரின்னு சொன்னதுக்கு உங்களுக்குக் காரணம், தெரியுமா?"

லட்சுமி குழப்பமாக அவளைப் பார்த்து, "தெரியாது..." என இடமும் வலமுமாகத் தலையாட்ட...



அவள் தொடர்ந்தாள்.... "டு பி ஹானஸ்ட்... எனக்கு அப்போ கல்யாணத்தைப் பத்தி எந்த ஐடியாவும் இல்ல... இன்னும் சொல்லப் போனா, மேரேஜ்னா எனக்கு முதல்ல ஞாபகம் வந்தது என்னோட அப்பா, அம்மா வாழ்ந்த அந்தக் கேடு கெட்ட வாழ்க்கைதான்.

"பகல் ஃபுல்லா ரெண்டு பேரும் நாய் மாதிரி குலைச்சுப்பாங்க... ராத்திரியானா கொஞ்சம் கூட வெட்கமே இல்லாம சேர்ந்துப்பாங்க... அவங்க வாழற வாழ்க்கையை ரெண்டு பேரோட செக்ஸ் தேவைகளைத் தீர்த்துக்க, மேரேஜ்ன்கிற பேர்ல ஒரு விபசாரம்... அந்தத் தேவைக்கு அவங்க ரெண்டு பேரும் வெளியே போனா, அவங்களோட சோ கால்ட் ஸ்டேட்டஸ் போய்டும். பட் அன்ஃபார்சுனேட்லி நான் அவங்களுக்கு மகளாப் பொறந்து, அவங்களோட அந்த செக்ஸ் தேவைக்கு இடைஞ்சலா வந்துட்டேன்... அந்த வெறுப்புதான் அப்போ நான் இருந்த அந்த நிலைக்கு முழுக்க முழுக்கக் காரணம்...

"நான் பொறந்ததிலிருந்தே என்னைப் பார்த்துகிட்டது ஒரு கேர் டேக்கர்தான்... என்னோட அஞ்சு வயசு வரைக்கும் நான் அவங்ககிட்ட தான் முழுக்க டிபென்ட் பண்ணியிருந்தேன்.... அவங்க எனக்குத் தேவையானதைச் செஞ்சாங்க... ஆனா அதில எல்லாமே சம்பளம் வாங்கறதுக்குண்டான கடமை மட்டும் தான் இருக்கும்.... அவங்களும் என்னோட அஞ்சு வயசுல போயிட்டாங்க...

"அவங்க போனதும், நான் என்னோட ரூம்ல தனியாத் தூங்கணும்னு சொல்லிட்டாங்க... நான் தனியா

படுத்த முதல் நாளே எனக்கு அந்த இருட்டு ரொம்ப ரொம்பப் பயமா இருந்துச்சு... அந்த இருட்டுக்குப் பயந்துட்டு என்னோட அப்பா, அம்மா ரூம் கதவைத் தட்டினேன்... ரொம்ப நேரமாக் கதவைத் தட்டின பின்னாடி தான் என்னோட அப்பா வந்தான். அதுவும் ட்ரெஸ் எல்லாம் அரைகுறையா வந்து என்னைத் திட்டினான்... ரொம்ப திட்டினான்...

"அப்புறம் என்னோட இடது கையைப் பிடிச்சு இழுத்துட்டுப் போய் அந்த ரூம்க்குள்ள விட்டு வெளியே கதவை அடைச்சுட்டான்... நான் ரொம்ப அழுதேன்... அந்த நாள்... அந்த ராத்திரி முழுக்க நான் அழுதேன்... அப்பா... அப்பா ப்ளீஸ்ப்பா... பயமா இருக்குப்பான்னு அழுதேன்.... அந்த ஆளு வரவேயில்ல... ஒரு ராத்திரி முழுசும் அந்த அறையில நான் தனியா இருந்தேன்...

"அன்னியிலிருந்து நான் தனியாத்தான் படுக்க ஆரம்பிச்சேன்... அப்போ யிருந்து எனக்கு யாருமே யில்லைன்னு ஃபீல் பண்ணினேன்... ஸ்கூல் போகும் போது, என்னோட படிக்கிறவங்க எல்லாருமே அவங்க அப்பா, அம்மா கையைப் பிடிச்சுட்டுப் போவாங்க... நான் மட்டும் டிரைவர் பின்னாடிதான் நடப்பேன்... இதுதான் என்னோட வாழ்க்கை... இப்படித்தான் நான் வளர்ந் தேன்...

"அன்னிக்கு நீங்க என்கிட்ட கல்யாணத்துக்குச் சம்மதம் கேட்டப்ப ஒரு வருஷமா அந்த ஹாஸ்பிடல்ல அடைஞ்சு கிடக்கிறோமே... மேரேஜ்ன்ற பேர்ல, அந்த ஹாஸ்பிடல்ல இருந்து வெளியே வரலாம்னு நினைச்சு தான் ஓ.கே சொன்னேன்... பட், யூ நோ வாட் லட்சுமி...



அன்னிக்கு நீங்க கவி போட்டோ காட்டினதும் ஐ காட் எ ஃபீல் இன்சைட் மீ... அது என்னன்னு எனக்குச் சொல்லத் தெரியல... அந்த பிக்சர்ல தெரிஞ்ச கவியோட கண்ணு... இட் ஸ்பார்க்ட் மீ ஃபார் எ மொமன்ட்.

"அப்பறம் மேரேஜ் டே அப்போ கவியை நான் நேர்ல பார்த்ததும் தட் ஸ்பார்க்ட் டர்ன்ட் அஸ் ட்ரஸ்ட். அந்த நாள் முழுக்கக் கவி என்னை கேர் பண்ணிக் கிட்டான்... அந்தக் கூட்டத்துல யாரும் என்னை இடிச்சுடக் கூடாதுன்னு அவன் என்னை அவனோட சேர்த்துப் பிடிச்சுக்கிட்டான்... ஐ ஃபெல்ட் செக்யூர்ட் இன் ஹிஸ் ஆர்ம்ஸ். இது எல்லாமே எனக்குள்ள நானே அறியாம ஏற்பட்ட மாற்றம்...

"அந்த ராத்திரி கவி என்னோட செக்ஸ் வைச்சிக் கிட்டதுல எனக்கு எதுவுமே தப்பாத் தெரியல... அவன் என்கிட்டே அவனோட மனைவின்ற அந்த உரிமையோட என்னை எடுத்துக்கிட்டான்... அந்த நேரத்துல, அந்த நிமிஷம் எனக்கு அவனோட உரிமை பிடிச்சுது... டு பி ஃப்ராங்க்... கவி என்னைத் தொட்டபோது நான் ரொம்ப பரிசுத்தமானவளா ஃபீல் பண்ணினேன்.... ஹி மேட் மீ பியூர் வித் ஹிஸ் டச்.

"ஆனா, இது எல்லாத்தையும் நான் உணர்ந்துக்க எனக்கு டைம் தேவைப்பட்டுச்சு... என்னோட மோசமான பழைய அனுபவம் என்னை ரொம்பவே குழப்பிச்சு... கவியை நம்ப மறுத்துச்சு... அவனும் நான் முன்னாடி பார்த்த ஆம்பளைங்க மாதிரிதான்னு யோசிக்க வைச்சது... ஆனால், அவன் என்னோட யோசனையைத் தப்புன்னு புரிய வச்சான்...

"அன்னிக்கு ஒரு நாள், என்னோட பலகீனத்தைப் பயன்படுத்தி ஒருத்தன் என்னைக் கெடுத்தான்... அந்தச் சம்பவம் முழுக்க முழுக்க என்னையும் மீறி நடந்த ஒண்ணு...

"அந்த நாள், அந்த நிமிஷம் நடந்தது எதுவுமே என்னோட நினைவுல இல்லவே யில்ல... ஆனாலும் கூட அந்தச் சம்பவத்துக்கு நானும் ஒரு காரணம்... அதுதான் எனக்கு நானே தண்டனை கொடுக்க ஆரம்பிச்சுட்டேன்... சீக்கிரம் செத்துப் போகணும்னு ஆசைப்பட்டேன்... ஆனா சாகப் பயம்... அந்தப் பயத்தை அந்த ட்ரக்ஸ் போக்கிச்சு... டெய்லி அதை எடுக்க ஆரம்பிச்சேன்....

"ஒரு நாள் நான் ரெஸ்ட் ரூம் போயிட்டு வெளியே வரும்போது தலை ரொம்ப வேகமாகச் சுத்திச்சு. நான் யோசிச்சுட்டு இருக்கும் போதே என்னோட தலை சுவத்துல முட்டிக் கீழே விழுந்தேன்... அந்த நொடி, 'ஹை நான் சாகப் போறேன்னு...' என் மனசுக்குள்ள உற்சாகத்தோட தான் கண்ணை மூடினேன்...

"ஆனா, நான் பிழைச்சிட்டேன்... அன்னிக்கு எனக்கு மறுபிறவி கிடைச்சதுக்குக் காரணம் கவிதான்னு நினைக் கிறேன்... கவிக்காகத்தான் நான் உயிர் பிழைச்சிருக் கேன்... எனக்கு இனிமேல் யாருமேயில்ல... வாழ்க்கை யில இனி எனக்கு என்ன இருக்குன்னு நான் யோசிச் சப்போதான் எனக்குக் கவி கிடைச்சான்.

"என்னைப் பொறுத்தவரைக்கும் கவிதான் எனக்கு எல்லாமே... பட் நான்... நான் கவியை ஏமாத்திட்டேன்... கவி என்னை ரொம்பவே நம்பினான். அவன் என்னை



ரொம்ப விரும்பினான்... அவனுக்கு நான் துரோகம் பண்ணிட்டேன்...

"அவன்கிட்ட நான் உண்மையை மறைச்சு கல் யாணம் செய்துகிட்டேன். நான் அவன்கிட்ட என்னோட பழைய வாழ்க்கையைப் பற்றிச் சொல்லியிருக்கணும்... ஆனா, அதை நான் செய்யல... எங்கே என்னோட பழைய விஷயம் தெரிஞ்சா கவியும் என் கையை விட்டுப் போயிடு வானோன்னு ரொம்பவே பயந்துட்டேன்...

"I was selfish on him... I deceived kavi... நான் கவிக்குத் துரோகம் பண்ணிட்டேன்... I played with his trust on me... ஐயோ..." என அரற்ற ஆரம்பித்தவள், பெரும் கதறலுடன், "ஐயோ.. கவி... நான் உன்னை ஏமாத்திட்டேன்டா. நீயும் என்னை விட்டுட்டுப் போயிடாதே கவி... ப்ளீஸ்... நீயும் இல்லைனா நான் செத்துடுவேன் கவி... ஐ நீட் யூ... நான் சாகுறவரைக்கும் நீ எனக்கு வேணும்டா... என்னை விட்டுடாதே கவி... என்னை விட்டுடாதே... என்னை மன்னிச்சிடு..."

பெரும் கதறலோடு கண்ணை மூடிக் கொண்டு அலறியவள், அப்படியே சரிய ஆரம்பிக்க, அவளைத் தன் கைகளில் தாங்கினான் கவியரசன்...

கடந்த ஒரு வருடமாகத் தாங்கள் எப்படி எப்படியோ அவளின் இந்த நிலைக்கு அடித்தளத்தைக் கண்டெடுக்க எடுத்த முயற்சிகள் அனைத்தையும் மீறி, இன்று அவளாக அவளின் மனப் பாதிப்பை விளக்கியதைக் கேட்டுத் திகைப் பிலிருந்த லட்சுமியும், ராஜியும் அவள் மயங்கிச் சரியும் வரை அவர்கள் வேதனையை விட்டு மீளவில்லை...

பால் குடி மறவாத வயதிலிருந்து அவள் பட்டி ருக்கும், துன்பமும், தனிமையும் எந்தக் குழந்தைக்கும் நேரக் கூடாதென்று அப்பெண்கள் உள்ளம் வேதனை யில் உழன்று கொண்டிருந்த சமயம், அங்கு வந்தான், கவியரசன்...

பார்வதியின் வற்புறுத்தலால் சமையலறைக்குச் சென்ற கவியரசன் மனது ஒரு நிமிடம் கூட அங்கில்லை...

தன்னை முறைத்த பார்வதியை, "ப்ளீஸ் ஆயா... அவள் என்ன சொல்றானு நான் கேட்கணும்..." அவன் கெஞ்ச...

"சரி... போ... ஆனால் நீ அவளைப் பேச விடு... அவளுக்குச் சேர்த்து நீ பேசாதே. அவ பேசினாத்தான் அவ மனசுல என்ன இருக்குன்னு தெரிஞ்சிக்க முடியும்..." என்ற எச்சரிக்கையுடன் அனுப்பி வைக்க...

அறை வாசலுக்கு வந்தபோதுதான் ராஜியின் கேள்வியையும், அதைத் தொடர்ந்து அவளின் பதிலையும் கேட்டு உள்ளுக்குள் பரவசமெடுத்தது.

'தன் மேல், தன் மனைவிக்குக் காதலே யில்லை!' என்ற எண்ணத்தில் இருந்தவன், அவள் வாய்மொழியாக அதைக் கேட்கவும் ஒரு நொடி சந்தோஷச் சாரலில் நனைத்தான்...

ஆனால், அதன் தொடர்ச்சியாக அவள் சொன்ன அவளின் பழைய நிகழ்வுகள் யாவும் ஏற்கெனவே லட்சுமி மூலமாக அவன் அறிந்தவைதான் என்றாலும், இன்று வேதனைக்குச் சொந்தமானவளே அதை விவரிக்கவும்



சந்தோஷத்தில் நனைந்தவன் வேதனையில் முக்குளித் தான்...

அவள் வேதனையில் அரற்றிக் கொண்டிருப்பதைத் தாள முடியாமல் அறைக்குள் பாய்ந்து வந்தவனின் தோள்களில் சாய்ந்தவளைத் தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டவன், "அடி முட்டாளே... உன்னை நான் வெறுக்கலடி... முன்னை விட இப்போதான்டி அதிகமா, என்னோட உயிரா நேசிக்கிறேன்... நீ இல் லன்னா நானும் செத்துடுவேன்டி, பைத்தியம்...." என அறிவித்ததைக் கேட்க அவள் நினைவிலில்லை..

## 24

**கை**யில் சாய்ந்தவளைத் தன் நெஞ் சில் தாங்கிய கவியரசன் அவன் காதலை உரக்கச் சொன்ன நொடி, மனையாள் மயக் கத்தில் சரிந்திருந்தாள்.

அதை உணர்ந்த லட்சுமியும், ராஜியும், கவியின் தோள்களில் கை வைக்க, அவர்கள் தொடுகையில் தன் உணர்வு பெற்றவன், லட்சுமியிடம், "பாருங்க ஆதிம்மா... எப்படிப் பைத்தியம் மாதிரி உளர்றானு... பைத்தியக்காரி... நான் எப்படி இவளை வெறுப்பேன்... அன்னிக்கு ஏதோ கோவத்தில் பேசினதை இந்த மடச்சி எப்படி மனசுல போட்டு வருத்திக்கிட்டு இருக்கானு பாருங்க..." அவன் லட்சுமியிடம் குற்றப் பத்திரிகை வாசிக்க...

ராஜி தான், "புரியுது அரசு... அவளைப் படுக்கையில் விடு.. அவ மயங்கி விழுந்துட்டா..." எனவும்...

"மயங்கிட்டாளா...! இவ என்ன அடிக்கடி மயங்கி விழறா... நேத்து இருந்து இவ ரெண்டு தடவை மயங்கிட்டா... இது மூணாவது... என்ன ஆதிம்மா இது... ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போகலாமா...? ப்ளீஸ்... எனக்கென்னவோ பயமா இருக்கு..." அவன் இடைவிடாது பேசிக் கொண்டிருக்கவும்...

"அரசு... அரசு... இரு. நீ கொஞ்சம் பதறாம இரு... அவ கொஞ்சம் மன அழுத்தத்துல இருக்கா... இத்தனை நாள் அவ மனசுக்குள்ள அரிச்சுக்கிட்டு இருந்த பல விஷயங்களை இன்னிக்குத்தான் வாய்விட்டுச் சொல்லியிருக்கா. அவளைப் படுக்கையில் விடு... நான் உன்கிட்ட கொஞ்சம் பேசணும்..." ராஜி சொல்லவும்...

"பேசலாம்... அதுக்கு முன்னாடி இவளுக்குச் சாப்பிட ஏதாவது கொடுக்கணும்..." என்ற கவி, அவளைப் படுக்கையில் விட்டு எழுந்தவனை...

"கண்டிப்பாக் கொடுக்கணும்... அதுக்கு முன்னாடி நாம கொஞ்சம் பேசிடலாம்... வா..." எனக் கையைப் பிடித்து இழுத்த ராஜி, அந்த அறையின் கதவை மெல்லச் சாற்றிவிட்டுக் கவியையும் அழைத்துக் கொண்டு ஹாலிற்கு வந்தார்.

சில நொடி மௌனத்திற்குப் பின், ராஜி ஆரம்பித்தார்...

"அரசு... இப்போ உனக்கு அவளைப் பத்தின எல்லா விஷயமும் தெரிஞ்சுடுச்சில்லையா...?" எனவும்...

அவன் அமோதிப்பாகத் தலையசைக்கவும்...



"இனி உன்னோட முடிவு என்ன...?" ராஜி கேட்டது அவனுக்குப் புரியவில்லை...

"என்ன... என்ன முடிவு?" புரியாத குரலில் கேட்க...

"ஓகே... நான் ரொம்பச் சுத்தி வளைச்சுக் கேட்க விரும்பல. இப்போ உனக்கு ஆதியோட பாஸ்ட் எல்லாமே தெரிஞ்சிடுச்சு... அவ என்னதான் பெத்தவங்க பாசமில்லாமல் தான் தப்பான வழியில் போயிருந்தாலும், அவள் தப்புப் பண்ணியிருக்கா... அதனால ஏற்பட்ட விளைவுகளும் உனக்கு இப்போ தெரியுமில்லையா...?" எனவும்...

அவன் மெல்லிய தலையசைப்புடன் ராஜி சொன்னதைக் கேட்டுக் கொண்டுதான் இருந்தான்.

"சோ, நீ என்ன முடிவு பண்ணியிருக்க... இனி நீ வாழப் போற மிச்ச வாழ்க்கையை மனசுல எந்த விதச் சஞ்லமும் இல்லாம அவளோட வாழ முடியும்னு நீ நம்புறியா...?"

அவர் முடிப்பதற்குள், "நிச்சயமா... அதிலென்ன உங்களுக்குச் சந்தேகம்...?" என்ற கவியின் குரலில் சற்றே கோபமிருந்தது.

அந்தக் கோபத்தை அறிந்து கொண்டவர், மனதுக்குள் சிரித்து, "இப்போ சொல்றதுக்கு எல்லாம் நல்லா யிருக்கும் அரசு... ஆனா பிற்காலத்தில் என்னிக்காவது ஒரு நாள் உன் மனசுக்குள்ள அவளைப் பற்றி ஏதாவது ஒரு சின்ன உறுத்தல் இருந்தால்கூட அதனால பாதிக்கப்படப் போறது நீங்கதான். அதிலயும் அதிகப் பாதிப்பு ஆதிராவுக்குத்தான்.

"இப்போ நீ ஏதோ பரிதாபத்தில் ஒரு முடிவு எடுத்துடாதே... நீயே கேட்டேல்ல... அவள் உன்னை எந்தளவுக்கு நேசிக்கிறானு... அவளுக்கு இப்போ சகலமும் நீதான்னு அவள் மனசு முடிவு செஞ்சிருச்சு... அந்த முடிவில் ஒரு சின்ன ஏமாற்றம் வந்தாக் கூட அவ மனசு தாங்காது, அரசு... அவ மனசளவுல ரொம்ப சென்சிடிவ்வா இருக்கா..." என ராஜி பேசிக் கொண்டே போகவும்...

"ஒரு நிமிஷம்..." எனக் கைக்காட்டித் தடுத்த அரசு, "இப்போ நான் அவ மேல இருக்கிற பரிதாபத்தாலதான் அவளோட சேர்ந்து வாழணும்னு முடிவு செய்திருக்கேன்னு சொன்னா என்ன செய்யறதா உத்தேசம்...?" குரலில் அதீதக் கோபம் கொப்புளித்தது...

அவனின் கோபமறிந்து, அவன் சொல்ல வருவது புரிந்து ராஜி அமைதி காக்க, லட்சுமிக்குத்தான் பதட்டம் கூடிக் கொண்டது...

"என்ன அரசு இப்படியெல்லாம் பேசுற..." லட்சுமி ஆதங்கத்துடன் கேட்க...

"பின்னே என்ன ஆதிம்மா... அவ என்னோட பொண்டாட்டி... அவ மேல எனக்கு இருக்கிற அன்பு, பரிதாபத்தால வந்ததா....?

"நான் ஒத்துக்குறேன்... எனக்கு அவளோட கடந்த காலத்தை யாரோ ஒரு மூணாவது மனுஷங்க மூலமா தெரிஞ்சுகிட்டதுல எனக்குக் கோபம் வந்தது உண்மை தான்... என்னையும் மீறி நான் அவளைக் காயப்படுத்தினதையும் நான் ஒத்துக்குறேன்... ஆனா உண்மை



யாகவே அது என்னோட இயலாமையின் வெளிப்பாடு தான்... இது மட்டும் எனக்கு முன்னாடியே தெரிஞ்சிருந்தா என்னோட மனைவியை அடுத்தவங்க முன்னாடி கூனிக் குறுகி நிக்க விட்டுருக்க மாட்டேன்... அந்த ஆதங்கம்தான். எனக்கு நடுவுல வந்த என்னோட மனச் சஞ்சலம், நடுவுலயே போயிடுச்சு...." என்றவன்,

"ஏன் டாக்டர்... நீங்க எந்த நம்பிக்கையில ஆதிராவை எனக்குத் திருமணம் செய்து வைக்கணும்னு யோசிச்சீங்க...?" ராஜியை நோக்கிக் கேள்விகளைத் தொடுக்க...

"உன் மேல எனக்கிருந்த நம்பிக்கைதான், அரசு..." அவரிடமிருந்து உடனடியாகப் பதில் வரவும்...

"அப்போ இருந்த நம்பிக்கை இப்போ உங்களுக்கு என் மேல இல்லாம போயிடுச்சு, அப்படித்தானே...?" - அவன் கேட்கவும்...

"நம்பிக்கையில்லைன்னு இல்ல, அரசு... நேத்து நீ லட்சுமிகிட்ட ரொம்பக் கவலையாப் பேசினேனு சொன்னா... அப்போ உன்னோட எதிர்பார்ப்புக்கு மாறா நாங்க இந்த வாழ்க்கையைத் திணிச்சுட்டோம்னு என் மனசுல பட்டுச்சு... உன்னோட வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்குற உரிமையை நீ லட்சுமியை நம்பிக் கொடுத்திருக்க... ஆனால் ஆதிராவோட நல்வாழ்க்கையை முன்னிறுத்தி நாங்க உன்னோட வாழ்க்கையை நரகமாக் கிட்டோம்னு தோணுது..." ராஜி விளக்கம் கொடுக்க...

"போதும், டாக்டர்... நீங்களே சொல்லிட்டீங்க... ஆதிரா என்னோட வாழ்ந்தா அவளுக்கு நல்ல வாழ்க்கை

கிடைக்கும்னு... பின்ன என்ன... நாலு மாசம் முன்னாடி, நான் ஆதியை முதல் முறை பார்த்தபோது என் மனசுல எந்தளவு காதல் இருந்ததோ, இப்போவும், அதே போல... ம்ஹூம்... அதைவிட அதிகமாவே அவளை நான் நேசிக்கிறேன்... அதுவும் அவளும் இப்போ என்னை நேசிக்கிறாள்னு தெரிஞ்ச பிறகு எப்படி அவளை என்னால வெறுக்க முடியும்...?

"ஒரு திருமணத்தின் வெற்றி இருவரோட அன்பிலும் விட்டுக் கொடுத்தலிலும் தான் இருக்குன்னு எனக்கு நல்லாவே தெரியும்... அந்த வகையில நான் ஆதி மேல கடலளவு நேசம் வைச்சிருக்கேன்...

"அவளோட கடந்த காலம் இப்போ எனக்கு அவளோட மனநிலையைப் பற்றித் தெரிஞ்சுக்க உதவியிருக்கு... அது தெரிஞ்ச பிறகுதான், என் மனசுல இன்னமும் அவளை நான் கண்ணாடிப் பாத்திரம் மாதிரி பார்த்துக்கணும்னு மனசுல உறுதி வந்திருக்கு...

"ஆதிராவோட கடந்த காலம் நான் சாகிறவரைக்கும் என் மனசுல உறுத்தாது... அதுக்கு நான் உறுதி கொடுக்கிறேன்... இப்போ உங்களுக்கு என் மேல நம்பிக்கை வந்திடுச்சில்ல...?" அவன் உறுதியான குரலில் சொல்ல...

ராஜி, "எனக்கு அப்போவும் உன் மேல எந்தச் சந்தேகமும் இல்லை அரசு... உன்னோட மனசை நீயே ஒரு முறை தெளிவுபடுத்திக்கத்தான் அப்படிக் கேட்டேன். இருந்தாலும் நான் உன்னைச் சந்தேகப்பட்டதா நினைச்சிருந்தா, அதுக்கு என்னை மன்னிச்சுடு, அரசு..." - ராஜி மன்னிப்பை வேண்ட...



"நோ டாக்டர்... ப்ளீஸ் மன்னிப்பெல்லாம் வேண்டாம்... சொல்லப் போனா நான் உங்களுக்கும், ஆதிம்மாவுக்கும் நன்றிதான் சொல்லணும். நீங்க ஆதியை எனக்குத் தரணும்னு நினைச்சதுக்கு ரொம்ப ரொம்ப நன்றி..." அவன் உண்மையான குரலில் சொல்ல...

"என்ன அரசு இது... நீ என் மகன்டா..." லட்சுமி நெகிழ்ந்து சொன்ன விதத்தில்...

அரசு கண்களில் ஆனந்த நீர் ஒரு துளி முளைத்தது...

சில நிமிடங்கள் அங்கே உணர்ச்சிகள் கூடலில் சற்று நேரம் மௌனம் ஆட்சி செய்ய...

"சரிப்பா... இனிமேல் ஆதியோட பழசை நம்ம எல்லோருமே மறந்திடலாம்... let past be a past... இனி உன்னோட முக்கியமான வேலை ஆதியைப் பத்திரமாப் பார்த்துக்கிறதுதான்...." ராஜி சொல்ல...

"பின்ன... அதை விட்டா எனக்கு வேற வேலை..." அவன் புன்னகையுடன் சொல்ல...

"ஹான்... அப்போ வேலைக்கு எல்லாம் போறதா உத்தேசமில்லையா...?" அத்தனை நேரம் அமைதியாக இருந்த பார்வதி வாயைத் திறக்க..

"ம்ம்... அது பார்த்துக்கலாம்... முடிஞ்சவரைக்கும் எல்லாத்தையும் வீட்லயே இருந்து செய்ய முடியுமான்னு பெர்மிஷன் கேட்டுப் பார்க்கிறேன்... இல்லன்னா வேலையை விட்டுடுறேன்..." - அவன் அதே புன்னகையுடன் சொல்ல...

"அப்புறம் பூவாவுக்கு என்ன செய்யலாம்னு உத்தேசம்...?" பார்வதி ஆக்ஷனுடன் கேட்க...

"ஏன்... நம்ம ஆசிரமத்தில் எனக்கும், ஆதிக்கும் இடம் தர மாட்டீங்களா என்ன...?"

அவன் கேட்டு முடிக்கும் நொடி... "லூசு மாதிரிப் பேசாதே அரசு... இப்போதான் உனக்கு வாழ்க்கையில எல்லாம் கிடைச்சிருக்கு... திரும்பவும் அங்கே வந்து நீ எதுக்கு அனாதை வாழ்க்கை வாழணும்...." லட்சுமி கேட்க...

"ஆதிம்மா... இப்போ நீங்கதான் லூசு மாதிரிப் பேசுறீங்க... அது அனாதை வாழ்க்கையா... எனக்குத் தெரிஞ்சது அதுதான் சொர்க்கம்... உண்மையைச் சொல்லணும்னா எனக்கு மட்டும் அப்பா, அம்மான்னு ஒருத்தங்க இருந்திருந்தாங்கன்னா கூட நான் இந்தளவுக்கு ஒரு கௌரவமான வாழ்க்கையை வாழ்ந்துகிட்டு இருந்திருக்க மாட்டேன்...

"எதிர்காலமே இல்லைன்னு நினைச்சு வந்தவங்களுக்கு வாழ்க்கை கொடுத்த இடத்தை அனாதை வாழ்க்கைன்னு சொல்லாதீங்க... எனக்குக் கெட்ட கோபம் வரும்...." கவி கண்டிப்புடன் சொல்ல...

"ஐயோ... சரி... சரி.. சண்டை போடாதீங்க... நான் விஷயத்தைச் சொல்லிடுறேன்..." என்ற ராஜி...

"இதோ பாரு, கவி... நீ வேலையை எல்லாம் விட வேண்டாம்... நீ எப்பவும் போல வேலைக்குப் போ..." எனவும்...



"அதெல்லாம் முடியாது.. ஏற்கெனவே அவ தனியா இருந்து ரொம்பவே கஷ்டப்பட்டுட்டா. இனிமேல் எல்லாம் அவளைத் தனியா விட முடியாது..." அவன் சொல்ல...

"அட! அதைத்தான் நாங்களும் சொல்றோம்... அவளை இப்போ யிருக்கற நிலைமைக்குக் கண்டிப்பாத் தனியா விட முடியாது... அவளா இனி வாழ்க்கையைப் புரிஞ்சுக்கிறவரை அவளுக்கு ஒரு துணை தேவைப்படும். இன்னும் சொல்லப் போனா, அவள் இன்னும் முழுசா குணமடையல... அவளுக்குள்ள இன்னமும் உன்னை ஏமாத்திட்டதா ஒரு குற்ற வுணர்வு இருக்கு... அதை முதல்ல போக்கணும். அது உன்னால மட்டும்தான் முடியும்...

"உன்னோட சின்ன அசைவு கூட ஆதிராவைப் பாதிக்கும், அரசு... அவ கண்ணாடி மாதிரி... அந்தக் கண்ணாடியில எப்பவும் உன்னோட பிம்பம்தான் தெரியும்... அவளோட சிரிப்பு, சந்தோஷம் எல்லாமே உன்னை டிபென்ட் பண்ணித்தானிருக்கு... நீ சிரிச்சா அவளும் சிரிப்பா... நீ அழுதா அவளும் அழுவா... அதனால நீ உன்னோட நேசத்தை அவளுக்கு உணர்த்தணும்.

"எந்த அளவு அவளுக்கு அன்பைக் கொடுக்கிறியோ, அதுவே... இல்லை, அதுக்கு மேலயே உனக்குத் திருப்பிக் கிடைக்கும்... சோ, அவளுக்கு நீ நிறைய முக்கியத்துவம் கொடுக்கணும்... அவளைச் சும்மா உட்கார்ந்து யோசிக்க விடாம அவளை ஏதாவது ஒரு வேலையில என்கேஜ்டா வெச்சிக்கணும்..." என்ற ராஜி,

“நமக்கு ஃபர்ஸ்ட் அவளோட குணாதிசயம் எதுவுமே தெரியாது, அரசு... ஒவ்வொருத்தருக்கும் ஒரு குணம் இருக்கும்... அதாவது சிலர் ரொம்பக் குறும்பு செய்வாங்க. சிலர் ரொம்ப அமைதி, சிலர் அடிக்கடி ரொம்ப கோபப் படுவாங்க. அந்த மாதிரி ஆதிராவுக்குன்னு ஒரு குண மிருக்கும். அதை முதல்ல நாம வெளிக்கொண்டு வரணும்.

“ஏன்னா சின்ன வயசுல இருந்து அவ ஒருவித மன அழுத்தத்துலயே இருந்திருக்கா... இந்த மன அழுத்தம் அவளை அவளோட கூட்டை விட்டு வெளி வரவே விட்டுருக்காது.. இதனால இயல்பா இந்த வயசுப் பெண்களுக்குள் இருக்கிற ஆசைகள், தேவைகள் எதை யுமே அவள் உணர்ந்ததில்லை. அதை வெளிப்படுத்த அவளுக்குச் சந்தர்ப்பமும் கிடைச்சிருக்காது...

“எனக்குத் தெரிஞ்சு அவள் முதல் முதலா அவ ஆசைப்பட்டு, அதை அவளை அறியாமலே வெளிப் படுத்தினது உன் மேல அவள் கொண்ட காதலைத் தான்னு நினைக்கிறேன்... இந்த மாதிரி அவளுக்குள் நிறைய ஆசையிருக்கும். அந்த ஆசைகள், அவளோட தேவைகளை அவள் மூலமாவே வெளிப்படுத்த வைக் கணும்... அப்போதான் அவ முழுசா குணமடைஞ்சிருக் கானு அர்த்தம்...” ராஜி விளக்கிச் சொல்ல, கவியரசனுக்குப் புரிந்தது...

“புரியுது, டாக்டர்... ஆனால் அது எப்படி...” கவி கவலையாகச் சொல்லவும்...

“யோசி கண்ணா... ஏதாவது வழி கிடைக்கும்...” என்ற ராஜியைத் தொடர்ந்து...



லட்சுமி, “அரசு... நீ வேலையெல்லாம் விட வேண் டாம்ப்பா... ஆதி குணமாகிறவரைக்கும் ஆயா இங்க இருந்து பார்த்துப்பாங்க...”

“ஹா... ஆயாவா... அவளைப் போட்டுப் படுத்தி எடுத்திடுவாங்களே... இப்போ கூட அவளைக் குட்டிட்டாங் களே... அவ பாவம்...” அரசு பயந்தவனாகச் சொல்ல...

“அவளை மட்டுமில்லடா தம்பி... உன்னையும்தான் படுத்தப் போறேன்... ரெண்டு பேரும் என்கிட்டே மாட்டு னிங்க...” - பார்வதி வில்லியைப் போலச் சொல்லவும், அங்கொரு சந்தோஷ சிரிப்பலை வீசியது.

“சரி... எல்லோரும் இருந்து சாப்பிட்டுட்டுத்தான் போகணும்... அதுக்கு முன்னாடி நான் ஆதியைச் சாப்பிட வைச்சிட்டு வரேன்... ப்ளீஸ், எல்லாரும் கொஞ்சம் வெயிட் பண்ணுங்க...” என அனுமதி வாங்க...

“நீ மெதுவா வா... நாங்க இருக்கோம்...” என்ற லட்சுமியின் மனதில் இப்போது நிம்மதி வர, அதன் விளைவாக முகமும் மலர்ந்திருந்தது...

சமையலறையில் மனைவிக்குத் தேவையான உணவை எடுத்துக் கொண்டிருந்த கவிக்கு மனம் முழுக்க மனைவியின் எண்ணங்களே...!

எப்படி அவளை வெளிக் கொண்டு வருவதென எந்த வழியும் தெரியாமல் தட்டில் உணவை எடுத்துக் கொண்டு படுக்கையறைக்குச் சென்ற கவி, நேற்றைப் போல் ஈரத் துணியை வைத்து, ஆதிராவின் மயக்கத்தைப் போக்க,

கண் விழித்ததும் புன்னகையுடன் தன் கண் முன்னால் நின்ற கணவனைக் கண்டதும், நெஞ்சில் அவளின் பழைய நினைவுகள் மனதைத் தாக்கின.

கவியைக் காணத் தயங்கி அவள் தலை குனியவும், அவள் செய்கையை எதிர்பார்த்திருந்தவன், அவள் தாடையைப் பற்றி நிமிர்த்தி, "என்னடி... என்னைப் பார்க்க மாட்டியா... ரெண்டு நாள்ல என் மூஞ்சி என்ன அவ்வளவு கொடூரமாவா மாறிடுச்சு... இல்லையே... முன்னை விட இப்போத்தானே ஐயா ஸ்மார்ட்டா இருக்கேன்...." என எதிரிலிருந்த கண்ணாடியில் தன் முழு உருவத்தைப் பார்த்துத் தலை கோதிக் கொண்டான்...

அவன் செய்கையில் உள்ளுக்குள் புன்னகை மலர்ந்தது, ஆதிராவுக்கு...

"சரி சரி... எழுந்து உக்காரு... எனக்குப் பசிக்குது... சாப்பிடலாம். எழுந்திரு..." என அவளின் தோள் பற்றி எழுப்பியவன், உணவை அவள் வாய்க்கு எடுத்துச் செல்ல...

"இ.... இல்ல... நானே..." எனத் தடுத்தவளை முறைத்து...

"ஏன்... நான் கொடுத்தா நீ வாங்க மாட்டியா..?" அவன் குரலை உயர்த்திக் கேட்க...

"இல்ல... அப்படியில்ல... உனக்கெதுக்குக் கஷ்டம்?"

"நான் உன்கிட்ட சொன்னனாடி... சொன்னேனா... என்கிட்ட அடி வாங்காம வாயைத் திற, ஆதி..." என மிரட்டல் விட... ஆதியின் வாய் தானாகத் திறந்தது.



அவன் உணவை ஊட்ட ஊட்ட, ஆதியின் கண்கள் கண்ணீர் உகுக்க, கவியரசன் ஏனென்று கேட்கவில்லை.

கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் தன் இடது கையால் துடைத்து விட்டவனுக்கும் கண்களில் கண்ணீர் பூத்தது...

அவள் முன்னாடி அதைக் காட்டக் கூடாதென்ற உறுதியால், பூத்த கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டவன், "அழாம சாப்பிடுடா குட்டி... உனக்கு இனிமேல் நானிருக்கேன்னு மட்டும் என் மேல நம்பிக்கை வைடா, ஆதிம்மா..."

அவன் சொன்ன வார்த்தையில் முற்றிலும் உடைந்த ஆதிரா,

"கவி....." என்ற அழைப்புடன் அவன் நெஞ்சில் சாய வர, பின் சுதாரித்து ஒரு தயக்கத்துடன் நின்றவளை இழுத்து, தன்னுள் தாங்கியவன் அவள் கூந்தலை வருடிக் கொடுக்க... அதில் மேலும் மேலும் உடைந்து அழுதாள்.

அவளின் மனதின் பாரம் வடியும்வரை அழ விட்டவன், பின், "போதும்டா. நீ அழுதது... இனிமேல் நீ எதுக்கும் அழக் கூடாது..." என்றவன், நெஞ்சில் விழுந்தவளைத் தன் முகத்திற்கு நேராகக் கொண்டு வந்து...

"குட்டி... நான் உன்னை ரொம்பவே காயப் படுத்திட்டேன்டா... அது எல்லாம் என்னை மீறி நடந்த விஷயம்... அதுக்கு நான் ரொம்பவே வருத்தப்படறேன்... உன்னைக் காயப்படுத்தினதுக்கு என்னை மன்னிப் பாயா....?" - கவி வேதனையான குரலில் கேட்க...

"என்ன கவி...." என்ற பார்வையைத் தாங்கி நின்ற ஆதிராவை,

"நீ என்னை மன்னிச்சுட்டேன்னு சொல்ற வரைக்கும் எனக்கு உன்னை அடிச்சது உறுத்திக்கிட்டே இருக்கும் ஆதிம்மா..." அவன் வேதனையாகச் சொல்ல...

கணவனின் வேதனையைக் காணப் பொறுக்கா மனையாள்... "ப்ளீஸ் கவி... தயவு செஞ்சு என்கிட்டே மன்னிப்பெல்லாம் கேட்காதே... நான் உனக்குச் செய்த துரோகத்தை எல்லாம் கம்பேர் பண்ணினா இது எல்லாம் ஒண்ணுமே இல்ல... நீ என்னை உரிமையோட அடிச்சதில எனக்குச் சந்தோஷம்தான்..."

அவள் முடிக்கும் முன் வாயைத் திறந்தான் கவியரசன்... "இதோ பாரு, ஆதி... நீ என்னை உண்மை யாகவே நேசிக்கிறதானே?" இந்தக் கேள்வி அவளை எந்தளவிற்குப் பாதிக்குமென்று உணர்ந்தே கேட்டான்...

அடிபட்ட பார்வையுடன் அவனைப் பார்த்தவளைக் கண்டு, எனக்குப் பதில் வேணும் என்பது போல் உறுதி யாக அமர்ந்திருக்க...

"உ... உன்னை மட்டும்தான் நேசிக்கிறேன், கவி..." தடுமாற்றத்துடன் ஆரம்பித்து, உறுதியான குரலில் முடித் தாள்...

"அப்போ அந்த நேசம் உண்மைன்னா... நீ என் மேல வைச்சிருக்கிற காதல் உண்மைன்னா... நீ பழசை எல்லாம் மறந்துடணும்.... முக்கியமா உனக்குள்ள இருக்குற அந்தக் குற்ற வுணர்வு என்ற குப்பையை



எல்லாம் தூக்கிப் போடணும்..." அவன் தீவிரமாகச் சொல்ல...

"அப்போ நீ என்னை மன்னிச்சுட்டியா...?" கலங்கிய குரலில் கேட்க...

"அடி பைத்தியமே... நீ என்ன தப்பு செஞ்ச, உன்னை மன்னிக்க...? முதல்ல நீ இந்த மாதிரி கிறுக்குத் தனமா யோசிக்கிறதை நிறுத்து... இனிமேல் உன்னோட வாழ்க்கையில நீ, நான் அப்புறம் நமக்கு வரப் போற இந்தப் புது உறவு... இது மட்டும்தான் உன் மனசுல இருக்கணும்... இதுக்கு நீ எனக்கு உறுதி கொடுக்கணும்...."

அவன் இடது கையை அவள் முன்னால் நீட்ட...

"நிச்சயமா கவி..." என்றவள், கவியின் கையோடு தன் கையைச் சேர்க்க, அங்கே கவியரசன் - ஆதிராவின் புது வாழ்க்கை ஆரம்பமாவதற்குத் தொடரும் போடப் பட்டது.

## 25

"அரசுப் பையா... டேய், அரசுப் பையா...?" பார்வதியின் குரலில் தங்களின் உணர்ச்சிகளின் உச்சத்திலிருந்த கவியரச னும், ஆதிராவும் நிகழ் உலகத்திற்கு மீண்டு வந்தனர்.

பழைய குப்பைகளை இனி எக்காரணம் கொண்டும் கிளறக் கூடாது என உறுதி கேட்ட கணவனின் கை களில் தன் கையைப் பதித்து உறுதி கொடுத்த ஆதிரா, கணவனின் நெஞ்சத்திலே ஆறுதல் அடையப் பெற்றாள்.

இருவரும் பார்வதியின் குரலில், அறையிலிருந்து வெளி வரவே, கணவனின் தோளில் பாந்தமாகச் சாய்ந் திருந்த ஆதிராவின் முகத்தில் தெரிந்த நிம்மதியோ, தெளிவோ... ஏதோ வொன்று ராஜியையும், லட்சுமியையும் நிம்மதியான ஒரு சந்தோஷப் புன்னகையை உதிர்க்கச் செய்தது.

வெளியே வந்த கவியரசனைக் கண்டு பார்வதி, "அரசு... உனக்கு அப்படி யென்னடா ஒரு கெட்ட எண்ணம்?" என ஆதங்கமாகக் கேட்க...

அவர் கேள்வியில் குழம்பிய கவி, "என்ன... நான் என்ன கெட்டது நினைச்சேன்...?"

"பின்ன... ஒரு நிமிஷம் இருங்க. ஆதிக்குச் சாப்பாடு கொடுத்துட்டு உடனே வரேன்னு சொல்லிட்டுப் போனே... போய் ஒரு மணி நேரமாச்சு...! எங்களைப் பத்தி யோசிச்சுப் பார்த்தியா... நீங்க என்னவோ பண்ணுங்க... எங்களுக்காவது சாப்பாடு கொடுக்கணும்னு உனக்குத் தோணுச்சா... சுயநலக்காரா... காலையில ஒரு கப் காப்பி மட்டும் கொடுத்துட்டு எங்களை ஏமாத்தலாம்னு பார்க் கிறியா...?" பார்வதி இடைவிடாது பேசிக் கொண்டிருக்க...

"ஆயாஆஆஅ... போதும், போதும்... போதும்... இது வாயா இல்லை... வண்டலூர்க் கால்வாயா... ஒரு நிமிஷம் கூட நிறுத்தாமப் பேசிக்கிட்டே இருக்கீங்க... சோப்பா... முடியலடா சாமி..." தலையை ஆட்டிப் பெரிய மூச்சை வெளியிட...

"ஹே.. இரு இரு... ஆமா... வண்டலூர்ல எனக்குத் தெரியாம எப்போ கால்வாய் வந்துச்சு..." பார்வதி அதி முக்கியமான கேள்வியை வைக்க...



"ஹய்யோ... ஆயா... ப்ளீஸ்... என்னால முடியல. அது ஒரு ரைமிங்குக்குச் சொன்னேன்..." எனப் பாவம் போலச் சொன்னவனைக் கண்டு, "ம்ஹூம்..." எனக் குலுங்கிச் சிரித்தாள் ஆதிரா...

மனைவியின் தோள் அசைவில் அவள் சிரிக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்ட கவியரசனுக்கு உள் ளுக்குள் பெரும் நிம்மதி பிறக்கவே...

"ஹே... உனக்கு என்னடி சிரிப்பு வேண்டிக் கிடக்கு.. ஆயா என்னை ஓட்டுறது உனக்கு அவ்வளவு காமெடியா இருக்கா...?" கவியரசன் விளையாட்டாய் மிரட்ட...

தனது சிறு செயல் கணவனைக் காயப்படுத்தி விட்டதே என வருந்திய ஆதிரா, "அச்சோ கவி... ஐ அம் சாரி.. நான் வேணும்னு சிரிக்கல... தானா வந்துடுச்சு...." கவலையான குரலில் சொன்னவளை...

"ஹய்யோ குட்டி... நானும் சும்மாதான்டா மிரட் டினேன்... விளையாட்டுக்குடா..." அவளைச் சமாதானப் படுத்தி நிமிர்ந்த கவியரசனை ராஜியும், லட்சுமியும், டெர்ரர் லுக்கை விட...

'ஹய்யோ... இது என்ன இப்படி முறைக் கிறாங்க...?' மனதில் நினைத்த கவி, "ஹி ஹி... சும்மா சும்மா...." உதட்டை மட்டும் அசைத்தவன், "சரி சரி. வாங்க. எல்லாரும் சாப்பிடலாம்..." என்றவன் அவ்விடத்தைக் காலி செய்ய... அவன் பின்னாலே அவன் டி-ஷர்ட்டைப் பிடித்துக் கொண்டு நடந்தாள், ஆதிரா.

அதன் பின் வந்த உணவு வேளை பார்வதியின் நக்கல், நையாண்டியுடன் அமோகமாகத் தொடர,

அப்போதும் ஆதிரா கவியின் அருகிலே அமர்ந்து கொண்டு அவன் தோள் சாய்ந்திருந்தாள்.

அவளை இடது தோளில் தாங்கியவாறு மிகவும் சிரமப்பட்டு உண்டு கொண்டிருந்த கவியரசனைக் கண்ட பார்வதி, ஆதிராவின் பக்கம் திரும்பி, "பாப்பா... கொஞ்சம் தள்ளித்தான் உட்காரேன்... அவனைப் பாரு, எவ்வளவு சிரமப்பட்டுச் சாப்பிடறான்னு..." ஒரு அதட்டல் போட...

அவரின் அதட்டலுக்குப் பயந்து அவனை விட்டு ஒரு அடி நகர்ந்த ஆதிரா, கணவனைப் பாவமாகப் பார்க்க,

கவியோ பார்வதியை, "ஏன் ஆயா..." எனக் கண்களாலே கேள்வி கேட்க.. "நீ பேசாம சாப்பிடு..." என்றதொரு முறைப்பைச் செலுத்த,

அவள் ஏற்படுத்திய அந்த ஒரு அடி இடைவெளியை இவன் நிரப்பி அவளருகில் நெருங்கி அமர, அதில் நிம்மதியுற்றாலும், முன்னைப் போல் ஆதிரா அவனின் தோள் சாயவில்லை.

பார்வதி சொன்ன விதத்தில் கவியரசனுக்கு உள்ளுக்குள் கோபம் மூண்டது. அதைக் காட்டும் சூழ்நிலை இதுவல்ல என்று அறிந்தவன் மௌனமாகவே உணவு உண்டான்...

அவனைத் தொடர்ந்து அங்கே அனைவரும் அதே மௌனத்தைக் கடைபிடிக்க மதிய உணவு வேளை முடித்து அனைவரும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தனர்...

பார்வதியைத் தொடர்ந்து ஆதிராவை அதட்டி, உருட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு பாசமிகு கணவனாக



மனைவிக்காக வருத்தப்பட்டவன் மனதில், 'ஹய்யோ... அரை நாளுக்கே இந்த ஆயா, ஆதியை இப்படிப் படுத்து றாங்களே... இனி வர்ற எல்லா நாளும் எப்படிச் சமாளிக்க...?' என்ற மனவோட்டத்திலிருந்த கவியரசனை

"அரசு... கண்ணா..." லட்சுமியின் குரல் கலைத்தது.

"ஹா.... என்னம்மா..?" தன் எண்ணத்திலிருந்து வெளி வந்தவன்...

"நாங்க கிளம்புறோம், அரசு... வந்து ரொம்ப நேரமாச்சு... நாங்க ரெண்டு பேருமே இல்லைன்னா பிள்ளைங்க கேட்பாங்க.." என விடை பெற...

அவர்கள் வீட்டிலிருந்த தருணம் கலகலப்பாக இருந்தாலும், இதற்கு மேல் இங்கிருந்து தாமதமாகக் கிளம்பினால், அவர்கள் காஞ்சிபுரம் செல்ல இருட்டாகிடும் என்ற எண்ணத்தில், "சரி ஆதிம்மா.. போய்ட்டு வாங்க... நானும் ஆதியும் அடுத்த வாரத்தில் ஒரு நாள் அங்க வரோம்..." என ஆமோதிக்க...

அவர்களுடன் பார்வதியும் கிளம்புவதைக் கண்டவன், "என்ன ஆயா... நீங்களும் போறீங்களா... இங்கயே இருக்கேன்னு சொன்னீங்க...?" கேள்வியாகக் கேட்டவனை...

"டேய் தம்பி... நான் வரும்போது வெறும் கையை வீசிட்டுத்தான் வந்தேன்.. ஆசிரமம் போய் எனக்குத் தேவையானதை எல்லாம் எடுத்துட்டு வரேன்... இந்த மணி பொண்ணு நான் இல்லைன்னா ரொம்ப அழுவாடா... அவகிட்ட பதமாச் சொல்லி பெர்மிஷன் வாங்கிட்டு வரேன்... இல்லைனா அதுக்கு மூஞ்சி விழுந்துடும்..." பார்வதி சொல்லக் கவிக்குப் புரிந்தது.

பார்வதியின் உலகமே காக்கும் கரங்கள்தான்... அங்கிருக்கும் ஒவ்வொரு குழந்தையும் பார்வதியிடம் தனி அன்பு வைத்திருந்தனர்...

அதட்டலான அன்பு என்றாலும், பிள்ளைகள் அனைவரும் அவருக்கு மிகச் செல்லம்... அவரின் உலகத்தை விட்டு உடனே இங்கே வரச் சொன்னால், பாவம்! அவரும்தான் என்ன செய்வார்...!

அதைப் புரிந்தவனாக, "சரி ஆயா... ஒண்ணும் அவசரமில்லை... நான் அடுத்த வாரம் வரும்போது நானே உங்களை வந்து அழைச்சுக்கிட்டு வர்றேன்... அது வரைக்கும் நீங்க அங்கயே இருங்க... நான் சமாளிச்சுக் குவேன்..." அவன் சமாதானமாகச் சொல்லவும் மூவரும் விடை பெற்றனர்.

போகும்போது ராஜி, அரசுவைக் கண்களால் ஜாடை காட்ட, அதைப் புரிந்தவனாக, "டேய் ஆதி... நீ இங்க இருக்கியா.. நான் அனுப்பி வைச்சுட்டு வரேன்..." மெல்லிய குரலில் மனைவியின் அனுமதியைக் கேட்க...

"நானும்..." என இழுத்த ஆதிரா, பின் பார்வதியைப் பார்த்து விட்டு, "சரி.... போயிட்டு வா..." எனத் தலையாட்டி அனுமதி கொடுத்தாள்..

பார்வதி அவளைப் பார்த்து மனதுக்குள் சிரித்துக் கொள்ள, நால்வருமாக அபார்ட்மெண்ட் பார்க்கிங் சென் றனர்.

கீழே ராஜியின் கார் அருகில் சென்றதும், பார்வதி, "அரசு... என்னை மன்னிச்சுடுப்பா!" எனத் தளதளத்த குரலில் சொன்னதும்...



அதைக் கேட்டுப் பதறியவனாய், "ஆயா... எதுக்கு நீங்க போய் என்கிட்ட மன்னிப்பெல்லாம்... ப்ளீஸ் ஆயா..." குரலில் வேதனையைத் தேக்கிச் சொல்ல...

"இல்லடா கண்ணா... நான் ஆதியை ரொம்ப மிரட் டிட்டேன்... பழக்க தோஷம்...." எனவும்...

"ஆயா... நீங்க எதுக்கு இப்போ வருத்தப்படறீங்க... நீங்க செய்த முறைதான் சரி... அதைச் சொல்லத்தான் நானும் கூப்பிட்டேன், அரசு..." எனப் பார்வதியிடம் சொன்ன ராஜி, அரசிடம் தொடங்கினார்...

"அரசு... நீ ஆதியைத் தாயாய்த் தாங்குறது தப் பில்லை... ஆனால்.. அதுவே தப்பாகிடக் கூடாது..." எனவும்,

அவன் புரியாத பாவத்தைக் காட்ட...

"நமக்குத் தெரியும்... இதுவரைக்கும் ஆதி யாரோட அன்பையும் உணர்ந்ததில்ல. இப்போதான் அவள் உன் கிட்ட அதை உணர ஆரம்பிச்சிருக்கா... ஆனா அவ உன்னை மட்டுமே நம்பி இருந்திடக் கூடாது... அவள் அவளோட வாழ்க்கையை வாழணும்... தனியா எதுவா இருந்தாலும் சிந்திச்சுச் செய்யணும்... அதுக்கு ஆயா மாதிரி ஒரு ஆள் தேவைதான்... நீ உன்னோட பாசத்துல குறை வைக்காதே... அதே சமயம் அவளுக்கு வாழ்க்கை யின் நிதர்சனத்தை உணர்த்து..." எனவும்.... மீண்டும் கவியின் புருவங்கள் முடிச்சிட...

"நான் முன்ன சொன்னதைத்தான் இப்பவும் சொல் றேன் அரசு... வாழ்க்கையில் ஆதிக்கு உன்னோட காதல் ரொம்ப முக்கியம்... ஆனால் உன்னோட காதலால் அவள்

அடிமைப்பட்டுடக் கூடாது...." ராஜி இப்போது சொன்னது அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது..

"புரியுது டாக்டர்... இப்போ எனக்குத் தெளிவா கிடுச்சு..." அவன் கண்களில் புரிதலுக்கான ஒளி வந்ததும் ராஜிக்கும் நிம்மதி வந்தது.

இனி எல்லாம் அவன் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கையுடன் லட்சுமி, ராஜி, மற்றும் பார்வதி விடை பெற்றனர்.

மேலே வந்ததும் மனைவியைத் தேடி வந்தவன், அவள் பால்கனி கிரில்லில் சாய்ந்து நிற்பதைக் கண்டவன், 'முதல்ல இந்தப் பால்கனிக்குப் பெரிய கேட் வெச்சு பெரிய பூட்டா தொங்க விடணும்...' மனதில் எழுந்த எண்ணத் துடன் மனைவியை நெருங்கியவன் அவளைப் பின்னா லிருந்து அணைத்தான்.

"ஹே குட்டி..." எனக் கைகளால் அவள் இடுப்பை வளைத்து, விரித்து விட்டிருந்த அவள் கூந்தலில் முத் தெடுத்தான்...

அவன் மனதில் இத்தனை நாள் மனைவியின் மீதிருந்த புதிர் விலகி, வெகு நாளாக மனதை அரித்துக் கொண்டிருந்த குழப்பமெல்லாம் நீங்கி,

அது கொடுத்த சந்தோஷத்தின் விளைவால் மனைவியை ஆசையாக அணைத்தான்.

கணவனின் தீண்டலில் அவன்மீது சாய்ந்து, வலது கையைப் பின்னால் கொண்டு சென்ற ஆதிரா, அவன் கன்னங்களை வருடி... "தேங்க்ஸ் கவி...." நெகிழ்ந்த குரலில் சொல்ல...



அவளைத் தன் புறம் திருப்பி, "எதுக்கு இப்போ தேவையில்லாம தேங்க்ஸ்..."

"எல்லாத்துக்கும்..."

"எல்லாத்துக்கும்ன்னா...?"

"இதோ... இதுக்கும்... இதுக்கும்... இதுக்கும்..." என 'முதல் இதுக்கு' அவள் கழுத்திலிருந்த தாலிக் கொடியை எடுத்துக் காட்ட, அடுத்த 'இதுக்கு' அவள் வயிற்றில் கை வைத்துக் காட்ட, மூன்றாவதற்கு அவன் நெஞ்சைத் தொட்டுக் காட்டியவளின் கையைப் பிடித்து அழுத் தியவன்... கண் மூடிச் சற்று நேரம் நின்றவன்...

சட்டென அவள் முன்னே மண்டியிட்டு அமர்ந்து, அவள் அணிந்திருந்த டி-ஷர்ட்டை மேலே தூக்கி, "சாரி பேபி... அப்பா ஏதோவொரு டென்ஷன்ல உன்னை வெல்கம் பண்ணாம விட்டுட்டேன்... வெல்கம் ஹோம் பேபி..." என்றவன், அவள் வயிற்றில் அழுந்த ஒரு முத்தம் வைக்க...

அவன் தலையைத் தன்னுள் தாங்கிய ஆதிராவின் செயல் அவனையும் தன் வயிற்றில் தாங்க மாட்டோமா என்ற ஏக்கம் தொனிக்க.. அந்த எண்ணத்தில் முற்றிலும் நெகிழ்ந்து அதன் விளைவாய் உடைந்து அழுதாள்.

அவள் கண்ணீர் அவன் தலையை நனைக்க...

அதில் நிமிர்ந்து, அவளைப் பார்த்தவன், "ம்ச்... இதென்ன சும்மா சும்மா கண்ணுல தண்ணி வெச்சுட்டு ஆதி... நீ இப்படியிருந்தா என்னால ஒரு பெர்சன்ட் கூடச் சந்தோஷமா இருக்க முடியாது ஆதி... நான் சந்தோஷமா

இருக்கக் கூடாதுன்னா, அப்போ நல்லா அழு. நல்லா மூக்கை உறிஞ்சிக்கிட்டு அழு..." என்றவன், வேகமாக அவளை விட்டு எழுந்து நகர்ந்து சென்றான்.

"ச்சே... உனக்குப் புரியலையா ஆதி... உனக்கு மட்டுமில்ல... எனக்கும் இப்போ நீ மட்டும்தான் எல்லா மேன்னு உனக்குப் புரியலையா...? உன்னோட சுகமும் துக்கமும் என்னையும் பாதிக்கும்னு உனக்குத் தோண லையா?" - எதற்கெடுத்தாலும் இப்படி அழுது கொண்டு, தன் உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாளே என ஆயாசமாக வந்தது அவன் குரல்.

"முதல்ல நம்ம வாழ்க்கையை நன்றிக் கடனாகப் பார்க்காம, காதலோட பார்த்துப் பழகு ஆதி. உன் மனசுல இருக்கிற காதலை வெளியில கொண்டு வா. ஏன்டி இப்படி அழுத்தமா இருக்கிறே..." என்றவன், கோபத்தை அடக்க அவன் பின்னந் தலையை அழுந்தக் கோதிக் கொண்டது அவளுக்குப் புரிந்தது.

பாவம்... அவளும்தான் என்ன செய்வாள்?

கணவனின் மீது கடலளவு நேசமிருக்கிறது.

ஆனால், அவளால்தான் அந்நேசத்தை வெளிப் படுத்தத் தெரியவில்லை.

தன் மீது அன்பைப் பொழியும் கணவனிடம் என்ன மாதிரி நடந்து கொள்ள வேண்டும் என்று புரியவில்லை.

அன்று ஏதோ பெரிதாக முடிவெடுத்தவள் இவள் தான். ஆனால், இப்போது முடிவை எப்படிச் செயலாக் குவது என்பதுதான் புரியாத புதிராக இருந்தது.



கோபத்தில் பேசிய கவிக்கோ, 'ச்சே... கொஞ்ச நேரத்தில் நிதானம் தவறிட்டேனே...' எனத் தன்னையே உள்ளுக்குள் சபித்துக் கொண்டவன், மீண்டும் ஆதிரா வின் புறம் திரும்பி அவளிடம் நெருங்கியவன், அவள் கன்னத்தைப் பற்றி, "சாரிடா கண்ணம்மா... தெரியாமத் திட்டிட்டேன்... சாரிம்மா..." என உணர்ந்து மன்னிப்புக் கேட்க,

"ம்ஹூம்... நீ சாரி கேட்காதே..." எனச் சொல்வ தற்குள் அவள் தொண்டையடைக்க, அதை முயன்று கட்டுப்படுத்தியவள், அவனின் தோள் சாய்ந்தவள், இப்போதைக்கு அது ஒன்றுதான் அவளின் பற்றுக்கோல் என்பதைப் போல் அவனை இறுக்கிப் பிடித்தாள்.

இனித் தன்னால் முடிந்தவரை மனைவியை மாற்ற முயற்சிக்க வேண்டுமெனக் கணவனும், கணவனுக்காகத் தான் மாறித்தான் ஆக வேண்டுமென மனைவியும் ஒருவ ருக்குள் ஒருவர் உறுதி பூண்டனர்.

அந்த நாளில் அவர்களின் மனக் குழப்பமெல்லாம் நீங்கி, அவர்கள் அன்றாட வாழ்க்கையை வாழத் துவங் கினர்.

அடுத்து வந்த இரண்டு நாட்களும் தம்பதியர் இடையே எந்த மாற்றமும் நிகழவில்லை. ஆர்ப்பாட்ட மில்லாத அமைதியான சூழ்நிலையே நிலவியது.

அதை மாற்றும் வண்ணம் அன்றையப் பொழுது ஆதிராவிடம் வந்தவன், "ஆதிம்மா... வீட்டிலேயே இருக்கப் போர் அடிக்குதுடா... எங்கேயாவது வெளியே போக லாமா?" எனவும்,

"ஓஹோ... போகலாமே... கீழே அபார்ட்மெண்ட் பார்க் போகலாமா...?" உடனடியாகப் பதில் தந்தவளை, 'நான் எங்கே போகலாம்னு சொன்னா... இவ எங்கே போகலாம்னு சொல்றா... என்னோட செல்ல பேபி...' என மனதில் செல்லமாகக் கொஞ்சிய கவி,

"சரி... வா, போகலாம்..." என்றவன், வீட்டைப் பூட்டி விட்டு, அவளையும் அழைத்துக் கொண்டு, அபார்ட் மெண்ட் வளாகத்திலிருந்த பார்க்குக்குச் சென்றான்.

அது வாரத்தின் கடைசி வெள்ளி என்பதால், குழந்தைகள் அனைவரும் கூட்டம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

அவர்களைப் பார்த்தவாறு நடந்து கொண்டி ருந்தவள், "ஹய்யோ... அந்தப் பாப்பாவைப் பாரு கவி... மண்ணுல எப்படிப் புரளுதுன்னு..." முகத்தைச் சுருக்கிச் சொன்னவளை,

"ஹாங்... அதுக்கு ஏன்டி மூஞ்சியை மூஞ்சூர் எலி மாதிரி வெச்சிக்கிற..." எனச் சிரித்தவன், "குழந்தைகள்னா அப்படித்தான்... நான் எல்லாம் சின்ன வயசுல புழுதியில புரண்டு வளர்ந்தவனாக்கும். அதுதான் ஆதி சுகம். இந்த மாதிரி வெளியில விளையாடும் போது கிடைக்கும் திருப்தி, வீடியோ கேம்லேயும், ப்ளே ஸ்டேஷன்லேயும் கிடைக்கவே கிடைக்காது..." அவன் உணர்ந்து சொல்ல,

"ஹய்யோடா... மண்ணுல விளையாடறதுக்கு நீதான் பிராண்ட் அம்பாசடர் மாதிரிப் பேசாதே," என்றவள், உதட்டைச் சுழிக்க,



அவளின் அந்தச் சின்னக் கேலியில் விழி விரித்து நின்றான்.

பின்னே...! திகைப்பு வராதா? இத்தனை நாட் களில் ஒரு நாள் கூட ஆதிரா இந்த மாதிரிக் கேலிப் பேச்சுகளைப் பேசி, அவன் கேட்டதில்லையே!

அவன் திகைப்பிலே நின்று கொண்டிருக்க, ஒரு சின்னக் குழந்தை வந்து அவன் மீது மோதி நின்றதும் தான் தன்னுணர்வு பெற்றான்.

மறக்காமல் அவளின் இந்தச் சின்ன மாற்றத்தை அவனின் மனதில் குறிப்பெடுத்துக் கொண்டான்.

ஆதிரா, அங்கிருந்த குழந்தைகளையே வேடிக்கை பார்த்துக் கொண்டு நடக்க, கவியரசனோ சற்றும் கூச்சப் படாமல், மனைவியை வேடிக்கை பார்த்துக் கொண்டு நடந்தான்.

அவனின் பார்வையின் தாக்கத்தில் திரும்பிய ஆதிரா, "ப்ச்... என்ன கவி, இப்படிப் பார்க்கிறே? எனக்கு ஒரு மாதிரி இருக்கு... அங்கே பாரு..." என்று சிணுங்கிக் கொண்டே, அவன் தாடையைத் திருப்பி, நேராகப் பார்க்க வைத்தாள்.

சில நிமிடங்களில், பார்க்கிலிருந்த புல் தரைக்கு நீர் பாய்ச்சப்பட, சட்டென அடித்த நீரில் பயந்து ஒதுங்கிப் போனவளைத் தாங்கிக் கொண்ட கவியரசன், "ஹே... அது வெறும் தண்ணிதான்டி..." என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

"க்கும்... நான் ஒன்றும் பயப்படலையே...!" என்றவள், நேராக நிற்க,

"இதுக்குப் பேருதான் கீழே விழுந்தாலும் டீ-ஷர்ட்ல மண்ணு ஒட்டலைன்னு சொல்வாங்க..." பழமொழியை மாற்றிச் சொன்னவனிடம்,

"அது டீ-ஷர்ட் இல்ல கவி... மீசை..." எனத் திருத்த,

"கரெக்ட்தான்... ஆனால், உனக்குத்தான் மீசை இல்லையே...!"

"ஹே... இருக்குடா. இங்கே பாரு... நல்லா உத்துப் பாரு..." தன் வலது கை ஆள் காட்டி விரலை உதட்டின் மேல் வைத்துத் தன் பூனை முடியைச் சுட்டிக் காட்டிச் சொன்னவளின் உதடுகள் கவியரசனை ஈர்க்க,

"எங்கே... எனக்குத் தெரியலையே... நல்லாக் காட்டு..." என நெருங்கி நெருங்கி அருகில் வந்தவன், சட்டென அவளின் இதழ்களைச் சிறை செய்ய, கணவனின் இதழணைப்பில் உருகிய மனைவி, அவனின் டீ-ஷர்ட் காலரை இறுக்கிப் பற்றிக் கொண்டு அவனுடன் ஒன்றினாள்.

இருவரின் இதழணைப்பும் பல நிமிடங்கள் தொடர, "ஹய்யோ அங்கிள்... பப்பி ஷேம்... பப்பி ஷேம்..." என்ற குரலில் மீண்ட ஆதிரா, வலுக்கட்டாயமாகத் தன்னைக் கவியிடமிருந்து பிரித்தெடுக்க, மனைவியின் இதழைக் கவ்விப் பிடித்துக் கொண்டிருந்தவனை இடையூறு செய்த அந்த ஐந்து வயதுப் பையனை முறைத்துப் பார்த்தான்.

முறைத்த கையோடு, "டேய் கரடி... ஏன்டா ராங் டைம்ல என்ட்ரி கொடுத்தே...?" என மிரட்டிக் கொண்டி ருக்க,



"நீங்க ஏன் பப்ளிக் ப்ளேஸ்ல அந்த அக்காவை கிஸ் பண்றீங்க...?" அவனும் அதே துடுக்கோடு பதிலுரைக்க,

"டேய்... அது பப்ளிக் ப்ளேஸ் இல்லடா... பிரைவேட் ப்ளேஸ். எனக்கு மட்டுமே சொந்தம்..." அவன் உள்ளார்த் தத்தோடு சொல்ல,

"ஹாங்... அது நான் விளையாடற இடம். நீங்க ஏன் அங்கே வந்தீங்க...?" அந்தப் பையன் சொன்னதில், "டேய்... அந்த இடத்தில் எல்லாம் நீ விளையாடக் கூடாது. அந்த இடம் நான் விளையாட மட்டும்தான்..." அலறிய கவியை,

"ஹையோ கவி... ப்ளீஸ்டா... மானத்தை வாங் காதே! வா போகலாம்..." எனக் கையைப் பிடித்துத் தன்னுடன் இழுத்துச் சென்றாள் ஆதிரா.

மேலும் சற்று நேரம் நடக்க, ஒரு இடத்தில் ஆதிரா தன் காலில் மாட்டியிருந்த செருப்பைக் கழட்டி, அந்த சிமெண்ட் நடை பாதையில் வைத்து விட்டு, இப்போதுதான் தண்ணீரில் குளித்த அந்தப் புல் தரையில் தன் பாதங் களை வைத்து மெல்ல நடக்க ஆரம்பித்தாள்.

அவளின் செயலை விநோதமாகப் பார்த்துக் கொண்டிருந்த கவியரசனைப் பார்த்தவள், "என்ன கவி, அப்படிப் பார்க்கிறே? நீயும் வா... ஸ்லிப்பர் கழட்டிட்டு வா. கம்... கம்..." என அவன் கையைப் பிடித்து இழுத்தவள், அவனின் கையை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, மற்றொரு கையில் அவளின் லாங் ஸ்கர்ட்டைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நடக்க,

"ஹா... ஹா... நல்லாயிருக்கில்ல கவி...?" என்றவளின் முகத்தில் அப்படி ஒரு மகிழ்ச்சி.

சந்தோஷத்தில் பளபளத்த மனைவியின் முகத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த கவியரசனுக்கு மனதில்,

'முதன் முதலாக அவளுக்குப் பிடிச்ச விஷயத்தைச் செய்யுறா...!' என்ற நிம்மதி குடி கொண்டது.

## 26

இருளை ஊடுருவிக் கொண்டு தன் நிழலை நிலத்தில் பதிக்க நிலவு மகள் முட்டி மோதிக் கொண்டிருந்த அக் காரிருள் வேளையில், முகத்தை உரசிச் சென்ற இளங் காற்றின் ஸ்பரிசத்தை உடலெல்லாம் உள் வாங்கிக் கொண்டிருந்த கவியரசனின் எண்ணம் முழுவதும் ஆதிராவையே தொடர்ந்திருந்தது.

அவளைத் தொடர்ந்து வந்த நினைவுகள், அன்று மாலை நடந்ததையும் நினைவு கூர்ந்தது.

அன்று மாலை வாசுவும், இந்துவும் அவர்கள் வீட்டுக்கு வந்திருந்தனர்.

விடாமல் அடித்த அழைப்பு மணியில், செய்து கொண்டிருந்த வேலையை விட்டுக் கதவை நோக்கி ஓடிய ஆதிராவை, "குட்டி... ஓடாதே. மெதுவாப் போ..." என்ற கவியின் அதட்டல் உள்ளறையில் இருந்து வந்ததைக் கிடப்பில் போட்டுக் கதவைத் திறந்து விட்ட ஆதிராவுக்கு எதிரில்,



"என்னடா சோம்பேறி... சீக்கிரம் வந்து... ஊஊஊஊ... ஹீ... ஹீ... நீயாம்மா... நான் அரஸ்னு நினைச்சிட்டேன்..." வழிந்த வாசுவை,

"ப்ச்... வாயைத்தான் கொஞ்சம் அடக்கி வெச்சா என்னவாம்..." என மிரட்டிய இந்துவைச் சிரிப்புடன் பார்த்த ஆதிரா, "உள்ளே வாங்க... கம், கம்... கவி... கவி..." என அழைக்க,

"டேய் வாசு... இந்து... வாங்க, வாங்க. வாட் சர்ப்ரைஸ்... வர்றதாச் சொல்லவேயில்லை... உட்காருங்க..." வரவேற்ற கவிக்கு,

"அதான் சர்ப்ரைஸ்னு சொல்லிட்டியே... அப்புறம் சொல்லிட்டா வருவாங்க... நீயெல்லாம் என்ன ப்ராஜெக்ட் மேனேஜரோ..." - சொன்னவனை முறைத்த கவியை,

"என்ன முறைப்பு...? ஆபீஸ்லதான் நீ எனக்கு மேனேஜர்... நான் டீம் லீடர். இப்போ போய் எனக்கு ஹாட்டா ஒரு காபி கொண்டு வா... போ, போ... போய்க்கிட்டே இரு..." - வாசு சொல்ல,

"டேய்... நீ ரொம்பத்தான்டா பண்ற..." என்றவன், "ஆதி..." என மனைவியைத் திரும்பிப் பார்க்க, அவள் அப்போதே சமையலறைக்குச் சென்றிருந்தாள்.

"எப்படி இருக்க இந்து? இப்போ உடம்புக்குப் பரவாயில்லையா? ஏன் இந்த நிலைமையில் ட்ராவல் பண்றே? நாங்களே வர்றதா இவன் கிட்டே சொல்லியிருந்தேனே..." அவன் சொல்லவும்,

"இப்போ உடம்புக்கு ஏதும் பிரச்சினை இல்லை பாஸ். மார்கிங் சிக்னஸ்தான்... மத்தப்படி ஐ அம் ஓ.கே.

எனக்கு மட்டும்தான் உடம்பு சரியில்லையா... உங்க வொய்புக்கு இல்லையா? அவங்க டிராவல் பண்ணினா ஓ.கே.வா?" இந்து சிரிப்புடன் கேட்க,

"அப்படி இல்லை... அவளை நான் பத்திரமாகப் பார்த்துப்பேன்... இந்த வாசுவைத்தான் நம்ப முடியாது. வண்டியை ஒழுங்கா ஓட்ட மாட்டான்." - சந்தடி சாக்கில் வாசுவை வார,

"டேய்... பேச்சு வாக்கில் உன்னை நீயே பாராட்டிக் கிறே... அது ஓ.கே. ஏன்டா என்னோட காலை வார்ற...? இப்போ இவளுக்கு ஃபுல் டைம் டிரைவர் நான்தான் தெரியுமா?" - போலியாக வருத்தப்பட,

"அந்த வேலையையாவது ஒழுங்காச் செய் யுறியா...? ரோட்ல போற எவளையும் விட்டு வைக்கிற தில்லை... உன்னை என் தலையில் கட்டி வெச்சிட்டு... நான்தான் இப்போ கஷ்டப்பட வேண்டியதாயிருக்கு..." - இந்து சொல்லவும்,

"ஹே... இப்போ எனக்கென்னடி குறைச்சல்...? உனக்கு இந்த ரோமியோ கிடைக்க நீ கொடுத்து வெச்சிருக்கணும்..." - வாசு பெருமையாகச் சொல்ல,

"யாரு... நீயா ரோமியோ...? ஆமாம்டா... ரோமியோ தான்... ரோடு சைட் ரோமியோ... ரோட்டுல ஒரு பெண்ணை விட்டு வைக்கிறியா? எல்லாத்தையும் நாக்கைத் தொங்கப் போட்டுட்டுப் பாரு... எரும, எரும..." என அங்கே இருவருக்குள்ளும் சண்டை ஆரம்பமானது.

கையில் மூன்று காபிக் கோப்பையுடன் வந்த ஆதிரா, அவர்கள் இருவரும் சண்டை போட்டுக்



கொண்டிருப்பதைச் சுவாரசியமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கணவனின் தோளில் இடித்து, "என்ன, பார்த்துக்கிட்டு இருக்கிற கவி... டூ சம்திங்..." எனவும்,

"இதுங்க சண்டையில நான் மூக்கை நுழைச்சா, என் மூக்குதான் உடையும். என்னை ஏன்டி முறைக்கிறே? எல்லாம் அனுபவம்தான். நீயே வெயிட் பண்ணிப் பாரேன்..." அவன் சொல்லவும்,

"ச்சே, போடா... உன்னோட பேசி எனக்குத் தலை தான் சுத்துது..." இந்து தலையைப் பிடித்துக் கொள்ளவும்,

"தலை சுத்துதா... இதுக்குத் தான்டி ஓவரா வாயை விடாதேன்னு சொல்றேன்..." என்ற வாசு, அவளைத் தோளில் தாங்கிக் கொள்ள,

'நான்தான் சொன்னேனில்ல...' போன்றதொரு லுக்கைக் கவி விட, ஆதிரா விரிந்த புன்னகையைச் சிந்தினாள்.

"காபி எடுத்துக்கங்க..." என வாசுவின் முன்னே நீட்ட, "தேங்க்ஸ்மா..." என்றவன், ஒரு கப்பை எடுத்து டேபிளில் வைத்து விட்டு, மற்றொன்றை எடுத்து இந்துவுக்குக் கொடுக்க,

'ஹய்யோ... இவர்கள் முன்னால் இப்படி நடந்து கொள்கிறானே...' என்ற கூச்சத்தில், "விடு வாசு.. நானே குடிச்சுக்கிறேன்..." எனத் தயங்கிய இந்துவை,

"இட்ஸ் ஓ.கே. பீ கம்போர்ட் இந்து... கவியும் இப்படித்தான் செய்வான்..." - இந்துவின் தயக்கம் உணர்ந்து சொல்ல,

அவளின் இந்தத் தயக்கமில்லாப் பதிலில், இந்துவும் வாசுவும் சற்று ஆச்சரியத்துடனே பார்த்தனர்.

ஆதிரா-கவி திருமணம் நடந்த புதிதில், வீட்டுக்கு வந்த ஆதிராவின் அமைதியைக் கண்டவர்கள் ஆயிற்றே! கேட்கும் கேள்விகள் அனைத்திற்கும் அவளை முந்திக் கொண்டு பதில் சொல்லும் கவியை,

"அவளைத்தான் பேச விடேன்டா..." என்றவர்களுக்கு, இப்போது அவள் இயல்பாக இருப்பது சற்று ஆச்சரியமாகத்தான் இருந்தது.

"என்ன பார்க்கிறீங்க... எல்லாம் என்னோட டிரெயினிங்தான்..." எனக் காலரைத் தூக்கிக் கொள்ள, ஆதிரா வெட்கத்துடன் அவனுடன் நெருங்கி அமர்ந்து கொண்டாள்.

அவள் இப்போதெல்லாம் வெட்கப்படுவது கவிக்கு ரொம்ப ரொம்பப் பிடித்திருந்தது.

ஆண்கள், பெண்களிடம் மயங்குவதே இந்த வெட்கத்திற்குத்தானே...

கவி மட்டுமென்ன விதி விலக்கா!

அதன் பின் கவி, இந்து, வாசு மூவரும் தங்கள் அலுவலகப் பேச்சைத் துவங்க, அந்தப் பேச்சில் தனக்கு வேலையில்லாததால், ஆதிரா அமைதியாக அமர்ந்து கொள்ள, அவளையும் பேச்சில் கலந்து கொள்ள வைக்க எண்ணி, "ஹே ஆது... எவ்வளவு பெரிய ஸ்வீட் நியூஸ் பாஸுக்குக் கொடுத்திருக்கீங்க... அவர் உங்களுக்கு ஒண்ணும் கிஃப்ட் தரலையா...?" இந்து கேட்கவும், ஆதிரா இல்லையென உதட்டைப் பிதுக்க...



"ஹவ் மீன் யூ ஆர் பாஸ்... இத்தனை நேரம் வாசுவை ஓட்டிட்டு இருந்தீங்க... ஆனால், நீங்க ஒரு பெர்ஃபெக்ட் ஹஸ்பெண்ட்டா நடந்துக்கவே இல்லை... ச்சே! போங்க... இதுக்கு என் வாசுவே பரவாயில்லை..." என்று அலுத்துக் கொள்ளவும்,

"ஹப்பாடா... உன்னோட வாயில இருந்து எனக்கு இப்படியொரு பாராட்டுக் கிடைக்க, நான் எவ்வளவு செலவு பண்ண வேண்டியதாயிருக்கு... சும்மாவா... லட்சக் கணக்குல இல்ல செலவு பண்ணியிருக்கேன்..." எனவும்,

"அடப் பாவி... எனக்குச் செலவு பண்ணினதைக் கணக்குப் பார்க்கிறியா? நீ என்ன, எனக்கா கொடுத்தே! உன்னோட பிள்ளையை இப்போதிருந்தே தாஜா பண்ணத் தானே வாங்கிக் கொடுத்தே... நீ காரியவாதிதானேடா..."

அங்கே மீண்டுமொரு சண்டை ஆரம்பமாக... கேட்டுக் கொண்டிருந்த கவிக்குத்தான் மிகவும் வருத்தமாக இருந்தது.

'ச்சே! எப்படி மறந்தே போனோம்...? இதுவரைக்கும் ஆதிக்கு நான் ஒண்ணுமே கொடுத்ததில்லையே...!' என மனதில் வருந்தியவனை மறந்து,

"அச்சோ, விடுங்க இந்து. ரெண்டு பேரும் சண்டை போடாதீங்க..." எனச் சண்டை போட்டுக் கொண்டிருந்த வாசுவையும், இந்துவையும் ஆதிரா விலக்கி வைக்க, அதன் பின் இருவரும் அமைதியானார்கள்.

அதன்பின் வந்த நிமிடங்களில், நால்வரும் ஒன்றாக அமர்ந்து இரவு உணவை முடிக்க, சற்று நேரத்தில் வாசுவும், இந்துவும் விடைபெற்றுச் சென்றனர்.

அவர்கள் சென்றதும், ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்த ஆதியின் அருகில் அமர்ந்தவன், அவள் கைகளைத் தன்னுள் எடுத்துக் கொண்டு, "ஆதிம்மா... சாரிடா. நான் இது வரைக்கும் உனக்கு ஒண்ணுமே செஞ்சதில்லை. இப்போ சொல்லு... உனக்கு என்னடா வேணும்?" என்று கனிவாகக் கேட்க,

"ச்சே... இதுக்கு எதுக்குக் கவி சாரியெல்லாம்... எனக்கு எதுவுமே வேண்டாம். நீ மட்டும் போதும்..." - என்று சொன்னவள், மீண்டும் டி.வி.யைப் பார்க்க,

அவள் கன்னத்தைப் பற்றித் தன்னைப் பார்க்கச் செய்தவன், "இந்த சினி டயலாக் எல்லாம் வேண்டாம். உனக்கு என்ன வேணும்னு சொல்லு... உனக்கு எது பிடிக்கும்?" என்றான்.

"எனக்கா... எனக்கு எது பிடிக்கும்...?" யோசித்தவளுக்கு, தனக்கு என்ன பிடிக்கும் என்று சொல்லத் தெரியவில்லை.

"தெரியலையே கவி..." அப்பாவியாகச் சொல்ல,

"அதெப்படித் தெரியாம இருக்கும்...? உனக்கு என்ன பிடிக்கும், பிடிக்காதுன்னு உனக்கே தெரியாதா? நல்லா யோசிடா! டிரெஸ், ஜுவல்ஸ், கார், காஸ்மெட்டிக்ஸ்... என்ன வேணும்டா...? என்ன வேணும்னு சொல்லு... நிச்சயம் அது எதுவா இருந்தாலும் நான் வாங்கித் தரேன். ப்ளீஸ், கேளுடா... எனக்கு, உனக்கு ஏதாவது தரணும் போலிருக்கு..." அவன் பரபரப்புடன் சொல்ல,

"அப்படியா... அப்போ..." என யோசித்தவள், அவன் மீது பாய்ந்து அவனின் உதடுகளைக் கவ்வ, மனைவியின் திடீர்த் தாக்குதலில் நிலை குலைந்த கவி, அவளைத் தாங்கிக் கொண்டு சோபாவில் சரிய, இருவரும் அந்த இனிய நிமிடங்களில் இன்பமாக மூழ்கிப் போயினர்.



வெகு நேரம் தொடர்ந்த அம் முத்தத் தாக்குதலிலிருந்து இருவரும் மூச்சுக்காக இடைவெளி எடுக்க, "ஹப்பா... செம ஸ்ட்ராங் ஆதி நீ... என்னையே சாச்சிட்டியே..." என்றவன், அவள் முகத்தில் உரசிய கூந்தலைக் காதின் ஓரம் ஒதுக்கி விட்டு, அவளின் முகத்தில் கோலம் போட்டவாறு,

"உனக்கு இந்தக் கிஃப்ட் எப்போ வேணும்னாலும் கிடைக்கும்டா குட்டி... ஐயாம் ஆல் யுவர்ஸ்... இது போக உனக்கு என்ன வேணும்?" மீண்டும் விட்ட இடத்திலிருந்து அவன் துவங்க,

"சீரியஸாகவே எனக்கு எதுவும் வேண்டாம் கவி. எனக்குத்தான் எல்லாம் இருக்கே... போடா, எனக்குத் தூக்கம் வருது..." என அவனை விட்டு எழுந்து, டி.வி.யை அணைத்து விட்டு, அறைக்குள் சென்று படுக்கையில் கவிழ,

அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவன், இப்போதும் அதே யோசனையில் இருந்தான்.

யோசனையின் முடிவில், இரண்டு நாள் முன்னர் அவள் அபார்ட்மெண்ட் பார்க்கில் செய்தது ஞாபகம் வர, 'ம்ம்... வித்தியாசமான ஆசைதான்...' என்றதொரு பெரு மூச்சை விட்டவன்,

அறைக்குள் வர, ஏதோ யோசித்தவனாக, அவள் கப்போர்டை ஆராய்ந்தான்.

நிறைய உடைகள் இருந்தன. அதற்குத் தோதான காலணிகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எல்லாம் அவளது பெற்றோர், திருமணத்தின் போது வாங்கி அடுக்கி வைத்ததும், டெல்லியிலிருந்து கொண்டு வரப்பட்ட அவளது உடைமைகளும்தான்.

அதையே ஆராய்ந்தவன், அந்தக் கப்போர்டில் இருந்த சின்ன டிராயரைத் திறக்க, அதில் சில பேப்பர்கள் அடங்கிய பைல்களும், சில நோட் பேடுகளும் இருக்கவே, ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்ச்சி செய்து கொண்டிருந் தான்.

கையிலிருந்த நோட் பேடின் பக்கங்களைப் புரட்டி னான். எல்லாப் பக்கங்களிலும் ஒரே மாதிரியான படங்களே வரையப்பட்டிருந்தன.

நோட்டை மூடிச் சீட்டுக் கட்டுகள் போல் பிரிக்கவும் தான், அந்தப் படங்களிலிருந்த வித்தியாசம் அவனுக்குப் புலப்பட்டது.

அதை மீண்டும் மீண்டும் விரித்துப் பார்த்தவன் கண்கள், ஆச்சரியத்தில் விரிந்தன.

அதே போல் எல்லா நோட் பேடுகளிலும் வெவ்வேறு வித்தியாசமான படங்கள் வரையப்பட்டிருந்தன.

எல்லா நோட் பேடுகளின் பின்புறமும் 'aara...' என்ற கையெழுத்துடன், ஒரு ஸ்மைலி போட்டிருந்தது.

கையிலிருந்த பைல்களைத் திறந்து பார்த்தான். அதிலிருந்தவற்றைப் பார்த்தவனின் உணர்வுகளை என்ன வென்று அவனுக்கு வரையறுக்க முடியவில்லை.



எல்லாமே அழகான ஓவியங்கள்!

சிலது வெறும் பென்சில் டிராயிங். கருப்பு, வெள்ளையால் அப்படத்திற்கு உயிர் கொடுத்திருந்தாள்.

ஒரு சில ஓவியங்கள் எதுவும் கையால் வரையப்பட வில்லை. உற்றுப் பார்த்தவன், அவை அனைத்தும் கம்ப்யூட்டரில் வரையப்பட்டிருப்பது புரிந்தது. இதிலும் கீழே 'ஆரா...' மற்றும் ஸ்மைலி சிரித்துக் கொண்டிருந்தது.

'இதை எல்லாம் செய்தது என் ஆதியா... யாஹூ...' எனத் துள்ளிக் குதித்தது அவன் மனம்.

அவளுக்குள் இப்படியொரு திறமை இருப்பதை அவன் ஒரு நாளும் கண்டதில்லை. அதற்கான வாய்ப்பும் அவனுக்கு அமையவில்லை.

மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்த மனம், மீண்டும் யோசனைக்குள் தாவ, வேகமாக அறைக்குள் ஓடிச் சென்று, தூங்கும் ஆதியின் தூக்கம் கலையாமல், அவளது மடிக் கணினியை எடுத்து வந்து உயிர்ப்பித்தான்.

லேப்டாப் உயிர் பெற்றதும், அதனுள் சென்றவன், அதில் நிறையப் போல்டர்கள் இருக்கவே, ஒவ்வொன் றையும் பொறுமையாகத் திறந்து பார்த்தான்.

அதில் சில போல்டர்களில் அவளது போட்டோக் களும், பாட்டுகளும் இருந்தன. அதில் எதிலும் அவன் தேடுவது கிடைக்கவில்லை.

தளராமல், மீதியிருந்த எல்லாவற்றையும் திறந்து பார்த்தவனுக்குக் கடைசியில் அவன் தேடியது கிட்டியது.

'ஆரா' என்ற பெயரிலிருந்த போல்டரைத் திறந்து பார்க்க, அதில் அவன் பேப்பரில் பார்த்தது போலவே நிறைய ஓவியங்கள் அணிவகுத்தன.

எல்லாம் 'MS-Paint'-டில் வரைந்திருக்கிறாள்.

அந்த 'MS-Paint'-டில் அனைவரும் வரையக்கூடும் என்றாலும், ஆதிராவின் கைவண்ணத்தில் உருவான ஓவியங்கள் தனித்துவமாய் இருந்தன.

அந்த ஓவியங்கள் வரையப்பட்டிருந்த தேதிகளை ஆராய்ந்தான். எல்லாம் அவள் சென்னை வரும் முன் வரையப்பட்டிருந்தன. சரியாகச் சொல்ல வேண்டுமென்றால், அவள் யாருடைய அன்பும் கிட்டாமல், தனிமையில் வாடிய நாட்களில் வரைந்தவை.

ஒவ்வொரு படமும் ஒரு கதை சொன்னது.

ஒன்றில் சின்னக் குழந்தை, தன் அன்னையின் கையைப் பற்றியிருப்பது போலவும்...

இன்னொன்றில் ஒரு பெண் கையில் காய்ந்து போன பூக்களை வைத்திருப்பது போலவும்...

இன்னொன்றில் ஒரு பெண்ணின் முகம் ஒரு பாதியாக வரையப்பட்டு, அதில் தெரிந்த ஒரு கண்ணில் ஒரு சொட்டு நீர் உதிர்ப்பது போலவும் தத்ரூபமாக வரைந்திருந்தாள்.

படங்கள் மட்டுமல்லாது, அதற்கு அவள் தேர்ந்தெடுத்த நிறங்களும் அதன் கதை சொன்னது.

எல்லாவற்றிலும், அவள் பட்ட துன்பங்கள் அப்பட்டமாகத் தெரிந்தன.



அன்புக்காக அவள் தவித்த தவிப்பு, ஒவ்வொரு நிறத்திலும் தெரிந்தது.

கையில் வைத்திருந்த பொருட்களை எடுத்து, அவன் நெஞ்சில் வைத்துக் கொண்டான்.

தனிமை அவளுக்கு ஒரு வகையில் தீங்கிழைத்தது என்றால், இன்னொரு வகையில் அவளுக்கு நன்மை செய்திருக்கிறது. தனிமை அவளின் திறமையை வெளிக் கொண்டு வர உதவியிருக்கிறது.

இப்போது கவியரசனின் நிம்மதியை வார்த்தைகளால் வடிக்க முடியவில்லை. இது ஒன்று போதுமே... அவளை மீட்டெடுக்க!

இப்போதே அவள் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வந்து கொண்டிருக்கிறாள் என்றாலும், அதை நிரந்தரமாக்கும் துருப்புச் சீட்டு அவனுக்குக் கிட்டியதில் ஆனந்தமே. கையில் வைத்திருந்த பொருட்களை அந்தப் பையில் போட்டவன், மடிக் கணினியில் இருந்த ஓவியங்களை அவனது பென் டிரைவில் சேமித்தான்.

எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தி விட்டு வந்தவன், விளக்கை அணைத்துப் படுக்கையில் விழ, அதற்காகவே காத்திருந்தவள் போல், விழுந்தவன் நெஞ்சத்தில், விட்ட தூக்கத்தைத் தொடர்ந்தாள்.

மெல்லிய சிரிப்பினூடே அவளைத் தன்னுள் தாங்கியவன், அவளிடம் இது பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் முன், வேறு சில விஷயங்களையும் தெளிவு படுத்திக் கொள்ள எண்ணினான்.

மறு நாள் காலை, அவன் வேலைக்குச் செல்வதாக இருந்தது.

ஏற்கெனவே ஒரு வாரம் அவன் விடுமுறை எடுத்திருந்ததால், செய்ய வேண்டிய வேலைகள் தேங்கி நின்றன. என்னதான் அவளை விட்டுப் போக விருப்ப மில்லை என்றாலும், தங்களது வாழ்வாதாரத்திற்கு வேலைக்குச் சென்றுதானே ஆக வேண்டும்.

என்னதான் பார்வதி இவளைப் பார்த்துக் கொள்வ தாக ஏற்பாடு செய்திருந்தாலும், காக்கும் கரங்களை விட்டுப் பார்வதியைப் பிரிக்க அவனுக்கு மனம் வரவில்லை.

அதனால்தான் அவன் இன்னமும் அவரை அங்கு சென்று அழைத்து வரவில்லை. லக்ஷ்மியும் இரண்டு முறை, அனுப்பி வைக்கட்டுமா என்று கேட்டுப் பார்த்தார். இவன்தான் வேண்டாமென மறுத்து வருகிறான். அதே சமயம் மனைவியையும் தனியே விட்டுச் செல்ல அவனுக்கு விருப்பமில்லை.

என்ன செய்வதென்று யோசனையுடன் அவன் தன் வேலைகளைச் செய்து கொண்டிருக்க, அவனின் யோனை யறிந்து, "என்ன கவி... ஏன் ஒரு மாதிரி இருக்கே... ஆர் யூ ஆல்ரைட்...?" ஆதிரா கேட்க,

"எனக்கென்னடா... ஐயாம் ஓ.கே!" எனச் சமாளித் தாலும், அவன் குரலிலிருந்த வித்தியாசம் அவளைச் சமாதானமடைய விடவில்லை. அவளுக்கும் அவனது யோசனை புரிந்தது.



துண்டை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் சென்றவனைப் பார்த்தவள், மௌனமாக அவன் செல்ல ஏற்பாடுகளைச் செய்தாள்.

அவன் தயாராகி, இருவருமாகக் காலை உணவை முடித்த பின்னரும் கூட, அவனது முகத்தில் தெளிவைக் காண முடியவில்லை.

சோபாவில் அமர்ந்து ஷூவை அணிந்து கொண் டிருந்தவனின் அருகில் அமர்ந்தவள், அவனின் தோளில் கன்னத்தைப் பதிக்க, கவிக்கு 'ஹய்யோ...' என்றானது.

அவளின் தலையில் கன்னத்தைப் பதித்தவன், "குட்டிம்மா..." எனவும்,

"கவி... எனக்கு உன்னோட யோசனை நல்லாவே புரியுது..." என அவளே பேச்சைத் துவக்கினாள்.

"அப்படியா...? என்ன புரிஞ்சுது...?"

"ம்ம்... நீ எதுக்காகத் தயங்குறேன்னு எனக்குப் புரியுது, கவி..."

"அதுதான் என்னன்னு கேட்கிறேன்டா..." அவன் விடாமல் கேட்க,

"ம்ம்... எஸ்... நான் முதல்ல தனியாகத்தான் இருந்தேன். அப்போவெல்லாம் நான் எத்தனை நாள் தனியாக இருந்தாலும், நீ சாப்பிட்டியா, தூங்கினியான்னு கேட்க எனக்கு ஆளில்லை கவி. பட், நவ் இட்ஸ் நாட் லைக் தட்... என்னைப் பார்த்துக்க நீயிருக்க... என்னைப் பத்திக் கவலைப்பட நீயிருக்க... உனக்காகக் காத்திருக் கிறது சுகம்தான், கவி. சோ... நீ எதுக்கும் கவலைப்படாம

ஆபீஸ் போயிட்டு வா. ஈவினிங் நான் உனக்காக வெயிட் பண்ணிட்டு இருப்பேன்..." தைரியமாக, தெளிவாகச் சொன்ன ஆதிராவைக் கண்டு உள்ளுக்குள் உற்சாக ஊற்றெடுத்தது.

படுத்திருந்தவளை நிமிர்த்தியவன், அவள் கன்னத்தைப் பற்றி, "ஹே... இதென்ன... இவள் என்னோட ஆதியா? அவங்க எப்போ இப்படிப் பெரிய பொண்ணா மாறினாங்க...?" சந்தோஷமாகக் கேட்க,

"ம்ம்... எல்லாம் என்னோட ஹப்பி டிரெய்னிங் தான்..." அவள் இன்பமாகச் சொல்ல,

"ஹய்யோ... எனக்கு அப்படியே உன்னை..." அவளை அணைக்க வர,

"ஹே... ஹே... தள்ளிப் போ... தள்ளிப் போ... கஷ்டப்பட்டு ஷர்ட்டை அயர்ன் பண்ணியிருக்கேன்... கசக்கிடாதே..." அவனை விலக்கித் தள்ள,

"கசங்கினா திரும்ப அயர்ன் பண்ணிக் கொடுடி என் பொண்டாட்டி..." கண்ணைச் சிமிட்டிச் சொன்னவன், அவளைத் தன் பக்கம் இழுத்து, அவள் செய்ய வேண்டாமெனச் சொன்னதைத் திறமையாகச் செய்து விட்டு, அவளிடம் சந்தோஷமாக விடை பெற்றுச் சென்றான்.

## 27

ஹம் தேரே பின் அப் ரெஹ் நஹி சக்தே...
தேரே பினா கய வாஜூத் மேரா...
துஜூஷே சுட கர் ஹோ ஜாயேங்கே...
தொஹ் க்ஹூத் சே ஹி ஹோ ஜாயங்கே ஜூடா...
க்யுங்கி தும் ஹி ஹோ...
அப் தும் ஹி ஹோ...
ஜிந்தகி அப் தும் ஹி ஹோ...

**வி**டாமல் அடித்துக் கொண்டிருந்த செல்போனைப் பாய்ந்து வந்து எடுத்தாள் ஆதிரா.

திரையில் தன் பளீர்ப் புன்னகையை வீசிச் சிரித்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டு, "கவீஈஈஈ!" எனப் பல்லைக் கடித்தவாறு போனை உயிர்ப்பித்து, "இட்ஸ் சிக்ஸ்த் டைம்..." என்றாள்.

"என்ன சிக்ஸ்த் டைம்...?" கவியரசன் பதில் கொடுக்க...

"ஹாங்... நீ ஆபீஸ் போனதுல இருந்து இப்போ வரைக்கும் நீ பண்ணின கால்..."

"ச்சே! வெறும் ஆறுதானா?" அவன் சோகமாகச் சொல்ல,

"கவீஈஈஈஈ..." பல்லைக் கடித்த ஆதிராவிற்கு, "ஹா... ஹா... ஹா..." சிரித்து வைத்தவன், "சரி, என்ன பண்ற...?" எனவும்,

"இப்போதானே கவி சொன்னேன்... வாஷிங் மெஷின்ல போட்ட துணியைக் காயப் போட்டுட்டு வரேன்..."

"ஹே... இந்த வெயில்ல எதுக்குடி மொட்டை மாடிக்குப் போனே? பால்கனியிலேயே போட வேண்டியதுதானே..."

"டேய்... படுத்தாதே கவி. இப்போ எதுக்கு என்னைக் கூப்பிட்டே? அதைச் சொல்லு..." அவள் பல்லைக் கடித்துக் கொண்டு கேட்கவும்,

"ஹா ஹா ஹா..." மீண்டும் சிரித்தவன், "நான் லஞ்ச் சாப்பிடப் போறேன். எனக்குக் கம்பெனி கொடு..." அவன் சொல்லவும்,

"என்னது, கம்பெனியா? அது எப்படித் தர்றது? நான் வேணும்னா லஞ்ச் எடுத்துட்டு உங்க ஆபீஸ் வரவா?" அவள் கடுப்பாகக் கேட்கவும்,

"ச்சே... ச்சே... உனக்கு நான் அவ்வளவு சிரமம் தர மாட்டேன்டி, செல்லக்குட்டி... நான் சொல்றது மாதிரிச் செய்... அது போதும்."

"ஒரு முடிவோடதான்டா இருக்கே... ஆமா... உனக்கு ஆபீஸ்லே வேலையே இல்லையா? உன்னை இப்படிப் போன் பேச விட்டு, உன் சீனியர் என்ன பண்றார்? சரி, அவங்களைக் கூட விடு... உன்னோடேயே அட்டைப் பூச்சி மாதிரி சுத்திட்டு இருப்பாங்களே வாசு... அவங்க எப்படிச் சும்மா விட்டாங்க...?" அவள், இருக்கும் கடுப்பை எல்லாம் கட்டுப் படுத்திக் கொண்டு கேட்டாள்.

காலையில் இவளிடம் விடை பெற்றுச் சென்றவன், அலுவலகத்தினுள் நுழைந்ததிலிருந்து அரை மணி நேரத்திற்கு ஒரு முறை அழைத்தது மட்டுமில்லாமல், அவளை ஒரு வேலையும் செய்ய விடாமல் இருந்தால், அவளும்தான், பாவம்! என்ன செய்வாள்?

"சேனா, அவர் குழந்தையைக் கொஞ்சுறாரு... வாசு, அவனுக்கு வரப் போற குழந்தையைக் கொஞ்சிகிட்டு



இருக்கான். நான் என் குழந்தையைக் கொஞ்சிக்கிட்டு இருக்கேன்..." அவளுக்கேற்ற பதிலைக் கொடுத்தவன்,

"சரி சரி... வெட்டிப் பேச்சுப் பேசாமல் நான் சொல்றதைச் செய். போய் உன்னோட லேப்டாப்பை எடுத்துட்டு வா. கோ... கோ... கட்டில்ல சைட் டிராயர்ல இருக்கும்... எடுத்துச் சீக்கிரம் கனெக்ட் பண்ணு..." அவளைத் துரிதப்படுத்த,

"உன்னை..." எனப் பல்லைக் கடித்தாலும், அவன் சொன்னதைச் செய்தாள்.

"எடுத்தாச்சு... இப்போ என்ன செய்யணும்?"

"ஹா... இப்போ ஸ்கைப் லாக்-இன் பண்ணு, பார்ப் போம்..."

"ஸ்கைப்பா... அது எதுக்கு...?"

"டூ வாட் ஐ ஸே... நடுநடுவுல கேள்வியெல்லாம் கேட்காதே..." அவன் மிரட்ட,

"ஆனாலும் ரொம்பத்தான் பண்ற, கவி..." என் றாலும், அவன் சொன்னதைச் செய்தாள்.

மடிக் கணினியின் திரையில் மனைவியின் உருவம் தெரிந்ததும், கைபேசியை அணைத்து விட்டு, "ஹே குட்டிம்மா... உம்மா..." ஒரு முத்தத்தைக் கொடுக்க,

"ச்சு... என்னது இது கவி... ஆபீஸ்ல வெச்சு இப்படி யெல்லாம் அலம்பல் பண்றே..." சொன்னவளின் முகத்தில் வெட்கத்தின் சாயல்.

அதை ரசித்தவாறு, "நான் அப்படித்தான் பண்ணு வேன். நீ என் பெண்டாட்டி. வெட்டியாப் பேசாதே! எனக்கு

ரொம்பப் பசிக்குது. நீ சீக்கிரம் போய்த் தட்டுல சாதம் எடுத்துட்டு வா..." அவன் ஆணையிட,

"கவி... யாரு, நான் வெட்டியாப் பேசுறேனா? நீ ஈவினிங் வீட்டுக்கு வா... அப்போ உன்னை வெச்சிக்கிறேன்..." என்றாலும், அவன் சொன்னதைப் போல் தட்டில் உணவெடுத்து வரவே, கணவனும் மனைவியும் ஸ்கைப்பில் உற்சாகமாக உரையாடியவாறு மதிய உணவை முடித்தனர்.

உணவை முடித்ததும் ஆதிரா, "கவி... இனி மேலாவது சும்மா சும்மா போன் பண்ணாம, வாங்குற சம்பளத்துக்கு ஒழுங்கா வேலை செய். இனி நீ கூப்பிட்டாலும் நான் எடுக்க மாட்டேன், போ. எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு கவி... கொஞ்சம் தூங்கணும் போல் இருக்கு..." என்றவளுக்கு, உண்மையாகவே முகத்தில் அசதி இருந்தது.

ஆனால், மனதில் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது.

"அச்சோ... சரிடா குட்டிம்மா... நீ நல்லாத் தூங்கு... நான் ஈவினிங் கால் பண்றேன்... பை டா..." என்றவன், திரையிலிருந்து மறைந்த பின்னும் அவனின் பிம்பத்தை மனதில் தேக்கி வைத்துக் கொண்டாள்...

எத்தனை எத்தனை நாட்கள் தனிமையில் வாடியிருக்கிறாள்...

அப்போதெல்லாம் தான் எப்படியிருக்கிறேன் என வார்த்தையால் கேள்வி கேட்கக் கூட அவளுக்கு யாரும் இருந்ததில்லை...



ஆனால் இன்றோ... ரத்த உறவு இல்லையெனினும் தனது வாழ்க்கையை மீட்டுக் கொடுத்த லட்சுமி...

தனக்கு உணர்வுகளைக் கொடுத்த ராஜி...

இவர்களை விடத் தனக்கு உணர்வையும், உறவையும், உயிரையும் அள்ளி அள்ளிக் கொடுக்கும் கணவன்...

இதை விட அவள் வாழ்க்கையில் வேறு எதை வேண்டுவாள்?

அவளது வாழ்க்கை இப்போது திருப்திகரமாக இருக்கிறது... இது அவளுக்கு இறைவன் கொடுத்த இன்னொரு வாய்ப்பு... இந்த வாய்ப்பினைச் சரியான வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென ஏற்கெனவே அவளது மனது முடிவெடுத்து விட்டது.

திருமணத்திற்கு முன்புவரை அவள் கடவுள் என்ற சக்தியை ஒரு நாளும் உணர்ந்ததில்லை...

ஆனால், இன்றோ தான் வாழும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் கடவுளின் ஆசியை உணர்கிறாள்... வாழ்க்கையின் இன்பத்தைச் சுவைக்கிறாள்... இது போதுமே...

கணவனின் நினைவுகளுடனே சற்று நேரம் உறங்கியவள், உடல் அசதியாலோ, அல்லது மனதின் உற்சாகத்தாலோ வெகு நாட்களுக்குப் பின் நிம்மதியான உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

அலுவலகத்திலிருந்த கவியோ, மனைவியின் திறமைகளை வாசுவிடமும், இந்துவிடமும் பெருமையாகக் காட்டிக் கொண்டிருந்தான்.

வாசுவிற்கு ஆதிராவைப் பற்றி முழுதாக இல்லை யெனிலும் அவளின் மனப் பாதிப்பை ஒருவாறாக அவ னிடம் பகிர்ந்திருக்கிறான்...

அந்த வகையில் அவர்களுக்கும் ஆதிராவின் இந்தத் திறமையைக் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை...

வாசு, "பிரில்லியன்ட் வொர்க் அரஸ்... நம்ம ஆதிக் குள்ள இப்படி ஒரு டேலன்ட் இருக்கறது தெரியாமப் போச்சே..." எனவும்...

"இந்தப் பொண்ணு, யாரோட துணையும் இல்லாமயே, இந்தளவுக்குச் செய்றானா இவளுக்கு மட்டும் ஒரு நல்ல கைடன்ஸ் கிடைச்சா, ஷீ வில் டூ வண்டர்ஸ் பாஸ்..." வாசுவைத் தொடர்ந்து இந்துவும் சொல்லவும், கவிக்கும் அதுதான் மனதில் ஓடிக் கொண்டிருந்தது...

நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு திறமை ஒளிந் திருக்கிறது... அந்தத் திறமையை வெளிக் கொண்டுவரச் சிலருக்கு வாய்ப்புக் கிடைக்கிறது... ஒரு சிலருக்கு அந்த வாய்ப்பு அமைவதே இல்லை...

யாருக்குள் என்ன திறமை இருந்தாலும், எல்லா ருக்கும் அதை வெளிக் கொண்டு வர நிச்சயம் ஆசான் தேவை... சிலருக்குப் பெற்றோர்கள், சிலருக்கு நண்பர்கள்... சிலருக்கு உறவினர்கள்....

ஆதிராவின் திறமை இதுவரை யாரும் கண்டறியப் படாத ஒன்றாக அவளுக்குள் ஒளிந்து கிடந்திருக்கிறது...

இனி, அதை அவளுக்குள்ளிலிருந்து வெளிக் கொண்டு வருவது ஒரு கணவனாகக் கவியரசன் செய்ய வேண்டிய கடமை...



அந்தக் கடமையைக் கவியரசன் நிச்சயம் நிறை வேற்றுவான்...

இருவரின் பேச்சிற்கும் ஆமோதிப்பாய்த் தலை யாட்டியவன், உடனே ராஜிக்கு அழைத்துத் தான் கண்டறிந்ததையும், அதைத் தொடர்ந்து தான் எடுத் திருக்கும் முடிவையும் விளக்கினான்.

கேட்டுக் கொண்டிருந்த ராஜி, "சூப்பர்ப் அரசு... நீ சொன்ன மாதிரியே செய்... உடனடியா இல்லைன்னாலும் அவகிட்ட மாற்றம் வரும்... உனக்கு என்ன உதவி தேவைப் பட்டாலும் எனக்கு உடனே கால் பண்ணு... அதுக்கு அவசியம் இருக்காது... இருந்தாலும் சொல் றேன்... ஏன்னா அவளைப் பொறுத்தவரை என்னோட ட்ரீட்மெண்ட்டை விட, உன்னோட காதல்தான் மாற்றத் தைக் கொண்டு வந்திருக்கு... ஆல் தி பெஸ்ட், அரசு..."

ராஜி வாழ்த்தவும், கவியின் முகத்தில் நிம்மதியின் சாயல்...

மாலை அலுவலகத்திலிருந்து விரைவாகவே வந்தவன், கடைக்குச் சென்று வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு, அபார்ட்மெண்ட் பார்க்கிங்கில் காரை நிறுத்தியவன் வாங்கிய பொருட்களைக் காரிலே வைத்து விட்டு வீட்டிற்குச் சென்றான்...

ஆழ்ந்த தூக்கத்திலிருந்த ஆதிராவின் காதில் அழைப்பு மணி ஒலிக்கவும், மிகவும் சிரமப்பட்டுக் கண்ணைத் திறந்து மணியைப் பார்க்க... அது நேரம் 6.10 எனக் காட்ட, "ச்சே... இவ்ளோ நேரமா தூங்கினோம்...." என்றவள், வேகமாக எழுந்ததில் தலை சுற்றியது.

ஒரு கையால் தலையைத் தாங்கிக் கொண்டு, வாசலில் அடித்த அழைப்பு மணிக்கு விரைந்து வந்து கதவைத் திறந்தவளைக் கையில் தாங்கிக் கொண்ட கவி, "ஹே... என்ன குட்டி... ஆர் யூ ஆல்ரைட்...?" எனக் கேட்க...

"ஒண்ணுமில்ல, கவி... நல்லாத் தூங்கிட்டேன்... இப்போதான் எழுந்தேன்..." என்றவளைச் சோபாவில் அமர வைத்து விட்டு கிச்சனுக்குள் ஓடிச் சென்று எலுமிச்சை ஜூஸைப் போட்டுக் கொண்டு வந்து கொடுத் தான்...

கையில் வாங்கிய ஆதிரா, "தேங்க்ஸ் கவி..." என அவன் கையில் முத்தமிட்டவள், அந்த ஜூஸைக் குடிக்க ஆரம்பிக்கவும்,

"என்னை நீ மிஸ் செஞ்சியா...?" அவன் கேட்கவும்,

அவனைப் பார்த்துக் கேலிப் புன்னகையைச் சிந்திய வள், "கவி..." எனச் சிரிக்கவும், அவனும் அவளுடன் சிரித்தான்...

அந்த ஜூஸை முடிக்கும்வரை அவளைத் தன் நெஞ்சில் தாங்கியவன், "இப்போ எப்படி யிருக்கு...?" எனவும், அவள் கட்டை விரலை உயர்த்திக் காட்டினாள்...

உயர்த்திய விரலில் முத்தம் வைத்தான். "சரி. நீ போய்ச் சின்னதா ஒரு குளியல் போட்டுட்டு வா..." எனவும்...

"ஏன் எதற்கு...?" என்ற கேள்வி ஏதுமின்றித் தன் உடைகளை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகவே, கவி விரைவாகச் செயல்பட ஆரம்பித்தான்...



தான் வாங்கி வந்த பொருட்களை எல்லாம், பால்கனியில் பரப்பியவன், அவனும் உடை மாற்றிக் கொண்டு, மனைவி வெளியே வரக் காத்திருந்தான்...

முகத்தைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தவள் தங்களது அறைக்குள் செல்லாமல் நேராகக் கிச்சனுக்குள் சென்று, "கவி... நீயும் ரெஃப்ரெஷ் பண்ணிட்டு வா... காபி தரேன்..." என்றவள்... தன் வேலையில் கவனம் செலுத்த, அவள் சொன்னதைச் செய்துவிட்டு, அறைக்குள் சென்று விட்டான்...

அவள் கையில் காபிக் கோப்பையுடன் அவனைத் தேடி அறைக்குள் வரவே, அவனைக் காணவில்லை.

"க...வி..." என்ற அழைப்புடன் பால்கனிக்குள் நுழைந்தவள் உடல் ஒரு நிமிடம் அதிர்ந்து போனது.

அங்கிருந்த பொருட்களை எல்லாம் பார்த்தவளுக்கு கைகள் நடுங்க ஆரம்பிக்கவும், அதை உணர்ந்து அவள் வைத்திருந்த கப்பைத் தான் வாங்கியவன் அங்கிருந்த திட்டில் வைத்துவிட்டு அவளின் நடுக்கமுணர்ந்து அவள் கையோடே தன் கையைக் கோத்துக் கொண்டான்.

'இது எப்படி உனக்குத் தெரிந்தது...?' என மூளை கேட்ட கேள்வியை உணர்ந்தவன் போல், "உன்னை நானறிவேன்..." எனக் கண்ணை மூடித் திறந்து பதில் சொன்னவன்...

அவளை இடுப்போடு அணைத்து, ஓவியப் பலகை யின் அருகில் அழைத்துச் சென்றவன், "டேய் குட்டி... எனக்கு, உன்னோட சாயல்ல ஒரு குட்டிப் பாப்பா

வேணும். அவளை இன்னும் எட்டு மாசத்தில் நான் கையில் வாங்கிப்பேன். ஆனா அதுக்கு முன்னாடி எனக்கு என்னோட குழந்தையை, உன்னோட கையால் பார்க்கணும்..." என்றவன்,

அவளின் கையில் தூரிகையை நுழைத்து, ஓவியத் தூரிகையை வண்ணத்தில் தீட்டி அங்கிருந்த வெள்ளைத் தாளில் கோடிட, ஆதிராவின் கைகள் நடுங்க ஆரம்பித்தன... அவளின் உடல் நடுக்கத்தில் அவள் விரல்கள் பிடித்திருந்த தூரிகை தரையில் விழுந்தது.

அவன் சொல்வது அவள் காதில் விழுந்தாலும் கருத்தில் பதியவில்லை...

தன்னால் எப்படி இது முடியும்...?

கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் தாண்டிவிட்டன...

அதுவுமில்லாமல் அவள் இதைச் செய்ய ஆரம்பித்தது அவளின் தனிமையைப் போக்க அல்லவா...? இதைப் பார்த்ததுமே அவளின் பழைய வாழ்க்கையின் சுவடுகள் அவளின் அனுமதியில்லாமலே நினைவில் வந்து அவளை வருத்தின.

அதன் விளைவாக, அவளின் கண்களில் கண்ணீர் உற்பத்தியாக, அதைக் கண்டவன், "ச்சு... ஆதி..." அவன் அதட்டல் போட...

திரும்பி அவன் நெஞ்சில் சாய்ந்தவள், "நோ கவி... ஐ கான்ட் டு திஸ்... என்னால இது முடியாது, கவி... முடியாது..." அவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழ...



அவளைத் தன்னிடமிருந்து வேகமாகப் பிரித்தெடுத்தவன், "ஏன் முடியாது...?" அவன் கோபமாகக் கேட்கவும்...

"இல்லை. என்னால முடியாது..." அவள் தலையைக் குனிந்து கொண்டு சொல்லவும்...

"அதுதான் ஏன்னு கேட்கிறேன்...?"

"முடியாது, கவி... என்னால இது நிச்சயம் முடியாது...

"இதைப் பார்த்தாலே நீ மறந்துடுன்னு சொன்னது தான் ஞாபகம் வருது, கவி.... இது எல்லாம் நான் என்னோட லோன்லினெஸ் மறக்க செஞ்ச விஷயம்... இப்போ இதை நான் திரும்பச் செஞ்சா, எனக்கு என்னோட தனிமை திரும்பவும் ஞாபகம் வருது. நான் வாழ்ந்த அந்தக் கொடுமையான நாட்கள்தான் ஞாபகம் வருது... வேண்டாம், கவி... நிஜமாவே நான் அதையெல்லாம் மறக்கணும்னு நினைக்கிறேன்... எனக்குத்தான் இப்போ நீ இருக்கியே... இது எதுவும் வேண்டாம்... எனக்கு நீ மட்டும் போதும், கவி... ப்ளீஸ்! கவி, என்னைப் புரிஞ்சுக்கோ..." அவள் மனதில் எழுந்த வலியுடன் சொல்ல...

அவளையே வெகு நிமிடம் உற்று நோக்கியவன், "ஏன், ஆதி... இதை நீ எனக்காகக் கூடச் செய்ய மாட்டியா...?" என்று கேட்கவும்...

அவள் கண்களில் வலியுடன் அவனை நோக்க, அதற்கெல்லாம் நான் அசர மாட்டேன் என்ற உறுதியுடன்...

"நீ எனக்காகச் செஞ்சுதான் ஆகணும், ஆதி... இது என்னோட ஆசை. உன்னோட திறமைகள் எதுவும் ஏதோ

ஒரு உப்புச் சப்பில்லாத காரணத்துக்காக உனக்குள்ளேயே புதைஞ்சு போயிடக் கூடாது... எனக்கு என்னோட மனைவியின் திறமை இந்த உலகத்துக்குத் தெரியணும்னு ஆசை... என்னோட ஆசையை நிறைவேற்றணும்னு உனக்கும் ஆசையிருந்தா நீ இதைச் செய். இல்லைன்னா விட்டுரு..." அவன் கோபமாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து விலக...

சென்ற அவனையே வெகு நேரம் இயலாமையில் பார்த்திருந்தாள்.

"என்னைப் புரிஞ்சுக்கோயேன், கவி..." மனது மன்றாட... அவளின் உணர்வுகளைப் படித்துத் தேர்ந்த கணவன்.. அதை எதையும் காதில் வாங்காமல், கையில் காபிக் கோப்பையுடன், ஹாலில் டிவியின் ரிமோட்டைக் கொடுமைப் படுத்திக் கொண்டிருந்தான்.

வெகு நேரம் அங்கேயே நின்றவள், ஹாலில் அவன் அருகில் வந்து... அவன் மடி சாய, அவளின் தலையைத் தாங்கியவன், எப்போதும் போல அவளின் தலை கோதி விட... அந்தச் செயலில், 'உனக்கு எப்போதும் நானிருக்கிறேன்...' என்ற உறுதி தெரிந்தது.

அவன் புறம் திரும்பி அவன் முகத்தைப் பார்க்க, அவள் பார்வையை உணர்ந்து, கண்களால் என்னவென்று கேட்க, அவள், "வேண்டாமே கவி..." என இறைஞ்சிய குரலில் சொல்ல...

"வேண்டாம்னா விட்டுடுடா... ஆனால், அது என்னோட ஆசை... நிறைவேத்தறதும், நிறைவேத்தாததும்



உன்னோட விருப்பம்..." அவன் சொன்ன விதத்தில் எப்படி அவளால் அவன் பேச்சை மீற முடியும்...?

அவன் அவளுக்கு எந்த வகையிலும் தீங்கு செய்யவில்லை... அவளின் திறமையை ஏதாவதொரு வகையில் வெளிக் கொண்டு வர நினைத்தான்...

அந்த எண்ணத்திற்கு அவள் அவன் மீது வைத்திருக்கும் காதலைப் பயன்படுத்திக் கொண்டான்... இந்தச் செயலால் அவள் வாழ்வில் ஒரு நல்லது நடக்குமெனில் அதைச் செய்ய அவன் தயங்கவில்லை...

அதன் பிறகு வந்த இரவு வேளை, இருவரும் வழக்கமான பேச்சுகளுடன் கழிந்தாலும், அவனின் அன்பில் கரைந்து போனாலும், அவளால் ஏனோ அவனிடம் சகஜமாக இருக்க முடியவில்லை.

கணவன் அவளிடம் முதல் முதலாகக் கேட்ட கோரிக்கையை நிறைவேற்ற முடியாத தன் இயலாமையை நினைத்துத்தான் வருந்திக் கொண்டிருந்தாள்...

அவனும் அவள் யோசிக்கட்டுமென விட்டுவிட்டான்...

இரவு உணவும் முடிந்தது...

கவி அயர்ச்சியில் தனக்கு உறக்கம் வருகிறது என்ற அறிவிப்புடன் படுக்கையில் விழ, மதியம் நன்கு தூங்கி விட்டதால், அவனைப் போலவே டிவியின் ரிமோட்டை அளைந்து கொண்டிருந்தாள்...

வெகு நேரம் கழித்து, அறைக்கு வந்தவள், கணவனின் சீரான மூச்சில் அவனின் உறக்கம் புரியவே... மெல்லிய தயக்கத்துடனே பால்கனிக்குச் சென்றாள்.

கைகளும் உடலும் வெகுவாக நடுங்கின. கையில் உற்பத்தியான வியர்வையின் துளிகள் அவளின் பதட்டத்தை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டின.

அந்தச் சில நொடிகளில் அவளின் பழைய நினைவுகள் அனைத்தும் சூறைக் காற்று வீசியது போல் முகத்தில் மோதி விட்டுச் சென்றன.

புயல் வருவது ஒரு நொடிதான்... ஆனால், அது வந்தால், அந்த இடத்தையே ஸ்தம்பிக்கச் செய்து விடும்.

ஆதிராவின் மனதிலும் எழுந்த புயல் அவளின் பழைய குப்பைகளை நொடியில் தன்னுடன் எடுத்துச் செல்ல, இப்போது அவள் மனம் நிர்மலமாக இருந்தது...

மனதில் கவியின் நினைவும், அவன் மீது கொண்ட காதலும் மட்டுமே அவளை ஆட்டிப் படைத்தது...

அதன்பின் வந்த நொடிகள் அனைத்தும் கணவனின் காதல் முகமே அவள் முன்னே நின்றது...

"அவனுக்காக... என் கவிக்காக..." என மனதில் உருப்போட்டுக் கொண்டவள் ஓவியத் தூரிகையைக் கையில் எடுத்தாள்.

வலது கை மிகவும் நடுங்கியது.

இப்போது தோள் சாயக் கணவன் இருந்தால் நன்றாக இருக்குமே எனக் கணவனை நாடிய இதயத்தைக் கட்டுப்படுத்தி, 'கவிக்காக இதைச் செய்யணும்... என்னோட கவிக்காக...' இந்த வார்த்தைகளை மனதில் மந்திரமாக ஒப்பித்தவள், வலது கையை, இடது கையால் இறுக்கப் பற்றிக் கொண்டவள் மாலை கணவன் தன் கையைப் பிடித்து இழுத்துவிட்ட கோட்டில் தனது பயணத்தைத் துவக்கினாள்.



காலையில் தூக்கத்திலிருந்து எழுந்த கவியரசன் அருகில் மனைவி படுத்ததற்கு உண்டான எந்தச் சாயலும் இல்லாமல் இருக்கவே, பதறிக் கொண்டு எழுந்து அவளைத் தேடினான்...

எழுந்ததுமே அவன் கால்கள் முதலில் சென்றது பால்கனிக்குத்தான்...

அங்கே தன் முதுகைக் காட்டிக் கொண்டு நின்றிருந்தவளின் முன்னே மறைந்திருந்த ஓவியப் பலகை கவியின் கண்களுக்கு அகப்படவில்லை...

அவள் எப்படியும் இதைச் செய்வாள் என அவன் மனதிற்குத் தெரியும்... ஆனால் அந்த நொடி அவள் அங்கிருப்பதைக் கண்டதும் மனம் புரிந்து போனது.

அவள் என்ன வரைந்திருக்கிறாள் எனப் பார்க்க மனம் பரபரக்க, அவள் பின்னாலிருந்து எட்டி எட்டி நோக்கினான்...

ம்ஹூம்... எதுவும் கண்ணுக்குப் புலப்படவில்லை.

நொடியில் இரண்டு எட்டுகளாக எடுத்து வைத்து, அவளுக்கும் தனக்கும் உண்டான இடைவெளியைக் குறைத்தவன் அவள் தோள் வழியாக அவள் கைகளை ஆராய, அங்கே ஆதிரா 'ராகவி...' என்ற கையெழுத்தைப் போட்டு முற்றுப்புள்ளி யில்லாமல், காற்புள்ளி வைத்து அவள் திரும்பவும், கவியரசனின் கண்கள் விரியவும் சரியாக இருந்தது.

"ஆதி..." என்றதற்கு மேல் அவனால் வேறு எதுவும் பேச முடியவில்லை...

இதற்கு... இதற்குத்தானே அவன் ஆசைப்பட்டது.

பலகையில் தன் சாயலில் ஒரு ஆணும், ஆதிரா வின் சாயலில் ஒரு பெண்ணும். அவர்கள் இருவரின் கையில் இருந்த குட்டித் தேவதை அப்பட்டமாகக் கவியின் சாயலை ஒத்திருந்தது...

ஆதிராவின் கைகள் செய்த மாயம், பலகையில் தெரிய,

அவளின் திறமையை இப்போது கண்ணாரக் கண்டவனின் உள்ளப் பூரிப்பை அவனால் வார்த்தையால் விளக்கிச் சொல்ல முடியுமா...!

வார்த்தைகளின்றித் தவித்தவன் தன்னையே எதிர் பார்ப்புடன் நோக்கிய மனைவியை இழுத்து அணைத் தவன் அவளைத் தன் ங்கைகளில் ஏந்தித் தட்டாமாலை சுற்றினான்...

"ஷ்... கவி... விடுடா... விடு... தலை சுத்துது, மேன்... லீவ் மீ..."

அவள் கத்திய பின்னர்தான் அவளைக் கீழே இறக்கி அவளின் முகத்தில் தன் முத்தத்தால் அர்ச்சதை செய் தான்.

வார்த்தைகளற்ற அவனது செயலில் உள்ளம் பூரிக்க, அவனுக்குத் தன்னால் முடிந்த சந்தோஷத்தைக் கொடுத்த நிறைவில் அவனின் நெஞ்சம் சாய்ந்தாள், ஆதி 'ராகவி...'



## 28

இருபத்து மூன்று வருடங்கள் கழித்து...

வாசலில் மாவிலைத் தோரணம் கட்டி, வீடு முழுவதும் வண்ண விளக்குகளிட்டு, அந்த இரவு வேளையில் ஆர்ப்பாட்டமில் லாமல் அழகாகக் காட்சியளித்தது, அந் நடுத்தர வீடு...

வீட்டின் உள்ளேயும் வெளியேயும் ஆட்கள் வந்த வண்ணம், சென்ற வண்ணமிருக்க, உள்ளே இருந்த படுக்கையறையில் கையில் புகைப்பட ஆல்பத்துடன் அமர்ந்திருந்தான், கவியரசன்.

இருபத்து மூன்று வருடங்கள் முன் எப்படி யிருந்தானோ, அதைப் போலவே, இப்போதும் சற்றும் அவன் கம்பீரம் குறையாமல் காணப்பட்டவன் தலையில் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளி முடி நீட்டிக் கொண்டிருக்க, கண்களில் ரிம்லெஸ் கண்ணாடி அவனின் ஆளுமையை இன்னமும் சற்றுக் கூட்டிக் காட் டியது...

கையில் வைத்திருந்த ஆல்பத்தின் முதல் பக்கத் தைத் திறந்ததும் அதிலிருந்த ராகவியின் முதல் ஓவியம் தான் பளிச்சிட்டது.

அந்த ஓவியத்திற்குப் பின் வந்த புகைப்படத்தில் தானும், ஆதிராவும், அவர்களுக்கு நடுவில்...

பிறந்து ஒரே மணி நேரமான ராகவியும் புன்னகை ததும்பிய முகத்துடன் இருந்ததைப் பார்த்தவனுக்கு அந்த நாளின் ஞாபகம் மனதில் தோன்றியது.

அதென்ன சாதாரண நாளா...! தன் மனைவி தன் மீது வைத்திருக்கும் காதலின் ஆழத்தையும், அவளின் வாழ்வில் தனக்கான இடத்தையும் அவன் உணர்ந்து கொண்ட நாள் அல்லவா...!

அன்றையப் பொழுது அலுவலகத்தில் தன் வேலை யில் கவனமாக இருந்த கவியரசனின் கவனத்தை ஈர்த்தது, வைப்ரடேரிலிருந்த அவனது செல்போன்...

திரையைப் பார்க்காமலே கைபேசியை உயிர்ப்பித்து, காதில் வைத்தவனுக்கு... "கவி... கவிஈஈஈ..." என்ற ஆதிரா வின் குரலில் தெரிந்த வேதனையை நொடியில் கண்டு கொண்டவன், "ஆதிம்மா... டேய்... குட்டி... என்னாச்சுடா?" என்று பதட்டமாக வினவ...

"வ... வலிக்குது, கவி..." அந்த ஒரு வார்த்தையில் அவளின் வேதனையைத் தான் சுமப்பவன் போல், "குட்டிம்மா... இ... இதோ வரேன்டா... எங்க ஆயா... நீ அவங்களைக் கூப்பிடு... அவங்களோட ஹாஸ்பிடல் கௌம்புடா... நான் உடனே வரேன்... கௌம்பிட்டேன்டா..." என்றவனுக்கு, "இல்ல கவி... நீ வா... நா நா... உன்கிட்ட ஒண்ணு... சொல்லணும்..." என்று அவள் மறுக்கவே...

"ஹே லூசு... காலையில கூட உன்னோடதானடி இருந்தேன்... அப்போ சொல்லாததை இப்போ என்ன சொல்லப் போற... கிளம்புடி... நான் வந்துட்டே இருக் கேன்..." என்றவன், செல்போனை அணைத்து, உடனே பார்வதிக்கு அழைத்தான்.

ஆதிராவின் ஏழாம் மாதம்வரை, கவி தான் ஆதிரா வைக் கவனித்து வந்தான்.



ஆதிராவுக்கு ஏழாம் மாதம், லட்சுமி ராஜியின் தலைமையில், நண்பர்களின் வரவோடு எளிமையாக நடந்த வளைகாப்புக்குப் பின் பார்வதி அங்கேதான் இருப்பேன் எனத் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்.

கவியரசனுக்கும் அதில் நிம்மதிதான்... பார்வதி இருக்கும் தைரியத்தில்தான் இப்போது அவன் அலுவலகம் வந்திருந்தான்... ஆனால் ஆதிராவிற்கோ கணவன் மட்டும் தான் உலகமாகிப் போனது...

நேரம் போகாமல், பக்கத்து பிளாட் வாசியுடன் கதையடித்துக் கொண்டிருந்த பார்வதியின் கைபேசியில் அந்த நேரத்தில் கவியின் எண்ணைப் பார்க்கவும், "அரசுப் பையா... என்ன இந்த நேரத்துல..." அவர் கேட்கவும்...

"ம்ச்... ஆயா... எங்க இருக்கீங்க...? அங்க ஆதிக்கு வலி வந்துடுச்சுன்னு என்னைக் கூப்பிடறா... நான் இதோ வந்துட்டு இருக்கேன்... ஹாஸ்பிடல் போக எல்லாம் ரெடி பண்ணுங்க... இதோ கிளம்பிட்டேன்..." அவன் பரபரப் பாகச் சொல்லவும்...

"ஐயோ... வீட்டு வாசல்லதானே நான் நிக்குறேன்... என்னைக் கூப்பிடாம உன்னைக் கூப்பிடறா பாரு... உன் பொண்டாட்டி..." எனத் தனக்குள் பேசிக் கொண்டு வீட்டினுள் நுழைந்தவர், அங்கே கட்டிலில் சுருண்டு படுத்திருந்த ஆதிராவின் முகம் வேர்த்துப் போயிருக்க, முகத்தில் அப்பட்டமான வலி புரிந்தது.

உடனே அவளிடம் சென்று ஆதரவாக அவள் தலையைப் பற்றிக் கொண்டவர், "என்ன பாப்பா... ஒரு

குரல் கொடுத்திருந்தா நான் வந்திருக்க மாட்டேனா...? என்னடா, ரொம்ப வலிக்குதா...?" அவர் அன்பொழுகக் கேட்டது எதுவும் அவள் காதில் விழவில்லை...

"கவி... கவி எப்போ வருவான்... அ... அவன்கிட்ட ஒண்ணு சொல்லணும்..." கணவனிடம் சொன்னதையே பார்வதியிடமும் திருப்பிப் படிக்க...

"தம்பி வந்துட்டிருக்கு... நீ இந்த ட்ரெஸ் மாத்திட்டு நைட்டி போட்டுக்கோ... கொஞ்சம் தண்ணி குடி... வா வா..." எனவும்,

அவள் தலையை மறுப்பாக ஆட்ட,

"என்ன பாப்பா இந்த நேரத்துல இப்படி அடம் பிடிக்கிற... அரசு வந்தா திட்டுவான்டா... நீ முதல்ல எந்திரி..." அவர் சொன்ன வார்த்தைகள் எதுவும் அவளிடம் எடுபடவில்லை.

அவள் முகத்தில் தெரிந்த உறுதியைக் கண்டு, "அவளைச் சமாளிக்க அவனால் மட்டும்தான் முடியும்..." என்பது பார்வதிக்குப் புரியவே, மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களை எடுத்து வைத்து அவள் அருகில் அமர்ந்து கொண்டு ஆறுதல் வார்த்தைகள் சொல்லிக் கொண்டிருந்த வேளை அங்கே வந்து சேர்ந்தான் கவியரசன்.

வேகமாக அறைக்குள் நுழைந்தவனை எதிர் பார்த்தது போல், "கவிாாா..." என்ற அலறலுடன் அவனை நோக்கிக் கை நீட்ட...

"ஆதிம்மா..." என அவனும் அவளிடம் பாய்ந்து தன் நெஞ்சில் தாங்கிக் கொண்டான்...



கணவனைக் கண்டதும் ஆதிராவின் முகத்தில் தெரிந்த நிம்மதியைக் கண்டு அந்த நேரத்திலும் பார்வதி யால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

கவியின் முகத்தை நோக்கியவாறு, "வலிக்குது கவி... இதோ... இங்க வலிக்குது..." என அவளின் அடி வயிற்றைத் தொட்டுக் காட்டிக் குழந்தையாகச் சொன்ன வளுக்குக் குழந்தை பிறக்கப் போகிறதென்றால் யாரும் நம்ப மாட்டார்கள்...

"வலிக்குதாடா குட்டி... கவி வந்துட்டேன்டா... இதோ... இப்போ ஹாஸ்பிடல் போயிடலாம்... வாம்மா... ஆயா... இவ திங்ஸ் எடுத்துக்கோங்க..." என்றவன், மனைவியை நடத்திக் கொண்டு செல்ல...

இடுப்புக்குக் கீழே அனைத்து உறுப்புகளும் மரண வலியெடுக்க, ஆதிராவால் ஒரு எட்டு கூட எடுத்து வைக்க முடியவில்லை...

அதைப் புரிந்து கொண்டானோ என்னவோ? தோளில் தாங்கியவளைத் தன் இரு கரங்களிலும் தாங்கிக் கொண்டு காருக்கு விரைந்தான்.

அதன்பின் நடந்தவை எல்லாம் அவன் மூளை வழி நடத்திச் சென்றதுதான்...

மனம் முழுவதும் ஆதிராவின் நலனையும், அவள் வயிற்றிலிருந்து உலகத்திற்கு வரத் துடிக்கும் தன் மகவையும் பற்றியுமே சுற்றிக் கொண்டிருந்தது.

ஏற்கெனவே அவன் ஹாஸ்பிட்டலுக்கு அழைத்து விபரம் சொல்லியிருந்ததால் அவர்கள் வந்ததும் டாக்டர் சுலேகா நிலைமையைக் கையில் எடுத்துக் கொண்டார்...

ஆதிரா பிரசவ அறைக்குள் செல்லும் வினாடி, கவியின் கைகளைப் பிடித்துக் கொண்டவள், “கவி... கவி... ஒண்ணு சொல்லணும்...” என்றவள் வலியில் முகத்தைச் சுருக்கி வலியைப் பொறுத்துக் கொள்ளவும்...

“ஹே... பைத்தியம்... சொல்றதை எல்லாம் அப்புறமா சொல்லுடி... இப்போ நீ உள்ளே போ... ப்ளீஸ்டா குட்டி...” அதட்டலாக ஆரம்பித்தவனுக்கு மனைவியின் வேதனை முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை.

ஆனால், அவளோ, “ம்ஹூம்... சொல்லணும்... கவி... கவி... ஐ... ஐ லவ் யூ கவி... நா... உன்னை என் உயிரா நேசிக்கிறேன் கவி... இதுவரைக்கும் இதைச் சொல்ல எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவேயில்லை... ஆனா... இப்போ நான் இதைச் சொல்லியே ஆகணும்... பிகாஸ் ஐ ட்ரூலி லவ் யூ கவி... இந்த நொடிக்கு அப்புறம் எனக்கு இதைச் சொல்ல முடியுமான்னு தெரியல... ஆனா... ஆனா... என் உயிரைக் கொடுத்தாவது நான் ராகவியை உனக்குப் பெத்துத் தரேன், கவி...” அவள் சொல்லவும்...

“ஹே... வாயை மூடுடி... ச்சே... என்ன வார்த்தை பேசுறா பாருங்க, டாக்டர்...” சுலேகாவைப் பார்த்து அவன் வேதனையாகச் சொல்லவும்...

“ரிலாக்ஸ் மிஸ்டர் கவியரசன்... எல்லாப் பொண்ணுங்களுக்கும் இந்த நேரத்தில் வர பயம்தான்... ஒண்ணும் ஆகாது... நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க... ஆதிரா... உங்களுக்கு ஒண்ணும் ஆகாது... உங்க ராகவி



மட்டுமில்லை... நீங்களும் சுகமா உங்க கணவரோட வாழ்வீங்க...!” என்ற ஆறுதல் வார்த்தையை இருவருக்கும் பரிமாறி விட்டு அவளை உள்ளே அழைத்துச் சென்றார்...

அவள் உள்ளே சென்ற சிறிது நேரத்தில் லட்சுமியும், ராஜியும் வந்திருந்தனர்.

வாசுவிற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தான் அழகான ஆண் குழந்தை பிறந்திருந்தது. அவனும் விஷயமறிந்து மருத்துவமனைக்கு விரைந்திருந்தான்...

ஆனால், அத்தனை பேர் உடனிருந்தும் அவனுக்கு மனைவியின் மீது மட்டுமே கவனம் முழுவதுமிருந்தது.

உள்ளுக்குள் வேதனையுடன் அலறிக் கொண்டிருந்த ஆதிராவின் குரல் வெளி வராண்டா வரை கேட்டது...

அவளுக்கு வலியெடுக்கும் போதெல்லாம் கவி... கவியென அவள் ஒவ்வொரு முறை அழைக்கும் போதும், அவனின் உடல் சிலிர்த்து அடங்கியது...

என்ன மாதிரியான பெண் இவள்...!

பெற்றோர் இல்லாப் பெண்கள் கூட இதைப் போல் உயிர் போகும் சமயத்தில் கூட உதிர்க்கும் ஒரே வார்த்தை... “அம்மா!” என்பது மட்டுமாகத்தானிருக்கும்...

ஏன்... கவியரசனே தான் துன்பப்படும் போதும் அழைப்பது, “அம்மா” யென... அவன் அன்னையைத் தானே...!

ஆனால், இவளோ ஒவ்வொரு வலிக்கும், "கவி... கவி... வலிக்குது கவி... ஹா... கவி..." எனக் கதறியது வெளியில் கேட்டுக் கொண்டிருந்த கவியரசனின் மனதில் ஏற்படுத்திய உணர்வை அவனால் வரையறுக்க முடிய வில்லை...

அதை உணர்ந்து கொண்டவர் போல், லட்சுமி அவன் அருகில் வந்து தலை கோதிக் கொடுக்க, அவரின் தோள் சாய்ந்தவன், "ஹய்யோ... இங்க பாருங்க ஆதிம்மா... உயிர் போற வலியில கூட என்னோட பேரைச் சொல்லிட்டு இருக்கா... பைத்தியக்காரி... என்னால அவளோட வேதனையைக் கேட்க முடியலைம்மா...!" என்று அரற்றிக் கொண்டிருந்த வேளையில்...

"கவிஈஈ...." என்ற அவளின் நீண்ட கதறலைத் தொடர்ந்து வந்தது குழந்தையின் அழுகைக் குரல்...

அந்த நொடியை இன்று நினைத்தாலும் அவனது கண்கள் பனித்தன.

அதைத் தொடர்ந்து வந்த அடுத்தடுத்த புகைப் படத்தில் ராகவியின் வளர்ச்சி... அடுத்ததாக, அவர்கள் குடும்பத்தின் அடுத்த உறுப்பினர் மொழியரசனின் வரவு...

மொழியரசன் கவி - ஆதியின் உதிரத்தால் உருவானவனல்ல...

காக்கும் கரங்களில் செல்வம்... இன்று அவர்களின் ஒரே சீமந்த புத்திரன்... ராகவியின் தம்பி...

அதைத் தொடர்ந்து அடுத்தடுத்து வந்த புகைப்படங் களில் பிள்ளைகளின் வளர்ச்சியையும், அவர்களுடன் தாங்கள் களித்த இன்பமான தருணங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தபோது கேட்டது அந்தக் குரல்...



"கவி...கவி... கவிஈஈ... எங்க இருக்க..." அந்த வீடே அதிரும் குரலுடன் அறைக்குள் ஆர்ப்பாட்டமாக நுழைந் தாள் ஆதிரா கவியரசன்...

அன்றைக்கும் இன்றைக்கும் அவளிடம் சற்றும் வித்தியாசமில்லை...

இன்னமும் சொல்லப் போனால், அன்றைக்கு இருந்ததைவிடக் கூடுதல் அழகுடன் தன் முன்னே நின்றிருந்த மனைவியை விழுங்கும் பார்வையுடன் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து ஆதிரா...

"ச்சே... பார்வையைப் பாருங்க... பொண்ணுக்கு நாளைக்குக் காலையில் கல்யாணத்தை வெச்சுட்டு இங்க என்ன கவி பண்ணிக்கிட்டு இருக்க... நாளைக்குக் கோவி லுக்கு எடுத்துட்டுப் போக எல்லாம் எடுத்து வச்சிட்டியா...? இந்த ராகவியோட நகையெல்லாம் பத்திரமா வச்சிருக் கல்ல...

"இந்த மொழி ஃப்ரெண்ட்ஸைக் கூட்டிட்டு மாப்பிள்ளையைப் பார்க்கப் போனான்... இன்னமும் அவனைக் காணோம்... கொஞ்சம் போன் பண்ணி எங்க இருக்கான்னு கேளு, கவி..." எனப் படப்படப்பாகப் பொரிந்தவள்...

அறையிலிருந்த அலமாரியைத் திறந்து இரண்டு சேலைகளை எடுத்துக் கொண்டு அவன் முன்னே

வந்தவள், "கவி... இதுல நாளைக்கு எந்தச் சேலை கட்ட..." எனக் கேள்வியாகக் கேட்க...

அவனோ சேலையைப் பார்க்காமல் மனைவியைக் கண்களால் தழுவ...

"கவி..." எனச் சிணுங்கிக் கொண்டு, அவனின் மடியில் அமர்ந்து கொண்டு, அவன் கழுத்தைக் கட்டிக் கொள்ள... "ஹே... நம்ம குட்டீஸ் போட்டோவா... என்னையும் கூப்பிட்டிருக்கலாமில்ல... இங்க பாரேன், கவி... சின்ன வயசுல ராகி ரொம்பத் துறுதுறுன்னு அப்படியே நீதானில்ல...

"மொழியைப் பாரேன்... பையன் அப்படியே என்னை மாதிரி... உங்களை மாதிரி வாலா என் பையன்... என் சமத்துச் சக்கரக்கட்டி..." எனப் புகைப்படத்திலிருந்த அவளது மகனுக்கு முத்தம் வைத்தவள், அதே படத்தில் மொழியை மடியில் வைத்திருக்கும் கவியரசனுக்கும் சேர்த்து முத்தம் வைக்க,

அதைக் கண்டுகொண்ட கணவன் எனும் கள்வன், அவள் நிமிர்ந்ததும் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்க்க... அதில் வெட்கியவளாய்... "என்னடா இப்படி பார்க்குற... எனக்கு அப்படியே உன்னைக் கடிச்சு வைக் கணும் போலிருக்கு..." என்றவள், அதைச் செய்தும் விட... அவன் வலியில் கத்த ஆரம்பித்தான்...

அவன் கத்திய கத்தலில் பக்கத்து அறையிலிருந்த ராகவியும், வெளியில் சென்று விட்டு வந்த மொழியரசனும் அவர்கள் அறைக்குள் வந்து, "ச்சே... ச்சே... என்னடி இது... கொஞ்சம் கூட வெட்கமில்லாம..." என ஆதிராவின் செல்ல மகன் மொழியும்...

"நாளைக்குப் பொண்ணுக்குக் கல்யாணம்னு கொஞ்சமாவது பொறுப்பிருக்கா.. இப்படி உட்கார்ந்து ரொமான்ஸ் பண்ணிட்டு இருக்கீங்களே... இது உங்க ளுக்கே நியாயமா?" - எனக் கவியின் செல்ல மகள் ராகவியும் அலுத்துக் கொள்ள...

"கவி, என்னோட புருசன். அவனை நான் கொஞ்சு வேன்... கடிப்பேன்... உதைப்பேன்... மிதிப்பேன்... அதைக் கேட்க நீ யாரு... போடி. நீ போய் உன்னோட ஹப்பி கூடக் கொஞ்சு, மிஞ்சு... என்ன வேணா பண்ணு... கவி இஸ் மை ப்ராபர்ட்டி..." - ஆதிரா கெத்தாகச் சொல்லி, கவியின் கன்னத்தில் மீண்டும் ஒரு கடியைக் கடித்து மகளின் கோபத்தைக் கிளறிவிட...

அவள் பாய்ந்து வந்து கவியின் மறுபக்கத்தில் அமர்ந்து கொண்டு, "அப்பா உங்களுக்குப் புருசன்னா... எனக்கு அப்பாவாக்கும்... ஹீ இஸ் மை டேட்... ஐ லவ் மை டேட்... அண்ட் ஹீ இஸ் மை ப்ராபர்ட்டி..." - கவியின் கன்னத்தில் முத்தமிட...

"டேய்... நீங்க ரெண்டு பேருமே என்னோட செல்லங்கதான்டா... என்னை விடுங்க..." - கவி அலறவும்...

"ஹான்... அப்போ நானு..." என மொழியும் கவி யரசனின் பின்னால் வந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொள்ள...

“டேய்... என்னை ஒரு வழி பண்ணாம விடமாட்டீங் களா...? எந்திருங்கடா. நாளைக்கு என் பொண்ணு கல்யாணத்துல இடுப்பைப் பிடிச்சுட்டு சுத்த விட்டுறாதீங்க...” என்ற கவி, படுக்கையின் அடியில் இருக்க... அவன் மேலே ஆதிரா, அவளின் மேலே ராகவி, பின் அவர்கள் அனைவரின் மேலே மொழியரசன் எனக் கவியைப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருக்க...

ராகவியின் திருமண வேலையில் ஈடுபட்டிருந்த வாசு, இந்த அழகானக் காட்சியைக் கண்டு, உடனே தனது செல்போனில் படம் எடுத்துக் கொண்டவன், “டேய்... உங்க அலப்பறை எத்தனை வருஷமானாலும் அடங்காதாடா?” எனத் தலையில் கை வைத்துக் கொள்ளவும், இந்து அவனருகில் வந்து அவன் தலையில் தட்டி,

“நாம்தான் அப்படி யில்லைன்னாலும் அடுத்தவங் களைப் பார்த்துப் பொறாமைப்படக் கூடாது. பிள்ளைங்க மேல கண்ணு போடாதே வாசு...” எனவும், அனைவரும் கலகலத்துச் சிரிக்கவும் சரியாக இருந்தது.

அடுத்த நாள் காலை மிக எளிமையான முறையில் கவியரசன் - ஆதிரா தம்பதியரின் செல்லப் புதல்வி ராகவியின் திருமணம் கோவிலில், கடவுளின் சன்னி தானத்தில் லட்சுமி, ராஜி, பார்வதி, காக்கும் கரங்களின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும், நண்பர்கள் முன்னிலை யில் நடந்து முடிந்தது.

தாங்கள் பெற்றோர்கள் இல்லாமல் துன்பப்பட்ட தற்கு ஒரு சதவீதம் குறையாமல் தங்கள் பிள்ளைகளுக்கு அன்பை மட்டுமே கொட்டிக் கொட்டி வளர்த்தனர்.



சரியான அன்பும், துன்பத்தில் தோள் கொடுத்தும், இன்பத்தில் தோள் தட்டியும் சரியான பெற்றோருக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தனர் ஆதிரா - கவியரசன் தம்பதியினர்.

ராகவி திருமணம் முடிந்து அவள் கணவனுடன்... கவியரசன் தம்பதியிடம் ஆசி பெற வர, மகளை இறுக்கி அணைத்த ஆதிராவைத் தொடர்ந்து, ராகவியைத் தன் தோள் சாய்த்து, நெற்றியில் இதழொற்றி, தன் மருமகனை மறுதோளணைத்தவன், “ரெண்டு பேரும் நூறு வருசம் சந்தோஷமா இருங்கடா...” என வாழ்த்திய கவியரசனிடம்,

“எஸ் டேட்... நாங்க உங்களை மாதிரியும், அம்மா மாதிரியும் வாழணும்னு ஆசைப்படறேன்...” என்றவள், அவள் கணவனிடம் திரும்பி, “மை பேரண்ட்ஸ் ஆர் பெஸ்ட் கப்பிள்ஸ் இன் த வேர்ல்ட்...” எனப் பெருமையாகச் சொல்ல...

அவள் கணவனோ, “அவங்களுக்கு அடுத்த இடத்தை நாம பிடிப்போம்டா...” எனக் கவியரசனின் மருமகனாகச் சொல்ல... கேட்டுக் கொண்டிருந்த மற்றவர் களுக்கு இதைத் தவிர வேறென்ன வேண்டும்...!

லட்சுமிக்கு இந்தக் காட்சியைக் கண்டதும் கண்களில் ஆனந்தக் கண்ணீர்ப் பெருக்கெடுத்தது.

வாழத் தெரியாமல் வாழ்க்கையைத் தொலைத்த வருக்குக் காக்கும் கரங்கள் என ஒரு பொக்கிஷம் கிடைத்ததென்றால்... ஆதிரா - கவியரசன் இன்னொரு பொக்கிஷம் எனலாம்.

மற்ற எல்லோரைக் காட்டிலும், இவர்கள் மீது அவர் அதிகப் பாசம் வைத்ததற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் இருக்குமோ...! ஆண்டவனுக்குப் பதில் தெரியும்.

பார்வதிக்கும் இரண்டு தம்பதிகளைக் கண்டு மனம் கொள்ளாச் சந்தோஷம்தான். அவர் சொன்னதைப் போலவே, கவியரசனின் பிள்ளைக்கும் தன் கையால் திருமணம் முடித்துக் கொடுத்து விட்டாரே... இதைவிட வேறென்ன வேண்டும் அவருக்கு...

மாலை சென்னையில் பிரபல நட்சத்திர ஹோட்டலில் எழில் - ராகவியின் வரவேற்பு மிகப் பிரமாண்டமாக இல்லையெனிலும், ஆடம்பரமில்லாமல் அடக்கமாக நடந்தது.

இப்போது சென்னையில் வளர்ந்து வரும் தொழிலதிபர்களின் வரிசையில் கவியரசனுக்கு முக்கிய இடமுண்டு.

அவன் மட்டுமில்லை... ஆதிராவும் அதில் அடக்கம்.

கணவனின் துணையோடு ஆரம்பித்த அவளின் கலைப் பணியை மேலும் மெருகூட்டும் வண்ணம் ஆதிரா இன்டீரியர் டிசைனிங்கில் ஒரு வருட டிப்ளோமா கோர்ஸ் முடிக்கவும், அதன் விளைவாக இப்போது சென்னையில் உள்ள பல கட்டடங்களில் ஆதிராவின் கைவண்ணம் ஒளிருகிறது.

இயற்கையிலே அவளுள் இருந்த கலைத் திறமை அவளை மேலும் மேலும் முன்னேற்றப் பாதையில் நடத்திச் சென்று, இன்று அலட்டாத வெற்றியை அள்ளித் தந்தது.



இன்று அவர்கள் மகளின் வரவேற்பு பிரமாண்டமான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்க... மணமகளின் பெற்றோராக வந்தவர்களைப் புன்னகை முகத்துடன் வரவேற்றுக் கொண்டிருந்த கவியரசன் - ஆதிரா தம்பதியை எதிர்கொண்டார்கள் மகாதேவன் - மஞ்சரி தம்பதியினர்.

மகாதேவனை வீல்சேரில் தள்ளியவாறு சோர்ந்த நடையுடன் வந்த மஞ்சரியைக் கண்டு, "வாங்க அத்தை.. வாங்க மாமா..." என வரவேற்ற கவியரசன் மனைவியைப் பார்க்க...

அவளோ வந்திருப்பவர்ளைப் போல் இவர்களும் தங்கள் மகள் திருமணத்தில் வந்திருக்கும் ஒரு விருந்தாளி என்ற முறையில், "வாங்க..." எனப் புன்னகையை உதட்டில் பூசிக் கொண்டு வரவேற்றாள்.

மகளின் முகத்தைக் கூடப் பார்க்கத் தயங்கி அவர்கள் உள்ளே செல்ல... அவர்கள் வருவதை எங்கோ இருந்து பார்த்த மொழியரசன், "பாட்டி... வாங்க தாத்தா... இப்போ உடம்புக்கு எப்படி இருக்கு? வாங்க ஸ்டேஜுக்கு அழைச்சுட்டுப் போறேன்... தள்ளுங்க பாட்டி... தாத்தாவை நான் கூட்டிட்டு வர்றேன்..." என அன்பொழுக விசாரித்தவன்... அவர்களைத் தன்னோடு நடத்திச் செல்ல... அவனுக்கேற்ற பதிலைக் கூடச் சொல்ல முடியாமல் அவர்கள் கூனிக் குறுகிப் போயினர்.

இப்படி அன்பொழுகப் பேசும் மொழியை இவர்கள் பேசாத வார்த்தைகளில்லை... அதை இப்போது நினைத்தாலும் ஆதிராவின் முகத்தில் ரௌத்திரம் எழுந்தது.

ராகவி பிறந்த செய்தியைக் கவியரசன் ஆசையாக அவர்களிடம் பகிர்ந்து கொள்ள, “ஓஹோ... அவளுக்கு நல்லபடியா குழந்தை பிறந்திருச்சா... அவள் தறுதலையா சுத்தினதுக்கு அவளுக்குப் பொறக்கப் போற குழந்தைக்கு ஏதாவது குறையோடதான் பிறக்கும்னு நினைச்சேன்...” என மஞ்சரியும்,

“ஓஹோ... இவளும் பொண்ணா... பார்த்து கவி யரசன்... அவளும் அவ அம்மா மாதிரி ஊதாரியா வளர்ந்திடப் போறா...” என மகாதேவனும் மனச்சாட்சி யில்லாமல் பேசவே...

கவிக்கு, ‘ச்சே... இவர்களிடம் போய் இதைச் சொன்னோமே...’ என ஆத்திரமாக வந்தது.

மொழியரசனைத் தத்தெடுத்த போதும், அவர்க ளுக்குத் தகவல் கொடுக்க வேண்டுமே என அழைத்துச் சொல்ல... அதற்கும் இதைப் போலவே, ஏன் இதை விட இரண்டு மடங்கு கேவலமான வார்த்தைகளை உப யோகித்தனர்.

ஆதிரா வாழ்க்கையில் அப்படியொரு கருப்பு அத்தியாயம் நடந்ததையே அவள் மறந்து சந்தோஷமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் இந்நிலையில்... இவர்களின் இந்த வார்த்தைகள் மட்டும் அவள் கேட்க நேர்ந்தால் அவளின் நிலை...?

கவியரசனுக்கு இவர்கள் எல்லோரும் மனிதர்களா எனத் தோன்றியது.

அதன் பின் அவனும் அவர்களை அழைக்க வில்லை.



அன்றிலிருந்து ஒரு ஐந்து வருடங்கள் கழித்து, இரவில் கவியின் செல்போனில் கேட்ட தகவலின் பேரில் ஆதிராவிடம் ஏதேதோ காரணங்கள் சொல்லி... லண்டன் சென்றவனுக்கு அங்கே மகாதேவனின் தோற்றத்தைக் கண்டு மனம் வலித்தது.

ஆடிய கால்களும், பாடிய பாட்டமும் ஒரு நாள் ஓய்வு பெறும் என்பது உண்மை என்பதற்கேற்ப மகாதேவ னின் ஆட்டமும், மஞ்சரியின் பாட்டமும் அன்று ஓய்வு பெற்றது.

மகாதேவன் பக்கவாதம் வந்து படுத்த படுக்கையாக, அவர்களைச் சென்னை அழைத்து வந்து தாங்கள் முன்னர் வசித்து வந்த பிளாட்டில் தங்க வைத்தான்.

இவை அனைத்தும் ஆதிராவுக்குத் தெரிய வந்தபோது, அவளின் ஒரே பதில், “கவி... நீ இந்த மாதிரிச் செய்யாமல் இருந்திருந்தால்தான் ஆச்சரியம். நீ மனுஷன் கவி... நீ இப்படித்தான் இருப்ப. ஆனால் அவங்க உன் னோட அன்பைப் புரிஞ்சுக்கிட்டா... அதுதான் அவங்க வாழ்க்கையில் இதுவரைக்கும் செஞ்ச தப்புக்கான பரிகாரம்...

“நீ அவங்க விஷயத்தில் என்ன வேணாலும் முடிவெடு கவி... ஆனால் தயவு செஞ்சு என்னை அவங் களோட பேசவோ, உறவு வைச்சுக்கவோ வற்புறுத்தாதே!” எனத் திட்டவட்டமாகச் சொல்லிவிட... அதன்பின் கவியும் அவளின் விருப்பத்தில் தலையிடவில்லை.

இத்தனை நாள் பணமென்னும் மாய வலையை மட்டுமே உலகம் என, மனிதர்களையும், உறவுகளையும்

மதிக்காமல் இருந்த மகாதேவன் தம்பதியினருக்கு ஆண்டவன் தக்க தருணத்தில் தண்டனை கொடுத்து, அவர்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ளச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறான்.

இதைச் சரியான வகையில் பயன் படுத்திக் கொள்வதும், இல்லாததும் அவர்களின் விருப்பம்.

மகளின் திருமணம் நல்லபடியாக முடிந்த கையோடு அவளை நல்ல முறையில் கணவன் வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்டுத் தங்களின் அறையில் மௌனமாகப் படுத்திருந்தனர், ஆதிரா மற்றும் கவியரசன்.

மனைவியை நெஞ்சில் தாங்கித் தலை கோதிக் கொண்டிருந்த கவியரசனுக்கும், ஆதிராவுக்கும் இடையில் விவரிக்க முடியாத மௌனம் ஆட்சி செய்தது.

அவர்கள் மனதில் இப்போது தாங்கள் கடந்து வந்த வாழ்க்கைப் பாதையின் சுவ்டுகளை எண்ணிப் பார்த்தனர்.

எண்ணிப் பார்த்தபோது, அவர்கள் வாழ்வு மிகவும் சுவாரசியமாக அமைந்திருந்தது புரிந்தது. எண்ணத்தினூடே கவியின் பார்வை அறை எங்கும் வலம் வர... அறையைச் சுற்றியிருந்த ஓவியங்களில் கண்ணைப் பதித்தவனுக்கு ஆதிராவின் வளர்ச்சியும், மாற்றமும், தன் மேல் அவள் கொண்ட காதலும் புரிந்தது.

திடீரெனக் கவியரசன், "தேங்க்ஸ் ஆதி..." என்று அவள் காதில் சொல்லவும்...

தலையை நிமிர்த்தி, "எதுக்கு?" – என்று அவள் கேள்வியாகக் கேட்க,



"ம்ம்... இதோ இதுக்கு... இதுக்கு... இதுக்கு..." என்றவன், 'முதல் இதுக்கு...' அறையைச் சுற்றிச் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஓவியங்களைச் சுட்டிக் காட்ட...

'இரண்டாம் இதுக்கு...' கட்டில் அருகில் அவர்கள் குடும்பப் படத்தில் சிரித்துக் கொண்டிருந்த பிள்ளைகளைக் காட்ட...

'மூன்றாம் இதுக்கு...' அவள் நெஞ்சையும், தன் நெஞ்சையும் தொட்டுக் காட்டியவனைக் காதலோடு அணைத்த ஆதிரா,

"ஐ லவ் யூ கவி..." என்றவள், "கவி... நான் உன்கிட்ட ஒண்ணு சொல்லணும்..." எனக் கணவனின் முகம் பார்க்க...

"சொல்லுடா குட்டிம்மா..." அவள் விரல்களைத் தன் கையோடு கோத்துக் கொண்டு சொல்ல...

"எல்லோரோட வாழ்க்கையும் ஆதிரா – கவியரசன் மாதிரி இருக்காதில்ல, கவி...?" –அவள் கேள்வியாகக் கேட்கவும்,

"ஆமாடா. எல்லோரோட வாழ்க்கையும் நம்மது மாதிரி இருக்கணும்னு எந்த அவசியமுமில்ல..." – அவன் நிதர்சனத்தைச் சொல்ல....

"அதான் கவி... எனக்கொரு யோசனை யிருக்கு..." – அவள் தயக்கமாகச் சொல்லவும்...

"தெரியும்டா... நம்ம காக்கும் கரங்களில் பெண்கள் மறுவாழ்வு மையத்துக்கான இன்னொரு அமைப்பை

ஆரம்பிக்க, நானும் லட்சுமி அம்மாவும் பேசியிருக்கோம். சீக்கிரம் அதற்கான முதல் படியை ஆரம்பிச்சிடலாம்..."

அவன் சொல்லி முடித்த பின்னர் அவனின் இதழைச் சிறை செய்தாள்.

சற்று நேரம் கழித்து விடுவித்தவள், "எப்படிடா... எப்படி என்னோட மனசுல இருக்கிறதையும், என்னோட மூளையில இருக்கிறதையும் இவ்வளவு உன்னிப்பாகத் தெரிஞ்சு வைச்சிருக்க?" என்று அவள் வியப்பாகக் கேட்கவும்...

"ஏன்னா... நான் உன்னோட புருசன்டி..." - அவன் காதலாகச் சொல்ல...

அவர்களின் இத்தனை வருடத் தாம்பத்தியத்தின் ஆழமும், புரிதலும் நன்கு வெளிப்பட்டது.

பெற்றோர் எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு மகாதேவன் - மஞ்சரி தம்பதியினர்...

ஒரு பெற்றோர் எப்படித் தங்கள் பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்பதற்கு ஆதிரா - கவியரசன் தம்பதியினர்...

வாழ்க்கை தடம் மாறிப் போனாலும், கணவனின் அன்பில் அதிலிருந்து மீண்டு இன்று முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கும் ஆதிராவுக்கும், மனைவி மற்றும் பிள்ளைகளின் சிரிப்பிலே தனது உயிரும் உலகமும் என நினைத்து வாழும் கவியர சனுக்கும் இனி வரும் நாட்களும் சுபமாக அமைய வேண்டுமென வாழ்த்தி விடைபெறுவோம்.

வெண்ணிலா சந்திராவின்

# அறியாத வயசு..
# புரியாத மனசு...

